# பெரியாழ்வார்

703

ஸ்ரீ [illegible]

இயற்றியது

சென்னை ஷெரீப்

எஸ். இராமசாமி நாயுடு

அவர்கள் முன்னுரையுடன்

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை - 4

உரிமைப் பதிவு] 1947 [ரூ. 3—0—0

இவ்வாசிரியரது
வேறு நூல்கள்

1. ஆண்டாள் அல்லது
சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
2. ஔவையார்
3. மகாபாரதக் கதைகள்
4. கட்டுரைகள்

அல்லயன்ஸ் பிரஸ்
மயிலாப்பூர், சென்னை
எம். எஸ். 109 - 27-9-47

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | பெரியார் கொண்டாடிய ஸ்ரீஜயந்தி ... | 1 |
| 2 | விஷ்ணுசித்தரின் விருப்பம் ... | 10 |
| 3 | தமிழ் வளர்த்த மதுரையிலே ... | 18 |
| 4 | மங்கிக் கிடந்த மனவிளக்கு ... | 22 |
| 5 | கனவும் காட்சியும் ... | 26 |
| 6 | பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் ... | 36 |
| 7 | ஆழ்வார் திருமகள் ... | 43 |
| 8 | பெரியாழ்வார் காலம் ... | 54 |
| 9 | பேரும் புகழும் ... | 56 |
| 10 | வாழ்க்கைத் தத்துவம் ... | 61 |
| 11 | பெரியாழ்வார் நந்தவனம் ... | 74 |
| 12 | நந்தவனத்திலே ஞானப் பூங்கொடி ... | 88 |
| 13 | கோதை யார்? ... | 94 |
| 14 | பிரபந்தச் சோலையில் பெரியாழ்வார் ... | 103 |
| 15 | இதிகாச புராண சஞ்சாரம் ... | 116 |
| 16 | பெரியாழ்வாரும் தமிழ்நாட்டுக் கதைகளும் ... | 122 |
| 17 | கண்ணனைப்பற்றிய வேறு கதைகள் ... | 135 |
| 18 | பிள்ளைத்தமிழும் கவிதையும் ... | 147 |

| | | |
|---|---|---|
| **19** | குழந்தையை வந்து பாருங்கள் | ... 152 |
| 20 | அழகு வளரும் தொட்டில் | ... 155 |
| 21 | அம்புலி மாமா! வா,வா! | ... 160 |
| 22 | ஆடும் அழகு | ... 166 |
| 23 | பசி ஏது? தாகம் ஏது? | ... 198 |
| 24 | ஜகன்மோகன வேணுகோபாலன் | ... 204 |
| 25 | கவிதையும் உபதேசமும் | ... 216 |

சென்னை ஷெரிப் திரு. எஸ். இராமசாமி நாயுடு அளித்த

## முன்னுரை

தமிழுலகம் பி.ஸ்ரீ. யை நன்கு அறியும். இவர் தமிழுக்கு ஊட்டியிருக்கும் புத்தம் புதிய சுவையும் உணர்ச்சியும் அனைவரும் நன்கறிந்தவை. இத்தகைய அறிவு படைத்த பி. ஸ்ரீ. யாத்துள்ள 'பெரியாழ்வார்' என்ற புத்தகத்தை நான் அறிமுகப்படுத்துவது மிகையாகும். எனினும் தமிழின்பால் உள்ள என் வேட்கை மிகுதியில் சில வார்த்தைகள் கூறத் துணிகிறேன்.

தமிழிலக்கியத்தில் 'பிரபந்தங்க'ளுக்கு ஒரு முக்கியமான இடமுண்டு. சமய இலக்கியத்தில் மட்டுமல்ல, சரித்திரத்திற்கும் எட்டாத நெடுந்தொன்மை வாய்ந்த அந்நாள் முதல் பெருகிவரும் நல்லறிவுக் களஞ்சியத்திற்கும், நாகரிகப் பண்பிற்கும் நிலைக்களனான இலக்கியத் தொகுதியிலே ஆழ்வார் பாசுரங்கள் அரும்பெறல் மணிகளாகத் திகழ்கின்றன.

ஆழ்வார்களிலும், பெரியாழ்வாருக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. சாதாரணமாக, சரீர பரம்பரையில் தான் பெற்றோர் பிள்ளைகள் என்ற நிலையுண்டு. ஞான பரம்பரையில் குல உரிமைச் செல்வம் என்பது இல்லை. ஆழ்வார்கள் திருக்கூட்டமும் பொதுவாக இவ்விதிக்கு விலக்கன்று. பெரியாழ்வார் ஒருவரே விதிவிலக்கு. இவர் வளர்த்து அளித்த ஆண்டாளும் இவரும் ஒருங்கே இத்திருக் கூட்டத்தில் 'பாடும் பக்த

மணிகளாக இடம் பெற்றிருப்பது சமய உலகிலேயே ஓர் அதிசய நிகழ்ச்சி.

பக்திப் பெருங்காதலுக்கே ஓர் அபூர்வ இலக்கியம் என்னும்படியாகத் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த ஆண்டாளை அளித்த பெருமை மட்டும் உரியதன்று பெரியாழ்வாருக்கு. பக்திக்காதலைத் தூய நூயன்பாக விளைத்து வெளியிட்டுப் பெருமைபெற்ற பெரியாரைப் 'பெரியாழ்வார்' என்றே தமிழகம் சிறப்பித்துப் பேசுவது பெரிதும் பொருத்தமுடையது.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்பர். அழகுத் தெய்வமான கண்ணன் பால் இவ்விரு நிலைகளும் கண்டு கொண்டாடிய இப் பெரியார் வைணவர்களுக்கு மட்டுமல்ல, சமய உலகத்திற்கு மட்டுமல்ல, எல்லாருக்கும் உரியவர். ஆனால், எல்லாருக்கும் உரிய பெரியாரை எல்லாரும் அறிந்துகொள்ளவில்லை. இவரது உண்மைநிலையை ஒரு வாறு தமிழ்ப்பெருமக்கள் உணர்ந்துகொள்ளுமாறு உணர்த்துவது இச் சிறு புத்தகத்தின் பெருநோக்கங் களில் ஒன்று. இந்நோக்குடன் இவ்வாசிரியர் பெரியாழ்வார் கதைகளையும், பெரியாழ்வார் சொல்லும் கதைகளையும், பாடிய பாடல்களையும், வியாக்கியானங் களையும், வேறு பல ஆதாரங்களையும் தேடித் துருவி ஆராய்ந்துள்ளார்.

வடிவழகிய நம்பிதாசர் என்ற பக்தமணி தாம் ஆசாரிய பரம்பரையிலே கேட்டறிந்த வரலாறுகளையும் கதைகளையும் தொகுத்து, 'ஆழ்வார் வைபவ'மாக வெளியிட்டிருக்கிறார். அவருக்குப் பெரியாழ்வார், ஆண்டாள்பால் மட்டில்லாத பக்திப் பெருக்கு. அவர்

இயற்றிய பக்திப் பிரபந்தத்தின் அரும் பெருங்கருத்துக்களையும் கற்பனைகளையும் இந்நூலின் கதைப்பகுதியில் காணலாம். ஆராய்ச்சி முறையில் சரித்திரப் பின்னணியுடன் பெரியாழ்வாரைக் கண்டுகொள்ள முயல்வோருக்கும் இந்நூல் ஒரு நல்ல வழிகாட்டி. பெரியாழ்வாரின் வாழ்க்கைத் தத்துவமும் இதிகாச புராண சஞ்சாரங்களும் பொன்னிலே பதித்த மணிகள்போல் அங்கும் இங்கும் காணப்பெறுகின்றன.

உலகப் பிரசித்திபெற்ற புருஷோத்தமனாகிய கண்ணன் கதைகளில் தமிழ்நாட்டிலே பண்டைக் காலந்தொட்டு வழங்கிவந்த சிறப்பியல்புகளைப் பெரியாழ்வார் பயன்படுத்திக்கொண்டு, 'கண்ணன் தமிழ் நாட்டிலே, தமிழிலேயே அவதரித்தருளினான்!' என்று கருதும்படியாகத் தம் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களை—தமிழுக்கே முதலாவது பிள்ளைத்தமிழை—முதன்மையான பிள்ளைத்தமிழாகவும் இயற்றி அமைத்துள்ளார். பாரதியாரின் புகழ்பெற்ற 'கண்ணன் பாடல்க'ளெல்லாம் பெரியாழ்வாரின் பிள்ளைத்தமிழில் நம் தேசிய கவிக்கு ஏற்பட்டிருந்த அபாரமான மோகத்திலே விளைந்த முத்துக்கள் என்று ஊகிப்பது இழுக்காகாது.

பெரியாழ்வாரின் பிள்ளைத்தமிழிலும் வேறு பாடல்களிலும் இவ்வாசிரியர் ஊறிக்கிடந்தவராய், வைணவ மரபுகளோடு தற்கால ஆராய்ச்சி முடிபுகளையும் பயன்படுத்திக்கொண்டு இந்நூலை வெளியிட்டிருக்கின்றார். இந்நூலின் நடை அபூர்வ எளிமையும் இனிமையும் வாய்ந்து, ஏதோ ஒரு நவீனம் படிப்பது போல் புத்தகம் முழுமையும் வாசகர்கள் படித்துப் பயன் துய்ப்பதற்குத் தூண்டுகோல் ஆகின்றது.

இம்முறையில் மற்றுமுள்ள ஆழ்வார்களைக் குறித்தும், நாயன்மார்களைக் குறித்தும் நூல்கள் வெளியிடுவது தற்காலத் தமிழின் மறுமலர்ச்சிக்கே ஒரு நற்பணியாகும். இந்நூலை இயற்றிய அன்பர் பி. ஸ்ரீ. அவர்களுக்கும், பதிப்பித்து வெளியிட்ட அல்லயன்ஸ் கம்பெனியாருக்கும் தமிழகம் என்ஞ்ஞான்றும் கடப்பாடுடையது இவ்வெளியீட்டுக் கழகத்தினர் இத்தகைய பெரும் பணியைத் தொடர்ந்து நடத்திப் பொதுமக்களின் அன்பிற்கும், மெய்யடியார்களின் ஆசிக்கும் இலக்காக வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகின்றேன்.

"பக்தி விலாஸ்"
தியாகராயநகர்
சென்னை, 15-9-47

சு. இராமசாமி நாயுடு
சென்னை 'ஷெரீப்'.

# பெரியாழ்வார்

## கதைகள்

### 1. பெரியார் கொண்டாடிய ஸ்ரீஜயந்தி

ஞானிகள், பெரியோர்கள், மகாவீரர்கள், அவதார புருஷர்கள் முதலானவர்களின் பிறந்தநாள் - கொண்டாட்டத்தை ஜயந்தி என்கிறோம். புத்த ஜயந்தி, மகாவீர ஜயந்தி, காந்தி ஜயந்தி என்றெல்லாம் அந்தந்த அவதார மூர்த்தி அல்லது பெரியோரின் பெயரோடு 'ஜயந்தி' என்ற வார்த்தையைச் சேர்த்து அவரவர் பிறந்தநாள் - வைபவத்தைக் குறிப்பிடுகிறோம். கிறிஸ்துமஸ் கிறிஸ்து ஜயந்தி; ஸ்ரீராமநவமி ஸ்ரீராமஜயந்தி. ஆனால், ஸ்ரீஜயந்தி யென்று சிறப்பித்துப் பேசுவது ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியைத்தான்.

ஒவ்வொரு வருஷமும் நாம் ஸ்ரீ ஜயந்தி கொண்டாடுகிறோம்,—பகலில் பட்டினி; இரவிலே கண்ணன் பிறந்ததும் விருந்து. ஆனால் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் பெரியோர்களில் ஒருவர் கொண்டாடியதுபோல், ஸ்ரீ ஜயந்தி கொண்டாடினால்தான், அதன் முழுப் பலனையும் அடைந்து அனுபவிக்க முடியும்.

சிராவண மாதத்திலே அபரபட்சத்து அஷ்டமி யோடு ரோகிணி நட்சத்திரம் கூடிய அந்த அவதார தினத்தை அப் பெரியாரும் நம்மைப்போல் ஒவ்வோர் ஆண்டும் விழாவாகக் கொண்டாடி யிருப்பார். பக்த சிரேஷ்ட ரல்லவா? பக்தர்களிலும், அவர் சிறப்பாகக் கிருஷ்ண பக்தியிலே முழுக்க முழுக்க ஆழ்ந்துபோனவர். அந்தக் கண்ணன் - பிறப்பை அப்படியே அனுபவித்துப் பார்க்க ஆசைகொண்டார்.

ஆசை நிறைவேறி அனுபவம் பரிபூர்ணமாகக் கிடைத்தது கோஷ்டிபுரம் என்ற திருக்கோட்டியூரிலே. தமது இருப்பிடமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வந்திருந்தார்.

வண்ண மாடங்கள்
சூழ்திருக் கோட்டியூர்

[வண்ணம் - அழகு. மாடம் - உபரிகையுள்ள வீடு.]

செங்நெ லார்வயல்
சூழ்திருக் கோட்டியூர்

[ஆர் - நிறைந்த.]

என்று தாம் அபிமானித்த—இயற்கை யழகும் செயற்கை யழகும் வாய்ந்த — தலத்திலே, அப்பெரியார் தமது பேரன்பரும் பாகவதாபிமானியும் பாண்டிய ராஜாவின் புரோகிதருமான செல்வநம்பியோடு ஸௌம்ய நாராயண மூர்த்தியைத் தரிசித்துக் கொண்டிருந்தார், ஒரு ஸ்ரீ ஜயந்தி தினத்திலே. அந்த விக்கிரகம் ஸ்ரீ கிருஷ்ணவை தாரத்தை ஞாபகப்படுத்தியது. உடனே அப்பெரியாரின் கவியுள்ளம் அவதார காலத்திற்கே சென்று, அந்த முதலாவது ஸ்ரீஜயந்தியையே கொண்டாடத் தொடங்கி விட்டது. அப்போது அக்கோவில் அவர் மனக் கண் ணுக்கு நந்தகோபருடைய மாளிகையாகவும், திருக்

கோட்டியூர் கோகுலம் என்ற ஆய்ப்பாடியாகவும் மாறி விட்டன.

கம்ஸனுடைய சிறைக்கூடத்தில் பிறந்த குழந்தை ஆபத்திற்குத் தப்பி ஆய்ப்பாடிக்கு வந்துவிட்டது. ஒரே குதூகலம் மாளிகை எங்கும்—ஊரெங்கும். அந்தக் குதூகலத்திலே, மாளிகையி லுள்ளவர்கள் எண்ணெயும் மஞ்சட் பொடியும் ஒருவர்மேல் ஒருவர் தூவிக்கொண்டார்கள். அவை ஒன்றாய்க் கலந்து ஒரே சேறுகிவிட்டன வாம் முற்றமெங்கும்.

இனி, ஊரின் குதூகலத்தை எப்படி வருணிப்பது? பெரியார் வருணிக்கவில்லை, பார்த்தபடியே பேசுகிறார் :

ஓடுவார், விழுவார் ; உகந்(து) ஆலிப்பார் ;
நாடுவார் ; 'நம்பிரான் எங்குத் தான் ?' என்பார் ;
பாடுவார்களும், பல்பறை கொட்ட நின்(று)
ஆடுவார்களும் ஆயிற்(று) ஆய்ப் பாடியே.

[ஆலிப்பார் - ஆரவாரஞ் செய்வார். எங்குத்தான் — எங்கேதான். பல் - பல.]

குழந்தையைப் பார்க்க ஓடிவருகிறார்கள். ஓடும் போதே சிலர் வழுக்கி விழுகிறார்கள் : அவ்வளவு ஆத்திரம், அவ்வளவு உத்ஸாகம். சிலர் ஆரவாரஞ் செய்கிறார்கள், 'இன்னது செய்கிறோம் !' என்று தெரியாமலே : அவ்வளவு பிரீதி, அவ்வளவு ஆனந்தம். 'எங்கே நம் கண்மணி? எங்கே? எங்கே?' என்று தேடிக்கொண்டு வருகிறார்கள் சிலர். 'எங்கே நமது ராசா, குட்டி மகராசா ?' என்று கேட்டுக்கொண்டே வருகிறார்களாம், வழியெல்லாம். சிலருக்கு மகிழ்ச்சி வசனத்தில் அடங்காமல் பாட்டாகப் பொங்கிவிடுகிறது. வேறு சிலருக்கு அந்த மகிழ்ச்சி வாய்ப்பாட்டிலும் அடங்கவில்லையாம் ; அவர்கள் நானுவித வாத்தியங்களைக் கொட்டி முழக்கிக் குதூகலப்படுகிறார்கள். இன்னும் சிலர் அந்தக் கொட்டு

முழக்கங்களாலும் பாடல்களாலும் ஆவேசங் கொண்டவர்கள்போலக் கூத்தாடுகிறார்கள்.

ஆனந்தம் மேலும் மேலும் அதிகரிக்கிறது; அதிகரித்து அதிகரித்து அறிவைச் சூறையாடுகிறது;

உறியை முற்றத்(து) உருட்டிநின்(று) ஆடுவார்;
நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்;
செறிமென் கூந்தல் அவிழத் திளைத்(து) எங்கும்
அறிவ ழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே!

[நறு - மணம் மிக்க. செறி - அடர்ந்த. மென் - மெத்தென்றிருக்கிற. திளைத்து - அசைந்து; நெருங்கி.]

நெய்யையும் பாலையும் தயிரையும் உறியோடு அறுத்துக் கொண்டுவந்து முற்றத்திலே உருட்டிவிட்டு ஆடுகிறார்கள் சிலர், ஆனந்தம் உள்ளடங்காமல். சிலர் அவற்றை வாரிவாரி வழங்குகிறார்கள், வருகிறவர் போகிறவர்களுக்கெல்லாம். தலைமுடி அவிழ்ந்து ஆடுவதும் தெரியாமல் அசைந்தசைந்து ஆடி ஆடி வருகிறார்கள் சிலர், உன்மத்தர்போலே. அவ்வளவு சந்தோஷப் பெருமை — சந்தோஷப் பைத்தியம், அன்று அந்த ஆய்ப்பாடிக்கு.

நந்தகோபருடைய அரண்மனை வாசலில் ஒரே நெருக்கம்; அவசர அவசரமாய்ச் சோபனம் சொல்லப் புகுந்து கொண்டிருக்கிறவர்களும், புகுந்து பார்த்து வெளியில் போகிறவர்களுமாக ஒரே ஜனசமுத்திரம். அந்தக் கூட்டத்திலே, 'இவ்வளவு புருஷ லட்சணமுள்ள குழந்தையை வேறு எங்கே பார்த்தோம், பார்க்கப் போகிறோம்? எங்கேதான் பார்க்கமுடியும்? திருவோணத்திலே ஜனனம்: உலகத்தை ஆளப்போகிறது! லட்சணங்களும் அப்படி; ரேகைகளும் அப்படி!' என்ற வார்த்தைகள் காதில் விழுகின்றன. அவ்வளவு ஆனந்தப் பைத்தியம் அவர்களுக்கு.

கூட்டத்தோடு கூட்டமாய் நாமும், 'நெருக்குண்டோம், தள்ளுண்டோம்! எனினும் உள்ளே புகுந்து பார்த்துவிட்டோம்' என்று சொல்லும்படியாகப் போய், 'ஆணொப்பார் இவன் நேரில்லை காண்!' என்றார்களே, அதே குழந்தையைப் பார்த்துவிடுகிறோம். தாயோடு அந்தப்புரத்திலே. அங்கே என்ன நடக்கிறது?

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்,
ஐய! நாவழித் தாளுக்(கு) அங்காந்திட,
வையம் ஏழும்கண் டாள்பிள்ளை வாயுளே!

[நிமிர்த்து - (நீட்டி) நிமிரச் செய்து. கடாரம் - கொப்பரை. ஐய - அதிசயம். நா - நாக்கு. வழித்தாளுக்கு - வழித்தவளான யசோதைக்கு. அங்காந்திட - வாயைத் திறக்க. வையம் ஏழும் - ஏழு லோகங்களையும்; அதாவது, உலகங்களையெல்லாம். வாயுளே - வாய்க்குள்ளே.]

தாய் குளிப்பாட்டுகிறாள் குழந்தையை. மருந்துகளும் வாசனைப் பொருள்களும் சேர்த்துக் காய்ச்சின வெந்நீரைக் குளிரப்பண்ணி வைத்திருக்கிறது கொப்பரையிலே. குழந்தையின் கையையும் காலையும் மெள்ள நீட்டி நிமிர்த்து, 'நீண்டு நிமிர்ந்தான் என் அப்பன்!' என்று கொண்டாடிப் பசுமஞ்சள் உரைத்துப் பூசிப் பையக் குளிப்பாட்டுகிறாள். 'நாக்கை நீட்டு!' என்று கொஞ்சிக் கொண்டே நாக்கு வழிக்கப் போகிறாள். வாயைத் திறக்கிறது குழந்தை. 'அடடா, பாவம்! வாய்க்கும் நாவுக்கும் வித்தியாசம் தெரியாத பச்சைக் குழந்தை' என்று சொல்லிக்கொண்டு பார்க்கும்போதே, — அது என்ன? கனவா, நனவா? — அகில லோகங்களையும் பார்த்துவிடுகிறாளாம், அந்த வாய்க்குள்ளே.

ஆச்சரியமும் ஆனந்தமும் சமுத்திரமாய்ப் பொங்க, அந்தத் தாய் மற்றுமுள்ள பெண்களுக்கும்

காட்டுகிருள் அந்த அற்புதத்தை! அவர்கள் எல்லாரும், 'ஆயர் புத்திரன் அல்லன், அருந் தெய்வம்!' என்று கொண்டாடுகிருர்கள்.

ஒவ்வொரு தாய்க்கும் தன் அருமைக் குழந்தை தெய்வக் குஞ்சுதான்; தெய்வ உருவந்தான்! குழந்தைக் கிருஷ்ணனைக் குறித்துக் கேட்கவா வேண்டும்? அதிலும், தாயன்புடன் பக்தரின் தெய்வ அன்பும் சேர்ந்து பேசும் போது!

'ஸ்ரீ கிருஷ்ணன்' என்று நாமகரணம் செய்த தினத்திலே ஆய்ப்பாடியில் எல்லாத் திசைகளிலும் ஜயஸ்தம்பங்கள், வெற்றித் தோரணங்கள் முதலான அலங்காரங்கள்! ஏதோ ஓர் அற்புதமான ஜயத்தை அடைந்தவர்கள் போல் ஆனந்தப்படுகிருர்கள் ஆயர்களெல்லாம். குழந்தைக் கண்ணனை அவர்கள் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகிருர்கள். ஆனுல் தாய் மெலிந்து போயிருக்கிருளாம். அவளே அப்படிச் சொல்லுகிருளாமே!—அது என்ன செய்தி?

கொஞ்ச நேரங் கழிந்ததும், குழந்தையைத் தொட்டிலில் விடுகிருர்கள். துணித் தொட்டில்தான். ஆனுல் குழந்தையும் தூங்கவில்லை; தாயும் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருக்கிருள். பளிச்சென்று எடுத்து ஒக்கலில் வைத்துப் பார்க்கிருள்: அணைத்துக் கொண்டு பார்க்கிருள் — 'என்னடா, கண்ணு! இந்தப் பாடு படுத்துகிருய்?' என்று. பிறகு ஒரு தோழியை அருகே அழைத்து, 'பாரடி, இந்தப் பிள்ளையை!' என்று ஒரு குற்றப் பத்திரிகை படிக்கத் தொடங்குகிருள்:

கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்;
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன், நங்காய்!

[கிடக்கில் - கிடந்தானாகில். தொட்டில் (இங்கே) துணித் தொட்டில். மருங்கு - இடுப்பு. இறுத்திடும் - முறித்துவிடும். புல்கில் - அணைத்துக் கொண்டால். உதரம் - வயிறு. மிடுக்கு - வலிமை ; சக்தி. நங்காய் - நங்கையே ; தோழியே !]

'கிடக்க விட்டால், தொட்டிலைக் காலால் உதைத்துக் கிழித்துவிடுகிறான் !' என்கிறாள். 'மெத்தென்றிருக்கும் இந்தச் சின்னஞ் சிறு கால் வலிக்குமே !'—என்று எடுத்து ஒக்கலில் வைத்துக்கொண்டால், அங்கேயிருந்து நழுவி இடுப்பை முறித்துவிடுகிறானாம். 'நமக்கே இப்படி வலிக்கிறதென்றால். குழந்தைக்கு இந்தச் சேட்டையால் எப்படி வலிக்குமோ ?' என்று வலிய—ஆசை தீர—அணைத்துத் தழுவிக் கொண்டால், வயிற்றிலே பாய்ந்து உதைக்கிறானாம் துஷ்டக் கிருஷ்ணன் ! 'அம்மா, தோழீ, சக்தியில்லையடி எனக்கு; எப்படி மெலிந்துபோனேன், பாரடீ!' என்று புகார் செய்யும் தாயைப் பார்த்துக் குழந்தையைப் பார்க்கிறோம். குழந்தையைப் பார்த்துக் கொண்டே தாயையும் பார்க்கிறோம். இப்படியெல்லாம் சேட்டை செய்யப் பிள்ளைக்குப் பருவம் போதுமா, சக்தி போதுமா?' என்று நினைத்து நினைத்துத்தான் இப்படி மெலிந்து போனாளோ? — என்றுகூட நாம் நினைக்கிறோம்.

## தாயாகிய ஆழ்வார்

வட மதுரையிலே பிறந்து ஆய்ப்பாடியிலே வந்து வளரும் கிருஷ்ணன்தான் குழந்தை யென்றால், இப்படியெல்லாம் குற்றஞ்சாட்டி மெலிந்திருக்கும் தாய் தேவகியல்ல, யசோதைதானே ? ஆனால் இந்தக் கேள்விக்கு 'யசோதையாக நடிக்கும் பெரியாழ்வார்' என்றே பதில் சொல்லி விடலாம். திருக்கோட்டியூரில், நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் கூத்தாடியும் கோலங் காட்டும் ஸௌம்ய நாராயண மூர்த்தி குழந்தைக் கிருஷ்ணனைப்

பிரத்தியட்சமாக, ஆழ்வார் ஸ்ரீகிருஷ்ண ஜனனக் காட்சிகளைக் கண்டு காட்டுவதோடு தாமே தாயாகவும் காட்சி தருகிறார்.

தோழி பதில் சொல்லவில்லை, அனுதாபப்படவில்லை,—'நான் மெலிந்தேன், நங்காய்!' என்று தாய் சொன்ன போதிலும். ஏன்? 'பக்கத்திலிருப்பது தோழியல்ல; தோழரான செல்வநம்பிதான்!' என்று தெரிந்துகொண்டதும், யசோதை பெரியாழ்வாராகி விடுகிறாள்!

இந்தக் கவிதானுபவத்தையும் பக்தியனுபவத்தையும் தெரிந்து கொண்ட செல்வநம்பி, 'என்ன ஸ்ரீஜயந்தி? ஆழ்வாரே! என்ன கொண்டாட்டம்? முதலாவது ஸ்ரீஜயந்தியையே பார்த்துவிட்டீர், அந்த விழாவிலும் கலந்து கொண்டீரே!' என்று பூரித்துப் போகிறார். இந்தத் தாயன்பும் தெய்வ அன்பும் செல்வநம்பியைப் பிரமிக்கச் செய்கின்றன.

முதலாம் ஸ்ரீஜயந்தியைப் பெரியாழ்வார் தாம் பார்த்து அனுபவித்ததோடு, தாம் கொண்டாடியதோடு, செல்வநம்பி முதலானவர்களையும் கொண்டாடி அனுபவிக்கச் செய்தார், தமது பாசுரங்கள் மூலமாக. இந்தப் பெரியாரின் இப் பாசுரங்களை அனுபவித்த பிற்காலத்தாரும் ஆதி ஸ்ரீஜயந்தியை அனுபவிக்கும் பாக்கியம் பெற்றார்கள். இக்காலத்திலுள்ள நாமும் இப்பாடல்களை ஓதி ஓதி அந்த ஸ்ரீஜயந்தியை ஒருவாறு அனுபவித்து விடலாம்.

சிறைக் கூடத்தில் பிறந்து மாடு மேய்ப்பவர்களுக்கிடையே வந்து சேர்ந்த குழந்தை; அந்த ஆயர்-ஆய்ச்சிகளின் உத்ஸாகம்; ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளித்து வளரும் அந்த அழகு, அந்த அருள்; வளர்ப்புத் தாயின் ஆனந்தம்; அந்த ஆனந்தத்திலே ஒளிந்து கிடக்கும் பெற்ற தாயின் பெருந் துயரம்; பிள்ளை வாய்க்குள்ளே தாய் உலகங்களையும்

ஆய்ப்பாடியையும் தன்னையும் அந்தப் பிள்ளையையும் கண்டுகொண்ட அற்புதம்; அந்த அற்புதம் கண்டும், பருவத்திற்குத் தகுதியல்லாத சக்தியையும் செயல்களையும் கண்டும், 'துஷ்டப்' பிள்ளையாகவும் செல்லப் பிள்ளையாகவும் பாவித்த தாயன்பின் அற்புதம்; ஆய்ப்பாடி, ஜய ஸ்தம்பமும் ஜயதோரணமும் நாட்டிக் கொண்டாடிய புத்ரோத்ஸவம்; சிறையிலே பிறந்து மாடுகளுக்கும் மேய்ப்பவர்களுக்கும் இடையே கிடந்துவளரும் அந்த அழியா அழகின் தத்துவம்; உலகத்திற்கே வெற்றியாகவும் ஆத்மாக்களாகிய பசுக்களுக்கெல்லாம் வெற்றியாகவும் விளையப் போகும் தேவ ரகஸ்யமான அவதார ரகஸ்யம்—இவையெல்லாம் சொல்லச் சொல்ல, கேட்கக் கேட்க, தெவிட்டாத தேவாமிர்தமாயிருக்கின்றன, பக்தர்களுக்கு-ஆம், கிருஷ்ண பக்தர்களுக்கு. இதுதான் ஸ்ரீஜயந்தி.

இக் கதையைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சொல்லும் பெரியாழ்வாரின் பாசுரங்கள், ரஸிகர்களுக்கெல்லாம் ரஸமாயிருக்கின்றன. பகலில் உள்ளபடி உபவாசமிருந்து இரவில் சாப்பிடும் ஸ்ரீஜயந்தி—விருந்து போலவே! கண்ணால் காண்பதுபோல மனக்கண்ணால் கண்டு, எதிரே நின்று காட்டுவதுபோலவும் பேசுவது போலவும் ஓசை நயத்தோடு பாடிய இப்பாடல்களைப் பாடிப் பாடிச் செவி விருந்தாக அனுபவிக்கலாம்.

* * *

இனி, இவர் வைபவமாக வழங்கும் வேறு கதைகளையும் கேட்டு அனுபவிப்போம். இவை உண்மையான வாழ்க்கை வரலாறுகளை எவ்வளவு தூரம் தழுவியன என்பது நமக்குத் தெரியாது. ஆனால், தமிழர்களாகிய நாம் கேட்டு ரஸிக்க வேண்டிய கதைகள் தாம்: இவற்றின் சில பகுதிகள் அவ்வளவு அழகாயிருக்கின்றன.

## 2. விஷ்ணுசித்தரின் விருப்பம்

இந்த ஆழ்வார் இப்போது இராமநாதபுரம் என்று சொல்லும் தமிழ் நாட்டுப் பகுதியிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தவர். அந்நாளில் தமிழகத்தின் அப்பகுதிக்குப் பாண்டியநாடு என்று பெயர். இவர் பிறந்த குலம் 'வேயர்குலம்' என்று அந்நாளிலே பேரும் புகழும் பெற்றிருந்தது. வேயர் குலத்தினர் பார்ப்பனர். இவரது தந்தையார் முகுந்தாசாரியர்; தாயார் பதுமையார். பாகவத சம்பிரதாயத்தைத் தழுவியிருந்த இக்குடும்பத்தில் பெரியாழ்வார் ஆனி மாதத்து ஸ்வாதி நட்சத்திரத்தில் தோன்றினார். இத்தோற்றத்தை வடிவழகிய நம்பிதாஸர் தமது 'பெரியாழ்வார் பிரபந்த'த்திலே,

ஆனியெனும் திங்களினில்,
வளர்பிறையில், அருஞ்சோதி
மேனியனார், சோதியினில்
விண்ணவர்பூ மழைசொரிய,
வானில்வரும் முகில்ஒலியும்
மறைஒலியும் மாறுசெய,
பால்நிலா முகத்தியர்கள்
பல்லாண்டின் இசைபாட,
அறம்தழைப்ப, மெய்ஞ்ஞானம்
யாவர்களும் அறிந்(து) உய்ய;
மறம்தீய வேரோடு
மடிய, வஞ்சம் பாழாக,—

[திங்கள் - மாதம். அருஞ்சோதி மேனியனார் அருமையான ஜோதி மயமான மேனியையுடைய குழந்தைப் பெரியாழ்வார். சோதியினில் - சுவாதி நட்சத்திரத்

தில். விண்ணவர் - தேவர்கள். முகில் - மேகம். மறை - வேதம். மாறுசெய - போட்டிபோட.]

நிகழ்ந்ததோர் அவதாரம் என்று — குறிப்பிடுகிறார்.

இவர், இளமையிலேயே 'எம்பெருமானது சித்தத்திற்கு எத்தகைய கைங்கரியம் உகப்போ, அதுவே நாம் செய்யத்தக்கது' என்று உறுதிகொண்டிருந்தாராம். இத்தகைய உறுதியுடன் ஆராய்ந்து பார்த்து, வேதம் ஓதுவது போதாதென்று நந்தவன கைங்கரியம் தொடங்கினார். பகவானுக்குப் பூமாலை கட்டி அழகு செய்து பார்க்கவேண்டும் என்பது இவர் ஆசை. எனவே, 'வேதவாய்த் தொழிலாளர்' மண்வெட்டியுங் கையுமாய் நந்தவன கைங்கரியம் செய்யும் தொழிலை மேற்கொண்டார்.

இளமையில் வேத சாஸ்திரங்களையும், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலான நூல்களைப் படித்தவர் தாம். எனினும், அஞ்ஞானமாகிய கொடிய விஷம் ஏறிய உள்ளத்தைக் காப்பாற்றித் தெளிவுபெறச் செய்வதற்குத் திவ்யமான மருந்து கைங்கரியத்தோடு கூடிய ஞானபக்திதான் என்று துணிந்தார். உடனே பிதுரார்ஜிதங்களையெல்லாம் ஒரு நீர்ப்பாங்கான நிலத்தில் இட்டார். வேலி வளைத்து அதனிடையே கிணறு குளம் உண்டாக்கி, வெண்தாமரை செந்தாமரை செங்கழுநீர் நீலோற்பலம் மல்லிகை முல்லை மாதவி முதலான நீர்ப்பூ நிலப்பூ கோடிப்பூ கோட்டுப்பூக்களும், துளஸி முதலான செடிகளும் மலிந்து பொலியுமாறு நந்தவனம் திருத்தினார். இந் நந்தவனத்திலே பூவும் துளஸியும் எடுத்து மாலை கட்டி, வடபத்திரசாயி என்றும், வடபெருங்கோயிலுடையான் என்றும் பெயர்பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூர்த் திருமாலுக்குச் சாத்தி மகிழ்வார்.

பூமாலை கட்டுவதுபோல் பாமாலை கட்டுவதிலும் இவருக்கு ஆசை. அழகான மலர்களைத் தொடுத்துத் தாம்

மாலை கட்டியதுபோல், அழகான தமிழ்ச் சொற்களைத் தொடுத்துப் பாடல் கட்டி, அப்பாமாலைகளையும் எம் பெருமானுக்கு அணிந்து அழகு பார்த்து மகிழ்ச்சி அடைவார்.

இப்படித் தாம் பணிபுரிய வேண்டுமென்பதே இறைவன் திருவுள்ளம் என்று கருதி ஒழுகிய இவருக்கு, விஷ்ணு சித்தர் என்று பெற்ருேர் பெயரிட்டது எவ்வளவு பொருத்தமானது! ஏதோ ஒரு தீர்க்கதரிசனமாக இட்ட பெயர் என்றுகூடத் தோன்றுகிறதல்லவா?

பூதமுதல் நாயகன்சீர்ப்
　　பூங்கழற்கீழ்ப் பசுந்துளவால்
ஏதமிலாப் பூமாலை,
　　பாமாலை யெனும்இரண்டும்
ஆதரவி னுல்கட்டி
　　யருளவல்ல ஆழ்வார்க்கு,
வேதநெறி விஷ்ணுசித்தன்
　　எனும் நாமம் வியந்துரைத்தார்.

[பூதமுதல் நாயகன் - பூதங்களுக்கெல்லாம் காரணமான தலைவன். சீர்ப் பூங்கழல் - சிறந்த அழகிய திருவடிகள். பசுந்துளவு - பச்சைத்துளஸி; (இங்கே) துளஸி முதலானவை. ஏதமிலா - குற்றமில்லாத. ஆதரவு - அன்பு.]

என்று வியந்து பாடுகிருர் வடிவழகிய நம்பிதாஸர்.

சோதியில் (சுவாதியில்) ஜோதி மேனியராகப் பிறந்தார் என்றும், தெய்வக் குழந்தையாகிய கண்ணனைப் பாதாதிகேசமாகப் பாடிப் போற்றும் இவரும் குழந்தைப் பருவத்திலேயே அசாதாரண அழகுடன் விளங்கிஞர் என்றும் பாடியிருக்கிருர் 'பெரியாழ்வார் பிரபந்த' ஆசிரியர்.

‘ செங்கமலை தங்கும்
திருமார்பு காண்மின் !’ என்றான்
பங்கமில்லா மார்பழகு
கண்டார் பரிவோடே !

[செங்கமலை - மகாலட்சுமி. காண்மின் - காணுங்கள். பங்கமில்லா - குற்றமில்லாத. பரிவு - அன்பு.]

என்று குழந்தை விஷ்ணுசித்தரின் மார்பழகையும்,

‘ பூக்கும் திருவுந்திப்
பூவை நிறத்(து) அமலன்
வாக்கும் நயனமும்
வாயும் முறுவலும்,சீர்
மூக்கும் இருந்தவா
காணீர் !என் றான்முகத்தில்
ஆக்கும் அ(து)அதுகண்(டு)
அந்தணர்கள் வாழ்த்தினார்.

[திருவுந்தி - அழகிய நாபி; தொப்புள். பூவை - ஒருவகை நீலமலர். அமலன் - (இங்கே) கண்ணன். வாக்கு - (இங்கே) மழலைச்சொல். நயனம் - கண்கள். முறுவல் - இளநகை. இருந்தவா - இருந்தவாறு.]

என்று குழந்தை விஷ்ணுசித்தரின் இளநகை முதலியவற்றையும் வாழ்த்திப் பாடுகிறார் வடிவழகிய நம்பிதாஸர்.

இக்குழந்தைத் தொண்டரின் கண்ணழகில் கண்டவர்களெல்லாம் ஈடுபட்டனராம் :

‘ திங்கள் வதனத்
திருஅனைய தேவகிபால்
தங்கிப் பிறந்(து)ஆயர்
தம்பால் வளர்ந்தபிரான்

செங்கமலக் கண்காண்மின்,
சேயிழையீர் !' என்றவர்தம்
அங்கமலக் கண்கண்(டு)
அனைவர்களும் வாழ்த்தினர்.

[திங்கள் - சந்திரன். திருவனைய - லட்சுமியை ஒத்த. ஆயர்தம்பால் - ஆயர்களிடம். பிரான் - (இங்கே) கண்ணன். செங்கமலம் - செந்தாமரை. சேயிழையீர் - பெண்களே. அங்கமலம் - அழகிய தாமரை.]

குழந்தை விஷ்ணுசித்தருக்குக் குழந்தைக் கண்ணன் கதைகளைக் கேட்பதில் விருப்பம் அதிகம். எம்பெருமானும் தம்மைப்போல் குழந்தையாக இருந்தார், வளர்ந்தார், விளையாடினார், துஷ்டத்தனம் செய்தார்!—என்பதை யெல்லாம் நினைக்க நினைக்க விஷ்ணுசித்தருள்ளம் குதூகலித்தது.

பாராளும் நூற்றுவரைப்
பாழாக்கிப், பாண்டவருக்(கு)
ஆராத இன்பம்
அருளப் பிறந்தபிரான்

[பாராளும் - உலகத்தைக் கட்டியாண்ட. நூற்றுவர் - துரியோதனாதியர். ஆராத - தெவிட்டாத.]

என்கிறபடி, துஷ்ட மன்னர்களைத் தூளாக்கி அறப் பற்றுள்ள அடியார்களான பாண்டவர்களுக்கு இவ்வுலகிலேயே பேரின்பம் அருளப்பிறந்த குழந்தைக் கண்ணன், குழந்தையாகிய தம்மையும் காப்பாற்றித் தம்மைக்கொண்டு பிறருக்கும் ஏதேதோ நன்மை செய்வான் என்று 'பகற்கனவு' கண்டார்.

வயது அதிகரிக்க, அனுபவமும் அறிவும் அதிகரிக்க, கிருஷ்ண பக்தியும் அதிகரித்தது. வேதங்களுக்கும்

கட்டுப்படாத பெருமான் ஆய்ச்சி கயிற்றால் கட்டுண்ட அதிசயக் கதை இவர் நெஞ்சில் ஆழ்ந்து பதிந்தது.

ஆராயும் வேதம்
அயர்வெய்த, அண்டர்கையில்
ஏரார் அணைகயிற்றால்
கட்டுண்ட எம்பெருமான்

[அயர்வெய்த (தேடித்தேடி) அயர்ந்துபோக. அண்டர் - (இங்கே) மாடு மேய்க்கும் ஆயர் - ஏரார்-அழகான. அணை கயிறு - பால் கறக்கும்போது பசுவின் காலில் கன்றைக் கட்டும் கயிறு.]

என்று கண்ணனை நினைக்க நினைக்க, அவன் தவறான பாச பந்தங்களிலிருந்து தம்மை விடுவிப்பதோடு, அன்பு என்ற தெய்விக பாச பந்தத்திற்குக் கட்டுப்பட்டுக் காட்சியளிப்பான் என்று நம்பினார்.

பொதுவாக, எங்கும் நிறைந்து எல்லாவற்றுக்கும் அப்பாலாக, என்றும் இருக்கும் கடவுள் ஒரு காலத்தவனாய், ஓரிடத்தவனாய்ப் பிறந்து வாழ்ந்த அவதார ரகஸ்யம் இவரது அறிவைக் கிளறியது; அன்பைப் பிணித்தது. சிறப்பாக, கிருஷ்ணாவதாரம் இவருள்ளத்தைக் கொள்ளை கொண்டது. தம்மையொத்த ஒரு விளையாட்டுப் பிள்ளை போல் கண்ணனை இவரது பசுங்கண்கள் கண்டு கொண்டனவோ?

இத்தகைய குழந்தையின் அழகிய முகத்திலும் நெற்றியிலும் தெய்வ ஒளியும் தெய்வ மதியும் திகழ்ந்தனவாம்.

'உற்ற புவனம்
அனைத்தும்உதிப் பித்(து)அதனுள்
சிற்றிடைத் தேவகியார்
சீரார் வயிற்றுதித்தான்

நெற்றி யிருந்தவா
நேரிழையீர் ! காண்மின்' என்றான்
ஒற்றைப் பிறைநுதல் கண்(டு)
உத்தமர்கள் வாழ்த்தினார்.

[புவனம் - உலகம். உதிப்பித்து - பிறப்பித்து. சிற்றிடை - சிறு இடை. சீரார் - சிறந்த. நேரிழையீர் - பெண்களே. ஒற்றைப் பிறைநுதல் - ஒரு பிறைச்சந்திரன் போன்ற நெற்றி.]

என்று எவ்வளவு அருமையாகப் பாடுகிறார் வடிவழகிய நம்பிதாஸர் !

உலகத்தை யெல்லாம் பிறப்பித்து அந்த உலகத்தின் ஒரு தூளாகிய இப் பூலோகத்தின் பரத கண்டம் என்ற சிறு பகுதியில், ஆய்ப்பாடி என்ற ஒரு மூலையில். தேவகி யென்ற ஓர் ஆய்ச்சியின் வயிற்றில் பிறந்தான் கடவுள் என்றால், அது அதிசயத்திலும் அதிசயந்தானே ! ஆனால் அந்தக் குழந்தைக் கடவுளை அப்படியே கண்ணிற் கண்டு—தாயாகவே கண்டு—காட்டும் விஷ்ணுசித்தரின் மனோபாவமும் அதிசயமானது ! பாதாதிகேசமாய்க் கண்ணனைத் தாயின் பெருமையுடன் கண்டு அகில லோகத்தை யாளும் அதிசய மதி ஒளிரும் அந்த நெற்றியையும் காட்டுகிறார், மற்றப் பெண்களுக்கு, ஆய்ச்சிகளுக்கு; —அவர்களை வியாஜமாகக் கொண்டு நமக்குந்தான் ! இத்தகைய விஷ்ணுசித்தர் குழந்தையாக இருந்தபோது, அந்த நெற்றியழகிலே இவரது மதியழகைக் கண்டு உத்தமர்கள் வாழ்த்தியதாகக் கற்பனை செய்கிறார் பக்தரான வடிவழகிய நம்பிதாஸர்.

பாலனைக் கண்டவர்கள் வெறும் பாலனாகக் காணாமல் 'தொண்டரின் தந்தை' யாகவே கண்டார்களாம்.

புண்ணியக் கொழுந்தோ? நான்மறைக் கொழுந்தோ?
... ... ... போதத்தின் பொலிசுடர்க் கொழுந்தோ?

[நான்மறை - நாலு வேதம். போதம் - ஞானம். பொலி - விளங்குகின்ற.]

என்று வியந்தார்களாம். 'தந்தை தாய் செய்த தவப்பயன் தானோ? பாகவத சமயம் செய்த தவப் பயனே? தமிழகம் செய்த தவம் திரண்டதுவோ?' என்றெல்லாம் அதிசயிக்கும்படி விளங்கியதாம் குழந்தை மேதை.

ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள வடபெருங்கோயிலுடையவரைக் கண்ணனாகவே வழிபட்டு, துளஸி மல்லிகை சண்பகம் பிச்சி செங்கழுநீர் செவ்வந்தி தாமரைப்பூ முதலான மலர்களை ஜாக்கிரதையாகப் பூக்கூடையில் எடுத்து மாலை கட்டி அம் மாலைகளை வடபத்திரசாயிக்குச் சாத்தி, கண்ணனே அவற்றை அங்கீகரித்து அருள் செய்ததாக ஆனந்தக் கண்ணீர் வடித்து நிற்பார்.

மலரெடுத்து மாலை தொடுப்பது எவ்வளவு இன்பமாக இருந்ததோ, அவ்வளவு இன்பமாக இருந்தது இவருக்கு மண்வெட்டி யெடுத்து நிலம் திருத்திப் பயிர்செய்து நீர் பாய்ச்சி மடை மாற்றி நந்தவன கைங்கரியம் புரிவதும். தாம் எடுத்து இறைவனிடம் சேர்ப்பிக்கும் மலரும் மாலையும் இவருக்கு, அருள் வேண்டித் தவிக்கும் ஆத்மாக்களையும் ஜனத்திரளையும் நினைப்பூட்டின.

கிள்ளை மயில்போலும்,
கேகயமென் புள்போலும்
வெள்ளை அனம்போலும்,
விவிதநிற வேரிமலர்

[கிள்ளை - கிளி. கேகய மென்புள் - மென்மையான, இசைக்கு உருகும், ஒருவகைப் பறவை. அனம் - அன்னம். விவித நிறம் - பல வித நிறம். வேரி - வாசனை.]

என்கிறபடி, கிளிகளையும் மயில்களையும் இசைக்கு உருகும் கேகயப் புள்ளையும் வெண்ணிற அன்னம் முதலிய

வற்றையும் நினைப்பூட்டிய பன்னிற மலர்களும், பலவேறு நிலையில் உள்ள ஆத்மாக்களை நினைப்பூட்டி, அவர்களை யெல்லாம் இறைவனுடைய மாலையில் நிறம்பெற, மணம் பெறத் தொடுக்க வேண்டும் என்ற ஆசையையும் இவருள்ளத்திலே பிறப்பித்திருக்க வேண்டும். ஆகவேதான், பூ மாலை கட்டியவருக்குப் பாமாலை கட்டி உலகத்தைத் திருத்த வேண்டும் என்ற பெருவிருப்பமும் உதயமாயிற்று. இவ்விருப்பமும் விஷ்ணுசித்தருக்கு இளமையிலேயே தோன்றியிருக்கக் கூடும்.

நாளடைவில் திருக்கோஷ்டியூர் வாஸியும், மதுரை மன்னனின் புரோகிதருமான செல்வ நம்பியின் சினேகம் இவருக்குக் கிடைத்தது. இந்நட்பு விஷ்ணுசித்தரின் விருப்பம் நிறைவேறுவதற்கு உதவவேண்டுமென்பது இறைவன் திருவுள்ளம் போலும்.

## 3. தமிழ் வளர்த்த மதுரையிலே

கிரேக்கர்களின் ஆதென்ஸ் நகரம்போல் கீழ்த் திசையிலே தமிழுக்கும் நாகரிகப் பண்பிற்கும் ஒரு வளர்ப்புப் பண்ணையாக விளங்கியது மதுரைமாநகரம். இன்றும் தமிழ் நாட்டின் ஒரு முக்கிய நகரம்தான்; மதுரை ஜில்லாவின் தலைநகரமாகவும், சென்னை இராஜதானியின் இரண்டாவது பெரு நகரமாகவும் விளங்குகிறது; சென்னைமாநகரிலிருந்து தென்னிந்திய ரெயில்வேயின் முக்கிய மார்க்கத்திலே 345 மைல் தூரத்தில் இருக்கிறது. தென்னிந்தியாவின் புகழ்பெற்ற இந்நகரில் மதுரைக் கோவில் இன்றும் பெரும் புகழ்பெற்றிருக்கிறது; சிற்ப ரஸிகர் வியந்து பாராட்டும் வேலைப்பாடுகளுக்கும், பொது ஜனங்களின் பக்திக் காதலுக்கும் ஒரு பொக்கிஷமாக விளங்குகிறது. 'நேபிள்ஸ் நகரம் பார்த்தபின் செத்துப்போ!' என்று ஐரோப்பாவில் ஒரு முதுமொழி வழங்கியது. 'அந்த

அழகைப் பார்த்தபின் வேறு அழகைப் பார்க்கவேண்டிய தில்லை; மற்ற அழகுகளெல்லாம் அழகின்மைதான்! அழகின்மையைப் பார்ப்பதைவிட ஆயுளை முடித்துக் கொள்ளலாம்' என்பது அம் முதுமொழியின் பொருள். மதுரையைப்பற்றி வழங்கும் பழமொழி அப்படி வாழ்வை முடித்துக்கொள்ளச் சொல்லவில்லை. 'மதுரை பாரா தவன் கழுதை!' என்பதுதான் தமிழ்ப் பழமொழி. மனித னாய்ப் பிறந்தவன் அனுபவிக்கவேண்டிய சில வாழ்க்கை யின்பங்களில் மதுரைக் காட்சியும் ஒன்று என்பது தமிழ்ப் பழமொழியின் உட்பொருள்.

மதுரை நீண்ட காலமாகப் புகழ்வாய்ந்த பெருநகர மாய் விளங்கி வந்திருக்கிறது. பொருள்-வாணிபத்திற்கும் கலை—வாணிபத்திற்கும் தென்னிந்தியாவின் திலகமென்று சொல்லும்படியாகத் திகழ்ந்தோங்கி யிருக்கிறது. வெள்ளையர் பெரும்பாலும் நாகரிகம் பெறுவதற்கு முன்பே—ஏன், கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு முன்பே— மதுரையில் தமிழ்க் கல்வியும் தமிழ் நாகரிகமும் மேம்பட் டிருந்தன. மதுரைக் கோயிலில் பக்தியோடு தமிழும் வளர்ந்தது. ஆம், மதுரைக் கோவிலில் சங்கம் இருந்தது, தமிழ் ஆராய்ச்சி நடைபெற்றது. மதுரைச் சொக்கரும் புலவரோடு புலவராக, தமிழ்ப் புலவராக இருந்தார் என்பது எவ்வளவு அழகான கற்பனை!

மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செலுத்திய பாண்டியர்கள் பாரத காலத்திலேயே பிரசித்தி பெற்றிருந்தார்கள். 'அக்காலத்திலேயே தமிழ்ப் பெண்ணுக்கு வடநாட்டு மாப்பிள்ளையா?' என்று அதிசயிக்கும்படி யிருக்கிறது, பாண்டியன் மகள் சித்தி ராங்கதை அர்ச்சுனனை மணந்துகொண்ட கதை! கிரேக்க நாட்டுடனும் ரோமாபுரி ஏகாதிபத்தியத்துடனும் வாணிப உறவுகொண்டு,

யாதும் ஊரே,
யாவரும் கேளிர்!

[கேளிர் - உறவினர்.]

என்பது போன்ற உயர்ந்த லட்சியங்களுக்கு ஒரு வளர்ப்புப் பண்ணையாக விளங்கியது பாண்டியராட்சி. ஜாவா சுமத்ரா சிங்களம் முதலிய வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்பும் கலைத் தொடர்பும் தென்னாடு பெறுவதற்கு மதுரை மன்னர்களும் பெருமுயற்சி செய் திருக்கவேண்டும்.

பாண்டிய மன்னர்கள் முதல் முதல் தங்கள் தலைமை யூர்களைக் கடற்கரையில் அமைத்திருந்தனர். அவற்றைக் கடல் பொங்கி அழித்துவிட்டதால், பிற்காலத்தில் உள் நாட்டிலே வைகையாற்றங்கரையில் இம் மதுரை அமைக் கப் பெற்றதென்பர். அக்காலத்து மதுரையை இக்காலத்து இங்கிலாந்திலே தேம்ஸ்நதி தீரத்திலுள்ள லண்டன்மா நகருடன் ஒப்பிட்டு உவகைகொள்ளும் தமிழன்பர்களும் உண்டு.

மதுரை மாநகரம் பாண்டியராட்சியில் உலகப் பெரும் புகழ் பெற்று அடைந்திருந்த அரசியல் சிறப்பு, கல்விச் சிறப்பு, வியாபாரச் சிறப்பு, ஊரமைப்புத் திறம் முதலியன சிலப்பதிகாரம் என்ற செந்தமிழ்க் காவியத் தில் கூறப்படுகின்றன. சரித்திரப் புகழும் காவியப் புகழும் புராணப் புகழும் பிரபந்தப் புகழும் சூடிப் பெருமைபெற்ற மதுரை, விஷ்ணுசித்தரின் பாமாலை ஒன்றும் சூடிப் பெருமிதம் பெற்றிருக்கிறது.

மதுரைப் பாண்டியர்கள் நீண்டகாலமாகச் சிறந்த தமிழ்ப் புலவர்களைத் தங்கள் நகரத்திற்கு வரவழைத்து, வேண்டும் உதவிகள் செய்து தமிழை வளம்பெறச் செய்த செய்தி தமிழகம் நன்கு அறியும். இத்தகைய மதுரைமா நகரம் விஷ்ணுசித்தரையும் தம்பால் அழைத்துத் தமிழ்

வளத்தையும் பக்தி வளத்தையும் பெருக்கிக்கொண்டது பெரிதும் பொருத்த முடையதேயாகும்.

'மீனாட்சி கோயில்' என்று பிரசித்தி பெற்றிருக்கும் மதுரைக் கோயில் பல அரசர்களால் மேலும் மேலும் விரிவாகக் கட்டப்பெற்று வானளாவிய கோபுரங் களுடன் ஊருக்கு நடுவே சிற்பக் களஞ்சியமாக விளங்கி, இந்நகரத்திற்கு ஒப்பற்ற அழகை அளித்திருக்கிறது. இக்கோயிலின் உலகப் பிரசித்தி பெற்ற அழகை அனு பவிக்கும்பொருட்டுப் பல நாடுகளிலிருந்து பல யாத்திரி கர்கள் இன்றும் வந்துபோகிறார்கள். பழைய காலத்தி லும் மதுரையின் கலையழகு உள்ளிட்ட பலவேறு அழகு களையும் அனுபவிக்கப் பல யாத்திரிகர்கள் வந்துபோவ துண்டு. பற்பல சமய வாதிகளும் தங்கள் சமயங்களைப் பரப்புவதற்கு மதுரையை நாடிச் செல்வதுமுண்டு. இத் தகைய மதுரையின் அழைப்பு, ஸ்ரீவில்லிபுத்தூரில் நந்தவன கைங்கரியம் செய்துகொண்டிருந்த பெரியாழ் வாருக்கும் வந்துசேர்ந்தது.

வைகை தாமிரபருணி காவேரி முதலான நதிதீரங் களில் ஆழ்வார்கள் தோன்றி நாடெங்கும் பக்தி வெள் ளம் பெருகச் செய்வர் என்ற ஒரு குறிப்பு, சுகப் பிரம்ம ரிஷியின் ஒரு தீர்க்க தரிசனமாக ஸ்ரீ பாகவதத்தில் காணப்படுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றிய விஷ்ணுசித்தர் தோற்றுவித்த பக்தி வெள்ளம் வைகை யாற்றங்கரையி லுள்ள மதுரைமா நகரிலிருந்துதான் தமிழ் நாடெங்கும் பெருகிச் செழிப்பை உண்டாக்கியது. இதற்குக் காரணமாக இருந்த பாண்டிய மன்னனை ஸ்ரீ வல்லப தேவன் என்று குறிப்பிடுகிறது ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைக் கதை.

இம்மன்னன் தமிழ் வளர்த்த வீரமன்னர்களின் பரம்பரையிலே பரம தார்மிகனாக விளங்கி, சிறியதைப் பெரியதும், மெலிந்தாரை வலியாரும் நலியாதபடி அரசு

புரிந்தான் என்றும் கதைகள் கூறுகின்றன. இவனை ராஜஸிம்ஹன் என்றும், கோநெடுமாற வர்மன் என்றும் பிரசித்தி பெற்றிருந்த பாண்டிய சக்கரவர்த்தி என்பர் சரித்திர ஆராய்ச்சிக்காரர். இவன்தான் விஷ்ணுசித்தரை வரவழைத்து, தமிழ் வளர்ந்த மதுரையிலே ஸ்ரீ வைஷ்ணவமும் வளரும்படி உதவினன்.

## 4. மங்கிக் கிடந்த மனவிளக்கு

'பல்லவனை ஜயித்தேன்; தென்னாட்டிலும் வடநாட்டிலுமுள்ள வேறு பல அரசர்களையும் வென்று இப் பாண்டிய ராஜ்யத்தை மகாராஜ்யமாக்கி, மகா வீரன் என்ற பேரும் புகழும் பெற்றேன். "பரத கண்டத்தின் அழகு ராணி" என்று புகழப் பெற்றவளும், கங்கராஜன் மகளுமான பூசுந்தரியை மணந்து பட்டமகிஷி யாக்கிக் கொண்டேன். எனினும் என் உள்ளத்திலே அமைதி ஏற்படவில்லை. வீரத்தாலும் வெற்றியாலும் அடைய முடியாத மனச் சமாதானத்தைக் காதலாலும் அடைய முடியவில்லை! இனி எங்கே எப்படித்தான் மன அமைதி கிடைக்குமோ? யார் வழிகாட்டப் போகிறாரோ?' எனத் தனக்குள் தானே சொல்லிக்கொண்டு, நட்ட நடு நிசியில் தன்னந் தனியனாக வருகிறானே, அவன் யார்? அந்தத் தனிமொழிக்கும் வேஷத்திற்கும் சிறிதும் பொருத்தமில்லையே! இப்படி ஏன் தெருத் தெருவாக—சில தெருக்களில் வீடு வீடாகக்—கவனித்துக்கொண்டே போகிறான்?

ஸ்ரீவல்லபதேவ மன்னன்தான் இவன். இவன் காலத்தில் இராஜ்யம் செழிப்பாகத்தான் இருந்தது; பொக்கிஷம் நிறைந்து சுபிட்சம் பொங்கிப் பொழிந்தது, செல்வச் செழிப்பில்லாதவர்களுக்கு வித்தைக்கோ, விவாகத்திற்கோ அரசன் பொருளுதவி செய்வதுண்டு. பசியால் வருந்தும் அன்னியர்களுக்கும் யாத்திரிகர்

களுக்கும் உணவு கொடுப்பதிலும், நோயுற்றவர்களுக்கு வைத்திய உதவி செய்வதிலும் இவனுக்கு உத்ஸாகம் அதிகம். பல இரவுகளில் மாறுவேஷம் பூண்டு நகர சோதனை செய்து குடிகளின் சுக துக்கங்களையும், யாத்திரிகர்களின் தேவைகளையும் நேரில் அறிந்துகொள்வதில் இவன் முன்னோரைக் காட்டிலும் அக்கறை உள்ளவனாக இருந்தான்.

அன்றிரவு ஒரு தெருத் திண்ணையில் உறங்கிக்கொண்டிருந்த ஒருவனை எழுப்பி, 'தாங்கள் யார்? எங்கேயிருந்து வருகிறீர்கள்?'—என்று கேட்டான் வல்லபதேவன். 'கங்கா ஸ்நானம் பண்ணிவருகிறேன். ஸ்ரீ வல்லபதேவராட்சியில் மதுரைமா நகரம் அடைந்திருக்கும் அழகையும் சிறப்பையும் பார்த்துவிட்டுச் சேது தரிசனம் செய்யப் போகிறேன்,—என்று பதில் சொன்னான் யாத்திரிகன். அந்த முகத்தை, அப்போது பிரகாசிக்கத் தொடங்கிய சந்திரிகையில் உற்று நோக்கிய அரசன், 'தேச சஞ்சாரத்தோடு சாஸ்திர சஞ்சாரமும் செய்திருப்பவர் இவர்!' என்று அம்முகப் பொலிவை வியந்து, 'யாத்திரிகரே! தாங்கள் ஜீவ யாத்திரைக்கும் ஒரு நல்ல வழி கண்டுபிடித்திருந்தால் காட்டவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான்.

அதற்கு யாத்திரிகன் ஒரு சுலோகம் சொன்னான். அதன் பொருள் வருமாறு:

'மழைக்காலத்தில் வேண்டியவற்றிற்காக மற்ற எட்டு மாதங்களில் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது; இராக்காலத்தில் வேண்டியதற்காகப் பகலில் முயற்சி செய்யவேண்டியது; முதுமையில் வேண்டியவற்றிற்காக யௌவனத்தில் சம்பாதிக்க வேண்டியது; இப்படியே மறுமைக்கு வேண்டிய செல்வத்தையும் இம்மையிலேயே தேடிவைத்துக் கொள்ளவேண்டும்!'

விவேகியான அரசனுள்ளத்தில் இப்பொருள் ஆழ்ந்து பதிந்தது. இவன் நகரி சோதனை முடித்துத் தேசாந்தரியை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போய் உபசரித்து, 'இதைத் தங்கள் விருப்பத்திற்கிணங்க உபயோகித்துக் கொள்ளுங்கள்' என்று வேண்டிய பொருளுதவியும் செய்தான். விநயம் தோய்ந்த குரலில் வேந்தன் சொன்ன உபசார வார்த்தை யாத்திரிகனுள்ளத்தை உருக்கி விட்டது. அவன் மறுபடியும் தான் ஏற்கெனவே சொன்னதை ஞாபகப்படுத்தி, 'நானும் இப்போது அந்த வழியிலேதான் போகிறேன். சேது தரிசனம் செய்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் போவேன்' என்று சொல்லி விட்டு அதிகாலையில் அரண்மனையை விட்டுப் புறப் பட்டான்.

அந்த அமுத மொழிகளைச் செவியுற்ற மன்னன் தனக்கு நல்ல காலம் நெருங்கிவிட்டதென்றே நம்பினான். 'இம்மையில் எனக்கு யாதொரு குறைவுமில்லை. ஆனால், மறுமைக்கு வேண்டிய செல்வத்தை இப்போதே தேடிக் கொடுக்கும் ஞான குரு யார்?' என்று சிந்தையில் ஆழ்ந்தான். பள்ளியெழுச்சி பாடுகிறவர்கள் வந்து புகழ் பாடிச் சென்றபின் வல்லபதேவன் நீராடி நிர்மலனாகிக் கொலுமண்டபத்திற்குப் புறப்பட்டான்.

சிற்றரசர்களும் சேனைத் தலைவர்களும் வணங்க, வைதிகர்களும் முத்தமிழ்ப் புலவர்களும் ஆசி கூற, பணிப் பெண்கள் இருபுறமும் நின்று சாமரை வீச, முத்துப் பந்தரின்கீழ் அமைந்த தங்கச் சிங்காசனத்தில் இரத்தின முடிசூடி, மார்பிலே முத்தாரம் ஒளிர, நட்சத்திரங்கள் சூழ்ந்த பூர்ண சந்திரன் போல் கொலு வீற்றிருந்து, இராஜ்ய காரியங்களை வழக்கம்போல் கவனித்துவந்தான் வல்லப தேவன். எனினும் இரவில் நிகழ்ந்த நிகழ்ச்சி நினைவை விட்டகலவில்லை. இம்முகக் குறியைக் கண்டதும், "நமது சக்கரவர்த்திக்கும் மனக்குறை இருக்க

முடியுமோ? கவலை இருக்க முடியுமோ?" என்று மந்திரிமார் ஆச்சரியப்பட்டார்கள்.

அப்போது அச்சபைக்கு அரசனுடைய புரோகிதரான செல்வநம்பி வந்தார். வேதாகம சாஸ்திரங்களைக் கரை கண்டு உணர்ந்தவர் அவர்; விஷ்ணுசித்தரின் பெருமையை அறிந்து அவருடன் நட்புரிமை பூண்டவர். அவரைக் கண்டதும் அரசன் எழுந்து ஆசனம் அளித்து வணங்கி உபசரித்தான். புரோகிதர் அம்முகத்தைக் கவனித்து, 'அரசே! தங்களுக்கு என்ன குறை? உடல் நோயுற்றிருக்கிறதா?' என்று கேட்டார். 'உடம்பில் ஒரு நோயுமில்லை; உள்ளந்தான் அமைதியில்லாமல் இருக்கிறது. ஆத்மா ஆரோக்கியமடையச் சிகித்ஸை செய்து கொள்ளவேண்டும். எந்த வைத்தியர் எப்படி மருந்து செய்யப் போகிறாரோ?' என்று அரசன் பதில் சொல்லி, இரவில் நடந்ததையும் தெரிவித்தான்.

செல்வநம்பி சொன்னார்:— 'அந்த யாத்திரிகர் மங்கிக் கிடந்த மன விளக்கைத் தூண்டிவிட்டார். நல்லது, அரசே! உமக்கு இவ் வெண்ணம் உதித்ததில் அதிசயமில்லை. உண்மை நெறியையும் அருள் நெறியையும் விட்டு விலகாத உமது நோக்கம் இனிது நிறைவேறும், எம் பெருமான் திருவருளால். உமது நோய்க்கு மருத்துவர் ஒருவர் இருக்கிறார். அவரை ஞான குருவாகக் கொண்டு ஒழுகுவதுதான் இம்மையிலேயே மறுமைக்கும் உரிய செல்வம் தேடும் வழி. ஒரு பெரிய சபை கூட்டவேண்டும்; சமய ஞானிகளான பெரியோர்களை வரவழைக்க வேண்டும். அவரும் வருவார் என்று நம்புகிறேன். ஆஹா, மகான்கள் நீறு பூத்த நெருப்புப் போலவும், சேறு பூத்த செந்தாமரை போலவும் இருப்பார்கள். அரசே! உமது பக்தியும் சிரத்தையுமே அத்தகைய பெரியோரை வெளிப்படுத்தி வரவழைக்கக் கூடும்!'

பிறகு, அரசனும் புரோகிதரும் நன்ருக ஆலோசனை செய்து, சபாமண்டபத்தின் தோரண வாசலிலே பொன்னும் மணியுமாக வெகு திரவியத்தைக் கிழிச் சீரையில் முடிந்து கட்டி, அந்தக் கிழியானது ஸாரமான சமய உண்மை இன்னதென்று நிரூபிக்கும் பெரியவருக்கு உரியதென்று பறையறைவித்துத் தேசமெங்கும் அறிவித்தார்கள். தூதர்கள், முக்கியமான பெரியோர்களை நேரில் போய் அழைத்து வர வேண்டு மென்று ஊரூராய்ச் சென்றனர். அரசனுள்ளத்தில் பரபரப்பு, குதூகலம், கவலை, ஆனந்தம், பேராவல் எல்லாம் ஒருங்கே குடி கொண்டன.

மங்கிக் கிடந்த மனவிளக்கு ஓங்கி எரியலாயிற்று.

## 5. கனவும் காட்சியும்

'விஷ்ணுசித்தரே எழுந்திரும்! மதுரைக்குப் போய் 'அந்தப் பொற்கிழியை அறுத்து வர வேண்டாமா?' என்று யாரோ தட்டி எழுப்பியதுபோல் இருந்தது. 'அந்தப் பரிசு வேத சாஸ்திரங்களைக் கரைகண்டு உண்மை கண்ட நிபுணருக்கல்லவா? நான் போய்க் கையிலிருக்கும் மண்வெட்டியைக் காட்டிக் கிழியறுக்க முடியுமோ? "வேதவாய்த் தொழில்" மறந்து போய்விட்டதே!' என்று சொல்லிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தார் விஷ்ணுசித்தர்.

அப்போது பக்கத்திலிருந்த உருவம், 'உண்மையைக் கண்டு காட்ட உன்னுல் முடியாது என்கிருயே; அந்த உண்மை நான்தானே! என்னை நானே காட்டுவேன்!' என்று சொல்லிக் கொண்டே மறைந்துவிட்டது. விஷ்ணு சித்தர் நித்திரை கலைந்து, 'இப்படியும் ஒரு சொப்பனமா?' என்று ஆச்சரியப்பட்டார். பிறகு,'அவ் வடிவம் நித்திரை காட்டிய நிழலன்று; பயனில்லாத மனக்

கற்பனையும் அன்று!' என்று ஆலோசிக்கத் தொடங்கினார்.

'ஆ ஆ! என் உள்ளத்தை உருக்கி உடம்பையுங் கூட உருக்கிவிடும் போலிருந்ததே அந்த அழகு; அதை எப்படி வருணிப்பேன்?' என்று எண்ணமிட்டார் விஷ்ணு சித்தர். நீரை முகந்துவந்த நீலமேகம் அப்பால் போகாமல் மலையுச்சியிலே சாய்ந்தது போலிருந்தது ஒரு கணம்! அடுத்த கணமே மலையும் மேகமும் மறைந்து, ஜில்லென்று பூத்த நீலமலர்கள் கண்ணோடு கருத்தையும் குளிர்வித்தன! அந்த மலர்க்காடு மறைந்ததும், திடீரென்று அழகு பொங்கிப் பொங்கி அலைமேல் அலையாகிக் கரை காணாக் கடலாய் வளர்ந்துவிட்டது! கடலும் போய்ப் பளிச்சென்று மயில்கள் கூட்டங் கூட்டமாக நின்று ஆடுவது போலிருந்தது: அந்தக் காட்சியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே யிருக்கலாமென்று ஆசைப்பட்டார். ஆனால், விரைவில் விழித்துக்கொண்டார். அப்போது அவ்வளவு அழகும் கண்ணுக்குள்ளே ஊடுருவிப்போய்க் கருத்துக் குள்ளே பாய்ந்ததுபோலத் தோன்றியது.

குன்றாடு கொழுமுகில்போல்,
குவளைகள்போல், குரைகடல்போல்,
நின்றாடு கணமயில்போல்,
நிறமுடைய நெடுமால்....

[கொழுமுகில்-நீரைமுகந்த மேகம், குவளை-நீலமலர். குரைகடல் - ஒலி செய்யும் கடல். நின்றாடு - நின்று ஆடுகின்ற. கணமயில் - மயிலின் கூட்டம். நெடுமால் - மகாவிஷ்ணு.]

என்று பாடி, 'அப்பா, நான் உன் அடிமை; உன் அழகால் என்னை அணைத்துக்கொள். எனக்குள் மறைந்திருந்து நீயே உன் உண்மையைப் பாண்டிய ராஜ

சபையில் வெளியிட்டு வெற்றிபெறுவாய்!' என்று தமக்குள் தாமே சொல்லிக் கொண்டார்.

நீராடி நித்தியானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு விஷ்ணுசித்தர் நந்தவனத்திற்குப் போனார். போய்ப் பக்குவமாகப் பூக் கொய்து கூடையில் சேர்த்துக் கண்ணி, கோவை, பிணையல் முதலான பலவித மாலைகளாய்க் கட்டிக்கொண்டு வடபத்திரசாயி கோவிலுக்குப் போனார். மாலைகளைப் பெருமாளுக்குச் சமர்ப்பித்து, 'கண்ணா! அப்போது அப்போது நீ உகந்த கைங்கரியத்தில் ஈடுபடுவதுதான் அடியனுக்குப் புருஷார்த்தம்; இம்மையிலே மறுமைச் செல்வம் இது!' என்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்.

பிறகு ஸ்ரீவில்லிபுத்தூர் வாசிகளும் கோயிலைச் சார்ந்தவர்களும் ஒருமுகமாய் வேண்டிக் கொண்டதற்கு இணங்கிப் பாண்டிய மன்னன் அனுப்பியிருந்த பல்லக்கில் ஏறிக்கொண்டார். வெண்சாமரை, வெண் கொற்றக் குடை., சின்னம் முதலான விருதுகளுடன் தொடர்ந்தன பக்தர் குழாங்கள்.

* * * *

பாண்டிய சக்கரவர்த்தியின் அறிக்கையைக் கேள்விப்பட்டு வேத வேதாந்தங்களில் வல்லவர்களான வித்துவான்கள் பலவேறு பிரதேசங்களிலிருந்தும் மதுரையை நோக்கி வந்தார்கள். ஜைன பௌத்தம் முதலான புறச் சமயங்களைச் சார்ந்த பண்டித மணிகளும் வந்து சேர்ந்தார்கள். தர்க்க சாஸ்திர நிபுணர்களும், பல்வேறு கலைகளில் பயிற்சிபெற்ற புலவர் பெருமக்களும், ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களும் திரள் திரளாகப் பாண்டிய ராஜதானிக்கு வந்து, குறித்த தினத்தை ஆத்திரமாக எதிர்பார்த்திருந்தார்கள்.

பொருளில் ஆசை யில்லாதவர்களும் வாதப் பிரதிவாதங்களிலும் சமயப் போர்களிலும் ஆசை கொண்டு

வந்தார்கள். பொது மக்களும் வாதப் போரைப் பார்க்க ஆசைப் பட்டார்கள். அரசனும் அமைச்சர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் விருந்தாளிகளை உபசரிப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தார்கள்.

உற்றவனாய்த் தென்னவனுக்(கு)
உயிர்த்துணையாய், அறம்அன்றி
மற்றறியா நிலையானாய்,
மறைநாலும் கற்றவனாய்ச்,
செற்றமிலா மனத்தினனாய்,
செல்வநம்பி எனும்நாமம்
பெற்றவனாய், எதுவரினும்
பேராத நிலையானாய்,

[தென்னவன்-பாண்டியன். மற்று அறியா-வேறொன்றும் அறியாத. செற்றம் - பகைமையுணர்ச்சி; வெறுப்பு; தணியாத கோபம்.]

இருந்த இராஜ புரோகிதர் மாத்திரம், 'அவர் வருவாரோ, மாட்டாரோ?' என்ற சங்கையுடன் ஸ்ரீவில்லிபுத்தூரின் திசை நோக்கித் தொழுதவண்ணமாய் இருந்தார்.

குறித்த நாள் வந்தது. உண்மை காணவேண்டும் என்ற ஆசையோடும் ஆத்திரத்தோடும் வீற்றிருக்கிறான் ஸ்ரீவல்லபதேவன். அரசர் பிரானுக்கு அருகே ஒரு புறம் செல்வநம்பி முதலான வேத வித்துக்களும், ஒரு புறம் மந்திரி பிரதானிகளும் தத்தம் ஆசனங்களில் அமர்ந்திருக்கிறார்கள்.

புத்தர் அடைந்தார்;
சைவர் புகுந்தார்;
மத்தம் உறுமீ—
மாங்கிசர் வந்தார்.

[மத்தம் - மயக்கம்; செருக்கு மீமாங்கிசர் - மீமாம்ஸகர்.]

மாயா வாதியர்
வந்துபு குந்தார் ;
ஓயா தேமது
உண்டு தமைத்தாம்
ஆயா வாமிகள்
அக்கணம் வந்தார் ;
தேயா வஞ்சவை -
சேடியர் சென்றார்.

[மாயா வாதியர் - 'வாழ்க்கையெல்லாம் மாயைதான்' என்ற கொள்கையுள்ளவர்கள். மதுவுண்டு - மதுபானம் செய்து. ஆயா - தெளிந்து அறியாத - வாமிகள். மதுபானத்துடன் காளியை உபாசிக்கும் வாம தந்திர மார்க்கப்படி நடக்கிறவர்கள். தேயா வஞ்சம் - குறையாத வஞ்சனை, வைசேடியர் - வைசேஷிகம் என்ற தத்துவக் கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்கள்.]

'ஆருயிர் கொல்லோம்' என்னும்
அருகரும் மதுரை சார்ந்தார் ;
தேரும்மெய் யன்பில் காளா—
முகவரும் சென்று சேர்ந்தார் ;
'பார்உறும் இன்பம் அல்லால்,
பரம்எனல் பழுதாம்' என்றே
ஓர்உல காய தத்தோர்
எனும் அவர் உடனே சென்றார்.

[அருகர் - ஜைனர். தேரும் மெய்யன்பு இல் - தேர்ந்துகொள்ளும் மெய்யன்பு இல்லாத. காளாமுகவர் - காளாமுக வகுப்பைச் சேர்ந்தவர். பார் உறும் இன்பம் - பூமியிலே அனுபவிக்கும் சிற்றின்பம். ஓர் - ஓர்கின்ற ; உணர்ந்துகொள்ளும். உலகாயதத்தோர் - உலக இன்பம் தவிரப் பேரின்பம் இல்லையென்று மறுக்கும் கொள்கையுடையவர்கள்.]

வந்து சேர்ந்த மத வாதியரெல்லாம், 'என் மதம் மேலானது; உன் மதம் தாழ்ந்தது!' என்று வாதஞ் செய்யத் தொடங்கிவிட்டார்கள். பௌத்தர்கள் வேதத்தையும் வேதம் சொல்லும் கடவுளுண்மையையும் மறுத்தார்கள். பல நூல் கற்ற பண்டிதர்களும், 'அந்த நூல் மேலானது; இந்த நூல் மேலானது!' என்று தொண்டை கிழிய விவகரித்தார்கள். அறிவிற் சிறந்த புலவர்கள் தங்கள் அறிவுக் கூர்மையால் எதிர் வாதங்களைக் குத்திக் கிழித் தெறிந்தார்கள். சிலர் தர்க்கப் போர்களில் எதிரிகளை மடக்கித் தள்ளினார்கள். சில வித்துவான்கள் யுக்தி வாதங்களாலும், அனுபவத்தை யொட்டிய வாதங்களினாலும் வேத சாஸ்திரங்களையே அடித்துப் பேசினார்கள். சில அறிஞர்கள் வாழ்வின் நிலையாமையை வற்புறுத்தினார்கள். வேறு சில அறிவாளிகள், 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்; இம்மை யின்பந்தான் இன்பம்! மறுமை யென்பது வீண் கனவு—குருமாரின் சூழ்ச்சி!' என்றார்கள். அரசன் களைப்புற்றவனாய்ப் பெருமூச்சு விட்டான். 'ஐயோ! இன்னும் வரவில்லையே' என்று ஏங்கினார் செல்வநம்பி.

இப்படி வாத யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும்போது, மத வெறியர்களின் உறுமல்களுக்கும், தார்க்கிகர்களின் கர்ஜனைகளுக்கும், சூனியவாதிகளின் கனைப்புக்களுக்கும் இடையே, 'விஷ்ணுசித்தர் வருகிறார்; வில்லிபுத்தூரர் வருகிறார்!' என்ற கோஷம் கிளம்புகிறது. இவருடைய அதிசயமான தேஜஸையும் பொலிவையும் பார்த்தவர்களெல்லாம் அந்த க்ஷணம் தங்களை அறியாமலே அஞ்சலி செய்து வழி விடுகிறார்கள். செல்வ நம்பி குதூகலத்தோடு எழுந்துபோய் இவர் அடிகளில் வணங்குகிறார். இந்த அபூர்வமான—சாந்தி பரிமளிக்கும்—முக மண்டலத்தைக் கண்டதும் அரசனும் சிங்காசனத்திலிருந்து எழுந்து அடிகளில் முடிபட விழுந்து நமஸ்காரஞ்

செய்கிறுன். உள்ளத்தைத் துருவிப் பார்த்து நினைவுகளை யெல்லாம் உணர்ந்து கொண்டதுபோல், அன்பும் இரக்கமும் நிறைந்த இந்தக் கண்கள் அரசனைக் குளிரச் கடாட்சிக்கின்றன. இந்தப் பெரியவரைத் தன் சிங்கா சனத்தில் அமரச் செய்து அருகே பக்தியோடு நின்று கொண்டிருக்கிறுன் வல்லபதேவன்.

வித்வித் கோஷ்டியில் பொருமைக் காய்ச்சல் அதி கரித்தது. 'இவர் எங்களைப்போல் அளவிறந்த சாஸ்திரங் களைப் பயின்று தேர்ந்தவரா?' என்று முணுமுணுத் தார் பலர். வேத பாரகர், 'இவருக்கு வேதங்களில் விசேஷ அப்பியாசம் கிடையாது' என்று குறை கூறினுர்கள். 'வேதம் வந்தாலும் ஆகமம் வருமா?' என்ருர்கள் ஆகம வாதிகள். 'வேதாகமங்களில் விற்பன்னராய் இருந்தாலும் தர்க்கமல்லவா ஞானத்திற்கு உயிர்?' என்ருர் தர்க்க சாஸ் திரிகள். பௌத்தர்கள் மீமாம்ஸகர்களைக் கண்டித்தார் கள். இரு வகுப்பினரோடும் மாயாவாதியர் மோதிக் கொண்டனர். 'கர்மமே பெரிது' என்றவர்கள் ஞானத்தை 'அகர்மம்' என்று தாக்கினர்.

'இவர் பக்தர் தாமே!' என்றனர் யோகிகள். 'சமய ஞானமே அஞ்ஞானம் தான்; பக்தி யெல்லாம் மூட பக்தி தான்!' என்று பரிகசித்தார்கள் நாஸ்திகர்கள். 'பேரின் பமே சுத்தப் பொய்; சிற்றின்பமே வாழ்வு!' என்றனர் லோகாயதர்கள். இத்தகைய கூச்சல்களுக்கிடையே மன்னன் செல்வநம்பி முகம் நோக்கி, 'இனி என் செய்வது?' என்று ஜாடையாகக் கேட்டான். நம்பியும், 'கவலைப்பட வேண்டாம், ஜயித்துவிடுவார்!' என்று குறிப்பாகப் பதில் சொன்னுர்.

இதற்குள் விஷ்ணுசித்தர் பலவேறு மதவாதியர் களும் வித்துவான்களும் கேட்ட கேள்விகளுக்கு கெல்லாம் அமைதியாகப் பதில் சொல்லத் தொடங்கினுர். அவர் களுடைய பொருமையைப் பொறுமையினுல் வென்ருர்.

பகைமை யுணர்ச்சியை அன்பினால் தாக்கினார். கெட்ட எண்ணங்களை நல்ல எண்ணங்களைக்கொண்டு எதிர்த்தார். அறியாமையை அறிவினாலும், வீண் பெருமையைப் பெரும் பணிவினாலும் தகர்த்தெறிந்தார். முரட்டுத்தனமான இருதயங்களை இரக்கத்தினால் உருக்கினார்; நம்பிக்கையால் ஜயித்தார்.

காரணமில்லாத காரியமே கிடையாது, என்று தர்க்க ரீதியாகக் குறிப்பிட்டு, இவ்வுலகத்தின் காரண வஸ்துவே கடவுள் என்றார். 'எந்த ஒரு பொருளால் எல்லாப் பொருள்களும் உண்டாகின்றனவோ, எந்தப் பொருளால் எல்லாப் பொருள்களும் நிலைபெறுகின்றனவோ, எல்லாப் பொருள்களும் முடிவில் எந்தப் பொருளிடம் லயமாகின்றனவோ, அந்தப் பரம்பொருளே கடவுள்; அதுவே தியானத்திற்கு உரியது என்றார். அதைப் பரம ஸாத்விக மூர்த்தியான மகாவிஷ்ணுவாக வழிபடுவது நலம் என்றார். எங்கும் நிறைந்த பரம்பொருளை அவதார மூர்த்திகளாகவும், முக்கியமாக ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியாகவும் வழிபடுவது விசேஷம் என்று போதித்தார். பிறகு, பகவானை நோக்கிப் பிரார்த்தனை செய்வதும், அவருடைய நாமத்தை நம்பிக்கையுடன் உச்சரிப்பதும், ஆடுவதும் பாடுவதும் பஜனை செய்வதும் பக்திப் பெரு நெறியில் சுலபமாய்க் கொண்டு சேர்க்கும் என்றார். கடைசியாக, முக்தி மார்க்கம் ராஜமார்க்கமான பக்தி மார்க்கமே என்றும், பக்தியின் முடிவு சரணாகதி என்றும் சித்தாந்தம் செய்தார்.

கல்லும் புல்லுங் குழைய, சொல்லும் பொருளுங் குழைய, இவர் பேசிய பேச்சையெல்லாம் கவனமாய்க் கேட்டான் ஸ்ரீ வல்லபதேவன். அம்முகத்தைப் பார்த்த வண்ணம் அச்சொற்களைக் கேட்பது அமிர்தமாயிருந்தது.

இவர் அவனை நேராகப் பாராத போதெல்லாம், அந்தக் கண்களால் வசீகரிக்கப் பெற்று இவரையே பார்த்துக்

கொண்டிருந்தான். இரண்டொரு சமயங்களில் இவர் அவனுடைய முகத்தை நேராகப் பார்த்துப் பேசினுர். அப்போது இந்த ஆச்சரியமான கண்களின் சக்தியைத் தாங்கமுடியவில்லை ; தலை குனிந்து இவர் அடிகளை நோக்கிய வண்ணம் அந்த ஞானனந்த மழையைப் பருக வேண்டியதாயிற்று. செல்வநம்பியோ, எழுதி வைத்த சித்திரம்போல் கண்ணுல் பருகிக் கொண்டிருந்தார் அந்தக் காட்சியின்பத்தை.

கடைசியாக, ஸ்ரீ வல்லபதேவன் நிமிர்ந்து பார்த்த போது, விஷ்ணுசித்தர் தோரண வாசலை நோக்கிக் கையை நீட்டிக் கொண்டு, 'சமஸ்த வேதார்த்தங்களும் வேதாந்தத்தில் அடங்கி, வேதாந்தம் பரம பாகவதர்களின் ஞான பக்தியில் அடங்கி யிருக்கிறது ; ஞான பக்தியும் சரணுகதியுமே இம்மைக்கும் மறுமைக்கும் உரிய பெருஞ் செல்வம்' என்று சொல்லி முடித்தார்.

அப்படிச் சொல்லி முடித்ததும், அந்த வாசலில் கிழியாகக் கட்டியிருந்த அப்பொருள் அப்படியே விஷ்ணுசித்தரை நோக்கித் தாழ்ந்து வளைந்ததைக் கண்டானும் வல்லபதேவன். உடனே துண்ணென எழுந்து ஓடி அக் கிழியை அறுத்துக் கொண்டு வந்து விஷ்ணுசித்தர் அடிகளில் வைத்து அப்படியே சரணுகதி செய்துவிட்டான். அப்பால் அங்கே யிருந்த வித்வான்களெல்லாரும் தங்கள் வித்யாகர்வத்தை மறந்து விஷ்ணுசித்தர் அடிகளில் விழுந்து வணங்கினுர்கள். செல்வநம்பியும் விஷ்ணுசித்தரை வணங்கி, 'தமிழ் வளர்த்த மதுரை இன்று பக்தி மதத்தை வளர்க்கும் பெரும் பேறு பெற்றது!' என்றுர்.

விஷ்ணுசித்தரோ கண்ணை மூடிக்கொண்டு தம் கனவை நினைத்துப் பார்த்துப் பரவசமாகி ஆனந்தக் கண்ணீர் பெருக, 'கருணையங் கடலே! உண்மைப் பொருளாகிய நீ உன் உண்மையை வெளியிட்டுக் கொண்டாய், அடியேன் செய்ததென்ன ? எல்லாம் உன் பெருமை

தான்!' என்றார். அரசன், பக்திக் கொழுந்தாக விளங்கிய ஞான குருவை நோக்கி,

கொடியகொடு வினைக்(கு) ஈடாய்க்
கூற்றுவன் கைப் பட்டுழலும்
அடியனேற்(கு) அருள்நல்கி
ஆளவந்த திருவுருவோ?

[கூற்றுவன் - எமன். உழலும் - அலையும்; சுழலும். நல்கி - கொடுத்து.]

என்று சொல்லிக் குழைந்து மறுபடியும் அடியில் விழுந்தான்.

விஷ்ணுசித்தர் அரசனை விரைந்தெடுத்து ஆசி கூறினார். அந்த ஸ்பரிசத்தால் அரசன் புத்துயிர் பெற்றவனானான். இடிக்குரலில் முரசுகள் விஷ்ணுசித்தரின் வெற்றியை ஆர்ப்பரித்தன.

இடிநிகர் முரசம் ஆர்ப்ப,
இமையவர் குழாங்கள் ஆர்ப்ப,
படிமுழு தடைய ஆளும்
பாண்டியன் பரிவி னோடும்,
' அடியனேன் அல்லல் தீர
ஆளவந் தவரே! இன்(று)இக்
கடிநகர் வலமாய் நண்ணிக்
காட்சிதந் தருள்வீர்' என்றான்.

[ஆர்ப்ப - ஆரவாரஞ் செய்ய. இமையவர் குழாங்கள் - தேவர்கூட்டங்கள். படி - உலகம். முழுது - முழுதும். படிமுழுது அடைய ஆளும் - சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தும். பரிவு - அன்பு. கடிநகர் - காவலோடு கூடிய நகரம். நண்ணி - அடைந்து.]

## 6. பல்லாண்டு பாடிய பட்டர்பிரான்

இறைவன் திருவருளை எண்ணி எண்ணி விஷ்ணு சித்தர் தியானத்தில் அமர்ந்தார். அரசன் சொற் கேட்டு 'ஆம்' என்றும் சொல்லவில்லை, 'ஆகாது' என்றும் சொல்ல வில்லை, ஒடுங்கி நின்ற பெரியாரை அரசன் தூக்கி யெடுத்து, 'நீலக்குன்று' என்று சொல்லும்படியிருந்த தன் பட்டத்து யானையின்மேல் மிகவும் பிரீதியுடன் ஏற்றி வைத்தான். மங்கள வாத்தியங்கள் அதிர்ந்தன. வட்ட வெண்குடை நிழற்ற, இரு மருங்கும் சாமரை வீச, பரிவாரம் நெருங்கிவர, கட்டியம் எடுத்திசைக்க, நகர் வலஞ் செய்வித்தான் விஷ்ணுசித்தரை வல்லபதேவன்.

அந்தணர் குழாங்கள் ஏத்த,
  அருமுனிக் கணங்கள் ஏத்த,
பந்தணை விரல்சேர் செங்கைப்
  பாவையர் வீதி தோறும்
சந்தனக் குழம்பு, சுண்ணம்,
  தாதவிழ் மலர்கள் சிந்தி,
இந்திர விழாவ தென்ன
  இறைத்தனர் மணியும் பொன்னும்!

[அருமுனிக் கணங்கள் - அருமையான முனிவர் கூட்டங்கள். பந்தணை - பந்து அணைகின்ற; பந்து பொருந்துகின்ற. செங்கைப் பாவையர் - சிவந்த கையோடு கூடிய அழகிய பெண்கள். சுண்ணம் - வாசனைப் பொடி. தாது அவிழ் - மகரந்தப் பொடி சிந்துகிற.]

'வேதப் பயன் கொள்ளவல்ல விஷ்ணுசித்தர் வந்தார்!' 'வில்லிபுத்தூர் வேதக்கோன் வந்தார்!' என்ற விருதுகளோடு சின்னமும் சங்கும் கம்பீரமாக ஊதினர். மதுரை வாசிகளுக்கு அந்நாள் ஒரு மகோத்ஸவமா

யிருந்தது. வீடுகளிலும் வாசல்களிலும் வீதிகளிலும் மொய்த்த மக்கள், 'விஷ்ணுசித்தர் வாழ்க! வல்லபதேவர் வாழ்க!' என்று பேரன்புடன் வாழ்த்தினார்கள்.

வான வீதியிலும் கூட்டங் கூட்டமாக வந்து வாழ்த்திக் கொண்டிருந்தார்களாம் வானவர்கள். அக்கூட்டத்தினிடையே திடீரென்று ஆயிரம் சூரியர்கள் ஏககாலத்தில் கூடியிருப்பதுபோல் சுடர்விட்டுத் தோன்றுகிறது ஒரு மகா ஜோதி. அந்த ஜோதி, பார்த்தவர் கண்ணையுங் கருத்தையும் ஒருங்கே கூசச் செய்த போதிலும், விஷ்ணு சித்தரின் கண்களுக்குப் பனி தோய்ந்த சிகர ஜோதியாகத் தோன்றுகிறது முதல் முதல். பார்க்கப் பார்க்க இவருக்கு அது பொன்மலைமேல் எழுந்த ஒரு பிரமாண்டமான நீல மேகமாய்க் காண்கிறது,—சொல்ல முடியாத அழகோடும், நினைக்கமுடியாத சக்தியோடும், அருளோடும். இந்திரன் பிரமன் முதலான தேவ கணங்கள் சூழ, சங்கு சக்கரம் முதலான திவ்ய ஆயுதங்களுடனும், தேவியுடனும் கருடன் மீது காட்சி தந்த திவ்ய மங்கள ஜோதியைத் தரிசித்ததும், விஷ்ணுசித்தரின் பரமபக்தி பாட்டாக வெளிப்படுகிறது.

யானைக் கழுத்தின் மேல் கிடக்கும் மணிகளையே தாளமாகக் கொண்டு பாடத் தொடங்குகிறார், ஆனந்தக் கண்ணீர் அருவிசோர.

பல்லாண்டு பல்லாண்டு. பல்லா யிரத்தாண்டு,
பல்கோடி நூறு யிரமும்—

நித்தியமாக, இப்பேர்ப்பட்ட சௌந்தரியம் ஒரு தீங்கும் இல்லாமல் வாழ வேண்டும்!—என்று பாடுகிறார். 'ஸர்வ சக்தியல்லவா?' 'என்று பகவானுடைய நிலையையும் எண்ணாமல், தமது நிலையையும் மறந்து, விஷ்ணு சித்தர் பாடிய இந்த வாழ்த்துப் பாடல்களைத் 'திருப்பல்லாண்டு' என்று வைஷ்ணவ உலகம் போற்றுகிறது.

பலரும் விருதாவளிகளைக் கோஷிக்கச் சின்னம் ஒலி செய்ய, வெற்றிச் சங்கம் எடுத்தூத. இப்பேர்ப்பட்ட வைபவத்துடனே விஷ்ணுசித்தர் கண்ட வெற்றி விழாவைத் தானும் கண்டு அனுபவிக்க வேண்டும், இவர் கண்காண வந்து தானும் அனுபவிக்க வேண்டும் என்று விரும்பியே பரமபதநாதன் தேவியுடன் எதிரே வந்து தோன்றினான்,—மகனுடைய வெற்றியைக் காணவரும் பெற்றோரைப்போல. வெற்றி விழாவைக் காணவந்த திருமாலைக் கண்டதும், விஷ்ணுசித்தர் சிறிதும் செருக்குக் கொள்ளவில்லை. தேவாதி தேவனுடைய ஸர்வ சக்தி முதலியயை பின்னும், நீலமுண்ட மின்னல்போன்ற திருமேனியின் 'சௌந்தர்ய சௌகுமார்ய லாவண்ய யௌவனாதிகள்' முன்னுமாய்ப் புலனாகின்றன இவருக்கு: மூதன் முதல் அழகிலே கண் செலுத்தி ஈடுபட்டு ஆழ்ந்து பக்தி பரவசராய், 'காலம் நடையாடாத பரமபதத்திலே யிருக்கும் இப்பரம சௌந்தரியம், காலமும் அசுர சக்திகளும் நடையாடுகிற இவ்வுலகில் வந்து நிற்கிறதே! என்ன தீங்கு வருமோ?' என்று அஞ்சியவர் போல் பல்லாண்டு பாடுகிறார். ஸர்வ ரட்சகனிடம் தமக்கு வேண்டிய மங்களங்களைப் பிரார்த்திக்காமல், தாம் அவனுக்கு மங்களம் உண்டாகுமாறு ஜயவிஜயீ பவ என்கிறார்!

'பல்லாண்டு' என்று ஒரு தடவை சொன்னால் போதாதா? 'பல்லாண்டு, பல்லாண்டு' என்றும், 'பல் ஆயிரத்தாண்டு' என்றும், 'பல் கோடி நூறாயிரமும் பல்லாண்டு' என்றும் ஆசை தீரப் பாடுகிறார்,—தாகமுள்ளவன் 'தண்ணீர், தண்ணீர்' என்று கூவுவது போலே. இவருடைய ஆத்ம தாகம், ஸௌந்தரிய தாகம் இப்படி! இங்ஙனம் மங்களம் உண்டாகும்படி வாழ்த்துவதை 'மங்களா சாஸனம்' என்பர் வைஷ்ணவர்.

'அருமருந்தாக இருக்கும் எம்பெருமானுடைய சௌந்தரியத்திற்கு அசுர மயமாயிருக்கும் இவ்வுலகிலே

யாரால் என்ன தீங்கு விளையப் போகிறதோ?' என்ற சங்கையை 'அதிசங்கை' யென்று சொல்லவேண்டும். 'இப்படி அதிசங்கையாலே மங்களா சாஸனம் பண்ணுகிறார் இவர்!' என்று தெரிந்து கொண்ட பகவான், நீறுபூத்த நெருப்பைப் போல் தமது சௌந்தரியத்திலே மறைந்திருந்த சக்தியையும் காட்டி யருளினனும்,— 'ஐயோ! இவர் ஏன் இப்படிப் பயப்படுகிறார்?' என்று. இவர் விசேஷமாய் உகந்த கிருஷ்ணுவதார காலத்திலே தன்னைக் கொல்லும்படியாகக் கம்ஸன் ஏவிய முஷ்டிகன் முதலான மல்லர்களை வென்றொழித்த திண்மை வாய்ந்த அத்தோள்களைக் காட்டி யருளினனும். அச்சம் தணியக் காட்டிய அத்தோளழகும் இத்தொண்டரின் அச்சம் அதிகரிக்கவே காரணம் ஆயிற்றும். புதல்வன் சூரனாய் இருந்தால் தாயானவள், 'இச்சூரப் பிள்ளை யாரையும் லட்சியம் செய்யாமல் போர் செய்யப் பாய்ந்து விடுமே! யாரால் என்ன கெடுதி வந்து விடுமோ?' என்று அஞ்சக்கூடும் அல்லவா? அப்படியே நீலமணி வண்ணனும் தன் 'மல்லாண்ட திண் தோள்'களைக் காட்டியும், 'மல்லாண்ட திண் தோள்மணி வண்ணா!' என்று கூவியழைத்து மறுபடியும் மங்களா சாஸனம் செய்து பல்லாண்டு பாடுகிறார்.

பல்லாண்டு பல்லாண்டு, பல்லா யிரத்தாண்டு,
பல்கோடி நூறா யிரமும்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்விதிருக் காப்பு.

[சேவடி செவ்வி - சிவந்த திருவடிகளின் அழகு. திருக்காப்பு - குறைவற்ற காவல் அல்லது ரட்சை ஏற்படுவதாக.]

இம் மங்களா சாஸனப் பிரபந்தத்தில் பன்னிரண்டு பாசுரங்கள் உண்டு. 'பல்லாண்டு பல்லாண்டு' என்று

தொடங்கும் முதற் பாசுரத்தைப் பல்லவி போல் ஒவ்வொரு பாசுரத்தோடும் சேர்த்துப் பாடுகிறார்கள்.

பல்லாண்டு பாடிய விஷ்ணுசித்தரைப் 'பட்டர் பிரான்' என்றும் கூறுவதுண்டு. நகர் வலம் வருகையில் ஸ்ரீவல்லபதேவ மன்னனே இவருக்குப் பட்டர்பிரான் என்று பட்டம் சூட்டியதாகவும், அதைப் பண்டிதர்கள் யாவரும் உவந்து அங்கீகரித்துக் கரகோஷம் செய்ததாகவும் சொல்லுகிறார்கள். பண்டித சபையில் பல பண்டிதர்களையும் வென்று, அவர்களே நகர் வலத்தில் குடை சாமரம் மகர தோரணம் முதலியவற்றைப் பணி மாறிக் கூடவர, அவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கினமையால் அரசன் 'பட்டர் பிரான்' என்று இவருக்குப் பட்டம் சூட்டினன் என்பர்.

'பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தா'
ஈண்டிய சங்கம் எடுத்தூத,—வேண்டிய [னென்(று),
வேதங்கள் ஓதி விரைந்து கிழி அறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று

[ஈண்டிய - திரள் திரளான. சங்கம் - சங்கு. யாமுடைய - எமக்கு முழு உரிமையான. பற்று - புகலிடம். யாமுடைய பற்று - நம்முடைய பூர்ணமான ரட்சை.]

என்று பிற்கால ஆசாரியர்களில் ஒருவரான பாண்டிய பட்டர் இவ்வரலாற்றைக் குறிப்பிடுகிறார்.

கிழியறுத்த கதையைப் பாண்டிய பட்டர் வேறொரு வெண்பாவினாலும் தமிழ் வைஷ்ணவர்களின் ஞாபகத்திலே நிலைபெறச் செய்திருக்கிறார்.

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூர் என்(று)ஒருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்,—முன்னாள்
கிழிஅறுத்தான் என்றுரைத்தோம்; கீழ்மையினில் சேரும்
வழி அறுத்தோம் நெஞ்சமே! வந்து.

[மின் ஆர் - ஒளி நிறைந்த. தடமதிள் சூழ் - பெரிய மதில் சூழ்ந்த. ஒரு கால் - ஒரு தரம். கழல் கமலம் - அடித் தாமரை. சூடினேம் - சிரமேற் கொண்டோம்.]

பட்டர்பிரான் கிழியறுத்துப் பல்லாண்டு பாடிய கதை, பாண்டிய பட்டர் சொல்லுகிறபடியே, பல நூற்றுண்டுகளாக எத்தனையோ வைஷ்ணவர்க்குக் கீழான வழியை அறுத்து மேலான நெறியைக் காட்டிவந்திருக்கிறது. பல்லாண்டு பாடிய பட்டர்பிரானே பெரியாழ்வார் என்னும் பெயரும் பெற்று, ஸ்ரீவைஷ்ணவத்தின் ஞான ஜோதிகளான பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவராக விளங்குகிருர்.

மற்ற ஆழ்வார்களும் பரம பிரீதியால்—பிரேம பரவசத்தால்—பகவானுக்கு மங்களா சாஸனம் செய்திருக்கிருர்கள்,—'பகவானுக்குக் குறையொன்றும் இல்லாமல் இருப்பதே நமக்கும் மங்களம்!' என்று. ஆனால், இப்பெரியாழ்வாரே, ஸர்வ ரட்சகனையும் ரட்சிக்க வழிதேடித் தடுமாறுவதுபோல் திருப்பல்லாண்டுப் பிரபந்தம் பாடியிருக்கிருர்,—எம்பெருமானுடைய வாழ்வையே தமது வாழ்வாக நினைத்து! இந்த அம்சத்தில் இவர் மற்றுள்ள ஆழ்வார்களினும் பெரியராதலின், பெரியாழ்வார் என்று பெயர்பெற்றுர் என்பர் மணவாள மாமுனிகள்:

மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள் ஆர் வத்தளவு தான்அன்றிப்,-பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றுன்,
பெரியாழ்வார் என்னும் பெயர்.

[ஆர்வத்து அளவு - நிறைந்த அன்பின் அளவு. பரிவு - இரக்கத்தோடு கூடிய பேரன்பு.]

விஷ்ணுசித்தருக்குப் பெரியாழ்வார் என்கிற பட்டம், ஆழ்வார்களுக்கு உரிய ஆர்வத்தையும் மிஞ்சிப் பொங்கிய

பரிவால் பல்லாண்டு பாடிய காரணமாகக் கிடைத்தது என்பது மணவாள மாமுனிகள் கருத்து.

'மத மாற்சரியங்களும் கோபமும் பகைமையும் பூசலும் நிறைந்திருந்த இந்தப் பண்டித சங்கத்திலே மதவுண்மை காணப் போகிறேனு?' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த அரசனுக்கு உண்மை காட்டி ஆறுதல் அளித்த பெரியாழ்வார், கிழிச்சீரையிலுள்ள பொருளுடனும், அரசன் கொடுத்த வேறு பொருள்களுடனும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பினர். ஸ்ரீவில்லிபுத்தூர் வாசிகள் பூர்ணகும்பங்களுடனும் மங்கள வாத்திய கோஷங்களுடனும் இவரை எதிர்கொண்டு அழைத்தனர். ஆழ்வார் வடபத்திரசாயி கோயிலுக்கு நேரே சென்று தண்டமென விழுந்து எழுந்து, பொருள்களை யெல்லாம் இறைவன் திருவடிகளில் அர்ப்பணம் செய்தார். இப்பொருள்களைக் கொண்டு பகவானது நந்தவனத்தை அழகு செய்தார், பாகவதகைங்கரியம் செய்வதிலும் உபயோகித்தார் என்று ஊகிக்கலாம்.

மகாவீரனை ஸ்ரீவல்லபதேவ பாண்டியன் இவரை ஞானசாரியராகக் கொண்டு அதிவீரனை ஞான பக்தனுனன். அவனுக்கு இம்மையிலேயே மறுமைச் செல்வமும் கிடைத்தது.

பல்லாண்டு பாடிய பெரியார் மூலமாக ஸ்ரீவில்லிபுத்தூர் மதுரைக்கு வழங்கிய செல்வம் ஸ்ரீவைஷ்ணவர்களின் பொது உடைமையாகி, பக்தி மதத்திற்கே ஒரு புதிய அழகு தந்தது.

உண்டோ திருப்பல்லாண்டுக்(கு)
ஒப்பதோர் கலைதான் ?
உண்டோ பெரியாழ்வார்க்(கு)
ஒப்பொருவர் ?

என்று ஸ்ரீவைஷ்ணவ உலகம், பல்லாண்டு பாடிய பட்டர்பிரானை இன்றும் வியந்து பாராட்டுகிறது,

# 7. ஆழ்வார் திருமகள்

மதுரையில் வெற்றிக்கொடி நாட்டிப் பல்லாண்டு பாடிய பெரியார் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பியதும், ஸ்ரீகிருஷ்ண பக்தியில் விசேஷமாக ஈடுபட்டிருந்தார். கண்ணனுக்குப் பாமாலை சூட்டியதோடு வழக்கம்போல் வடபெருங்கோயிலுடையானுக்குப் பூமாலை கட்டும் கைங்கரியத்திலும் ஈடுபட்டிருந்தார். திருக்கோஷ்டியூர், திருமாலிருஞ்சோலை, திருவரங்கம் முதலான திருப்பதிகளுக்கு யாத்திரை போன காலம் தவிரப் பெரும்பாலும் இவர் ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே தங்கியிருந்தார் என்று கருதலாம்.

ஒரு நாள் பகவானுக்கு மாலை கட்டுவதற்காக நந்தவனத்திலே பெரியாழ்வார் பூக் கொய்துகொண்டிருந்தார். 'பொழுது புலரவில்லையே, ஏன் இந்த வெளிச்சம்!' என்று அதிசயமாக நோக்கியதும், துளஸிச் செடிகளினூடே ஒரு குழந்தையைக் கண்ணுற்றார். பாகவதர்களின் புண்ணியமும் தாம்செய்த பாக்கியமும் குழந்தையுருவாக வந்திருக்க வேண்டுமென்று குதூகலமடைந்து குழந்தையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

'எம்பெருமானுக்கு இன்று கிடைத்த தெய்வ மலர்' என்று தமக்குள் தாமே சொல்லிக்கொண்டு கோயிலுக்குப் போய்க் குழந்தையை ஈச்வரனுக்கு அர்ப்பணஞ் செய்தார். பிறகு வீட்டுக்குப் போய்க் குழந்தையைத் தமது தேவியாரிடம் ஒப்புவித்தார். இக்குழந்தையைக் கோதை யென்று கொஞ்சி அழைப்பார். கோதை இவரோடு நந்தவனம் போய்ப் பூ எடுப்பாள்; இவரிடம் கல்வி கற்று வந்ததோடு பஜனை முதலியவற்றிலும் கலந்துகொண்டு பக்தி மயமாக வளர்ந்துவந்தாள்.

தந்தையின் உருக்கமான பக்திப்பாடல்களைக் கேட்டு உருகிக் கோதை தானும் அத்தகைய பாடல்கள் பாட

வேண்டுமென்று ஆசைப்பட்டாள். இவளுடைய பக்தியைக் கண்டும், இளமையிலேயே இவளுக்கு ஏற்பட்ட கவித்வ சக்தியைக் கண்டும் ஆழ்வார் பூரித்துப் போயிருக்க வேண்டும். ஆழ்வாரைப்போல் கோதையும் கிருஷ்ண பக்தியில் விசேஷமாக ஈடுபட்டாள். ஆனால் இவருடைய கிருஷ்ண பக்திக்கும் அவளுடைய கிருஷ்ண பக்திக்கும் வித்தியாசம் உண்டு. இவருள்ளம் தாய்போல் குழந்தைக் கிருஷ்ணன் மீது பக்தி செலுத்தியது. அவளுள்ளமோ பக்திக் காதலில் முதிர்ந்து கனிந்து காதலியின் உள்ளமாகிவிட்டது.

பெரியாழ்வார் இல்லாத சமயம் பார்த்துக் கோதை தன்னை அலங்கரித்துக்கொண்டு, 'கண்ணன் அழகுக்கு ஒத்திருக்கிறேனே, இல்லையோ?' என்று கண்ணாடியில் பார்த்துக்கொள்வதுண்டு. பெரியாழ்வார் பூங்கூடையில் வைத்திருந்த பூமாலைகளை எடுத்துப்பார்த்து, அவை கண்ணனுடைய காதலியான தனக்கும் உரியது என்று கருதிக் கூந்தலில் சூட்டிக் கொள்வதுமுண்டு. சில மாலைகளைக் கழுத்திலும் அணிந்துகொண்டு நிலைக்கண்ணாடிக்குமுன் நின்று அழகு பார்ப்பதுமுண்டு. இப்படி அழகு பார்த்த பின் தகப்பனார் வருவதற்குமுன் மாலைகளைக் களைந்து கசங்காமல் எடுத்து முன்போலவே பூங்கூடைக்குள் வைத்துவிடுவாள்.

இப்படிப் பல தினங்களாக நடந்து வருகையில், ஒரு நாள் அர்ச்சகர் நீண்ட ரோமம் ஒன்றை ஆழ்வார் கொண்டுவந்த பூமாலையில் கண்டுபிடித்து, 'ஆழ்வாரே! என்ன பிழை, என்ன அபசாரம்!' என்று கேட்டுவிட்டார். பெரியாழ்வார் பிரமித்துப் போனார். 'இந்த மாலை இறைவனுக்கு ஆகாதே!' என்று சொல்லிக் கூடையோடு பூமாலைகளையெல்லாம் பட்டர் எறிந்துவிட்டார். பட்டர்பிரான் பதைபதைத்து விம்மி ஏங்கிப்போனார்.

உடனே நந்தவனம் போய் மறுபடியும் பூக்கொய்து மாலை கட்டிக் கொணர்ந்து பட்டரைப் பார்த்து, 'இன்று என் பெரும் பிழை பொறுக்க வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். அர்ச்சகரும் ஆழ்வாரை நோக்கி, 'நான் பல தினங்களாகவே கவனித்திருக்கிறேன், வாடி நிறங் குலைந்திருக்கும் மாலைகளை. எனினும் பாண்டிய ராஜ குருவாகிய தேவரீர் கட்டிக்கொணர்ந்த மாலைக்கும் மறுவுண்டாக்கிப் பேசினால், அபசாரம் ஆகுமே என்று என்னைப் பேணிச் சும்மா இருந்தேன். இன்று ரோமத்தையும் பார்த்துவிட்டதால், இனிமேல் சொல்லாமல் இருப்பது அபசாரம் என்றுதான் கூசாமல் உண்மை கூறினேன். பகவான் சூடும் மாலையல்லவா? உமக்குத் தெரியாதா?' என்று சொல்லிவிட்டுத் தாம் தவறு செய்திருந்தால் அருள் கூர்ந்து மன்னிக்கவேண்டும் என்றார்.

'நாம் ஜாக்கிரதையாகத்தானே மலர் எடுத்து மாலை தொடுத்துவருகிறோம்? ஏன் எப்படி இக்குற்றம் நேர்ந்தது? ஆஹா, ஒருவேளை......அப்படியும் இருக்குமோ? சோதித்துப் பார்க்கவேண்டும். ஆனால் 'அவளுடைய பக்தி என்ன, சிரத்தை என்ன! பயிற்சி என்ன, பழக்கம் என்ன!' என்றெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டே தமது இல்லத்திற்குத் திரும்பினார். அன்று இரவில் பகவானைப் பிரார்த்தனை செய்துவிட்டு உறங்கிய பின் மறுநாள் வழக்கம் போல் பூ எடுத்து மாலை தொடுத்துக் கூடையில் வைத்து ஓர் இடத்தில் மறைவாக நின்று கவனிக்கலானார்.

தந்தையார் வெளியே போய்விட்டார் என்று நினைத்த கோதை கூடையிலிருந்த ஒரு மாலையை எடுத்துத் தன் கூந்தலில் சூட்டிக்கொண்டாள். பெரியாழ்வார் அதைக் கண்டதும் கோதையைக் கோபித்து அதட்டினார். கோதை பயந்து கூந்தலில் இருந்த மாலையை எடுத்துக் கூடையில் வைத்துவிட்டு விம்மி விம்மி அழுதாள். உடனே ஆழ்வாருடைய கோபம் நீர்மேல் கிழித்த கோடுபோல் மறைந்து

போயிற்று. பதறி அழுத பெண்ணை அணைத்துக் கொண்டு, 'அம்மே! ஒன்றும் அறியாத குழந்தை நீ! உலகத்திலே யார் இந்தச் செய்கை செய்வார்? இன்று நீ செய்தது அபசாரம், பெரிய அபசாரம்' என்றார். பிறகு இறைவனுடைய ஏற்றத்தை எடுத்துரைத்து, 'இனி இவ்வண்ணம் செய்யாதே: குழந்தாய்! பயப்படாதே' என்று தேற்றினார். தேற்றிவிட்டு, வேறே மாலைகள் தொடுத்து விரைந்து கொண்டுபோய் இறைவனுக்கு அளித்து மகிழ்ந்தார்.

அன்று இல்லம் திரும்பியதும் பட்டர்பிரான் கோதையை அருகே அமரச்செய்து பகவத் பக்தியின் சிறப்பையும், பகவானுடைய பெருமையையும் நீண்ட நேரம் எடுத்துரைத்தார். அவர் எவ்வளவு சொல்லியும் கோதைக்குத் தான் செய்தது தவறாகவே தோன்றவில்லை. 'நான் கண்ணனின் காதலி அல்லவா?' என்று சொல்லிக் கொண்டே சென்றாள்.

அன்று இரவு ஆழ்வாருக்குச் சரியாக உறக்கம் பிடிக்கவில்லை. 'இன்று காலையில் பகவான் ஏன் வழக்கம் போலக் காட்சி தரவில்லை? சந்நிதியே ஒளியிழந்தது போலிருந்தது, ஏன் அப்படி? பட்டரும் அங்கே கூடி யிருந்த பக்தர்களும் ஒருவரையொருவர் அப்படி நோக்கிய தற்குக் காரணம் என்ன?' என்றெல்லாம் பெருமூச்சு விட்டுக்கொண்டே ஆலோசித்தார். தமது செல்வச் சிறுமியான கோதையின் அடாத செய்கைதான் இறைவ னுக்கு அவ்வளவு அதிருப்தி யுண்டாக்கி யிருக்கவேண் டும் என்று இவர் நெஞ்சம் கலங்கியது. நெடுநேரம் அப் படியே படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார்......

அது என்ன, அப்படிக் கண்ணை மறைக்கிறது? இருட்டில்லை, ஒளிதான்! என்ன அதிசய ஒளி! கண்ணுங் கூசிக் கருத்தும் கூசுகிறது. ஒளிக்கு இடையே அழகு— அற்புத அழகு—ஒரு திவ்ய சொரூபம். 'ஆழ்வாரே!

இன்று நடக்கு மணமில்லாத மாலைகளைச் சூட்டினீரே!' என்று புகார் செய்கிறது வேணுகானம் போன்ற குரல். பட்டர்பிரான் தம் சிறுமியின் அபசாரத்திற்காக மன்னிப்பு வேண்டுகிறார். 'உம்முடைய செல்வத் திருமகளை நீர் அறிந்துகொள்ளவில்லை!' என்று மறுபடியும் புகார் செய்கிறது புல்லாங்குழல்போன்ற புனிதக் குரல். பெரியாழ்வாருக்கு ஒன்றும் சரியாகப் புரியவில்லை. 'உம்முடைய மகள் நமக்குப் பூமாலை சூடிக்கொடுக்கவும், பாமாலை பாடிக்கொடுக்கவும் பிறந்திருக்கிறாள். அவள் அழகாய்க் கூந்தலில் சூட்டிக்கொண்டு அன்பாய்க் கொடுக்கும் மாலையே நாம் விரும்பும் மணம்பெற்ற மாலை!' என்று இசைக்குரலில் இயம்பி மறைந்துவிடுகிறது திவ்ய மங்கள சொரூபம்.

நித்திரை கலைந்து எழுந்ததும் பெரியாழ்வார் இக் கனவை நினைத்து நினைத்து ஆச்சரியமடைந்தார். பொழுது புலர்ந்ததும் இறைவனுக்காகத் தாம் கட்டிய மாலைகளைக் கோதைமுன் வைத்து, 'அம்மா! நீ இம்மாலைகளை உன் கூந்தலில் சூடிக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் இவை இறைவன் விரும்பும் மணம்பெற்ற மாலைகளாகும்' என்றார். 'மணம் பெற்ற மாலை! மண மாலை!'' என்று ஆச்சரியமாகக் கோதை சொல்லிக்கொண்டே அவற்றைச் சூட்டி, வழக்கம்போல் நிலைக்கண்ணாடிமுன் நின்று அழகு பார்த்தாள். அந்த அழகைப் பார்த்த பெரியாழ்வாரும், 'என்ன தெய்விக அழகு! இவள் இயற்கை - மோகினியாகிய புவன சுந்தரியோ, மகாலட்சுமிதானோ?' என்று தமக்குள் தாமே சொல்லிக்கொண்டார்.

அம் மாலைகளைச் சந்நிதியில் சேர்ப்பித்ததும், அர்ச்சகர் அவற்றை இறைவனுக்குச் சாத்தி அதிசயமாகப் பார்த்து, 'பாண்டியன் கொண்டாடிய பட்டர்பிரானே! மாலைகளுக்குப் பழைய மணமும், பகவானுக்கு அந்த அழகும் வந்துவிட்டன!' என்று உத்ஸாகமாய்க் கூறினார்.

அப்போது தரிசனம் அற்புதமாயிருந்தது. பெரியாழ்வார் கனவில் கண்ட அதே அதிசய ஒளி இப்போது விக்கிரகத்தின் முகத்திலும் ஜொலித்ததைப் பெரியாழ்வார் பேராச்சரியத்துடன் கண்ணுற்ருர். அருகே யிருந்த அருமை மகளை நோக்கி ஆனந்த பாஷ்பம் பொழிந்து, 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே! என்னை ஆண்டாள் நீயே!' என்ருர் குதூகலமாக. அதுமுதல் கோதைக்கு ஆண்டாள் என்ற பெயரும், சூடிக்கொடுத்தாள் என்ற பெயரும் வழங்கலாயின.

தம் மகளைப்போல் அவ்வளவு பரிபக்குவம் தமக்கு இன்னும் ஏற்படவில்லையே என்ற எண்ணம் அக்குதூகலத்தை ஊடுருவிப் பாய்ந்தது. எனினும், 'பகவான் ஜோதிவாய் திறந்து தமது குழலிசைபோன்ற குரலால் "உம்முடைய மகள்" என்று இசைத்தாரே, அந்தப் பாக்கியம் போதுமல்லவா?' என்ற பரம திருப்தியும் அதே கணத்தில் தோன்றியது. பட்டர்பிரான் பட்டரையும் மற்ற அடியார்களையும் நோக்கி, 'அடியேனுடைய பக்தி பாடுபட்டுத் தேடிய பொருள்; இச் செல்வியின் பக்தியோ புதையலெடுத்த பொருள்!' என்ருர். பரம பக்திக் கொழுந்தாகிய கோதை தலைகுனிந்து நின்ருள்.

இப்படியெல்லாம் அறிந்து சொல்லியும், அந்தப் புதையலெடுத்த பொருளின் மதிப்பைப் பெரியாழ்வார் கூடச் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை. புருஷோத்தமனை கண்ணனை ஆண்டாள் தன் புருஷனுகவே, காதலனுகவே, மதித்தாள். பெரியாழ்வார் திருக்கோட்டியூரைக் கோகுலமாகப் பாவித்துக் கண்ணன் பிறப்பைக் கண்டு கொண்டாரல்லவா? ஆண்டாளோ தான் பிறந்த ஸ்ரீ வில்லிபுத்தூரைக் கோகுலமாகக் கண்டு தன்னை ஒரு கோபிகா ஸ்திரீயாகப் பாவித்துக் காதலனை முகமுகமாய்ச் சந்திக்க ஆசைப்பட்டாள்.

சீர்மல்கும் ஆய்ப்பாடிச்
செல்வச் சிறுமியர்

என்று சொல்லப்படும் கோஷ்டியில் கலந்துகொண்டாள், பாவனுசக்தியின் முதிர்ச்சியால். இத்தகைய காதல் - அனுபவங்கள் பெரியாழ்வாருடைய பக்திக் காதலையும் கடந்துபோய்விட்டன.

பெரியாழ்வார் ஆலோசித்தார்: 'மங்கைப் பருவத்தை அடைந்துவிட்டாளே! இவளுடைய புத்திக்கும் பக்திக்கும் குணத்திற்கும் அழகிற்கும் ஏற்ற புருஷனை எப்படிக் கண்டுபிடிப்பது, எங்கே கண்டுபிடிப்பது? பெற்றோர் கடமையைச் சரிவரச் செய்யவேண்டாமா?' என்று. பிறகு, அவள் விருப்பத்தை அறிந்துகொள்வோமென்று தீர்மானித்து அருமைத் திருமகளை அருகில் உட்காரச் செய்து, 'அம்மா, குழந்தாய்! நீ யாரை மணந்து கொள்ளப் போகிறாய்?' என்று மெள்ளக் கேட்டார்.

அவளோ,

மானிட வர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன்கண்டாய், மன்மதனே!

என்று மன்மதனை நோக்கிப் பாடிக்கொண்டே எழுந்து போய்விட்டாள்.

அந்த உறுதியும் கொள்கையும் பெரியாழ்வாருக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் கவலையையும் ஒருங்கே விளைவித்தன. 'இவள் புருஷோத்தமனைக் காதலிப்பது சரிதான்; அவனே நமது திருமகளுக்கு இசைந்த புருஷன்! ஆனால் அவனுக்கு இவளை எப்படி மணஞ்செய்து வைப்பது?' என்று எண்ணினார். தம் புதல்வி சூட்டித் தந்த மாலையைக் காதலுடன் ஏற்றுக்கொண்ட பெருமான் எப்படியாவது இவள் விருப்பத்தை நிறைவேற்றவுங் கூடும் என்ற எண்ணமும் பரம பக்தமணியான

பெரியாழ்வாருள்ளத்தில் உதயமாயிற்று: இந்த எண்ணம் இவருக்குச் சிறிது ஆறுதல் அளித்தது.

ஆழ்வார் ஆண்டாளை நோக்கி, 'அம்மா! அர்ச்சாவதார மூர்த்தியாய் நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறார்' என்று சொல்லி, அம்மூர்த்திகளின் மகிமைகளையெல்லாம் அழகாகவும் விரிவாகவும் எடுத்துச் சொன்னார். திருப்பதி, திருமாலிருஞ்சோலை என்ற அழகர்மலை ஆகிய ஸ்தலங்களிலுள்ள எம்பெருமானுடைய குண விசேஷங்களையும் புகழையும் அருள் - திறத்தையும் இவர் சொல்லும்போது, ஆண்டாளின் உள்ளம் உருகிற்று, கண்களில் ஆனந்தம் துளித்தது. கடைசியாக, நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் சிறந்த திருவரங்கத்தில் கோயில்கொண்டிருக்கும் அழகிய மணவாளன் என்ற ஸ்ரீ ரங்கராஜாவின் சிறப்பியல்களை எடுத்துக் கூறினார். ஆண்டாளுடைய காதல் அணைகடந்த வெள்ளமாகி விட்டது. 'திருவரங்கச் செல்வரை, அந்தோ! எப்போது சென்றடைவேன்?' என்று ஆண்டாளின் உள்ளம் ஏங்கியதைப் பெரியாழ்வார் கண்டுகொண்டார்.

'ஐயோ! என் மகள் ஏங்கி நைந்தும் அவன் இரங்கவில்லையே! இவள் துயரம் நீங்குவது என்றோ?' என்று மகள் பொருட்டு வருந்திய பெரியாழ்வாருக்கு ஸ்ரீரங்கநாதன் ஒரு கனவின் வாயிலாகத் தாம் கோதையை அங்கீகரிப்பதாய்த் தெரிவித்தார். திருவரங்கத்தில் அர்ச்சகருக்கும் பெருமாளின் திருவுள்ளம் சொப்பனத்தின் வாயிலாகத் தெரிந்துவிட்டது. இறைவன் கட்டளைப்படி ஆண்டாளைத் திருவரங்கம் அழைத்துச்செல்ல வேண்டுமென்று பெரியாழ்வார் தீர்மானித்தார். ஆண்டாளும் 'விரைவில் என்னைத் திருவரங்கத்தில் கொண்டுபோய்விட வேண்டும்' என்று வற்புறுத்த, பெரியாழ்வார் ஒரு சிவிகையில் அவளை அமரச் செய்து அழைத்துப் போனார். ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஸ்ரீரங்கம் செல்வதற்குரிய

வசதிகளை வல்லபதேவ பாண்டியன் மிக்க ஆர்வத்துடன் செய்துகொடுத்தான்.

அங்கங்கே பொதுமக்கள் திரண்டு சிவிகையைச் சூழ்ந்து சென்றனர். பக்தர்கூட்டம் பல்லாண்டு பாடிச் சென்றது. எங்கும் குதூகலம் ; எங்கும் மங்கள வாத்திய கோஷம். ஸ்ரீவில்லிபுத்தூர் தொட்டு ஸ்ரீரங்கம்வரை ஒரே ஆனந்தப் பிரவாகம். ஸ்ரீரங்கத்தின் கோபுரம் தெரிந்ததும் 'அதோ பொன்னரங்கப் பொற்சிகரம்!' என்று பெரியாழ்வார் காட்டினார். காட்டியதும் பல்லக்கில் கோதையைக் காணவில்லையாம். கோதை சந்நிதி மூலஸ்தானத்திற்கே போய்விட்டாளாம். ஸ்ரீரங்கநாதன் கோதை காதலித்த கண்ணனாகக் காட்சியளித்தான். இரும்பைக் காந்தம் இழுத்துக் கொள்வதுபோல் அழகிய மணவாளன் கோதையைத் தன் வசமாக்கிக்கொண்டான்.

பெரியாழ்வார், வல்லபதேவன் முதலியோர் பிரமித்துப் போயினர். மணஞ் செய்து மகிழவேண்டும் என்று எண்ணி யிருந்ததால், புதல்வி அப்படி மறைந்தது பெரியாழ்வாருக்குப் பெருந்துயர் விளைத்தது. அப்போது அழகிய மணவாளன் தமது மார்பில் அமர்ந்திருந்த கோதையைக் காட்டி, 'ஆழ்வாரே! அஞ்சவேண்டாம். உம் திருமகளை இப்போது நீர் அழைத்துச் செல்லலாம். ஸ்ரீவில்லிபுத்தூரில் வந்து நாம் இவளை மணந்துகொள்வோம்' என்று அருளிச் செய்தாராம். அது கேட்ட பெரியாழ்வார், 'அழகிய மணவாளனே! எங்கள் ஊரில் வந்து நீர் இப்பெண்ணை மணந்து அத்தலத்தில் இவளோடு இனிது அமர்ந்தருளவேண்டும்!' என்று இறைவன் தாளில் பணிந்து வேண்டினாராம்.

பங்குனி உத்தரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருமணம் நடைபெற வேண்டுமென்று தீர்மானம் ஆயிற்றாம். ஸ்ரீரங்கத்திலிருந்து கோதை ஒரு பல்லக்கிலும், பெரியாழ்வார் ஒரு பல்லக்கிலும் புறப்பட்டார்கள். பாகவதர்கள்

பூமழை பொழிந்து வாழ்த்தினார்கள். மங்களவாத்தியங்கள் முழங்கின. காவேரியைக் கடந்து, சோழ ராஜ்யத்தின் எல்லை கடந்து, பாண்டிய நாட்டுக்கு வந்துசேர்ந்தார்கள்.

அருமா மறைதேரும்
ஆழ்வார் மகளாய்த்
திருவாடிப் பூரத்தில்
ஜென்மித்தாள் வந்தாள்.

[அருமா மறை - அருமையான பெரிய வேதங்கள். தேரும் ஆழ்வார் - தேர்ச்சி பெற்ற பெரியாழ்வார். ஜென்மித்தாள் - பிறந்தவள்.]

மட்டவிழும் பொழில்புடைசூழ் மதுரை தன்னில்,
வாதியரை ஈடழித்து மறையின் அந்தம்
எட்டெழுத்தே எனக்கூறி, வேதம் நான்கும்
இருந்தபடி எடுத்தோதி, மன்னர் மன்னன்
கட்டியபொற் கிழியறுத்துத் திருப்பல் லாண்டைக்
கட்டுரைத்துக்கண்ண னுக்குக் காப்பிட் டேத்தும்
பட்டர்பிரான் திருமகளார் வந்தார், வந்தார்
பாடவல்ல நாச்சியார் வந்தார், வந்தார்!

[மட்டவிழும் - வாசனை வீசும். பொழில் - சோலை. வாதியரை - வாதஞ் செய்தவரை. ஈடழித்து - வென்று. அந்தம் - வேதத்தின் முடிவு. எட்டெழுத்து - அஷ்டாட்சரம் என்ற 'ஓம் நமோ நாராயணாய.' கட்டுரைத்து - இயற்றி. காப்பிட்டு - ரட்சை கட்டி. ஏத்தும் - ஸ்தோத்திரம் செய்யும், நாச்சியார் - ஆண்டாள்.]
என்றெல்லாம் வழி யெங்கும் அன்பர்கள் செவிகுளிரச் சின்னம் எடுத்தார்கள்.

ஆண்டாள் திருமணத்தை முன்னிட்டு ஸ்ரீவில்லிபுத்தூரை விசேஷமாக அலங்கரித்தார்கள். திருமணம் பார்க்க முனிவர்களும் அமரர்களும் வந்து கூடிவிட்டார்

களாம். பெண்கள் கோதையை வாஸ மஞ்சனம் ஆட்டி அலங்கரித்தார்கள். முகூர்த்தம் நெருங்கி விட்டதென்று தெரிந்து, 'பகவான் எப்பொழுது வருவானோ?' என்று எல்லாரும் ஆவலுடன் எதிர்நோக்கி யிருந்தார்களாம்.

'இனி அரங்கன் வாரானோ?' என்று சிலர் இரங்கினார்கள், வருந்தினார்கள். ஆழ்வாரும், 'அன்று என்னோடு பங்குனி உத்தரத்தில் மணம்புரிய வருவோம் என்று சொன்ன சொல்லை ஸ்ரீரங்க ராஜா காப்பாற்றமாட்டானோ? மாமாயன் மாயத்தை ஏழையேன் அறிவேனோ?' என்று மறுகினார். அப்போது கோதை கருடனை நினைத்தாள். கருடன் தோன்றியதும், 'திருவரங்கம் சென்று அழகிய மணவாளரிடம் அந்த 'மெய்ம்மைப் பெருவார்த்தை'யை ஞாபகப்படுத்தி அழைத்து வரவேண்டும். அப்படியானால் அவரோடும் என்னோடும் அருகில் அமரும் ஏகாசனம் தருவேன்!' என்றாள்.

கருடன் பறந்துசென்று ஸ்ரீரங்க நாதன் பதம் பணிந்தான். இறைவன் கருடன் தோள்மீதில் ஏறிக்கொண்டு வடபெருங்கோயிலை வந்தடைந்தான். ஆழ்வார் அழகிய மணவாளனுக்குக் கோதையைத் தாரைவார்த்துப் பல்லாண்டு பாடினார்.

சீரார் பிரமன் செறிந்(து) ஆகுதிசெய்ய,
ஏரார் பெரியாழ்வார் பல்லாண்(டு) எடுத்தேத்த,
ஆராத காதல் அடியார் குழாம்புகழக்,
காரார் குழல்அணங்கைக் கண்ணபிரான் கைப்பிடித்
[தான்.

[சீரார் - சீர் நிறைந்த. செறிந்து - நெருங்கி. ஏரார் - அழகு நிறைந்த. ஆராத - தெவிட்டாத. குழாம் - கூட்டம். காரார் குழல் அணங்கு - மேகம் போன்ற கூந்தலையுடைய ஆண்டாள். கண்ணபிரான் - கண்ணனாகிய ஸ்ரீரங்கநாதன்.

திருமணம் இனிது நிறைவேறியதும் ஸ்ரீ ரங்கநாதன் கோதையையும் அழைத்துக் கொண்டு கருடன்மேல் ஏறிப் போய்விட்டானும். 'பெருமான் உகந்து மணந்து கொண்ட உத்தம மகளை வளர்க்கும் பேறு பெற்றேன்; என் அருமைப் புதல்வி என்ன பாக்கியம் செய்தாள்!' என்று பெரியாழ்வார் முன்னிலும் அதிகமான பக்தியுடன் வடபத்திரசாயிக்கும் அடியார்களுக்கும் கைங்கரியம் செய்துகொண்டிருந்தாராம் ஸ்ரீவில்லிபுத்தூரில். 'ஸ்ரீ ரங்க ராஜாவுக்கு "மாமனர்" ஆகிவிட்ட பெரியாழ்வார் பெற்ற பேறு வேறு யார் பெற்றூர்?' என்று இவருக்குக் கிடைத்த மேம்பாட்டைக் கேள்வியுற்றவர்களெல்லாம் வியந்து மனமுருகி இவரைப் பெரிதும் துதித்தனர்.

பெரியாழ்வார், பாண்டிய ராஜகுல திலகமும் தமது அருமைச் சீடனும் ஆகிய ஸ்ரீவல்லப தேவனுடைய உதவியால் கோதையின் விக்கிரகத்தை ஸ்ரீவில்லிபுத்தூரில் பிரதிஷ்டை செய்தார். கோதையையும் இறைவனையும் கருடனையும் ஏகாசனத்திலே பக்தர்கள் என்றும் தொழும் பாக்கியத்தைப் பெற்றூர்கள்.

## 2. ஆராய்ச்சி

## 8. பெரியாழ்வார் காலம்

சங்க காலத்திற்குப் பிற்காலத்திலே வாழ்ந்தவர்கள் திருமாலடியார்களான ஆழ்வார்களும் சிவனடியார்களான நாயன்மார்களும். சங்க காலம், இடைக்காலம், பிற்காலம், தற்காலம் என்று தமிழிலக்கிய சரித்திரத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்துப் பேசலாம்: இடைக்காலப் புலவர்களில் முற்பட்டவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும். இவர்களில் பெரியாழ்வாரின் காலத்துப் பாண்டிய அரசனை ஸ்ரீ வல்லபதேவன் என்று ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்கள்

குறிப்பிடுகிறார்கள். இந்த அரசனைக் கோநெடுமாறன் என்று பெரியாழ்வார் கூறுவர். 'இப்பாண்டியனை 8-ஆம் நூற்றாண்டினனும், "பரம வைஷ்ணவன்" எனப்பட்ட பராந்தகன் - நெடுஞ்சடையன் தந்தையுமாகிய மாறவர்மன் என்று கருதப் பெரிதும் பொருத்தமுண்டு' என்று பண்டிதர் மு. இராகவையங்கார் சாஸனத் தமிழ்க் கவி சரிதம் என்ற தமது நூலில் கூறியுள்ளார்.

கி. பி. 7-வது நூற்றாண்டு முதல் 10-வது நூற்றாண்டின் ஆரம்பம்வரை, மூன்று நூற்றாண்டுகளாகப் பாண்டிய மன்னர்கள் உன்னதப் பதவி அடைந்திருந்தார்கள். அக்காலத்தைப் பாண்டியர்களின் முதலாவது ஏகாதிபத்திய காலம் என்று கூறலாம். பாண்டிய ராஜ்யத்தை மகாராஜ்யமாக்கிய சக்கரவர்த்திகளில் பராந்தகன் நெடுஞ்சடையன் உத்தேசமாகக் கி. பி. 767-ல் பட்டத்துக்கு வந்திருக்கலாம். இவன் சுமார் 50-ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கலாம். சென்னை மியூஸியம் (சிரிவரமங்கல) சாஸனம் தான் இவனைப் பரம வைஷ்ணவன் என்று குறிப்பிடுகிறது.

> பராந்தகன் பரம வைஷ்ணவன் தானுகி
> நின்றிலங்கு மணிநீள்முடி நிலமன்னவன் நெடுஞ்
> [சடையற்கு

என்பது குறித்த சாஸனப் பகுதி. இவ்வரசன்,

> காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்
> திருமாலுக்கு அமர்ந்துறையக்
> குன்றம் அன்னதோர் கோயி லாக்கியும்

என்றும் அதே சாஸனத்தில் குறிக்கப்படுகிருன். கொங்கு நாட்டில் காஞ்சிவாய்ப்பேரூரில் விஷ்ணுவுக்குப் பிரமாண்டமான ஒரு கோயில் கட்டி வைத்ததும் நெடுஞ்சடையனது வைஷ்ணவ மதப்பற்றை வெளியிடுகிறது.

இந்தச் சக்கரவர்த்தியின் தந்தையான மாறவர்மனின் காலம் உத்தேசம் கி.பி. 740-760 என்று கருதுலாம். வேள்விக்குடிச் சாஸனத்து வடமொழிப் பகுதியால் இவன் பல்லவ மன்னனைப் புறங்காட்டி ஓடச் செய்தான் என்று தெரியவருகிறது. சென்னை மியூஸியம் சாஸனத்தால் இவன் பல்லவ பஞ்சனன் என்ற பெயருள்ளவன் என்று தெரிகிறது. நெடுவயல் முதலிய பல இடங்களிலும் இவன் பல வெற்றிகள் பெற்றான் என்று வேள்விக்குடிச் சாஸனம் தெரிவிக்கிறது.

> செழும்புரவிப் பல்லவனைக்
> குழும்பூருள் தேசழிய,
> எண்ணிறந்த மால்களிறும்
> இவுளிகளும் பலகவர்ந்தும்

[தேசழிய - தேஜஸ் அழிய; புகழொளி அழிய. புரவி, இவுளி - குதிரைகள். மால் களிறு - பெரிய யானைகள்.]

என்று வரும் சாஸனப் பகுதியால் இப்பாண்டிய மன்னன் பல்லவனைக் குழும்பூரில் வென்று அவனிடமிருந்து எண்ணிறந்த யானை குதிரைகளைக் கவர்ந்துகொண்டான் என்று தெரிகிறது. இப்போர் நந்திவர்ம பல்லவனது சாஸனம் ஒன்றில் விவரித்திருக்கும் பாண்டிய-பல்லவ யுத்தமாயிருக்க வேண்டும் என்று ஊகிக்கிறார்கள்.

பிறகு மாறவர்மன் பெரியலூரில் தன்னை எதிர்த்தவரை முறியடித்துக் காவிரியைக் கடந்து திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த மழகொங்கத்தை அடிப்படுத்தினான். இது,

> தரியலராய்த் தனித்தவரைப்
> பெரியலூர்ப் பீடழித்தும்,
> பூவிரியும் பொழிற்சோலைக்

காவிரியைக் கடந்திட்(டு),
அழகமைந்த வார்சிலையின்
மழகொங்கம் அடிப்படுத்தும்,

[தரியலர் - பகைவர். பீடு - பெருமை. பொழிற் சோலை - பெருமை வாய்ந்த சோலை. வார்சிலை - நீண்ட வில்.]

என்ற சாஸனப் பகுதியால் தெரியவருகிறது. மழகொங்கத்தை அடிப்படுத்தி அந்நாட்டு அரசன் மகளை மாறவர்மன் மணஞ்செய்துகொண்டான். பிறகு கங்கராஜனோடு சம்பந்தம் செய்து பூசுந்தரி என்ற அழகியை மணந்துகொண்டான்.

கங்கராசனோடு சம்பந்தஞ்செய்தும்

என்ற சாஸனப் பகுதி இம்மணத்தைக் குறிப்பிடுகிறது எனலாம்.

கூடல், வஞ்சி கோழிஎன்னும்
மாடமா மதில்புதுக்கியும்

[கூடல் - மதுரை. வஞ்சி - சேரர் தலைநகரம். கோழி - உறையூர்; ஒரு காலத்தில் சோழர் தலைநகரம். புதுக்கி - புதுப்பித்து; அலங்கரித்து.]

என்று சாஸனம் இவ்வரசனைக் குறிப்பிடுவதால் சேர சோழ ராஜ்யங்களிலும் இவனது ஏகாதிபத்தியம் பரவியிருந்தது என்று ஊகிக்கலாம்.

இவன் எண்ணிறந்த தான தருமங்கள் செய்தவன் என்றும் சாஸனம் தெரிவிக்கிறது. இவனைச் சிவபக்தனாகவும் தெரிவிக்கிறது.

பாண்டிக்கொடுமுடி சென்றெய்திப் பசுபதியது
பதுமபாதம் பணிந்தேத்திக்
கனகராசியும் கதிர்மணியும்
மனமகிழக் கொடுத்திட்டும்,

[பசுபதியது - சிவபெருமானின். பதும பாதம் - தாமரைபோன்ற திருவடிகள். கனகராசி - தங்கக் குவியல். கதிர்மணி - ஒளிவிடும் இரத்தினங்கள்.]

என்பது சாஸனப் பகுதி. நெடுமாறன் முதன் முதல் சைவ சமயத்தில் இருந்தான் என்றும், பிறகு பெரியாழ்வாரின் சிஷ்யனாகி வைஷ்ணவனாகிவிட்டான் என்றும் ஊகிக்கலாம்.

பராந்தக நெடுஞ்சடையன் என்ற இவன் மகனுக்கு முக்கிய மந்திரி காவந்தபுரம் என்ற களக்காட்டைச் சேர்ந்த வைத்தியகுல மாறங்காரி. இவனும் வைஷ்ணவன். இந்த மாறங்காரி, நெடுமாறன் காலத்திலும் மந்திரி பதவியை வகித்துவந்தான் என்று கருதலாம். இம்மந்திரியின் வாழ்க்கையும் முயற்சியும், நெடுமாறன் வைஷ்ணவனாவதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கக்கூடும். இவ்வரசனுடைய புரோகிதரான செல்வநம்பியைத்தான் குரு பரம்பரைக் கதைகள் இவன் வைஷ்ணவன் ஆனதற்கு முக்கிய காரணராகக் குறிப்பிடுகின்றன. திருக்கோஷ்டியூரைச் சேர்ந்த இப்புரோகிதரைப் பெரியாழ்வார் தம் திருப்பல்லாண்டுப் பிரபந்தத்தில் பாடியிருக்கிறார்:

அல்வழக்(கு) ஒன்றும்இல்லா
அணிகோட்டியர்கோன் அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலே! நானும்
உனக்குப் பழஅடியேன்

[அல்வழக்கு - அநியாயங்கள். அணி - அழகிய. கோட்டியர்கோன் - திருக்கோஷ்டியூரில் உள்ளவர்களுக்குத் தலைவன். அபிமானதுங்கன் - அபிமானத்தால் சிறந்தவன். செல்வன் - செல்வநம்பி. பழஅடியேன் - பழமையான தாசன்.]

நீதியின் நிலயமாகிய செல்வநம்பி எப்படிப் பழமையான தாஸரோ, அப்படியே தாமும் இருப்பதாகப் பெரி

யாழ்வார் கூறுவதிலிருந்தும், செல்வ நம்பியை 'அபிமான துங்கன்' என்று குறிப்பிடுவதிலிருந்தும், பெரியாழ்வாரும் செல்வநம்பியும் ஸ்ரீவைஷ்ணவ அபிமானம் என்ற பாச பந்தத்தால் இணைக்கப்பெற்ற ஒரு கோஷ்டியைச் சார்ந்த ஆவி நேர் அன்பர்கள் என்று கருதலாம்.

பெரியாழ்வாரின் திருமகளாவ கோதையின் தோற்றம் கி.பி. 716 என்றும், மார்கழி நோன்பு நடைபெற்றது கி.பி. 731 என்றும் கருதுவோருண்டு. கோதையின் திருமணத்தை முன்னிட்டு ஸ்ரீரங்கத்திற்குப் பெரியாழ்வாருடன் பாண்டிய அரசனும் சென்றான் என்று குருபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இவ்வரசன் பெரியாழ்வாருக்குப் பிரிய சிஷ்யனாக இருந்ததோடு கோதையிடம் பக்தி விசுவாசமாக இருந்தான் என்றும், பெரியாழ்வாருடைய குடும்பத்திற்கும், இவர் பரப்பிவந்த பாகவத தர்மத்திற்கும் பேருதவி புரிந்துவந்தான் என்றும் கருதலாம்.

பெரியாழ்வார் கலியுகம் 47-வதான குரோதன வருஷம் ஆனி மாதம் சுக்கிலபட்சம் ஏகாதசி ஞாயிற்றுக் கிழமை கூடிய சுவாதியில் முகுந்த பட்டருக்கும் பத்மவல்லி (பதுமையார்) அம்மைக்கும் புதல்வராக ஸ்ரீவில்லி புத்தூரில் தோன்றினார் என்று குருபரம்பரைக் கதையில் கூறியிருப்பதை இந்நாளில் ஆராய்ச்சிக்காரர் ஒப்புக்கொள்ள மாட்டார். பெரியாழ்வார் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதற்குத் தான் ஆதாரம் கிடைக்கிறது. இவர் 85 வயது வாழ்ந்தார் என்றும், இவரது 51-வது வயதில் கோதை குழந்தையாய்க் கிடைத்தாள் என்றும் சில குரும்பரைக் கதைகள் கூறுகின்றன.

## 9. பேரும் புகழும்

குருபரம்பரைக் கதைகளில் பெரியாழ்வாருக்குப் பட்டர்பிரான், விஷ்ணுசித்தர், வில்லிபுத்தூர்க்கோன்,

புதுவையர்கோன் முதலான பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றில் விஷ்ணுசித்தர் என்பது பிள்ளைப்பெயர். இவரே 'விட்டு சித்தன்' (விஷ்ணுசித்தன்) என்று தம்மைக் குறிப்பிட்டிருக்கிறார். 'புதுவைப் பட்டன்' என்றும் தம்மைக் குறிப்பிடுகிறார். ஸ்ரீவில்லிபுத்தூரைப் 'புத்தூர்' என்றும் 'புதுவை' என்றும் சொல்வதுண்டு. 'வேயர் புகழ் விட்டுசித்தன்' என்றும் இவர் தம்மை ஒரு பதிகத்தில் குறிப்பிடுகிறார். இவர் பிறந்த குலம் 'வேயர் குடி' எனப்படும்.

பார்அணிந்த தொல்புகழான்
பட்டர்பிரான்

[பார் அணிந்த - பூமியெங்கும் அழகாய்ப் பரவிய. தொல் - பழமையான.]

பாரார் தொல்புகழான்
புதுவைமன்னன்

[பாரார் - பூமி நிறைந்த.]

என்றெல்லாம் பதிகங்களின் இறுதியில் வருவது இந்த ஆழ்வாருக்குக் கிடைத்திருந்த பேரையும் புகழையும் நினைப்பூட்டுகிறது.]

குருபரம்பரையில் இவர் கதைக்குப் 'பெரியாழ்வார் வைபவம்' என்றும், நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இவர் நூலுக்குப் 'பெரியாழ்வார் திருமொழி' என்றும் தலைப்புகள் அமைந்திருப்பதிலிருந்து இவருக்குப் பெரியாழ்வார் என்று பக்தர்கள் அளித்த பட்டம், பாண்டிய சக்கரவர்த்தி அளித்த 'பட்டர்பிரான்' என்ற பட்டத்தைக் காட்டிலும் பிரசித்தமாகிவிட்டது என்று ஊகிக்கலாம். பல்லாண்டு பாடிய பெரியார், 'இறைவனுக்கும் மாமனார்' என்று மதிக்கப்பெற்று ஆண்டாளைத் திருமகளாக வளர்த்து அப்பெருமானுக்கு அளித்த பெரியார், தாயுள்ளம் கொண்டு அழகுத் தெய்வமாகிய கண்ணனைத்

தமது மனோபாவத்திலே, தமது திருமொழியிலே வளர்த்துவிட்ட பெரியார்—ஆகிய குறிப்புக்களெல்லாம் 'பெரியாழ்வார்' என்ற பேரிலும் புகழிலும் புதைபொருளாக அமைந்திருக்கின்றன.

## 10. வாழ்க்கைத் தத்துவம்

திருப்பல்லாண்டிலேயே இப்பெரியாரது வாழ்க்கைத் தத்துவத்தின் பெருமையை ஒருவாறு கண்டுகொள்ளலாம். அரசனைத் திருத்தியபின் ஆண்டவனை வாழ்த்திப் பாடிய திருப்பல்லாண்டில், எடுத்த எடுப்பிலே 'மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா!' என்று அழைக்கிறார். மனோஹரமான அழகு மனத்தை வசீகரிக்க, உலகத்தை யெல்லாம் இரட்சிக்கும் மகாசக்தி நம்மையும் இரட்சிக்கும் என்பது குறிப்பு. 'ஸர்வ ரட்சகனுக்கு ஸர்வ சக்தி மட்டும் போதாது; பக்திக் காதலைத் துண்டுவதற்குரிய சௌந்தரியமும் வேண்டும்' என்பது இவர் கொள்கை.

இரட்சகனும் அடியார்களும் பிரிவில்லாமல் நித்தியமாக வாழவேண்டும் என்று வாழ்த்திவிட்டு, மணியில் ஒளியும் பூவில் மணமும்போல் இறைவனோடு அருள் வடிவாய்ச் சேர்ந்திருக்கும் தாயாகிய மகாலட்சுமியையும் வாழ்த்துகிறார். இறைவன் அம்மை - அப்பனாய் இரட்சிக்கிறான் என்பது குறிப்பு.

பிறகு, 'அடியார்கள் யார்?' என்று குறிப்பிடுகிறார். 'பக்தி கைங்கரியமாகக் கனியவேண்டும்; வாழ்க்கையைக் கைங்கரியத்திற்கு ஒரு சந்தர்ப்பமாகவே கருதவேண்டும். "கைங்கரியமே வாழ்க்கையின் லட்சியம், புருஷார்த்தம்" என்று கருதி ஒழுகுகிறவர்களே அடியார்கள், "வயிற்றுப் பெருமானே பெருமான்; சாப்பாடே புருஷார்த்தம், வாழ்வின் இலட்சியம்!" என்று கருதுகிறவர்கள் அடியாரல்லர்—வைஷ்ணவரல்லர்' என்கிறார் பெரியாழ்வார்:

வாழாட்பட்டு நின்றீர்உள்ளீரேல்,
வந்துமண்ணும் மணமும்கொள்மின் ;
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள்
குழுவினில் புகுதல்ஒட்டோம்!

[வாழ் ஆட்பட்டு - வாழ்வதற்கு உறுப்பான கைங்கரியத்தில் ஈடுபட்டு. நின்றீர் உள்ளீரேல் - நிலைத்து நின்றவர்கள் இருப்பீர்களானால். கொள்மின் - கொள்ளுங்கள். கூழ் ஆட்பட்டு - சோற்றுக்கு அடிமைப்பட்டு. குழு - கோஷ்டி. புகுதல் ஒட்டோம் - அங்கீகரிக்க மாட்டோம்.]

இறைவனை உவப்பிக்க வல்லதும், நிலைத்த பலனை அளிக்க வல்லதுமான கைங்கரியத்தில் ஊன்றியிருப்பவர்களை 'வாழாட்பட்டு நின்றீர்' என்று அருமையாக அழைக்கிறார். முன்னாளில் 'மண்ணுக்கும் மணத்துக்கும் உரியேன் ஆகக்கடவேன்' என்று அடிமையோலை எழுதுவது வழக்கமாம். அத்தகைய அடிமைத் திறத்தை இறைவனுக்கே கைங்கரிய ரூபமாக உரிமையாக்க வேண்டுமென்கிறார். 'இறைவனுக்கும் உயர்ந்த லட்சியங்களுக்கும் உரிய ஆத்மாவைக் கூழுக்காக எழுதிக் கொடுக்கிறவர்களை எங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ள மாட்டோம்!' என்று பிடிவாதமாகப் பேசுகிறார்.

இவ்வாக்கை இன்னும் கவனியுங்கள், சிந்தியுங்கள். மனிதர்களையே இப்பெரியார் இரண்டு ஜாதியாகப் பிரிக்கிறார், 'சாதி இரண்டொழிய வேறில்லை!' என்று கூறிய ஔவைபோலே. கொடுத்தவர்கள் பெரியவர்கள் என்பதும், கொடாதவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதும் ஔவையார் கருத்து. ஆழ்வாரோ, 'வாழ்க்கை கைங்கரிய ரூபமானதென்று கருதி நடக்கிறவர்கள் உயர்ந்த ஜாதி' என்றும், 'சோற்றுச்சாமியே சாமி; பொருளே பரம்பொருள் என்று வாழ்க்கை நடத்தும் சோற்றுத் தொண்

டார்கள் தாழ்ந்த ஜாதி' என்றும் அபிப்பிராயப்படுகிருர். மற்றப்படி, 'நான் பிராம்மணன் அல்லது க்ஷத்திரியன் அல்லது வைசியன், ஆகையால் உயர்ந்தவன்' என்றெல்லாம் பெருமை பாராட்டிக்கொள்வதில் பயனில்லே. இதிலும் மோசமானது, 'அவன் நீசன்! இவன் தாழ்ந்தவன்!' என்று தாழ்வு சொல்வது. உண்மையில் அடியார்கள் எல்லாரும் ஒரு குலம்; அந்தக் குலத்திற்குப் பெயர், 'அடியார் குலம்'— 'தொண்டக்குலம்'. இதுவே 'தொழுகுலம்'.

தொண்டக்குலத்தில் உள்ளீர்வந்(து) அடிதொழு(து)
ஆயிர நாமம்சொல்லி,
பண்டைக்குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு
பல்லாயிரத் தாண்(டு)என்மினே!

[பண்டைக் குலம் - பழைய ஜாதி. தவிர்ந்து - நீக்கிக் கொண்டு. என்மின் - என்று வாழ்த்துங்கள்.]

என்பது பெரியாழ்வார் வாக்கு. பகவானே வணங்குகிறவர்கள், அவனுக்கு உகந்த கைங்கரியங்களில் ஈடுபடுகிறவர்கள், பழைய ஜாதியை விட்டுவிடவேண்டும் என்பது குறிப்பு. அப்போதுதான் பக்தி உண்மையான பக்தியாகும்; கைங்கரியம் சிறந்த பயனுள்ள கைங்கரியமாகும்.

'தொண்டக்குலம்' என்ற அடியார் கூட்டத்தில் சேர்ந்து கைங்கரியம் செய்ய விரும்புகிறவர்கள் எந்தக் குலத்திலிருந்தும் வகுப்பிலிருந்தும் வரலாம்; எந்த நாட்டிலிருந்தும் வரலாம்; அவர்கள் எந்த நிறத்தினராகவும் இருக்கலாம். 'கூடிப் பணிசெய்வோம்' என்ற மனம் தான் வேண்டும். நமது பெரியார்,

கூடும் மனமுடை யீர்கள்!
வரம்பொழிவந்(து) ஒல்லேக்கூடுமினோ!

[வரம்புஒழி - வரம்பு ஒழிய. ஒல்லை - விரைவாக. கூடுமின் - கூடுங்கள்.]

என்று கூவி முழக்குகிறார். 'கூடும் மனம் உள்ளவர் களே! எல்லையில்லாமல் வந்து கூடுங்கள்; விரைந்து வாருங்கள் பழைய வாழ்விலிருந்து, தீப்பட்ட வீட்டி லிருந்து தப்புகிறவர்களைப் போல!' என்று கூறும் மன நிலை, 'நான் பெற்ற இன்பம் உலகம் எல்லாம் பெற வேண்டும்' என்ற உயர்ந்த, சிறந்த, விரிந்த, உத்தம மனநிலையல்லவா?

இப்படிப்பட்ட இதயம் எல்லாரையும் தழுவி அருள் செய்ய ஆசைப்படுகிறது:

நாடும் நகரமும் நன்கறிய
'நமோ நாராயணாய' என்று
பாடும் மனமுடைப் பத்தருள்ளீர்! வந்து
பல்லாண்டு கூறுமினே!

[மனமுடை - மனமுடைய. பத்தருள்ளீர் வந்து - பக்தர்களுக்குள் சேர்ந்தவராயிருந்து. கூறுமின் - சொல் லுங்கள்; (இங்கே) பாடுங்கள்.]

நாடும் நகரமும் எதிரொலி கொள்ளும்படி நாரா யண நாமம் எங்கும் முழங்கவேண்டுமாம். இந்த நாமத்தை—இதன் மகா மந்திரமான 'ஓம் நமோ நாராய ணாய' என்ற அஷ்டாட்சரத்தை—உச்சரிப்பது மட்டும் போதாது; அந்தப் பிரீதிக்குப் போக்குவிட்டுப் பாட விரும்புகிறதாம் நெஞ்சு. அப்படிப்பட்ட மனமுள்ளவர் கள் எல்லாரும் வந்து பல்லாண்டு பாடிக் கடவுளை வாழ்த்தித் தாங்களும் திருந்திப் பிறரையும் திருத்த வேண்டும் என்கிறார் பெரியாழ்வார்.

'ஏழு தலைமுறையாகப் பழிப்பில்லாத பாகவதர்கள்' என்று இவர் தம் குடும்பத்தைக் கூறியுள்ளார்:

ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்!

[ஏழ்ஆள்காலும் - ஏழு தலைமுறையாக. பழிப்பு - குற்றம்.]

இதற்கு வியாக்கியானம்போல் மீண்டும் பல பாகவதர்களின் கூற்ருக,

எந்தைதந்தை தந்தைதந்தைதம்
மூத்தப்பன் ஏழ்படிகால்தொடங்கி
வந்துவழிவழி ஆள்செய்கின்ருேம்!

[எந்தை - என் பிதா. மூத்தப்பன் - பாட்டன். ஏழ்படிகால்தொடங்கி - ஏழு தலைமுறையாக. வழிவழி - முறை தப்பாமல். ஆள்செய்கின்ருேம் - கைங்கரியம் செய்கிருேம்.]

என்கிருர். 'என் தந்தையும், அவருடைய தந்தையும், அவருடைய தந்தையும், அவருடைய தந்தையும், அவருடைய பாட்டனுமாகிய ஏழு தலைமுறையாக நாங்கள் வாழையடி வாழையாய்ப் பழிப்பில்லாத பணிபுரிகின்ருேம்!' என்பதையும் இவரது பாகவத குலமுறையின் பெருமையாகக் கருதலாம்.

தம்மைப் பழமையான தாசன் என்று சொல்லிக் கொண்டு தமக்கு நன்மை யுண்டாகும்படி அஷ்டாட்சர மகாமந்திரத்தை அனுசந்தித்துக்கொண்டு, பகவானுடைய பல நாமங்களையும் சொல்லி ஏத்திப்பல்லாண்டு பாடுகிருர்:

நல்வகையால் 'நமோ நாராயணு'வென்று
நாமம் பலபரவிப்
பல்வகையாலும் பவித்திரனே! உன்னைப்
பல்லாண்டு கூறுவனே.

[பலபரவி - பல சொல்லிப் புகழ்ந்து. பல்வகையாலும் பவித்திரனே - எல்லா வகைகளாலும் பரிசுத்தனுன பெருமானே.]

'ஓம் நமோ நாராயணாய' என்ற கோஷத்திற்குமுன் அசுர நினைவுகளும் ராட்சஸ விருப்பங்களும் பேய்ப் புத்தியும் தீச்செயல்களும் பறந்துவிடும் என்பது இவர் குறிப்பு. இப்படிப்பட்ட 'யுத்த கோஷங்கள்' பெரியாழ்வார் காலத்தில் பல திருப்பதிகளிலும் முழங்கின என்றும், 'கடவுளின் போர்வீரர்கள்' அந்த ஸ்தலங்களிலிருந்தும் படையெடுத்துப் போய் நாடுநகரங்களைத் திருத்தினார்கள் என்றும், மக்களைக் கெடுக்கும் அசுர ராட்சஸ சக்திகளோடு போர் தொடுத்தார்கள் என்றும் ஊகிக்கப் பெரியாழ்வார் வாக்கு ஆதாரம் தருகிறது. இத்தகைய திருப்பதிகளுக்கு 'இராஜதானி' திருவரங்கம்.

ஸ்ரீரங்கத்தை இப்பெரியார் பலதடவை நேரில் போய்ப் பார்த்து, அங்குள்ள பாகவதர்களுடன் கலந்து பக்தி செய்திருக்கவேண்டும். தென்னாடும் வடநாடுமான நமது இந்தியாவுக்குத் 'திசை விளக்காய்' இருக்கிறது ஸ்ரீரங்கம் என்று பாடியிருக்கிறார் :

பத்தர்களும் பகவர்களும், பழமொழிவாய்
முனிவர்களும், பரந்த நாடும்,
சித்தர்களும் தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்
நிற்கின்ற திருவ ரங்கமே.

[பத்தர்கள் - (இங்கே) இல்லறத்திலுள்ள பக்தர்கள். பகவர் - முக்கோல் பகவர்; மூன்று கோல்கள் அல்லது தண்டங்களை அறிகுறியாகவுடைய பாகவத சந்யாசிகள். பழமொழி - (இங்கே) பழைய சொல்லாகிய வேதம். பரந்த நாடும் - விசாலமான நாட்டிலுள்ள மற்றும் பலரும். இறைஞ்ச - அஞ்சலிசெய்து வணங்கும்படி.]

'திருவரங்கம் பெரியகோயில்' என்ற பாகவத ராஜதானிநகரில் பக்தர்களும் பாகவத சந்யாசிகளும் முனிவர்களோடும் சித்தர்களோடும் கூடியிருந்து பக்தி பண்ணிச்

சமய உண்மைகளை நாடெங்கும் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பு.

திருமாலிருஞ்சோலை என்ற அழகர்மலை போன்ற ஸ்தலங்களும் பாகவத தர்மத்தைப் பரப்பிக்கொண்டிருந்தன என்று தெரிகிறது:

எல்லா இடத்திலும் எங்கும்
பரந்து பல்லாண்டொலி
செல்லாநிற்குஞ்சீர்த் தென் திரு
மாலிருஞ் சோலையே.

[பரந்து - பரவி. பல்லாண்டொலி - பல்லாண்டு பாடும் ஓசை. செல்லாநிற்கும் - செல்லும். சீர் - சிறப்பு. திருமாலிருஞ்சோலை - அழகர்மலை.]

இம்மலையைச் 'செல்வன் பொன்மலை' என்கிறார். இந்த ஸ்தலம் தம்முடைய சீடனை கோநெடுமாறன் என்ற பாண்டிய ராஜசக்கரவர்த்தியால் விசேஷமாய்க் கொண்டாடப் பெற்றதென்றும் பெரியாழ்வார் குறிப்பிடுகிறார்:

கொன்னவில் கூர்வேல்
கோநெடுமாறன், தென்கூடற்கோன்,
தென்னன் கொண்டாடும்
தென்திரு மாலிருஞ்சோலையே.

[கொல் நவில் - கொலையே தொழிலாகவுடைய. கூர்வேல் - கூர்மையான வேலாயுதம். தென்கூடல்கோன் - அழகிய ('நான்மாடக் கூடல்' என்ற பெயரையுடைய) மதுரைக்கு அரசன். தென்னன் - பாண்டியன்.]

இப்பாண்டியனைப் புராணங்கள் பிரஸ்தாபிக்கும் மலயத்வஜன் என்றுதான் வைஷ்ணவர்கள் சாதாரணமாய்க் கருதுகிறார்கள். பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் இந்தப் பாண்டிய மன்னனைத் தர்ம

யுத்தம் செய்து தர்ம பரிபாலனம் செய்த மலயத்வஜன் என்ற புராண மன்னனுகவே குறிப்பிடுகிறது. இவன் 8-ஆம் நூற்றுண்டில் பாண்டிய மகாராஜ்யத்தை ஆண்ட கோநெடு மாறன்தான் என்பது சரித்திர ஆராய்ச்சி காட்டும் உண்மை.

திருமாலிருஞ் சோலையைப் பெரியாழ்வார் 'அழகன் அலங்காரன்மலை' என்றும்,

குலமலை, கோலமலை,
குளிர்மாமலை, கொற்றமலை,
நிலமலை, நீண்ட மலை,
திருமாலிருஞ் சோலையதே

[குல மலை - குலத்திற்கு உரிய மலை. கோல மலை - அழகான மலை. மா மலை - பெரிய மலை. கொற்றமலை - வெற்றியுள்ள மலை. நில மலை - (செழிப்பான) நிலத்தையுடைய மலை.]

என்றும் பாடுகிறுர். குலமலை என்பதற்குப் பெரிய வாச்சான் பிள்ளை 'தொண்டக் குலத்துக்குத் தலைநின்ற மலை' என்று வியாக்கியானம் செய்கிறுர். தொண்டக் குலத்தினரான பாகவதர்கள் — பெரியாழ்வாரைப் போன்ற 'கடவுளின் போர்வீரர்கள்'—அழகர் மலையையும் ஒரு பாசறையாகக் கொண்டார்கள் என்று கருதலாம். இவர்களுடைய வெற்றிதான் இம்மலையைக் 'கொற்றமலை'யாக்கி யிருக்கவேண்டும்.

வடநாட்டிலுள்ள திருப்பதிகளையும் இவர் குறிப்பிட்டபோதிலும், திருவரங்கம், திருமாலிருஞ்சோலை முதலான தென்னுட்டுத் திருப்பதிகளே இவரது உள்ளத்தை விசேஷமாக வசீகரித்தன; இவரைப் போன்ற தமிழ்ப் பெரியோர்களின் பக்திப் பிரசாரத்திற்கும் உரிய ஸ்தலங்களாக விளங்கின. திருமாலிருஞ்சோலையைப்போல் செல்வ நம்பியின் ஊராகிய திருக்கோட்டியூரும் இவர்

காலத்தில் பாகவத கோஷ்டிகளுக்கு ஒரு 'பாசறை'யாக விளங்கியதென்று கருதலாம்.

நாவகாரியம் சொல்இலாதவர்
நாடொறும் விருந்தோம்புவார்,
தேவகாரியம் செய்துவேதம்
பயின்றுவாழ் திருக் கோட்டியூர்

[நாஅகாரியம் - நாவினால் சொல்லத் தகாதவை. சொல்இலாதவர் - ஒருபோதும் சொல்லி அறியாதவர்.]

என்று திருக்கோஷ்டியூரைப் பாடுகிறார் பெரியாழ்வார். பொய் பேசுதல், தூஷித்தல் முதலான அகாரியங்களை ஒருபோதும் சொல்லியறியாதவர்களாய் விருந்தோம்பி வேதம் பயின்று தேவகாரியம் செய்யும் பரம பாகவதர் வாழும் இடம் என்கிறார் திருக்கோட்டியூரை. இவர் குற்றமின்றிக் குணம் பெருக்கி'ப் பொறாமை பகைமை யுணர்ச்சிகள் சிறிதுமின்றி, மெய்ம்மையாளர்களாகவும் வண்மையாளர்களாகவும், வாழ்ந்துகொண்டிருந்தார்களாம். இவர்கள்,

குளிர்ந்(து)உறைகின்ற கோவிந்தன்குணம்

[குளிர்ந்து உறைகின்ற - உள்ளம் குளிர்ந்து எழுந்தருளியிருக்கின்ற.]

பாடி வைஷ்ணவப் பிரசாரம் செய்துவந்தார்கள் என்று கருதலாம்.

இத்தகைய பாகவதர்களுக்குச் செல்வநம்பி தலைவராக விளங்கினார் என்று ஊகிக்கலாம்.

நளிர்ந்தசீலன் நயாசலன்
அபிமானதுங்கனை நாடொறும்
தெளிந்த செல்வனைச் சேவகங்கொண்ட
செங்கண்மால் திருக்கோட்டியூர்

[நளிர்ந்த சீலன் - குளிர்ந்த சுபாவத்தையுடையவன். நயாசலன் - நய அசலன்; நீதிநெறியில் சலிப்பற்றவன். அபிமான துங்கன் - (பகவானிடத்திலும் பாகவதரிடத்திலும்) அபிமானத்தால் உயர்ந்தவன். சேவகம் கொண்ட - அடிமைகொண்ட; ஆட்கொண்ட. செங்கண்மால் - செந்தாமரை போன்ற கண்களையுடைய பகவான்.]

என்று திருக்கோஷ்டியூருக்கும், அங்கே கோயில்கொண்டிருக்கும் திருமாலுக்கும் செல்வநம்பியைச் சேவகங் கொண்ட பெருமையைத் தனிப் பெருஞ் சிறப்பாகக் கூறுவதைப் பாருங்கள். 'அல்வழக்கு ஒன்றுமில்லா அணி கோட்டியர்கோன், அபிமான துங்கன்' என்று பல்லாண்டுப் பதிகத்தில் குறிப்பிட்டதுபோல், அதே 'செல்வனை'த் திருக்கோஷ்டியூர்ப் பதிகத்திலும் 'நீதிநெறியில் சலிப்பில்லாமல் ஒழுகுபவர்' என்றும், 'குளிர்ந்த சீலன்' என்றும், 'அபிமான துங்கன்' என்றும், 'தெளிந்த செல்வன்' என்றும் குறிப்பிடுகிறார். 'தெளிந்த செல்வன்' என்பதில் 'பெயருக்கு ஏற்றபடி கைங்கரியச் செல்வம் நிறைந்தவர்' என்பது குறிப்பு. கோஷ்டியூர் - எம்பெருமானுடைய கல்யாண குணங்களை வாயாரப் பாடுவது போல், பெரியாழ்வார் பாகவதப் பெருஞ் செல்வரான செல்வநம்பியின் சிறந்த குணங்களையும் பாடுகிறார்.

பாண்டிநாட்டுத் திருப்பதிகளான திருமாலிருஞ் சோலை, திருக்கோஷ்டியூர்போலப் பெரியாழ்வார் பிறந்த ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் பாகவத தர்மப் பிரசாரத்தில் முக்கியமான பங்குண்டு. வில்லி என்ற வேடன் புதிதாக அமைத்ததால் இவ்வூருக்கு இப்பெயர் வந்ததென்பர். வில்லி என்பவனே வடபத்திரசாயிப் பெருமாளையும் கண்டெடுத்து இத்தெய்வ ஸ்தலத்தில் பிரதிஷ்டை செய்தான் என்றும் கூறுவர். இவ்வூர் செல்வத்திற்கு இருப்பிடமாகத் திகழ்ந்தது என்றும், உயர்ந்த மாடமாளிகைகளால்

பொலிவுற்றதென்றும், வேதம் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தவர்களின் உறைவிடமாக விளங்கியதென்றும், ஆண்டாள் பாடி யிருக்கிருள். இன்றும் இவ்வூரின் பரப்பும் சந்நிதானத்தின் அழகிய அமைப்பும் வசீகரமா யிருக்கின்றன.

'புதுவை' என்று இந்நாளில் புதுச்சேரியைக் குறிப் பிடுகிறோமல்லவா? திவ்யப் பிரபந்தம் 'புதுவை' என்றும் 'தென்புதுவை' என்றும் குறிப்பிடுவது ஸ்ரீவில்லிபுத்தூரைத்தான். பெரியாழ்வார் இவ்வூரை 'ஒளிபுத்தூர்' (ஒளி பொருந்திய ஸ்ரீவில்லிபுத்தூர்) என்றும் குறிப்பிடுகிருர்.

நாள்கமழ் பூம்பொழில்
வில்லிபுத்தூர்

[நாள்கமழ் - எந்நாளிலும் மணம் கமழ்கின்ற. பூம் பொழில் - பூக்கள் நிறைந்த சோலைகள்.]

என்றும் பாடுகிருர். சோலை சூழ்ந்த இந்நகரம் 'மச்சணி மாடப் புதுவை' (பல நிலைகளால் அழகிய மாளிகைகளை யுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்) ஆக இருந்ததென்றும் பெரி யாழ்வார் குறிப்பிடுகிருர்.

நீரணிந்த குவளைவாசம்
நிகழநாறும் வில்லிபுத்தூர்

[நீரணிந்த - நீர்நிலையை அழகு செய்கிற. குவளை - செங்கழுநீர்ப்பூ. வாசம் நிகழ நாறும் - வாசனை ஒரே மாதிரியாக வீசுகின்ற.]

என்கிருர்.

விண்தோய் மதிள்வில்லி
புத்தூர்

[விண்தோய் - வானளாவிய.]

என்கிறார். சோலைகளுக்கும் அழகான நீர்நிலைகளுக்கும் இடையே மதிலும் மாடமாளிகைகளுமாகக் காட்சி அளித்தது ஸ்ரீவில்லிபுத்தூர்.

இவ்வூரில் 'புதுவையர்கோன்' என்றும், 'புதுவை மன்னன்' என்றும் சொல்லும்படியாகப் பெரியாழ்வார் வாழ்ந்து வந்தார் என்று கருதலாம்.

செற்றமிலாதவர் வாழ்தரு
தென்புதுவை விட்டுசித்தன்

[செற்றம் - பகைமை, பொறாமை முதலான உணர்ச்சிகள். வாழ்தரு - வாழும் இடமான.]

என்கிறபடி, பரமசாதுக்களான பாகவதர்கள்—தங்கள் வாழ்வையே பிரசாரமாகச் செய்துகொண்டவர்கள்—வாழ்ந்த ஊரில், பெரியாழ்வார் அவர்களுக்கெல்லாம் முடிசூடா மன்னராக வாழ்ந்திருக்கவேண்டும். செல்வமும் அழகும் கல்வியும் நிறைந்த அவ்வூரில் பகவத் பாகவத கைங்கரியங்களையே உயர்ந்த கல்வியாகவும் சிறந்த செல்வமாகவும், ஆத்மாவை அழகு செய்யும் அணிகளாகவும் கருதி வாழ்ந்தார் இப்பெரியார்.

'செந்தமிழ்த் தென்புதுவை' பக்திக்கும் தமிழுக்கும் ஒருங்கே உறையுளாக இருந்திருக்கவேண்டும். இவ்வூரில் பெரியாழ்வார், தமிழிலே பக்திமணம் கமழச் செய்து, பக்தியிலே தமிழ்ச்சுவை ஊட்டி, தமிழையும் பக்தியையும் ஒருங்கே இசைத்து வளர்த்தார். 'வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை' (வேதாந்தம் கூறும் சிறந்த பொருளின்மேல் விளங்கிய தெய்வ விளக்காகிய பகவானை) வில்லிபுத்தூரில் ஏற்றி வைத்துத் தமிழகம் விளங்கச்செய்து, தமிழ் மொழிக்கும் ஓர் அபூர்வ சோபை தந்தார். இவரது குற்றமற்ற வாழ்க்கையும், குளிர்ந்த சீலமும், தெய்வம் கமழும் சித்தமும் இவர் தமிழிலும் பிரதிபலிப்பதால், (ஓரணி ஒண்தமிழ்)

(ஒப்பற்ற ஆபரணம் போன்ற அழகிய தமிழ்) என்று இவரது பாடல்கள் பாராட்டப்பெறுகின்றன.

இவர் பூமாலை கட்டிப் புகழ்பெற்ருர் என்று குருபரம்பரைக் கதைகள் சொல்லுகின்றன. இவர் கட்டிய பாமாலைகள் வாடாத அழகும், என்றும் குன்ருத மணமும் வாய்ந்தன என்பது பக்தர்களின் அபிப்பிராயம்.

வெங்கலிநலியா வில்லிபுத்தூர்க்கோன்
விட்டுசித்தன் விருப்புற்ற,
தங்கியஅன்பால் செய்தமிழ்மாலை,

[வெங்கலி நலியா - கொடிய கலியின் உபத்திரவத்திற்கு உட்படாத; கலியை வென்ற. தங்கிய - நிலை நின்ற. செய் தமிழ்மாலை - செய்த தமிழ் மாலையாகிய பாசுரங்கள்.]

அன்புமணமும் தமிழ்மணமும் கமழ்வதால், வாடுவதெங்ஙனம், மணங்குன்றுவதுதான் எங்ஙனம்?—என்று கேட்கிருர்கள் பக்தர்கள். கலியை வென்று பக்திக் காதலால் கிருதயுக புருஷராக வாழ்ந்த பெரியவர், ஆசைப் பட்டுத் தமது ஹிருதய அன்பை அப்படியே ஊட்டி மணங்கமழச் செய்த தமிழ்மாலை இப்பாடல்கள் என்பது வைஷ்ணவ பக்தர்களின் மனநிலை.

மெய்ந்நாவன் மெய்யடியான்
விட்டுசித்தன் விரித்ததமிழ்

[மெய்ந்நாவன் - மெய்யே சொல்லும், பொய்யே சொல்லத் தெரியாத, நாவை யுடையவன். மெய்யடியான் - பயனை விரும்பாது அன்பையே பயனுகக்கொண்டு பணி புரிந்தவன்.]

என்று பாராட்டப் பெறும் தமிழ்மாலையில் உண்மையொளியும் மெய்யன்பின் மணமும் வீசுவது இயல்புதான். விஷ்ணுவையே

விட்டுசித்தன் மனத்தே
கோயில்கொண்ட கோவலன்

[கோவலன் - கோபாலன்.]

என்று பாராட்டும்போது, அக்கோவலனை அணிசெய்யும் பாமாலைகளையும் பக்தர்கள் விசேஷமாய்ப் போற்றுவது இயல்புதான்.

நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதத்திற்கு உப அங்கமாக விளங்கும் திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் ஜனரம்யமான பிரபந்தங்களில் பிரசித்தமானவை என்று கருதலாம். பெரும்பாலும் கிருஷ்ணுவதாரத்தைப் பாடும் இவர் கோபிகா ஜன்மத்தைத் தாமே மேற்கொண்டு கண்ணன் வரலாற்றை நன்ருக அனுபவித்து அந்த அனுபவத்தால் உண்டான பிரீதி யதிசயத்தாலே 'பெரியாழ்வார் திருமொழி' என்று போற்றப் பெறும் திவ்யப் பிரபந்தத்தை அருளிச்செய்தார் என்பர்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் வடமொழியை நிலைகண்டு உணர்ந்தவர். இவர் வேத வேதாங்க வேதாந்தங்களையெல்லாம் ஐயந் திரிபின்றி அறிந்தவர். இவர்,

நாவளரும்பெரு நான் மறைஓதிய
கீதம்எல்லாம்
பாவளரும்தமிழ்ப் பல்லாண்டிசையுடன்
பாடுவமே!

என்று பாடுகிருரென்ருல், பல்லாண்டு பாடிய பட்டர்பிரானின் புகழ் கொஞ்சமோ? 'பாவளரும் தமிழு'க்குப் பெரியாழ்வார் பாசுரங்கள் உள்ளபடியே புகழளித்திருக்கின்றன என்பது திண்ணம்.

## 10. பெரியாழ்வார் நந்தவனம்

பெரியாழ்வார் 'வேதவாய்த் தொழிலை'க்காட்டிலும் நந்தவனத் தொழிலே மேலானதென்று கருதிப் பணி

புரிந்ததாகக் குறிப்பிட்டோமல்லவா? வேதநெறி-விஷ்ணு சித்தர், 'கைங்கரிய நெறியே கடவுள் நெறி, என்ற பாகவத தர்மத்தைக் கடைப்பிடித்தார்; இதனால் வேதத்தை மறந்துவிட்டார்; 'மண்வெட்டித் தழும்பைக் காட்டி, வேத நிச்சயம் காட்டாமல், எப்படிப் கிழியறுப் பது?' என்றுகூடக் கனவில் தோன்றிய இறைவனை நோக்கிக் கேட்டுவிட்டார்—இப்படி யெல்லாம் குருபரம் பரைக் கதை கூறுகிறது.

விஷ்ணுசித்தர் கேட்டாராம்:

ஏதுரைத்(து) அறுப்பேன் எந்தாய்!
இருகையால் எடுத்து வெட்டும்
நீதிமண் வெட்டிக் கொட்டால்
நிறைபெருந் தழும்பைக் காட்டி,
வேதநிச் சயம்காட் டாதே,
விமலனே! அறுக்க லாமோ?

[மண்வெட்டிக்கொட்டு - மண்வெட்டி வகை. விமலனே - கடவுளே.]

என்று கேட்டதும், அதற்குச் சொப்பனத்திலே தோன்றிய தேவசொரூபம், 'மன்னன் கேட்ட வேதமுடிவைக் காட்டல் என் பொறுப்பு; பொற்கிழியைக் கைக்கொள்வதே உன் பொறுப்பு!' என்று பதில் சொல்லிற்றும்.

இளமையிலே கற்றுக்கொண்ட வேதம் மட்டுமா, படிப்பெல்லாம் பெரும்பாலும் மறந்துபோய்விட்டதாம் நந்தவன கைங்கரியத்திலே:

'பூதலம் முழுதி லுள்ள
புலவர்கள் சபையி னுள்ளே
மாதிரம் பொருதிண்தோள்
மன்னவர் மன்னன் முன்னே,

ஓதும்ஓர் எழுத்தும் போகா
ஊத்தையேன் உடலம் தாங்கி
நாதனே! வெட்கம் இன்றி
நண்ணுதல் நலனோ?' என்றார்.

[பூதலம் - பூமி. மாதிரம் - திக்கு; மலை; நிலம் ஊத்தையேன் - (இங்கே) அழுக்கு மனமுள்ள நான். உடலம் - உடம்பு. நண்ணுதல் - அடைதல்.]

இதற்குக் கனவிலே வந்த கடவுளுருவம் புன்முறுவல் பூத்து, 'வேத சாஸ்திரங்கள் எல்லாம் என் உடைமை, நானோ உன் உடைமை! உனக்கு அரியதும் உண்டோ? உத்தமனே!' என்று பதில் சொல்லிற்றாம். உடனே அந்தப் பொன்னடிகளில் விழுந்து, 'புண்ணியக் கொழுந்தே! விடைகொள்ளுகிறேன், வாழி!' என்று சொல்லிக்கொண்டே விழித்துக்கொண்டாராம் விஷ்ணு சித்தர். அந்த ஞான விழிப்பிலே பிறந்தன மதுரைவிஜய மும் பல்லாண்டுப் பிரபந்தமும் என்பது வடிவழகிய நம்பிதாஸர் குறிப்பு.

திருப்பல்லாண்டும், பெரியாழ்வார் திருமொழியும் உண்மையில், பெரியாழ்வாரின் நந்தவனமே; அந்த நந்த வனத்தின் அழியாத பகுதி! ஸ்ரீவில்லிபுத்தூரில் இவர் தமது உடைமைகளையெல்லாம் செலவிட்டுப் பயிரிட்ட நந்தவனத்தின் சுவடும் இன்று காணப்படுவதில்லை; பெரியாழ்வாரின் ஞான நந்தவனமாகிய பாசுரங்களோ இன்றும் பசுமையாகக் காண்கின்றன. இந்த ஆனந்த நந்தவனத்திற்குத் 'திருப்பல்லாண்டு' என்ற மங்களா சாஸனப் பாசுரங்கள் ஒரு மங்களமான முன்வாசற் சோலையாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாட்டும் இந்த நந்தவனத்திலே ஒரு மலர். பதிகங்கள் பூங்கொத்து; நந்தவனத்தின் பகுதிகள். வண்டுகளின் ரீங்காரம்போன்ற

பண்ணமூகு பக்தனை வாவென்றழைத்துச் சோலைக்குள், நந்தவனத்திலே, நடத்திச் செல்லுகிறது.

பெரியாழ்வார் தமது நந்தவனத்திலுள்ள மலர்களை இறைவனின் பூமாலையில் சேர்த்துத் தொடுக்க விரும்பியதுபோல், உலகத்தில் ஒவ்வொரு மனிதனையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யக்கூடிய ஒரு மலராக மதித்திருக்கவேண்டும் என்பதையும் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். இந்த ஆசை திருப்பல்லாண்டுப் பாடல்களிலும் வேறு பாடல்களிலும் ஊடுருவிக் கிடக்கிறது,— மலர்களை மாலையாக இணைக்கும் நூல்போலே. பூஞ்செடிகளில் உள்ள பூக்களைப் பார்த்ததும், ' ஓஹோ, அந்தப் பொன்னடி - மலர்களை அடையவேண்டும் என்று ஆசைப்படுகிறாயல்லவா? அவன் தன் முடிமாலையிலும், கழுத்தைச் சுற்றி அணிந்திருக்கும் மாலையிலும் ஓர் இடங்கொடுத்து உன்னைப் பொலிவுடன் விளங்கச் செய்வான்!' என்று உறுதி கூறுவதாய்க் கருதலாம். இப்படி ஒவ்வொரு மலரின் ஆசையையும் ஏக்கத்தையும் உணர்ந்துகொண்ட பெரியார், அந்த அன்புக் கடவுளின் வாடாத மாலையில் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் இடங்கொடுக்க விரும்பியதுபோலத் தோன்றுகிறது, இவர் பாசுரங்களைப் பாடிப் பார்க்கும்போது.

எத்தனையோ மலர்கள், எத்தனையோ நந்தவனங்களிலும் சோலைகளிலும் காடுகளிலும் பூத்துச் சொரிகின்றன; எத்தனை மலர்கள் வெய்யிலில் வாடி உலர்ந்துபோகின்றன; மழையில் அடிபட்டு உதிர்ந்துபோகின்றன; பனியிலே கருகிப்போகின்றன! சில மலர்களே காதலியின் கூந்தலையோ, கழுத்தையோ அணிசெய்து காதலன் கண்களிலே புதிய அழகும் ஒளியும் பெறுகின்றன. மக்களின் நிலையும் இதுதானே? மனிதவர்க்கம் என்ற காட்டிலே கோடிக்கணக்கான மலர்கள் வாடியும், வெதும்பியும், உதிர்ந்தும் உலர்ந்தும் போகின்றன. எனி

னும் சில மலர்கள் தக்க நிறம்பெற்று மணம் பெற்றுத் தெய்வக் காதலனுடைய மணமாலையை அலங்கரிப்பது முண்டு. இத்தகைய மலர்களில், கோதைக்கும் இவளை உலகத்திற்குக் காட்டிய பெரியாழ்வாருக்கும் முக்கிய ஸ்தானம் உண்டு.

வாழ்க்கையைக் கைங்கரிய ரூபமாக்கிப் பெரியாழ்வார் தாம் மணம் பெற்றதோடு,

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்,
வந்துமண்ணும் மணமும்கொள்மின் !

என்று பிறரையும் மணம்பெறக் கூவியழைக்கிறார். தம் முடைய விருப்பங்களை நிறைவேற்றி நல்லறிவு பிறக் கும்படி குளிரக் கடாட்சித்துச் சுத்தமான ஆத்மா வாக்கி, தம்மைக்கொண்டு முரண்பட்ட கொள்கைகளை யும் சமரஸமாக்கித் தமிழுலகத்தைத் திருத்திப் பணி கொள்ள முயன்றாளும் இறைவன். இந்த இறைவ னுக்கு நன்றி செலுத்துகிறார் :

நெய்யெடை நல்லதோர் சோறும்,
நியதமும் அத்தாணிச் சேவகமும்,
கைஅடைக் காயும், கழுத்துக்குப் பூணொடு
காதுக்குக் குண்டலமும்,
மெய்யிட நல்லதோர் சாந்தமும்
தந்(து),என்னை வெள்ளுயிர் ஆக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்
பல்லாண்டு கூறுவனே !

[நெய்எடை - நெய்யோடு சமமான எடையுள்ள. நியதமும் அத்தாணிச் சேவகமும் - எப்போதும் பிரியா மல் கூடவேயிருந்து செய்கிற ஆஸ்தான சேவகமாகிய கைங்கரியமும். கைஅடைக்காயும் - கையால் கொடுக்கும் தாம்பூலமும். பூண் - ஆபரணம். மெய்யிட - உடம்பில் பூசிக்கொள்ள. சாந்தம் - சந்தனம். வெள்உயிர் - சுத்த

மான ஆதமா. பை - படம். உடை - உடைய. நாகப் பகைக் கொடியான் - பாம்புக்குப் பகையான கருடனைக் கொடியாகவுடைய பகவான்.]

என்று ஐசுவரியத்தை விரும்புகிறவர்களில் ஒருவன் பேசுவதுபோல், பேசுகிறார் பெரியாழ்வார் இப்பாசுரத்திலே. தாரக—போஷக—போக்ய வஸ்துக்களைக் கொடுத்து நல்லறிவையும் கொடுத்து வாழ்வைப் பனிபோல் வெள்ளுயிராக்க வல்லவன் எம்பெருமான். அவன் நாகத்தைச் சயனமாகவும், 'நாகப்பகை'யான கருடனைக் கொடியாகவும் உடையவன்; அதாவது, முரண்பட்ட தத்துவங்களையும் சமரஸப்படுத்துகிறவன். தன் வசிகர அழகின் சக்தியால், இக் கொள்கை எவ்வளவு வசீகரமானது பாருங்கள்!

அழகான நந்தவனத்திற்குள் அழைத்துச் சென்று, 'அந்தப் பூவைப் பார், இந்தப் பூங்கொத்தைப் பார்; அந்தச் செங்கழுநீரைப் பார், இந்தப் பசுந்துளஸி பார்; இந்தத் தாமரைப் பொய்கை பார்; அந்த நீரோடை பார்; அந்த வர்ண ஜாலம் பார்; இந்த நீலம் பார், நிறக்கலவை பார்; இந்தக் காட்சியின்பம் பார்' என்றெல்லாம் காட்டுவதுபோல், 'அந்தப் பாட்டின் பொருளைப் பார்; இந்தப் பாட்டின் சொல்லழகு பார்; வேறு பாட்டின் பண்ணழகு பார், சப்த ஜாலம் பார்; இன்னொரு பாட்டின் பக்தி மணத்தை அனுபவி, அன்புத் தேன் பருகு; இந்தக் கவிதைப் பூந்துளிரைக் கண்டு களிப்பாய்!' என்றெல்லாம் காட்டிக்கொண்டு போகலாம், பெரியாழ்வாரின் கவிதைப் பூந்தோட்டத்திலும்.

'அதோ குழந்தைக் கண்ணனைப் பாருங்கள்! அவனுடைய அடிகளை, விரல்களை, வயிற்றை, மார்பை, தோள்களை, கைகளை, மூக்கை, முகத்தை, வாயை, வாக்கை, கண்ணை, பொன்னகையை, புன்னகையை!' என்று இவ்வாறு பெரியாழ்வார் காட்டிக்கொண்டு, போகிறார். நந்த

வனத்து மலர்களைக் காட்டுவதுபோல, 'பாதக் கமலங்கள் காணீரே!' என்றெல்லாம் குழந்தைக் கண்ணனுடைய திவ்ய அவயவங்களைக் காட்டுகிறவர், அந்தக் குழந்தையைத் தொட்டிலில் இட்டுக் காட்டுகிறார், தாலாட்டிக் காட்டுகிறார்; ஒக்கலில் வைத்துக் காட்டுகிறார்; கையில் வைத்துக் காட்டுகிறார். குழந்தை தவழ்ந்து புழுதி அளைவதும் காட்டி, பனிச்சென்று அக்குழந்தையை இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டு அம்புலி காட்டுகிறார். அக்குழந்தையின் பலவேறு விளையாடல்களையும் கண்டு 'பார், பார்' என்று நமக்கும் காட்டுகிறார். இவ் விளையாடல்களெல்லாம் இறைவனுடைய ஆக்கல், அளித்தல், அழித்தல், மீண்டும் ஆக்கல் முதலான திருவிளையாடல்களையும் நினைப்பூட்டுகின்றன இவருக்கு.

பெரியாழ்வார் தாயுள்ளங்கொண்டு கண்ணனிடம் பக்தி செலுத்துகிறார், யசோதைத் தாயாகவே மாறி அன்பு செலுத்துகிறார் என்றால், இவருடைய பக்தி எவ்வளவு இயற்கையானது! இப்பாடல்களைப் படித்து அனுபவிப்பவர்கள் ஒவ்வொரு குழந்தை யிடத்திலும் கண்ணனைக் கண்டு களிப்பர் என்றும், உலகமெல்லாம் குழந்தைக் கண்ணனைக் காணும் உத்தம பக்தராவர் என்றும் கருதலாம்.

ஒருசமயம் யசோதை பலவேறு பூக்களையும் வைத்துக்கொண்டு, 'இவை வாடிப்போவதற்குமுன் நீ பூச்சூட வரவேணும்' என்று குழந்தைக் கண்ணனை அழைத்தாளாம். அந்தத் தாயன்பைத் தாமும் அனுபவிக்க ஆசைப்படும் பக்தமணி,

தேனில் இனிய பிரானே!
செண்பகப்பூச் சூட்ட வாராய்

என்றும்,

மருவி மணம் கமழ்கின்ற
மல்லிகைப்பூச் சூட்டவாராய்

[மருவி - நீங்காமல் சேர்ந்து.]

என்றும்,

பச்சைத் தமனகத் தோடு
பாதிரிப் பூச்சூட்ட வாராய்

[தமனகம் - மருக் கொழுந்து.]

என்றும்,

தெள்ளிய நீரில்எழுந்த
செங்கழுநீர் சூட்டவாராய்

[தெள்ளிய - தெளிவான. செங்கழுநீர் - செங்கழு நீர்ப்பூ.]

என்றும், அதே குழந்தைக் கண்ணனைக் கூவி அழைக்கிறார்.

நந்தவனத்திலே அந்த அந்த மலரைக் கண்டு, 'அப்பா, கண்ணே! நீ சூட்டிக்கொள்ளவேணும் என்று ஒவ்வொரு மலரும் ஏங்குகிறது! உனக்காகவே இம்மலர்கள் அழகும் மணமும் பெற்றிருக்கின்றன; உன்னுடைய அழகுடன் சேர்ந்து ஈடுபட ஆசைப்படுகின்றன!' என்றெல்லாம் இவர் எண்ணுவது போலவும், இப்படி எண்ணிக்கொண்டே பூக்கொய்வதுபோலவும் ஒரு காட்சி என் அகக்கண்முன் தோன்றுகிறது. தமது நந்தவனத்தின் மலர்களுக்கிடையே, இவர் ஆத்மாவையும் பரமாத்மாவையும், இரண்டுக்குமுள்ள உறவையும் கண்டார்!

மரத்திலே முல்லைக்கொடிகள் தழுவிப் படர்ந்திருக்கும் அழகை,

குரவில் கொடிமுல்லைகள்
நின்றுறங்கும் கோவர்த்தனம்

[குரவில் - குரவமரத்திலே. கோவர்த்தனம் - கண்ணன் குடையாகப் பிடித்த கோவர்த்தன மலை.]

என்று பாடுகிறார். இக் காட்சியையும் இவர் தமது நந்த வனத்திலேயே கண்டிருக்கக் கூடும்.

ஜகன்மோகன கோபாலன் புல்லாங்குழல் ஊதின போது, மரங்களும் மலர்களும் மக்களைப்போல் உருகிப் போயினவாம் :

*மரங்கள்நின்று மதுதாரைகள்பாயும் ;*
*மலர்கள்வீழும் ; வளர்கொம்புகள்தாழும் ;*
*இரங்கும், கூம்பும் !* * * *

[மதுதாரைகள் - மகரந்த தாரைகள் ; தேன்மழை. வளர் கொம்புகள் - மேல்நோக்கி வளர்கின்ற பூங்கிளைகள். இரங்கும் - உருகும். கூம்பும் - (கைகூப்புவதுபோல், தாழ்ந்த கிளைகளைக்) குவித்துக்கொள்ளும்.]
இக்காட்சிகளும் இவர் மனோபாவ வாயிலாகத் தம் நந்த வனத்திலே கண்டவை என்று கருதலாம்.

மகளைப் பிரிந்த தாய் ஒருத்தி பலவகையாகக் கதறிய தாய்ப் பாடும்போது இவர் அந்த வீடு இருந்த நிலையை,

*நல்லதோர் தாமரைப்பொய்கை*
*நாள்மலர்மேல் பனிசோர,*
*அல்லியும்தாதும் உதிர்ந்திட்டு*
*அழகழிந்தால் ஒத்ததாலோ !*

[நாள்மலர் - அப்போது மலர்ந்த பூ. சோர - சொரிய. அல்லி - பூவின் உள்ளிதழ். தாது - புற இதழ். ஆலோ - இரக்கத்தைக் குறிப்பது.]
என்று வருணிக்கிறார். தாமரைப் பொய்கையை அழகு செய்யும் தாமரைப் பூக்கள் பனி பெய்வதால் இதழ்கள் உதிர அழகழிந்து காணும் இத்தோற்றத்தையும் இப்பெரியார் தமது ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பூந்தோட்டத்திலே ஒரு பனிக்காலத்தில் கண்டிருக்கக் கூடும்.

இராமனால் தூதுவிடப் பெற்ற ஹனுமான் சீதை முன் நின்று பல அடையாளங்களைச் சொல்லித் தான் ராம

தூதன் என்று அவளை நம்பச் செய்கிறானல்லவா? இந்த அடையாளங்களில், மிகவும் அந்தரங்கமாக நடந்த ஒரு காரியத்தையும் ஹனுமான் குறிப்பிட்டுச் சீதை யுள்ளத்தை மகிழ்வித்து, நம்பிக்கை யூட்டியதாகப் பெரியாழ்வார் பாடியிருக்கிறார். இப்பாட்டிலும், இவருக்குப் பூக்களிலும் பூமாலைகளிலுமுள்ள பக்தி புலனாகிறது:

அல்லியம்பூ மலர்க்கோதாய்!
அடிபணிந்தேன், விண்ணப்பம்
சொல்லுகேன், கேட்டருளாய்,
துணைமலர்க்கண் மடமானே!
எல்லியம்போ(து) இனிதிருத்தல்
இருந்ததோர் இடவகையில்,
மல்லிகைமா மாலைகொண்(டு)அங்(கு)
ஆர்த்ததும்ஓர் அடையாளம்!

[அல்லியம்பூ - உள் இதழ்களையுடைய அழகிய பூக்கள். மலர்க்கோதாய் - பூமாலை போன்ற சீதையே. அடிபணிந்தேன் - உன் அடிகளில் பணிந்தவனாகிய நான். சொல்லுகேன் - சொல்லுவேன். துணைமலர்க்கண் - ஒன்றோடு ஒன்று ஒத்து மலர்போல் விளங்கும் கண்கள். மட மானே - இளம்பெண்ணே. எல்லியம்போது - ஓர் அழகிய இரவு வேளையில். இனிது இருத்தல் - இனிமை யான இருப்பாக. இருந்ததோர் இடவகையில் - ஏகாந்த மாக இருந்த ஓர் இடத்திலே. மல்லிகை மாமாலை - ஒரு பெரிய அழகிய மல்லிகைப் பூமாலை. ஆர்த்ததும் - கட்டியதும்.]

இப்பாட்டில் சீதையை 'அல்லியம்பூமலர்க் கோதாய்!' என்று அழைப்பதே எவ்வளவு அழகாக இருக்கிறது! மென்மையும் பொலிவும் மட்டுமா, சிறையிருந்த செல்வியின் உடலிளைப்பும் தோன்றுகிறதல்லவா? பூக்களால் அழகுபெறத் தொடுத்த பூமாலையிடம் பெரியாழ்வாருக்

குள்ள பக்தி மயமான அன்பு பிரதிபலிக்கிறது, சீதையை அழைக்கும் இந்த அழைப்பிலே, 'துணைமலர்க் கண்மட மானே!' என்று சீதையைக் குறிப்பிடுவதும் மலர்களில் இவருக்குள்ள பக்தியை வெளியிடுகிறது என்று கருதலாம்.

சில சமயங்களில் மலர்கள், அன்னையின் கண்களாகவும், அப்பனுகிய இறைவன் கண்களாகவும், குழந்தைக் கண்ணனின் கண்களாகவும் இவரைக் குளிர நோக்கின என்று கருதலாம். அயோத்தியிலே அரண்மனையில் ஓர் ஏகாந்தமான இடத்தில் உல்லாசமாக உரையாடிக்கொண்டிருந்தபோது சீதை விளையாட்டாக ஓர் அழகான மல்லிகைப் பூமாலையைக் கொண்டு தன் அழகனை ராமனைக் கட்டிவைத்தாள் என்று, மற்ற அடையாளங்களைக் காட்டிலும் சிறந்த அடையாளமாகப் பெரியாழ்வார் குறிப்பிடுவதும், பூமாலைகளில் இவருக்குள்ள பிரேம பக்தியை வெளியிடுகிறதென்று ஊகிக்கலாம்.

திருமாலிருஞ்சோலையைப் பாடும்போது, சோலைகளை அணிகளாகக் கொண்ட அம்மலையில் விடியற்காலத்திலே வண்டுகள் ரீங்காரஞ் செய்வது எம்பெருமானுடைய ஆயிரம் நாமங்களையும் பண்ணில் அமைத்துப் பாடுவது போலிருந்தது என்கிருர் பெரியாழ்வார் :

அறுகால் வரிவண்டுகள்
ஆயிர நாமம்சொல்லி,
சிறுகாலைப் பாடும் தென்திரு
மாலிருஞ் சோலையே!

[அறுகால் - ஆறுகால்களையுடைய. சிறுகாலை - விடியற்காலத்தில்.]

வண்டுகள் திருமாலிருஞ்சோலையில் பண் பாடியது, பாகவதர்கள் சிற்றஞ் சிறுகாலையில் பகவானுடைய திரு

நாமங்களை அனுசந்தித்துக்கொண்டு செல்வதை இவருக்கு நினைப்பூட்டுகிறது. இப்படிப் பண் பாடும் இத்தகைய வண்டுகளைத் தமது நந்தவனத்திலே மலர்ந்த பூக்களில் ஊறும் தேனைப் பருக ரீங்காரம் செய்து வரும்போது பல தடவைகளிலும் கண்டு களித்திருப்பார். இவ்வண்டுகள் நினைப்பூட்டும் அடியவர்களையும், மலர்ச்சி பெற்ற தங்கள் உள்ளத்தில் ஊறிய பகவத் விஷயமாகிற தேனைப் பருகுவதும், பகவானைப் பண் பாடுவதுமாய் இருந்த ஸ்ரீவில்லிபுத்தூர்த் தொண்டர்குலத்திலேயே பார்த்திருக்கக் கூடும்.

திருமாலிருஞ்சோலையில் கொன்றைமரங்கள் இதழும் நரம்புமாகப் பூக்களைச் சொரிவது, வள்ளல்கள் முறிந்த பொன்மோதிரங்களையும் பொற்காசுகளையும் வாரி வழங்குவதுபோல் இருக்கிறதாம் :

பொருப்பிடைக் கொன்றைநின்(று)
முறியாழியும் காசும்கொண்டு
விருப்பொடு பொன்வழங்கும்
வியன்மாலிருஞ் சோலையதே!

[பொருப்பிடை - மலையிலே. முறியாழி - பொன் மோதிரம் முறிந்து கிடப்பதுபோலக் கிடக்கும் கொன்றைப்பூவின் நரம்புகள். காசு - பொற்காசு போன்ற பூ இதழ்கள். விருப்பொடு - விருப்பத்துடனே. வியன் - வியப்பு; சிறப்பு.]

இக்காட்சியும் இவர் தமது நந்தவனத்திலேயே அதிசயமாய்க் கண்டு களித்ததுதான் என்று கருதலாம். திருமாலிருஞ்சோலையிலுள்ள இயற்கைப் பூஞ்சோலைகள் எல்லாம் இவருக்குத் தாம் செயற்கையாக ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைத்திருந்த பூங்காவனத்தை நினைப்பூட்டியிருக்கவேண்டும்.

திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளில் மிகச் சிறந்ததென்று வைஷ்ணவர்கள் கருதும் திருவரங்கம் பெரிய கோயிலை இவர்,

திருமுகமாய்ச் செங்கமலம்,
திருநிறமாய்க் கருங்குவளை,
பொருமுகமாய் நின்றலரும்
புனலரங்கம் என்பதுவே

[செங்கமலம் - செந்தாமரை. கருங்குவளை - நீலோத்பல மலர். பொருமுகமாய் - ஒன்றுக்கொன்று போட்டி போடுகிற நிலையில். அலரும் - மலரும். புனல்அரங்கம் - நீர்வளமுள்ள ஸ்ரீரங்கம்.]

செந்தாமரை மலர்கள் ஸ்ரீரங்கராஜாவின் திருமுகத்தையும், கருநீலப்பூக்கள் பகவானுடைய திருநிறத்தையும் ஸ்ரீரங்கத்திலேதான் நினைப்பூட்டியிருக்கவேண்டும் என்பதில்லை; 'தேன் தொடுத்த மலர்ச்சோலை'யைத் திருவரங்கத்தில் கண்டதுபோல் ஸ்ரீவில்லிபுத்தூர் நந்தவனத்திலும் இவர் கண்டு களித்திருக்கவேண்டும்.

குரவரும்பக் கோங்கலரக்
குயில்கூவும் குளிர்பொழில்சூழ்
திருவரங்கம் என்பதுவே
என்திருமால் சேர்விடமே

[குரவு - குரவமரங்கள். கோங்கு - கோங்குமரங்கள். அலர - மலர. பொழில் - சோலை. சேர்விடம் - சேரும் இடம்.]

என்ற வாக்கில், நித்திய வசந்தமான சோலைகளில் இவருக்குள்ள ஈடுபாடு இனிது புலனாகின்றது. இவர் ஸ்ரீவில்லிபுத்தூரில் தமது குளிர்பொழிலையும் ஒரு குட்டித் திருவரங்கமாகப் பாவித்திருக்கவேண்டும்.

'தோட்டம், மனைவி, பசுக்களின் தொழுவம், நீரோடை, விளைநிலம், கிணறு ஆகிய எல்லாவற்றையும் உன் கைங்கரியத்திற்காகத்தான் வைத்துக்கொண்டிருக்கிறேன்' என்று பாடுகிறார்:

தோட்டம்,இல்லவள் ஆத்தொழு, ஓடை,
துடவையும்,கிணறும் இவையெல்லாம்
வாட்டம்இன்றிஉன் பொன்னடிக்கீழே
வளைப்பகம் வகுத்துக்கொண்டிருந்தேன்!

[இல்லவள் - இல்லாள், மனைவி. ஆத்தொழு - பசு மாட்டுத் தொழுவம். துடவை - விளைநிலம். வாட்டமின்றி - குறைவில்லாமல். வளைப்பகம் - சூழ்ந்திருக்கும் இடம்.]

இவருக்கு நந்தவனத்தின் குளிர்ந்த நிழல் எம்பெருமானுடைய திருவடிநிழலை நினைப்பூட்டியிருக்கவேண்டும். 'நாட்டு மானிடத்தோடு எனக்கு அரிது!' என்று, கொன்றழுக்கும் கவலைகளில் விழுந்து சாகும் மக்களின் திரளிலிருந்து விலகி இவர் அடிக்கடி நந்தவனத்தில் ஓய்வு பெற்றுக் கைங்கரியமே கண்ணுயிருப்பர் என்று கருதலாம்.

பெரியாழ்வாரின் நந்தவனத்தை இன்றும் காணலாம் திவ்யப் பிரபந்தத்தின் ஒரு பகுதியாக. பெரியாழ்வாரின் அழகிய பக்தி - உள்ளம்போல், இவர் வில்லிபுத்தூரில் அன்று உருவாக்கிய பூங்காவனத்தின் அழியாத அறிகுறி போல் விளங்குகிறது, திருப்பல்லாண்டைப் பிரவேசமாக வுடைய 'பெரியாழ்வார் திருமொழி'. இந்தப் பாசுர நந்தவனத்திலே, வாடாத பூக்களுக்கும் பூங்கொடிகளுக்கும் இடையே ஒரு தெய்வ மலர்போலத் தோற்றம் அளிக்கும் பெரியாழ்வாரை அகக்கண் கொண்டு பார்க்கலாம்.

கழுத்திலே துளஸிமணிமாலை, முத்துமாலையைக் காட்டிலும் அழகு செய்கிறது. காதிலே குண்டலங்கள்; பரந்த நெற்றியிலும் மலர்ந்த மார்பிலும் அழகாய் அமைந்த பக்த சின்னங்கள். தோளில் பூக்குடலை. நாவிலே பண் சுமந்த பாசுரங்கள். பண்டித படாடோபம் சிறிதுமில்லாத குழந்தை முகம், குளிர்ந்த பார்வை. உள்ளும் புறமும் தூய்மையான தோற்றம். பூமாலையும் பாமாலையும் தொடுத்துப் பொழுதுபோக்கும் இவர் அருகே இரண்டு பெண்மணிகள்! மனைவி விரஜை அதோ; இதோ பூங்கொடி போன்ற ஒரு திருமகள் - ஆழ்வாரின் திருமகளான ஞானப் பூங்கோதை, சூடிக் கொடுத்த சுடர்க்கொடிதான்!

## 11. நந்தவனத்திலே ஞானப் பூங்கொடி

யுவதி ஆனாலும் தாய்க்குக் குழந்தைதானே; ஆடையை நன்றாக உடுக்கவும் தெரியாதவள் என்றே நினைத்துக்கொண்டிருக்கிறாள், அன்பு மிகுதியால். தோழிமாரோடு விளையாடப் போனவளுக்கு 'இவ்வளவு பிரேமை ஏற்பட்டுவிட்டதே!' என்று அதிசயிக்கிறாள். தாயின் நெஞ்சம் தடுமாறுகிறது, 'ஊர் என்ன நினைக்குமோ?' என்று. 'இவள் இஷ்டப்படியே நடந்து கொள்ளவில்லையா? நிலத்தில் நடக்கவிடாமல் ஒக்கலில் கொண்டு திரிந்தேனே: அப்படியெல்லாம் சீராட்டி வளர்க்கப் பெற்றவள் எனக்கும் தெரியாமல் ஒளித்து வைத்தாளே தன்னுடைய நெஞ்சை! இதை யாரிடம் சொல்லுவேன்? ஐயோ! நீங்களெல்லாம் உங்கள் தாய்மாருக்கு அடங்கியிருப்பதில்லையா?' என்று வருந்துகிறாள், மற்ற இளம்பெண்களோடு.

தாய் இப்படிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்க, அதோ பாருங்கள் மகள் கவலையை:

காறைபூணும், கண்ணாடிகாணும்;
தன்கையில் வளைகுலுக்கும்;
கூறைஉடுக்கும்; அயர்க்கும்; தன்
கொவ்வைச்செவ் வாய்திருத்தும்!

[காறை - கழுத்தில் அணிந்துகொள்ளும் ஒரு வகை அணி. கூறை - புடவை. அயர்க்கும் - மறக்கும். கொவ்வைச்செவ்வாய் - கோவைப்பழம்போல் சிவந்திருக்கிற அதரம்.]

காறையைப் பூட்டிக்கொண்டு நகையும் கழுத்துமான சேர்த்தியழகைக் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளுகிறாள். 'அவன் உகக்கும்படி வாய்த்திருக்கிறதோ, இல்லையோ?' என்று சரிபார்த்துக் கொள்ளுகிறாள். உடம்பு பூரிக்கிறது, ஏதோ காணாதது கண்டதுபோலே: உள்ளுக்குள்ளே அவ்வளவு திருப்தி. கைவளைகளைக் குலுக்கிப் பார்க்கிறாள்: இனி இவை தொங்கிப்போகாமல் கைக்குப் பொருத்தமாயிருக்கும் என்று ஒரு திருப்தி. உடை விஷயத்தில் அஜாக்கிரதையாய் இருந்தவள், இப்போது அழகான புடவையை அழகாய்க் கட்டிக்கொள்கிறாள்: அது மணமகன் வீட்டிலிருந்து வந்த கூறைப் புடவை என்ற எண்ணம். அந்தப் புடவையை உடுப்பதும் களைவதும், மீண்டும் உடுப்பதும், 'அவன் இன்னும் வரவில்லையே!' என்று தவிப்பதுமாய் இருக்கிறாள். ஆடை ஆபரணங்களைத் திரும்பத் திரும்ப ஒழுங்கு செய்து கொள்வதில்தான் எவ்வளவு நேரமாக ஈடுபட்டிருக்கிறாள்!

இந்த நிலையில் மறதியும் உண்டாகிறது; 'அந்த நகையை அணிந்துகொண்டோமோ? இந்த நகையை அணிந்துகொள்ளவில்லையோ? என்ற சந்தேகம்: அடிக்கடி தொட்டுப் பார்க்கிறாள், கண்ணாடியிலும் பார்க்கிறாள்; கண்ணாடியில் பிரதிபலிக்கிறதென்றுகூட அறியாமல்

அதிலே தோன்றும் காறையையும் தொட்டுப் பார்க்க முயல்கிருள்.

இப்படி அறிவழிந்தவள் திடீரென்று எதையோ ஞாபகப்படுத்திக் கொண்டவள்போல் கோவைப்பழம் போலச் சிவந்திருக்கிற தன்னுடைய வாயையும் கண்ணுடியில் பார்த்துக்கொள்கிருள். இப்போது நம்பிக்கை அலங்காரங்களில் இல்லை: இயற்கை யழகில்தான். ஆனுல் பல தடவை பார்த்துக்கொள்கிருளே, அந்த இயற்கைச் சிவப்பை இன்னும் எப்படிச் செயற்கையாக அதிகப்படுத்தலாம் என்ற எண்ணமா? அல்லது இளநகையிஞலேயே அந்தக் கொவ்வைக் கனிவாயை இன்னும் அழகு செய்துகொள்ள விருப்பமா? எப்படியோ தேறுதல் அடைந்துவிட்டவளைப்போல் காதலன் பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கிருள்!

இப்படியெல்லாம் கலங்கித் தெளிந்துகொண்டிருக்கும் காதலியைவிட்டு, மறுபடியும் வெளியே மற்ற ஸ்திரீகளோடு பேசிக்கொண்டிருக்கும் தாயை நோக்குவோம். 'இனி மடியிலும் பக்கத்திலும் வைத்துக் கொஞ்சவேண்டிய குழந்தையில்லை இவள்!' என்று தெரிந்துவிட்டது. செல்வச் செருக்காலே, விவாகத்தை ஆடம்பரமாகச் செய்து, 'நம்முடைய வீட்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டும்!' என்று எண்ணியிருக்கிருளாம். மகளோ,— சொல்லவேண்டியதில்லை, கிருஹத்தைக் காராகிருஹமாகவே எண்ணியிருக்கிருளாம்:

பெருப்பெருத்த கண்ணுலங்கள்செய்து,
பேணிநம் இல்லத்துள்ளே
இருத்துவான் எண்ணி நாம்இருக்க,
இவளும்ஒன்(று) எண்ணுகின்ருள்!

[பெருப்பெருத்த - பெரிய பெரிய. கண்ணாலம் - கல்யாணம். பேணி - ஆசைப்பட்டு. ஒன்று - நம் எண்ணத்திற்கு விபரீதமாக மற்றொன்று.]

இந்நிலையில், 'எப்படியும் க்ஷேமமாயிருந்தாலே சரி; காதலனிடம் சேர்க்கப் பாருங்கள், சேர்த்துவிடுங்கள்!' என்று பந்துக்கள் வற்புறுத்துகிறார்கள். தாயாருக்கோ அப்படிச் செய்யத் தோன்றவில்லை :

என் சிறகின் கீழ்அடங்காப்
பெண்ணைப் பெற்றேன்!
(திருமங்கை மன்னன்.)

என்ற மனநிலையில், கட்டும் காவலும்தானே அதிகரிக்கும்?.........

இனி வேறொரு காட்சி. அழகான நீர்நிலை; செந்தாமரைகள் பூத்துக்கிடக்கின்றன. ஒருநாள் அப்பூக்களின் மேலே பனி சொரிய, இதழும் மகரந்தமும் உதிர்ந்துவிடுகின்றன. 'ஆ, என்ன குளிர்ச்சி, என்ன மலர்ச்சி! என்ன பரிமளம்! என்ன சிவப்பு! என்ன கண்கவர் வனப்பு!' என்று அதிசயிக்கும்படி, ஆனந்திக்கும்படி, இருந்த அந்த ஒப்பற்ற தாமரைக்குளம் எப்படியாகிவிட்டது இப்போது! அப்படி அழகழிந்து வெறித்துப் போயிருக்கிறது காதலியின் வீடு! ஏன்? அவளைத்தான் அங்கே காணவில்லை. தாயைக் காண்கிறோம், கதறக் கேட்கிறோம் :

நல்லதோர் தாமரைப்பொய்கை
நாள்மலர்மேல் பனிசோர,
அல்லியும்தாதும் உதிர்ந்திட்(டு)
அழகழிந்தால் ஒத்ததாலோ!
இல்லம் வெறியோடிற்றாலோ!
என்மகளை எங்கும்காணேன் :

[வெறியோடிற்று - வெறிச்சென்றுஇருக்கிறது.]

என்ற பிரலாபத்தைக் கேட்டுத் திடுக்கிடுகிறோம்.

வீடு முழுக்க மகள் ஒருத்தியே குடியிருந்ததுபோலத் தோன்றுகிறதாம் இப்போது. ஒரு படுக்கையில் தன்னுடன் படுத்திருந்த பெண்ணைக் காணவில்லை என்றால், தாயின் ஹிருதயம் கலங்காமல், கதறாமல், இருக்கமுடியுமா? 'பந்துக்கள் சொன்னபடி நாமே காதலனோடு சேர்த்து வைக்காமல் கால தாமதஞ் செய்தோமே! எவ்வளவு அருமையாக வளர்த்தோம்!' என்று பரிதவிக்கிறாள் தாய். இவளுடைய சௌந்தரிய - குண - பூர்த்திகளைக் கண்டு, அவற்றைப் பிறர் புகழ்வதையும் கேட்டு, இவளுக்குத் தாயார் என்பதுதானே எனக்குப் பெருமதிப்பு என்றிருந் தேன். ஐயோ! ஏகபுத்திரி அல்லவா?' என்று எண்ணாத தெல்லாம் எண்ணுகிறது தாயுள்ளம்:

ஒருமகள் தன்னையுடையேன்;
உலகம்நிறைந்த புகழால்
திருமகள் போலவளர்த்தேன்;
செங்கண்மால்தான் கொண்டுபோனான்!

[திருமகள் - மகாலட்சுமி. செங்கண்மால் - மகா விஷ்ணுவாகிய கண்ணன்.]

என்று பலபடியாகப் புலம்பி உருகிப் பெருமூச்சுவிட்டுக் கொண்டே—இப்போது அந்தத் தாய் எங்கே?— விழித்துக்கொள்ளுகிறார் பெரியாழ்வார், தியானம் கலைந்து!

உண்மை: தாயார் வேறு யாருமில்லை, பெரியாழ்வார் தாம்! ஆனால், அந்த 'ஒருமகள்'—ஏகபுத்திரி யார்? பக்திப் பெருங்காதலில் ஆழ்ந்துபோன இப்பெரியாரின் உள்ளம்தானா? அல்லது இவர் தம் அருமைத் திரு மகளைக் குறித்தே இப்படிப் பாடியிருக்கிறாரா?

தாயுள்ளத்துடன் கண்ணன் பிறப்பு முதலான அத் தெய்வக்குழந்தையின் பால லீலைகளை அனுபவித்த பெரியாழ்வார், கண்ணன் காதல் அதிகரிக்கத் தாமே ஒரு காதலியின் தன்மையை அடைந்து அவள் படும் பாட்டை அவள் வாயால் சொல்லவும் வலியற்ற நிலையில் தாயார் சொல்லுவதாகக் காதல் துறையில் பாடிய பாசுரங்களே இவை என்று கருதும்படி அமைந்திருக்கிறது பெரியாழ்வார் திருமொழியின் இப்பகுதி. எனினும், இப்பாடல்களில் கோதைவாழ்க்கையின் எதிரொலிகளே காணப்படவில்லையா? இப்பிரபந்த நந்தவனத்து ஞானப்பூங் கோதை, ஞானபுத்திரி அல்லது மானஸபுத்திரி மட்டுமா?

இப்பாசுரங்களிலிருந்தே ஆழ்வார் திருமகளின் கதை ஊகிக்கப்பட்டதா?

> வேடர்மறக் குலம்போலே
> வேண்டிற்றுச்செய்(து) என்மகளை,
> கூடிய கூட்டமேயாகக்
> கொண்டு குடிவாழுங்கொலோ?
> நாடுநகரம்அறிய நல்லதோர்
> கண்ணாலம் செய்து
> சாடிறப் பாய்ந்தபெருமான்
> தக்கவா கைப்பற்றும்கொலோ?

[வேண்டிற்றுச் செய்து - தன் இஷ்டப்படியே செய்து. கூடிய கூட்டமே ஆகக்கொண்டு - இருவரும் மனம் பொருந்திக் கூடியதையே மணமாகக்கொண்டு. குடிவாழும்கொலோ - குடிவாழ்க்கை வாழ்வனோ. சாடு இறப்பாய்ந்த பெருமான் - சகடாசுரனை முறித்துத் தள்ளின கண்ணன். தக்கவா - தக்கவாறு. கைப்பற்றும் கொலோ - பாணிக்கிரகணம் செய்துகொள்வானோ.]

என்ற பாட்டிலும் பெரியாழ்வாரின் காதலுள்ளம்தான் பிரதிபலிக்கிறதா? கோதையின் காதல் - வாழ்வு சிறிதும் பிரதிபலிக்கவில்லையா?

இத்தகைய பாசுரங்களைத் தழுவியே கோதையின் கதை புனையப்பட்டதா? கோதையே ஆழ்வாரின் மானஸ புத்திரி தான்; ஆழ்வாருக்கு அப்படி ஒரு புத்திரி இல்லை! கோதை, ஆண்டாள் என்று ஒரு பெண்மணி வாழ்ந்து பாடியதேயில்லை!' என்று வாதிப்பவரும் இந்நாளில் உண்டு. இவர்கள் பெரியாழ்வார் திருமொழி என்ற நந்தவனத்திலே காணும் ஞானப்பூங்கோதையையும் தங்களுக்கு ஒரு சாட்சியாக அழைக்கக்கூடும்.

## 12. கோதை யார்?

'கோதையார்' என்றும் 'கோதைப் பிராட்டியார்' என்றும் ஸ்ரீ வைஷ்ணவ உலகம் விசேஷ பக்தியுடன் கொண்டாடும் ஆண்டாள் வாழ்ந்ததே யில்லை, பாடியதே யில்லை என்றால், 'கோதை தமிழ்' என்றும் 'நாச்சியார் திருமொழி' என்றும் பிரசித்தமாகப் பாடல்கள் வழங்கி வருகின்றனவே, அவையும் பொய்யா, விசுவாமித்திர சிருஷ்டியா? இந்தக் கேள்விக்கு, கோதை இருந்ததில்லை என்றும், பெரியாழ்வாரின் கவிதையுள்ளத்தின் சிருஷ்டி தான் என்றும் வாதிக்கிறவர்கள், பெரியாழ்வாரே தமது மானஸ புத்திரி பாடியதாகத் 'திருப்பாவை'யும் 'நாச்சியார் திருமொழி'யும் பாடிவைத்தார் என்று பதில் சொல்லுகிறார்கள்.

ஆழ்வார்களைப்போல் பக்திக் காதலுள்ளவர்கள் தங்களைக் காதலிகளாகப் பாவித்துக்கொண்டு பக்திசெய்து பாடியிருக்கிறார்கள் என்பது பிரசித்தம். 'ராகவா! உன் வடிவு கண்டால் மன்மதனும் மடவாராக (பெண்ணாக) ஆதரஞ் செய்வன்! (ஆசைப்படுவான்)' என்று திருவரங்கத்

தந்தாதி, 'மன்மத மன்மதனாகிய பகவானுடைய அழகை வருணிக்கிறது. கவிச் சக்கரவர்த்தியான கம்பனும், 'கண்ணில் காண்பரேல்,—ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்!' என்று கடுந்தவசியாகிய விசுவாமித்திர முனிவனே ராம செளந்தரியத்தில் ஈடுபட்டுப் பேசுவதாக வருணிக்கிறான். புருஷோத்தமனாகிய அழகனது பேராண்மைக்குமுன் உலகம் முழுதும் பெண்தன்மையதே!—என்பது வைஷ்ணவர் கொள்கை. திவ்யப் பிரபந்தத்தில், தம்நிலை மாறிப் பெண்நிலை பெற்றுப் பேசும் ஆழ்வார்கள் காதலியாகப் பேசுவதோடு, தோழியாகவும் தாயாகவும் பேசுவதும் உண்டு.

பெரியாழ்வார் காதல் - துறையிலே இன்னும் ஒரு புதுமை செய்திருக்கிறார்: அதாவது, ஒரு மானஸ புத்திரியைச் சிருஷ்டித்து, அவளைத் தெய்வக் காதலன் வசமாக்கி அக்காதலிலே ஐக்கியமாகச் செய்துவிட்டாராம். இதுதான் கோதையின் உண்மைக் கதை என்பது சில நூதன விவேகிகளின் வாதம்.

இறைவனுடைய அருளால் வசீகரிக்கப் பெறும் மனிதனுடைய ஞான சொரூபமே 'புத்திரி'; இப்புத்திரியை அவன் ஜாக்கிரதையாகவும் பேரன்புடனும் கண்டெடுத்து வளர்த்து வருகிறான். அப்புதல்வி முதன் முதல் நாணிக் கூசித் தன் உணர்ச்சிகளையும் செயல்களையும் இரகசியமாக வைத்துக் கொள்கிறாள். கோதை தெய்வக் காதலனுக்கு உரிய மாலையைத் தான் சூடி மகிழ்ந்தாள் அல்லவா? முதன் முதல் அடையும் ஆத்ம அனுபவங்களைப் பொதுவாக மக்கள் வெளியிடக் கூசி மறைத்து வைப்பார்கள் என்பதே, கோதை மாலை சூடித் தனிமையில் கண்ணாடிமுன் நின்று பார்த்ததாகக் கூறும் கற்பனையின் உட்பொருள். உலகத்தின் சாமானிய தர்மத்தை மீறிப் போகும் காரியம் உலகம் ஒப்புக்கொள்ள இயலாததே. 'அழகிய மணவாளன்' என்ற தெய்வக் காதலனுக்கு

வாழ்க்கைப் படுவதென்பது உலக வாழ்வைத் துறப்பது. பக்தர்களெல்லாம் பக்திக் காதலின் ஆனந்தத்திலே, ஆழத்திலே முங்கி முழுகி, இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடாமல், காதல் - அனுபவத்தையே தொடர்ந்து அனுபவிக்க முயல்கிறார்கள். கோதை இறைவனோடு ஐக்கியமானது பெரியாழ்வாரின் 'சோக'த்திற்குக் காரணம். சமாதி கூடினால், தனிமனிதன் அனுபவிக்கும் பக்திக் காதலின்பத்தை இழக்க நேருமல்லவா? எனவே கடவுளுடன் ஐக்கியமாக்கும் அருளொளியுடன், பகுத்தறிவு அல்லது விவேகம் போராடுகிறது. பெரியாழ்வார் கோதையை முந்திய அருள்-நிலைக்கும், தம்மைப் பிந்திய நிலைக்கும், அதாவது 'தந்தை' என்று, சந்தேகத்துடனும் சோகத்துடனும் கூடிய விவேக நிலைக்கும் அறிகுறியாக்கியுள்ளார். ஆகவே 'கோதை தமிழ்' என்றும் 'நாச்சியார் திருமொழி' என்றும் சொல்லப்படும் பாசுரங்களும் உண்மையில் பெரியாழ்வார் திருமொழிதான். காதலின் படுவேகத்தைக் குறிக்கும் பெரியாழ்வார் திருமொழிப் பகுதியே நாச்சியார் திருமொழி' என்று வழங்கப்பெற்று, நாளடைவில் கோதை நாச்சியார் ஓர் உண்மையான பெண்மணியாகவும், வேறொரு பக்த மணியாகவும் கருதப்பெற்றிருக்க வேண்டும். இவ்விதமாக 'சி. ஆர்.' என்றும் 'ராஜாஜி' என்றும் பிரசித்தராக விளங்கும் அறிஞர் திரிவேணி என்ற பத்திரிகையில் (செப்டெம்பர் 1946) தம் கட்சியைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்.

இந்த அறிஞர், தமது புதிய சித்தாந்தம் சம்பிரதாய விரோதமாய்க் கருதப்படலாம் என்பதையும் ஒப்புக்கொள்கிறார். ஆனால், பெரியாழ்வாரையே அவரது ஞானபுத்திரியாகவும் கொள்வதை விட்டு வேறொரு பக்தமணியையும் சேர்த்துக் கொண்டிருப்பதுதான் பக்திப் பெருக்காகுமோ?— என்று அதிசயப் படுகிறார். இவர் தாம் கூறுவது தம் சொந்தக் கற்பனை யல்லவென்றும்,

விசேஷ நன்மதிப்பிற்கு உரிய ஒரு நண்ப'ரது அபிப்பிராயத்தைத் தழுவியதுதான் என்றும் கூறியுள்ளார். புதுமையான ஒரு சித்தாந்தம், ஓர் அழகான உட்பொருள், திறமையாக விவகார ரீதியில் ரஸிகத் தன்மையுடன், நுட்பமாகவும் திட்பமாகவும் கூறப்பட்டிருக்கிற தென்பதில் சந்தேகம் இல்லை.

ஆண்டாள் கதையின் உட்பொருளைப்பற்றிய கற்பனை அழகானதுதான்: ஆனால் கோதை கற்பனைக் கோதை தானா? சரித்திரக் கோதையில்லையா? ஆனால். பெரியாழ்வார் வேறு, ஆண்டாள் வேறு என்பதற்கு அகச்சான்றும் உண்டு, புறச்சான்றும் உண்டு. பெரியாழ்வார் பாடல்களும் ஆண்டாள் பாடல்களும் இரு வேறு பக்த மணிகளின் பாடல்கள் என்பது இரண்டு திருமொழிகளையும் ஓதி ஓதி உணர்ந்தவர்களுக்கு இனிது புலனாகும்.

ஆண்டாளுடைய நடையில் இளமைமணம் வீசுகிறது காதலின் புதுமை பொலிகின்றது; பள்ள மடையில் பாயும் வெள்ளம்போல் உணர்ச்சிகள் பொங்கி நுரைத்து விழுகின்றன. பெரியாழ்வாரின் வாக்கிலோ முதிர்ந்த அனுபவமும், அபூர்வ எளிமையும், சோகம் கலந்த அன்பு - முதிர்ச்சியும் புலனாகின்றன. குழந்தைக் கண்ணனைப் பாடும்போதும் பெரியாழ்வாரின் வாக்கிலே முதிர்ந்த கனிவு புலனாகின்றது. தெய்வக் காதலனைப் பாடும்போது கோதை வாக்கில் 'இளமை வெள்ளம் தடுப்பவர் யாவரே?' என்ற உணர்ச்சி மேலிடுகிறது. பெரியாழ்வாரின் பக்திக் காதலில் பெரும்பாலும் தாயன்பே மேலிடுகிறது; ஆண்டாளின் பக்திக் காதலோ கரை புரண்டோடும் காதல் வெள்ளம்! தூய, அமைதி வாய்ந்த அன்புக் கடலில் விளைந்தவை பெரியாழ்வாரின் பாடல்களும் பக்தி - அனுபவங்களும். அலைபட்ட காதற் பெருங் கடலின் அலைகளும் சுழிகளும் நீரோட்டங்களும் ஆண்டாள் பாடல்கள், ஆண்டாளின் பிஞ்சிலே பழுத்த பக்தியனுப

வங்கள். பெரியாழ்வாரின் கனவிலும் கவிதையிலும் இன்னிசையிலும் தவழ்ந்து வரும் கண்ணன், ஆடி வரும் அழகுத் தெய்வம், ஆண்டாளின் கவிதை யழகிலும் பண்ணழகிலும், கனவுகளிலும் காட்சிகளிலும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் குறும்பனுகவும் காதலனுக வும் வெளிப்படுகிருன். கோகுல பாலன், கோபிகைகளுக் கும் பசுக்களுக்கும் தோழன், வேணுகோபாலன்—இம் மூன்று கோலங்களும் பெரியாழ்வாருக்குப் பிரத்தியட்சம்; ஆண்டாளுக்கோ 'மையல் ஏற்றி மயக்கும்' காதல்-தெய்வம் பிரத்தியட்சம். பெரியாழ்வார் தொடுத்துக் கொடுத்த பூமாலையைச் சூடிக் கொண்ட பெருமான், ஆண்டாள் சூடிக் கொடுத்த பூமாலையை மணமாலையாகச் சூடிக்கொண்டான்!

பெரியாழ்வாரின் முதிர்ந்த வாக்கிலே கண்ணன் குழந்தையாய், சின்னஞ் சிறுவனுய், ஜகன்மோகன பால கோபாலனுய், இளமை விளையாடல்களோடு வளர்கின் ருன்; ஜகன்மோகன வேணுகோபாலனுய் அற்புத கீதம் இசைத்து உள்ளத்தை வசீகரிக்கின்ருன். கோதையின் வாக்கிலே கண்ணன் காளையாகி வீரம் விளங்க, வசீகர அழகு ஜொலிக்க, அன்பர்களுக்கு 'அணிவிளக்கா' கவும், காதலிக்கு 'அல்லல் விளைத்த' காதலனுகவும் தோன்றுகி ருன். சுருங்கச் சொன்னல், பெரியாழ்வாருக்குக் கண்ணன் புதல்வன்; புதல்விக்கோ காதலன். விஷ்ணுசித்தரின் கவிதை யுள்ளத்திலே வளர்ந்த பிள்ளை, இவர் திரு மகளின் கவிதையுள்ளத்திலே காதலனுக ஊஞ்சல் ஆடு கிருன். 'பெரியாழ்வார் பேணி வளர்த்த கற்பகத் தருவில் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி சென்று படர்கிறது' என்று ஓர் ஆசிரியை கூறுவது பொருத்தமுடையதே.

பெரியாழ்வாரின் பதிகங்கள் இறுதியில் 'வில்லி புத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்' 'புதுவைப் பட்டன் சொல்' 'விட்டு சித்தன் விரித்த தமிழ்' என்று

இவ்வாறு பெரியாழ்வாரின் முத்திரை பெற்றிருக்கின்றன. ஆண்டாள் பதிகங்களோ இவளைப் 'பட்டர்பிரான் கோதை' 'வில்லிபுத்தூர்க் கோதை' என்று குறிப்பிடு கின்றன. மேலும், ஆண்டாள் தன் தந்தையாரை மரியாதையாக 'விட்டு சித்தர்' என்று குறிப்பிடுகிறார். தோழியை நோக்கிக் கூறுவதாக வரும் ஒரு பாசுரத்தில், 'காதலர் செல்வர், பெரியர்; நாம் சிறு மானிடவர்; என் செய்வது?' என்று கேட்டுவிட்டு, 'ஆனால் அப்பெரியரால் விஷ்ணுசித்தருக்கு வசப்படாதிருக்க முடியாது. இவர் அழைக்க அவர் ஓடிவருவர்; 'அப்போது நாம் எளிதாகக் கண்டுகொள்ளலாம்!' என்று பொருள்படப் பேசுகிறாள் கோதை.

நாச்சியார் திருமொழி 11-ஆம் பதிகம் கடைசிப் பாட்டிலும் ஆண்டாள் விஷ்ணுசித்தரைக் குறித்துப் பிரஸ்தாபிக்கிறாள்:

செம்மை யுடைய
திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை
விட்டுசித்தர் கேட்டிருப்பர்;
தம்மை உகப்பாரைத்
தாம்உகப்பார் என்னும்சொல்
தம்மிடையே பொய்யானால்
சாதிப்பார் ஆரினியே?

[பணித்த—வாயாலே அருளிச் செய்த. தம்மிடையே—தம் இடத்திலேயே. சாதிப்பார்—(அவரை)நியமிப்பார்.]

இந்தப் பிரஸ்தாபத்திலே, கோதை கஷ்டங்களை யெல்லாம் அறிந்திருக்கும் பெரியார் இவளுக்கு உதவி செய்யக்கூடும் என்ற பொருள் தொனிக்கிறது.

ஆழ்வார்கள் காலத்திற்கும் ஆசாரியர்களின் காலத்திற்கும் இடையே நீண்ட காலம் கழிந்து விடவில்லை, ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்களில் ஒருவரும் ஆண்டாளைப் பெரியாழ்வாரின் மானஸ புத்திரியாகக் கொள்ளவில்லை; வளர்ப்புப் புதல்வியாகவே கருதியுள்ளார்.

இராமாநுஜர் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தாபனம் செய்த காலத்திலே வாழ்ந்த திருவரங்கத்தமுதனார் தமது இராமாநுச நூற்றந்தாதியில் பெரியாழ்வாரையும் ஆண்டாளையும் ஆழ்வார் - கோஷ்டியில் குறிப்பிடுகிறார். திருப்பல்லாண்டு பாடிய பெரியாழ்வாருடைய திருவடிகளை விட்டு நீங்காத உள்ளத்தையுடையவர் இராமாநுஜர், என்ற பொருளையமைத்து, 'பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன் தாள் பேராத உள்ளத்து இராமாநுசன்' என்று பாடுகிறார் திருவரங்கத்தமுதனார். அடுத்த பாட்டில், 'அரங்கர் மௌலி-சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல் அருளால் - வாழ்கின்ற வள்ளல் இராமாநுசன் என்னும் மாமுனியே' என்று ஆண்டாளைக் குறித்துப் பிரஸ்தாபிக்கிறார். ஸ்ரீ வேதாந்த தேசிகன் கோதாஸ்துதி என்று வடமொழியில் ஒரு பிரபந்தம் பாடியிருக்கிறார்: இது கோதையின்சிறப்பை வெளியிடுவது. வியாக்கியான சக்கரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை, ஆழ்வார்களிலும் ஆண்டாள் பக்திக் காதலில் மிகச் சிறந்தவள் என்று அபிப்பிராயப்படுகிறார்.

உய்யக் கொண்டார் என்ற ஆசாரியர்,

அன்ன வயற்புதுவை
ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப்
பல்பதியம்--இன்னிசையால்

பாடிக் கொடுத்தாள்நற்
பாமாலை பூமாலை,
சூடிக் கொடுத்தாளைச்
சொல்

[அன்ன வயல் - அன்னங்கள் உலாவுகின்ற வயல்கள்' பன்னு—ஆராய்ந்து சொன்ன. பல் பதியம் - (இங்கே) பல பாசுரங்கள்.]

என்று, சந்தம் பொலியும் பாமாலையை ஆண்டாள் பாடிக் கொடுத்ததையும், கந்தம் பொலியும் பூமாலையை ஆண்டாள் சூடிக்கொடுத்ததையும் குறிப்பிடுகிறார். உய்யக்கொண்டார். ஆசாரியப் பிரதமர் என்று சொல்லப்படும் ஸ்ரீ நாதமுனிகளுக்கு அடுத்த பட்டம் வகித்தவர் என்பது கவனிக்கத் தக்கது.

ஆசாரியர்களின் காலத்திலும் பிற்காலத்திலும் ஆண்டாளின் பேரும் புகழும் பிரசித்தமாயிருந்தன. ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் என்ற விஜய நகர சக்கரவர்த்தி தெலுங்கர்; அம் மொழியில் தாம் இயற்றிய 'ஆமுக்த மால்யதா' என்னும் அருமையான கிரந்தத்திலே ஆண்டாள் விஷயமான தோத்திரங்களை அமைத்துள்ளார். 'சூடிக் கொடுத்தாள்' என்பதே 'ஆமுக்த மால்யதா, என்பதற்குப் பொருள். இந்நூலில் தமிழ் நாட்டின் சிறப்புக்களுடனும், நம்மாழ்வார், இராமாநுஜர் முதலான ஸ்ரீ வைஷ்ணவ பரமாசாரியர்களின் மகிமைகளுடனும், கோதை தமிழின் அருமை பெருமைகள் அழகாய்க் கூறப்பட்டுள்ளன. இந்நூலின் சொற்செறிவு, பொருளமைதிகளைப் பற்றி ஆந்திர அறிஞர்கள் புகழ்ந்து பாராட்டுகிறார்கள்.

இத்தகைய சான்றுகளால், 'கோதை யார்?' என்ற கேள்விக்கு, "இவள் பெரியாழ்வாரின் வளர்ப்புப் புதல்வி; ஆழ்வார் திருமகள்" என்று பிரசித்தி பெற்றுத் தந்தை

யாரையும் பக்திக் காதலில் மிஞ்சிவிட்டவர் என்று தைரியமாக விடை கூறலாம், 'கோதை பெரியாழ்வாரின் மானஸ புத்திரிதான்!' என்று கூறுவது யுக்தி வாதம்; இப் புதுமைக் கொள்கையை வெளியிடுகிறவர்கள் இத்தனை சான்றுகளையும் பழைய மரபுகளையும் மறுக்கப் போதுமான சான்று தரவேண்டும்: இது அவர்கள் பொறுப்பல்லவா?

பகவானுடைய 'மெய்ம்மைப் பெருவார்த்தை'யை விஷ்ணுசித்தர் கேட்டிருப்பர் என்று பாடிய கோதை, அவ் வார்த்தை பொய்யானால் தான் பிறந்ததும் பொய் தான் என்கிறாள்:

சொல்லும் பொய்யானால்,
நானும் பிறந்தமை
பொய்யன்றே!

[சொல்லும் - (பகவானுடைய) வார்த்தையே.]

'மெய்ம்மைப் பெருவார்த்தை சொன்ன 'குமர'னாரின் அந்தச் சொல்லும் பொய்யானால், கோதையாகிய நான் பிறந்ததும் பொய்யாகக் கடவது!' என்று அந்த வார்த்தையின் மெய்ம்மையை உறுதிப் படுத்துகிறாள் கோதை. எப்படி இவள் பிறந்தது பொய்யாகாதோ, அப்படியே தன்னுடைய தெய்வக் காதலன் சொன்ன சொல்லும் பொய்யாகாது என்பது கருத்து.

'தெய்வ நாயகன் சொல்லியிருந்த பேச்சு, எப்படியெல்லாம் பேர்த்து எறியப் பார்த்தாலும் நெஞ்சிலிருந்து பேரமாட்டாதவை; பேர்க்கவும் பேருகிறதில்லையே!' என்கிறாள்.

பேசி யிருப்பனகள்
பேர்க்கவும் பேராவே!

'நின்னைப் பிரியேன், பிரியிலும் ஆற்றேன்!' என்றெல்லாம் காதலன் சொன்ன சொற்களைத்தான் 'மெய்ம்மைப்

பெருவார்த்தை' என்கிருள். தான் உயிரோடிருப்பது போல், அவ்வளவு மெய்ம்மையான வாக்குறுதி யென்று கோதை கூறுவதின் இரகசியத்தை அறிந்து அனுபவிக்கும் ரஸிகர்களும் அறிஞர்களும் கோதையை 'மானஸ புத்திரி தான், உண்மைப் பெண்மணியல்ல' என்று கூறத் துணிவரோ ?

## 14. பிரபந்தச் சோலையில் பெரியாழ்வார்

பெரியாழ்வாருடைய உண்மையான வாழ்க்கைத் தத்துவத்தையும் இவர் பாடிய பாடல்களில் பார்க்கிறோம். குருபரம்பரைக் கதைகள், இப்பாடல்களையும் கர்ண பரம்பரை வரலாறுகளையும் தழுவி யெழுந்து, பக்தி யுள்ளத்திலே படர்ந்துவந்தன என்று கருதலாம். பெரியாழ்வார் கதைகளின் பெருங் கருத்துக்களெல்லாம் திவ்யப் பிரபந்தத்தின் பகுதியான இவர் பாடல்களில் வேரூன்றி வளர்ந்தவை என்பது திண்ணம். சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் ஒப்புக்கொள்ளத்தக்க முறையில் இவரது வாழ்க்கை வரலாறுகள் நமக்குக் கிடைக்கவில்லை. குரு பரம்பரைக் கதைகளில் தோன்றும் பெரியாழ்வார் ஏதோ ஒரு மங்கலான ஒளியில் தெளிவாகத் தெரியாத ஓர் உருவம் தான்; ஆனால் பெரியாழ்வார் வாக்கிலிருந்தே, இவரது வாக்கு மூலமாகவே, இவரது வாழ்க்கையின் போக்கையும் உயிர்நிலையான லட்சியங்களையும் ஒருவாறு தெளிவாக்கிக் கொள்ளலாம்.

இறைவனுடைய திருவடி நிழலிலே, — அதாவது, பகவானுடைய குளிர்ந்த அருள் நிழலில் — இவர் வீடும் தோட்டமும் பசுத்தொழுவும், தோட்டத்திலே நீரோடை கிணறு முதலான வசதிகளும், தோட்டத்தை யொட்டி விளைநிலமும் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தினார்

என்று ஊகிப்பதற்கு இவரது திருமொழியில் ஆதாரம் கிடைக்கிறது. தோட்டத்தை ஓர் ஆனந்தப் பூங்காவன மாக்கி, அதை இறைவனுக்கு உரிய நந்தவனமாகப் பரிபாலித்து வந்தார். அவனது பொன்மேனியைப் பூமாலைகளால் அழகு செய்து பார்ப்பதிலும், எல்லையற்ற அருளுக்கு அறிகுறியான அத் திருவடி மலர்களில் பன் னிற மலர்கள் தூவி வழிபடுவதிலும் இவருக்கு ஆசை அதிகம்: அம் மலர்கள் இறைவனைச் சேர்ந்து அழகு பெற் றதுபோல் ஆத்மாக்களும் அழகனைச் சார்ந்து அழகு பெற்று உய்யவேண்டும் என்ற பேராசையும் இவருக்கு உண்டு. மற்றப்படி போதுமென்ற மனமே பொன் செய் யும் மருந்து' என்ற பழமொழிக்கிணங்க, 'இறைவனது பொன்னடி இருக்கும்போது நமக்கும் குறையுண்டோ? என்று விளைநிலத்தில் கிடைத்ததுகொண்டு இல்லறம் நடத்திவந்தார்.

ஆம், பெரியாழ்வார் துறவியில்லை; இவருக்கு வறு மையும் கிடையாது. இதய வறுமையும் இன்றி இல்லா ளோடு வாழ்ந்து பக்தி பண்ணிக் கைங்கரியத்தில் ஈடுபட் டிருந்தார். பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்வதிலும், நந்த வன கைங்கரியம் புரிவதிலும் இவரது வாழ்க்கைத் துணைவி மனம் உவந்து உதவினாள் என்று கருதலாம். இதனால் இவர் வாழ்நாட்கள் சிந்தையின் நிறைவாகிய செல்வத் திலே இன்பமாகக் கழிந்துவந்தன. பூமாலை கட்டிய தோடு பாமாலை கட்டியும் இறைவனை ஆராதித்து, உயர்ந்த லட்சியங்களுக்கு நெஞ்சும் உழைப்பிற்குக் கையுமாக வாழ்ந்து பக்திப் பேரின்பத்தை அனுபவித்தார் என்ப தற்கு இவர் பாடல்கள் சான்று தருகின்றன. தாம் இள மையில் பயின்ற வேத வேதாந்தக் கல்வியைக் காட்டிலும் படாடோபமற்ற நந்தவனக் கல்வியும், சக்கரவர்த்தியின் பரிசுகளைக் காட்டிலும் விளைநிலத்தில் கிடைத்த வரு மானமும் இவருக்குப் போதுமென்று தோன்றின என

லாம். வேத வேதாந்தங்கள் தேடிக் காணாத—தர்க்க வாதங்கள் எட்ட முடியாத—பரம்பொருளை இவர் தமது வீட்டுக் கொல்லையில் அமைக்கப் பெற்ற நந்தவனத்திலே கண்டுகொண்டார்!

இப்படிக் கண்டுபிடித்த பரம்பொருளைத்தான் மதுரையில் பாண்டிய ராஜகுல திலகமான கோநெடுமாறனுக்கும் இதய சாந்தி ஏற்படும்படியாகக் காட்டியிருக்க வேண்டும். திருக்கோஷ்டியூர் - நண்பரும் பக்திப் பெருந்தோழருமான செல்வ நம்பி இராஜ புரோகிதராய் இருந்தால் விஷ்ணுசித்தரும் ராஜகுரு ஆனார் என்று கருதுவதற்குத் திருப்பல்லாண்டும் இவர் திருமொழியும் இடம் தருகின்றன. இவர் தமது வசீகரமான வாக்கையும் தோற்றத்தையும் உயர்ந்த லட்சியங்களையும் கொண்டு தர்க்கங்களையும் குதர்க்கங்களையும் வென்று அரசனுள்ளத்தையும் செல்வநம்பியின் உள்ளத்தையும் கவர்ந்திருக்க வேண்டும். திருப்பல்லாண்டில் வெளிப்படும் வசீகரமான வாழ்க்கைத் தத்துவமே இராஜ சபையில் இவரது வெற்றிக்குப் போதுமான காரணம் என்று கருதலாம்.

கூழுக்கு ஆட்பட்டு முகஸ்துதி செய்து பிழைக்கும் பண்டிதரின் கூட்டத்தையாவது, அவர்களுடைய படாடோப வித்தையையாவது இவர் மதித்ததில்லை; பிராம்மண ஜாதி என்று கர்வம் கொண்டதேயில்லை. ஜாதிச் செருக்கையும் கல்விச் செருக்கையும் செல்வச் செருக்கையும் அறவே வெறுத்துத் 'தொண்டக் குலமே தொழுகுலம்' என்றும், உண்மையான 'ராஜகுலம்' என்றும் கருதிவாழ்ந்தார். இந் நிலையைத் தாம் அடைவதற்குக் காரணமாயிருந்த ஸ்ரீவைஷ்ணவ பக்திநெறியை எங்கும் பரப்ப வேண்டும், அந்த ராஜ மார்க்கத்தில் 'அவன் வரக்கூடாது, இவன் தீண்டக்கூடாது' என்ற வேற்றுமையின்றி அனைவரும்

வரம்பில்லாமல் வந்து சேரவேண்டும் என்று ஆசைப்பட்டார்.

வாழ்க்கையைத் துறந்து ஓட விரும்பாதது போல், இவர் தனிமையில் நிஷ்டையிலோ யோகத்திலோ அமர்ந்து உலகத்தை மறக்கவும் விரும்பியதில்லை; கூட்டமாய்க் கூடி நாடும் நகரமும் நன்கு அறியும்படி எம்பெருமானுடைய திருநாமத்தை யுத்த கோஷமாகச் செய்துகொண்டு துஷ்ட ராட்சஸ சக்திகளையெல்லாம் வென்றொழிக்க விரும்பினார். இதற்குக் 'கூடும் மனமும்' 'பாடும் மன'மும் தான் தேவை என்பது இவர் கொள்கை. இப்படி உயர்ந்த லட்சியங்களைப் பரப்புவதிலும், மற்ற நேரங்களில் நந்தவன கைங்கரியம் போன்ற உழைப்பில் ஈடுபடுவதும் உயிரை 'வெள்ளுயிரா'க்கும் இறையருளுக்கு உத்தம வழி யென்று துணிந்தார். இத்தகைய வாழ்க்கைத் தத்துவத்தை இவர் பிரபந்த முகப்பில் திருப்பல்லாண்டிலேயே பார்க்கும்போது, இவரது மதுரை விஜயத்தின் இரகசியம் நமக்கு எளிதில் புலனாகிறது.

மதுரையிலிருந்து திரும்பியதும் மறுபடியும் 'நந்தவனமுண்டு, நாம் உண்டு' என்று ஸ்ரீ வில்லிபுத்தூரில், மதுரை ராஜசபையையும் அந்த வெற்றிப் பிரதாபத்தையும் மறந்து, காலங் கழித்தார். உடல் பொருள் ஆவி யெல்லாம் பூமாலையுடன் வடபத்திரசாயிக்கு [ஆலிலை மேல் பள்ளிகொண்ட பெருமானுக்கு] அர்ப்பணித்து விட்ட போதிலும், 'வீட்டில் குழந்தைச் செல்வம் இல்லையே!' என்ற ஒரு கவலை மட்டும் இவருக்கு ஏற்பட வில்லை என்று சொல்ல முடியாது. இவர் மனைவிக்கும் இப்படி ஒரு மனத்தாங்கல் ஏற்பட்டிருக்கக் கூடும். தெய்வத்தைக் கொண்டாடியதைப்போல் இப் பெரியார் குழந்தையையும் கொண்டாடினார். எந்தக் குழந்தையைக் கண்டாலும் குதூகலம், காணாதது கண்டதுபோன்ற மகிழ்ச்சி — குழந்தைக் கண்ணனையே கண்டுவிட்டது போன்ற

இன்பம். இது - இவர் குணாதிசயத்தின் ஒரு முக்கிய அம்சம் எனலாம்.

திருக்கோஷ்டியூருக்குச் சில சமயங்களில் போய்த் தோழரான செல்வ நம்பியை இவர் சந்திப்பது உண்டென்று கருதலாம். அவ்வூரைத் திருவாய்ப்பாடியாகவும், அக்கோயிலை நந்தகோபர் மாளிகையாகவும் பாவித்துக் கொண்டு கண்ணன் கம்ஸனுடைய சிறையிலே பிறந்து அம்மாளிகையில் வளர்ந்ததையும், ஆயர்கள் ஆதி ஸ்ரீ ஜயந்தி கொண்டாடியதையும் பெரியாழ்வார் ஓர் ஆனந்தக் கனவாகக் கண்டு அனுபவித்துப் பாடியிருக்கிறாரல்லவா? 'வண்ண மாடங்கள்' என்று தொடங்கும் பதிகத்திலிருந்து, இவருக்குத் தம் வீட்டிலும் ஒரு குழந்தையில்லையே என்ற எண்ணம் இருந்ததாக ஊகிப்பது தவறாகாது. தெய்வத்தைக் குழந்தையாக அனுபவித்தவர் குழந்தையையும் தெய்வமாகக் கொண்டாடி வளர்க்க ஆசைப்பட்டிருக்கலாமே!

குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்கவும், விளையாட்டைப் பார்க்கவும் மட்டும் ஆசைப்படவில்லை; சேஷ்டைகளையும் துஷ்டத்தனத்தையும்கூட அனுபவிக்க ஆசைப்பட்டார். அவ்வளவு ஆசையையும் கண்ணனைக் குறித்து இவர் பாடியிருக்கும் பாடல்களினூடே பார்த்து விடுகிறோம். கண்ணனுடைய சேஷ்டைகள என்ற அழியாத சொற்சித்திரங்களிலே, 'தொந்தரவு செய்ய, வைத்த சாமான் வைத்த இடங்களில் இல்லாமல் போக, ஒரு குழந்தை வேண்டாமா?' என்ற ஹிருதய ஆசையும் சித்திரிக்கபடுகிறது. இவரது கண்ணன் - பாடல்களில் ஒன்றன்பின் ஒன்றாக வரும் குழந்தைச் சித்திரங்கள் எல்லாம், அச் சித்திரங்களில் உள்ள விவரங்கள் எல்லாம், குழந்தையின் பால்ய லீலைகளில் இவருக்குள்ள மோகத்தையும் வெளியிடுகின்றன.

இவ்வளவு குழந்தைக் காதலுள்ள இப் பெரியார் தமது தோட்டத்திலே திடீரென்று ஒரு நாள் ஒரு குழந்தையைப் பார்த்துவிட்டார் என்றால், எவ்வளவு ஆசையோடு அக்குழந்தையை எடுத்திருப்பார், விரஜையிடம் கொடுத்திருப்பார், தாமும் அவளுடன் போட்டி போட்டுத் தாலாட்டிச் சீராட்டி யிருப்பார்! தந்தையாக மட்டுமல்ல, தாமே தாயாகவும் அக் குழந்தையை வளர்த்திருப்பார்! அத்தகைய தாயுள்ளம் பிரதிபலிக்கிறது இவரது கண்ணன் - பாடல்களிலே.

தம் வீட்டில் வளரும் ஒரு குழந்தையின் விளையாட்டு பால்ய சேஷ்டைகள் முதலான பலவேறு நிலைகளை அனுபவித்தறிந்த உள்ளத்திலிருந்து பிறந்தவை பெரியாழ்வாரின் கண்ணன் - பாடல்கள் என்று கூடத் துணிந்து கூறலாம். தமிழில் பெரியாழ்வாரின் குழந்தைப் பாடல்களைப் போல் இவ்வளவு இயற்கையான வேறு பாடல்களைக் காண்பது அரிது. நீண்ட நாளாகக் குழந்தைச் செல்வம் இல்லாமல் இருந்து, எதிர்பாராத நிலையில் ஓர் அருமையான குழந்தை கிடைத்ததும், 'தெய்வம் கொடுத்த திரவியமே!' என்று அணைத்துப் பூரித்த நெஞ்சிலிருந்து பிறந்த பாடல்களோ என்று அதிசயிக்கும்படி அமைந்திருக்கின்றன பெரியாழ்வாரின் குழந்தைச் சித்திரங்கள்.

எனவே, பெரியாழ்வார் ஒருநாள் 'வெள்ளென்று கிழக்கு வெளுத்ததும் தமது அழகிய நந்தவனத்திலே துளஸிச் செடி யருகில் ஒரு குழந்தையைக் கண்டெடுத்து வீட்டுக்குக் கொண்டுபோய் வளர்த்துவந்தார் என்ற குருபரம்பரைக் கதையை மறுக்க வேண்டிய அவசியமில்லை. பூக் குடலையைத் தோளில் தாங்கிப் பூவெடுக்கப் போனவருக்கு அன்று கிடைத்த தெய்வமலர் கோதையாக வளர்ந்தது. இத் தெய்வ மலர் கிடைத்த பின்பு

இவர் ஒவ்வொரு மலரிலும் ஒரு புதிய அழகு, ஒரு புதிய முறுவல் கண்டிருப்பார். முன்பு என்றுமில்லாத உவகையுள்ளத்துடன் நீரோடையையும் கிணற்றையும் தாமரைக் குளத்தையும் நோக்கி யிருப்பார். அந்தக் குழந்தை-விளையாட்டையும் பாலிய சேஷ்டைகளையும் அனுபவித்த பின், குழந்தைக் கண்ணனுடைய கோகுல லீலைகளை மனக் கண்ணால் தெளிவாகக் கண்டு பாடியிருப்பார். கோதையின் முகத்திலே தவழ்ந்த தெய்விக ஒளி குழந்தைக் கண்ணனையும் காட்டிக் கொடுத்ததென்று கருதலாம்.

பெரியாழ்வாரின் மானஸ புத்திரனுக்கு உள்ளத்தைப் பறி கொடுத்தாள் பெரியாழ்வாரின் வளர்ப்புப் புதல்வி; இவர் நாவிலே வளர்ந்த பிள்ளையை வீட்டிலே வளர்ந்த பெண் காதலித்துவிட்டாள்! பக்திக்காதலின் மடியிலும் தோளிலும் வளர்ந்த சிறுமி கண்ணனைக் காதலிக்கத் துணிந்த இங்கிலையைக் கண்டு அனுபவித்தே பெரியாழ்வார் தாம் காதல் - துறையில் அமைத்திருக்கும் திருமொழியில், பின்வருமாறு பாடியிருக்கலாம்.

செய்ய நூலின் சிற்றாடை
செப்பன் உடுக்கவும் வல்லள் அல்ல!

[செய்ய நூலின் - சிவந்த நூலால் நெய்த. செப்பன் — செம்மையாக.].

ஆயினும்,

மாயன் மாமணி வண்ணன் மேல், இவள்
மாலுறுகின்றாளே!

[மாலுறுகின்றாள் - மோகப்படுகிறாள்.]

எனவே,

சங்கையாகி என் உள்ளம்
நாடொறும் தட்டுளுப்பாகின்றதே!

[சங்கை - சந்தேகம். நாடொறும் - நாள்தோறும். தட்டுளுப்பாகின்றது - தடுமாறிப் போகின்றது.]

கோதையின் காதல் பெரியாழ்வாரின் தாயன்பையும் தூண்டி,

'கேசவா!' என்றும், 'கேடிலீ!' என்றும்
கிஞ்சுக வாய்மொழியாள்,
வாசவார்குழல் மங்கைமீர்! இவள்
மாலுறு கின்றாளே!

[கேடிலீ - கேடில்லாதவனே. கிஞ்சுகம் - கிளி. வாச வார்குழல் - வாசனை ஊட்டிய நீண்ட கூந்தல். மங்கைமீர் - மங்கைமார்களே.]

என்று பாடச் செய்திருக்கலாம். பெரியாழ்வாரின் ஹிருதய கானமாகிய பாடல்கள் எப்போதும் தன் காதுகளில் ரீங்காரஞ்செய்ய வளர்ந்த குழந்தைக் கோதையின் மழலைச் சொற்களும் உள்ளமும் உயிரும் உதிரமும் எல்லாம் பக்திமயமாகிவிட்டன; கண்ணனுக்கே காதலாகிவிட்டன!—என்று கருதுவது பொருத்தமுடையதே.

நந்தவனத்திலே புதுமதுப் பொங்கும் மலர்களுக்கும் பச்சைப் பசுந்துளசியிலைகளுக்கும் இடையே கிடைத்த குழந்தை, பக்தித் தொட்டிலில் தாலாட்டப் பெற்று, பக்தியிலே தவழ்ந்து பக்தியிலே விளையாடி, இறைவனுக்கே உரிய, இறைவன் உகந்த, இன்பமலராக மலர்ச்சி பெற்றுவிட்டது. ஜனக குல சுந்தரியான சீதைபோல் பூமியில் கிடைத்த இக்குழந்தைச் செல்வம், 'என் இல்லத்தின் இருள் நீக்கவந்த அருளொளியோ?' என்று இவர் பிரமிக்கும்படி வளர்ந்து, இவருக்குப் புதிய புதிய உவகை பிறக்கத் துள்ளித் திரிந்து ஓடி ஆடிச் சேரவேண்டிய பொக்கிஷத்திலே போய்ச் சேர்ந்துவிட்டது,—'கண்ணனு,

கள்வனு?' என்று பெரியாழ்வாருக்கே ஒரு சங்கை பிறக்கும்படி!

'கள்வன் கொல்? யான் அறியேன்!' என்ற மன நிலையோடு இவர்,

நல்லதோர் தாமரைப்பொய்கை
நாள்மலர்மேல் பனிசோர
அல்லியும்தா.தும் உதிர்ந்திட்(டு)
அழகழிந்தால் ஒத்ததாலோ!
இல்லம் வெறியோடிற்றுலோ!
என்மகளை எங்கும்காணேன்!
மல்லரை அட்டவன் பின்போய்
மதுரைப்புறம் புக்காள்கொலோ?

[மல்லரை அட்டவன் - கம்ஸன் அனுப்பிய மல்லர்களை அழித்த கண்ணன். மதுரை வடபுறம் - மதுரைக்கு அருகிலுள்ள ஆய்ப்பாடி. புக்காள்கொலோ - புகுந்து விட்டாளோ.]

என்று, காதலுடன் சென்ற மகளைக் குறித்துத் தாய் வருந்துவதுபோலப் பாடித் தம் மகள் தம்மை விட்டுப் பிரிந்ததால் ஏற்பட்ட மனநிலையையும் இதில் இவர் பொதிந்து வைத்திருக்கக்கூடும். அவ்வளவு உருக்கமும் ஏக்கமும் பக்தியோடு கலந்து வெளிப்படுகின்றன இப் பாட்டிலே.

'வளர்பிறை தேய்ந்து இருள் கவிந்துவிட்டதோ இல்லத்தில்?' என்று திகைத்து ஏங்கிப்போனது போல்,

ஒருமகள் தன்னை உடையேன்,
உலகம்நிறைந்த புகழாடு
திருமகள் போலவளர்த்தேன்;
செங்கண்மால்தான் கொண்டுபோனுன்!

என்று கதறும் கவியுள்ளம், 'எங்கிருந்தோ பறந்து வந்த ஓர் அழகான பறவை அழகிய கீதங்களைப் பாடிவிட்டு எங்கேயோ பறந்துபோய்விட்டது' போன்ற நினைவுவெள்ளத்திலே மூழ்கிப்போனதுதான் என்று கருதலாமல்லவா? எனினும் இல்லத்தின் 'இருள்' உள்ளத்தின் ஒளியை மறைத்துவிடவில்லை!

கோதை மறைந்த பின்பும் பெரியாழ்வார் நந்தவன கைங்கரியத்திலும் பக்திப் பிரசாரத்திலும், பூமாலை பாமாலை கட்டுவதிலும் ஈடுபட்டிருந்தார் என்று கதைகள் கூறுகின்றன. காலம் செல்லச் செல்லச் சோகம் தேய்ந்து புனித ஞாபகமாகிவிடும்,—முக்கியமாகப் பெரியோர் உள்ளங்களிலே. பெரியாழ்வாருள்ளமோ பகவானுடைய புண்ணிய சரித்திரங்களிலும் எத்தனையோ புனித நினைவுகளிலும் சஞ்சரித்தவண்ணமாய் இருந்ததென்று கருதலாம். ஒருசமயம் இவ்வுள்ளம் ஹனுமானோடு இலங்கைக்குப் போய்ச் சீதாபிராட்டியை அசோகவனத்திலே கண்டு மீண்டது; அயோத்திக்குப் போய்ச் சீதை மணவாளனைக் கண்டது; தாடகை வதம், பரசுராம கர்வ பங்கம் முதலான வீரச்செயல்களையும், கூற்றம் போன்ற தாய் சொல்லக் கொடிய வனம் போன தியாகப் பெருஞ் செயலையும், பரதனுக்குப் பாதுகை அளித்த அன்புப் பெருஞ்செயலையும் கண்ணுற்றது; இராமனோடு கடல் கடந்து இராவண வதங்கண்டு விபீஷண பட்டாபிஷேகத்திலும் பங்கு கொண்டது. இப்பெரியாரின் உள்ளம் இறைவனுடைய திவ்ய சரித்திரப் பிரதேசங்களில் ஓடியாடித் திரிந்தும், உல்லாஸ யாத்திரைகள் செய்தும் பண்பட்ட வண்ணமாயிருந்தது.

இவர் கோதையின் மறைவுக்குப்பின் திருமாலிருஞ் சோலையின் மலைக்காட்சிகளிலும், ஸ்ரீரங்கத்தின் ஸ்தலக் காட்சிகளிலும், தெய்விக அழகு கண்டு சாந்தி பெறுவது உண்டென்றும் ஊகிக்கலாம். திருக்கோஷ்டியூரில் செல்வ

நம்பியின் கூட்டுறவாலும், அங்குள்ள காட்சிகளாலும் ஆறுதல் பெறுவதுண்டு என்றும் கருதலாம். பல வேறு திவ்ய தேசங்களிலுள்ள பாகவத மணிகளின் தோழமையும் இவருக்கு ஊன்றுகோலாக உதவியிருக்கவேண்டும். இவர் வடஇந்தியாவிலே கங்கைக்கரையிலும் யாத்திரை செய்திருக்கிறார் : வட மதுரை, அயோத்தி, பதரிகாச்ரமம் முதலான ஸ்தலங்களையும் தரிசித்து வந்திருக்கிறார்.

தம் உள்ளத்தையே கோயிலாக்கித் தமது தெய்வத்தை அத்திருப்பதியிலே அகக்கண்ணால் கண்டு களித்து

எம்பிரான் ! என்னை ஆளுடைத்தேனே !
ஏழையேன் இடரைக் களையாயே

[ஆளுடைத்தேனே - ஆட்கொண்ட தேன்போல் இனியனே. களையாய் - நீக்கியருளவேண்டும்.]

என்று பிரார்த்தித்து எவ்வளவோ ஆறுதலும் ஆனந்தமும் அடைந்திருப்பார். அந்த நிலையில், தாம் தம் இஷ்ட தெய்வத்தைப் பிரதிஷ்டை செய்துகொண்டதாகவும் நினைவில்லை ; தாம் இறைவனைத் தேடிப் போனதாகவும் ஞாபகமில்லை ; அவனே இவரைத் தேடி வந்துவிட்டதாக ஞாபகம். பிராட்டியும் தானுமாக இவரைத் தேடிவந்து இவர் உள்ளமாகிற கோவிலில் புகுந்துவிட்டானும். ஏன், சேஷ சயனத்துடன் வந்து சயனித்துக்கொண்டான் !— என்கிறார். அது மட்டுமா? அழகிய பாற்கடல் அலை மோத அப்படியே அக்கடலுடன் வந்து பள்ளிகொண்டானும் கருணைக்கடல், இவர் உடம்பாகிற திருப்பதியில்,— சித்தமாகிற திருக்கோயிலில்.

என்ன அழகான கற்பனை! பாட்டைப் பாடிப் பாருங்கள் : கற்பனை என்றா தோன்றுகிறது ?

அரவத்(து)அமளியினோடும்,
அழகிய பாற்கடலோடும்,
அரவிந்தப் பாவையும்தானும்,
அகம்படி வந்துபுகுந்து,
பரவைத் திரைபலமோதப்
பள்ளிகொள் கின்றபிரானை,
பரவுகின் றான்விட்டுசித்தன்,
பட்டினம் காவற்பொருட்டே

[அரவத்தமளி - சேஷசயனம். அரவிந்தப் பாவை - செந்தாமரைப் பெண்ணாகிய மகாலட்சுமி. அகம்படி - உள்ளம் ஆகிற ஸ்தானம். பரவை - கடல்; (இங்கே) பாற்கடல். திரை - அலை. பரவுகின்றான் - போற்று கின்றான். பட்டினம் - எம்பெருமானுடைய பட்டணம் ஆகிய இந்த ஆத்மா. காவற்பொருட்டே - காவலின் நிமித்தமாக.]

என்ற பாட்டைப் பாடப் பாட, 'இவரே விஷ்ணுசித்தர்! இவருள்ளம் அழகிய பாற்கடல், அழகியான அரவிந்தப் பாவைக்கும், அழகனான பகவானுக்கும்!' என்ற உணர்ச்சி நமக்கும் மேலிடுகிறது.

எம்பெருமான் குடும்பத்தோடு வந்து நித்தியவாசம் செய்யும்படி இவர் தமது உள்ளத்தை ஒரு நித்திய வசந்த அரங்கமாக்கிக் கொண்டார்; அவ்வளவு அழகியதாய், தூய்மையும் தெளிவும் வாய்ந்ததாய், உண்மை நிறைந்த தாய்ச் செய்துகொண்டார். 'அதுவும் அவன் அருள்தான்!' என்று இவர் கருதும்படி அவன் பாற்கடலை விட்டு ஓடிவந்து இவர் மனக்கடலில் வாழ்கின்றானும் :

பனிக்கடலில் பள்ளிகோளைப்
பழகவிட்(டு) ஓடிவந்(து),என்
மனக்கடலில் வாழவல்ல
மாயமணாள நம்பீ

[பனிக்கடல் - குளிர்ந்த பாற்கடல். பள்ளிகோள் - பள்ளிகொண்ட நிலை.]

இப்பெருமானே இவருக்குக் குருவாகவும் இருந்து வழிகாட்டி வந்திருக்கிறானும்.

ஏதங்கள் ஆயின எல்லாம்
இறங்கல் இடுவித்(து), என்னுள்ளே
பீதக ஆடைப் பிரானார்
பிரமகுரு ஆகிவந்து—

[ஏதங்கள் - குற்றங்கள். இறங்கல் இடுவித்து - இருந்த இடத்திலிருந்து இறங்கச்செய்து. பீதக ஆடை - பீதாம்பரம். பிரம குரு - ஞானகுரு.]

என்று கூறுவதைக் கேளுங்கள். மற்றப்படி, மானுடச் சட்டை போர்த்த அத்தகைய ஞானகுரு யாரென்பதைக் குரும்பரைக் கதைகளும் தெரிவிக்கவில்லை.

உலகத்திலேயே பெரிய ஆத்மாக்களில் ஒன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் விஷ்ணுசித்தராக உடல் தாங்கிப் பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்து வந்தது; அந்த மகாத்மா இன்றும் நமக்கு வழிகாட்டும் ஞானகுரு. இவர் பாடல்கள் இன்றைய நிலையிலும் நம் உள்ளத்தைக் குளிர்விக்கின்றன, ஒளிபெறச் செய்கின்றன. 'அவன் மதுரை மன்னன்; இவர் புதுவை மன்னர்!" என்று சொல்லும்படி கோநெடு மாறவர்மன் என்ற வல்லபதேவனின் ராஜகுருவாக வாழ்ந்த காலத்திலும் இப்பெரியார் அபூர்வ எளிமை வாய்ந்த வாக்கும் வாழ்க்கையும் உடையராகி, பக்திப் பிரசாரம் செய்துவந்தார். ஏன், இன்றும் பிரபந்தப் பூஞ்சோலையில் அமர்ந்து அன்றுபோல் பிரசாரம் செய்துவருகிறார்!

# 15. இதிகாச புராண சஞ்சாரம்

## ராமாயண சஞ்சாரம்

கண்ணன் கதைகளில் பெரியாழ்வாருக்கு விசேஷ ஈடுபாடு என்பது பிரசித்தம். அடுத்தபடியாகத்தான் இராமாயணக் கதைகள் இவரை வசீகரித்தன. இராமனைய் அவதரித்துத் தாடகையை வதைத்து மிதிலையில் வில் முறித்து அயோத்திக்கு வரும் வழியில் பரசுராம கர்வ பங்கம் செய்த பாலகாண்ட வரலாறுகளையும், நாடு துறந்து காடு சென்று குகனோடு தோழமை பூண்டு பரதனுக்குப் பாதுகையும் அரசும் ஈந்த அயோத்தியா காண்டப் பெரு நிகழ்ச்சிகளையும், சூர்ப்பணகையின் செருக்கைச் சிதைத்து, அவளால் தூண்டப்பட்டு வந்த கரன் முதலான அரக்கர்களை யழித்து மாயமான் பின் சென்று தேவியைப் பிரிந்த ஆரணிய காண்ட நிகழ்ச்சிகளையும், மராமரம் ஏழையும் எய்த கிஷ்கிந்தா காண்ட வரலாற்றையும், ஹனுமான் சீதைக்கு மோதிரம் அளித்து அடையாளம் சொன்ன சுந்தரகாண்ட நிகழ்ச்சிகளையும், கடலரசனை அம்புகளால் கலங்க அடித்துக் கடலில் அணை கட்டி இலங்கையை வென்று இராவண வதஞ் செய்து அவன் தம்பி விபீஷணனுக்கு முடிசூட்டிய யுத்தகாண்டப் பெரு நிகழ்ச்சிகளையும் இவர் குறிப்பிடுவதிலிருந்து, ஒரு காலத்தில் இவருள்ளம் இராமாயணத்திலும் ஈடுபட்டிருந்தது என்று ஊகிக்கலாம். எனினும் இராமனது வீர சௌந்தரியத்தைக் காட்டிலும் ஜகன்மோகன கோபாலனது லீலைகளே இவருள்ளத்தை அதிகமாய்க் கவர்ந்தன. இந்த லீலைகளிலும் இவருள்ளத்தை அள்ளிக் கொண்டன பாலலீலைகள்.

## புராண சஞ்சாரம்

வேறு புராண கதைகளும் இவரது பக்தி யுள்ளத்திற்கு ஊட்டமளித்தன. மீனாகவும் ஆமையாகவும் வராகமாகவும் இறைவன் தாழ்ந்து பிறந்த லீலைகளையும் குறிப்பிடுகிறார். நரசிங்கமாகி இரணியன் என்ற அசுர சக்கரவர்த்தியை வதைத்த பயங்கரமான துஷ்ட நிக்கிரகச் செயலை உத்ஸாகமாய்ப் பாடுகிறார். மகாபலி என்ற அசுர சக்கரவர்த்தியிடம் மூவடி மண் யாசித்து உலகம் அளந்த வஞ்சக்குறள்—பிரம்மசாரியின் கதையையும் குதூகலமாய்ப் பாடியிருக்கிறார். உலகளந்த திருவடியைப் பிரமன் தன் கைக்கமண்டல நீரால் கழுவி விளக்கியதாகவும், அந்த ஸ்ரீபாத தீர்த்தமே கங்கையாய்ப் பெருகியதாகவும் பொருள்பட, கங்கைக்கரையிலுள்ள கண்டங்கடி நகரம் என்னும் திருப்பதியைப் பாடும்போது, கூறியுள்ளார்.

## பணியை முடிப்பது அவன் கடன்

முதலையை முடித்து யானையைக் காத்த கதையை விஷ்ணுபக்தர்கள் விசேஷமாய்க் கொண்டாடுவதுண்டு. செருக்குற்றிருந்த ஒரு விஷ்ணு பக்தனை ராஜாவே யானையாகச் சபிக்கப்பட்டானும். அவனுடைய பக்தியைப் பாராட்டிச் செருக்கினைக் கிள்ளி யெறிய அகஸ்திய முனிவர், 'யானைபோல் செருக்குற்று இருந்த நீ யானையாகக் கடவை! நீ பக்தனாகையால் அப்போதும் இந்த விஷ்ணு பக்தி நினைவில் இருக்கும்' என்று ஒருங்கே சாபமும் அனுக்கிரகமும் கொடுத்துவிட்டாராம். இந்த யானை தான் கஜேந்திரனாகி நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு திருமாலை அர்ச்சித்து வந்தது. ஒரு நாள் பெரிய தாமரைத் தடாகத்தில் பூப்பறிக்க இறங்கியதும், இந்த யானையின் காலை ஒரு முதலை கவ்விக் கொண்டது. அந்த முதலை, சாபம் பெற்ற ஒரு கந்தர்வன்

தான்! முதலைப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் யானை, (ஆதிமூலமே!) என்று கூவ, உடனே திருமால் கருடன்மீது எழுந்தருளித் தனது சக்கராயுதத்தால் முதலையைத் துணித்து யானையை விடுவித்துச் சாபம் பெற்றிருந்த இருவருக்கும் அனுக்கிரகம் செய்தான் என்ற கதை, வைஷ்ணவ பக்தியுள்ளங்களை எத்தனையோ நூற்றுண்டுகளாக வசீகரித்து வந்திருக்கிறது.

அந்தத் தாமரைக் குளத்தை நேரிலே பார்வையிட்டவரைப்போல் பெரியாழ்வார், 'கரையிலே தாழைகளும், உள்ளே குளிர்ந்த ஆம்பல் மலர்களும் உள்ள மிகவும் பெரிய பொய்கை அது!' ('தாழை தண் ஆம்பல் தடம் பெரும் பொய்கை') என்கிருர். 'நம்முடைய தோட்டத்துப் பொய்கையைவிட மிகவும் பெரியதுதான்; ஆனல் இப்படியே தாழைகளும் ஆம்பல்களுமாய் இருக்கும்!' என்று நந்தவனத்தில் இருந்தே அக்கதையை மனக்கண் முன் நிகழக்கண்டதுபோலத் தோன்றுகிறது.

அத்தடாகத்தில் இருந்த முதலையை 'வாழும் முதலை' என்று சொல்லி, அதுவும் தன் சாப விடுதலைக்கு 'ஒரு யானை வருவது எப்போதோ?' என்று அதே நினைவாக வாழ்ந்ததுபோலப் பேசுகிருர். நன்னிலையை, பெரு வாழ்வை எதிர்பார்த்திருப்பதும் வாழ்வல்லவா? கஜேந்திரனை விடுவித்துப் பணிகொண்டான் என்றும் கூறுகிருர். 'யானை பூவைப் பறித்துவிட்டது; திருமாலின் விக்கிரகத்தின் அடியில் இடவேண்டும் என்று புறப்படுவதற்குள் முதலை பிடித்துக்கொண்டது. ஆகவே அந்தப் பணி நிறைவேறவில்லை. எனினும், அவ்வளவு கஷ்டத்திலும் பறித்த பூவைப் போட்டுவிடவில்லையாம். இறைவன் தோன்றி விடுவித்ததும், தும்பிக்கையில் அப்படியே இருந்த பூவைத் தன் பொன்னடிகளில் இட்டுக்கொண்டான்!' என்பது ஆழ்வார் குறிப்பு. கைங்கரியத்தை

எப்படியாவது தொடங்கிவிடவேண்டும்; உள்ளம் அதில் ஊன்றி நிற்கவேண்டும். அவ்வளவுதான்; இறைவன் எப்படியாவது அப்பணியை இனிது நிறைவேற்றிவிடு வான் என்ற பக்தர்களின் பரிபூர்ண நம்பிக்கையைக் குறிப்பிடுகிறது இக்கதை ஆழ்வார் வாக்கிலே.

ஒப்பிலேன் ஆகிலும் நின்அடைந்தேன்,
ஆனைக்கு நீ அருள்செய்தமையால்!

[நின் அடைந்தேன் - உன்னைச் சரணமாக அடைந் தேன்.]

என்பது இறைவனை நோக்கிப் பெரியாழ்வார் முறையீடு.

## ஸத்வ குணத்தின் வெற்றி

மதுகைடவரை மடிவித்த பண்டைப் பழங்கதை யையும் பெரியாழ்வார் குறிப்பிடுகிறார். 'எங்களை நீ கொலை செய்க!' என்று தங்கள் வாயால் சொல்லிய பின்னரே தங்களைக் கொல்லமுடியும் என்று வரம் பெற்றிருந்தார் களாம் அந்த அசுரர்கள். எனவே திருமாலுக்கும் அவர் களுக்கும் பெரும்போர் நெடுங்காலம் வெற்றி தோல்வி யின்றி நடக்கவேண்டியதாயிற்று. தனக்குத் தோல்வி வராமல் பார்த்துக்கொள்வதே பெரும்பாடாகிவிட்ட தாம் பெருமாளுக்கு. அவர்களும் வீரர்கள் அல்லவா? திருமாலை நோக்கி, 'உன் ஆற்றலை வியந்தோம்; சங்கு சக்கரச்சாமீ! நீ எல்லாருக்கும் வரம் கொடுக்கிறாயே; நாங்கள் இப்போது உனக்கு வரம் கொடுக்க விரும்பு கிறோம்; வேண்டும் வரம் பெற்றுக்கொள்!' என்று பெருஞ் செருக்குடனும் மிடுக்குடனும் பேசினார்கள். பளிச்சென்று திருமால், 'நான் உங்களைக் கொல்லவேண் டும்!' என்று வரம் கேட்டுவிட்டான். ஆகவே, ரஜஸ் தமோ குணவடிவங்களான மதுகைடவர்கள் ஸத்வகுண மூர்த்தியான விஷ்ணுவால் வெல்லப்பட்டார்கள் என்பது கதை.

## ஆலிலைமேல் ஒரு பாலன்

மகாப்பிரளய காலத்தில் உலகங்களை யெல்லாம அழியாதபடி உண்டு வயிற்றில் வைத்து இறைவன் பாது காக்கிறான் என்பது விஷ்ணுபக்தர் கொள்கை. இக் கொள்கையைப் பெரியாழ்வார் விசேஷ பக்தியுடன் வெளி யிடுகிறார். குழந்தைக் கண்ணனைக் கூத்தாட்டி விளையாட்டுக் காணவிரும்பிய யசோதை, குழந்தையின் தெய்விக அழகிலே ஈடுபட்டு,

உய்ய உலகுபடைத்(து) உண்ட மணிவயிறா !
ஊழிதொ றாழிபல ஆலின்இலை அதன்மேல்
பையஉ யோகுதுயில் கொண்ட பரம்பரனே !
பங்கய நீள்நயனத்(து) அஞ்சன மேனியனே !

[உய்ய - ஆத்மாக்கள் உய்யும்பொருட்டு. ஊழி தொறு ஊழிபல - பல யுகங்கள் தோறும். பைய - மெள்ள. உயோகு துயில்கொண்ட - யோகநித்திரை கொண்ட. பரம்பரனே - உயர்ந்தவர்களைக் காட்டிலும் மிக உயர்ந்த வனே. பங்கயம். தாமரை. நீள் நயனம் - நீண்ட கண்கள்.]

என்று கூவியழைக்கிறாள். பெரியாழ்வார் போட் டுக்கொண்ட யசோதை வேஷம் ஆனதால் இங்கே வேஷத்தையும் மீறி வெளிப்படுகிறது வைஷ்ணவ பக்தி.

இப்பாட்டில் ஆலிலைமேல் ஒரு பாலனாகி அந்தப் பிரளய வெள்ளத்தில் மிதந்துகொண்டே யோக நித்திரை செய்வதும் குறிக்கப்படுகிறது. அப்பொது அந்தச் சிறு வயிற்றில் உலகங்களை யெல்லாம் அடக்கி வைத்துக் கொண்டு அவற்றை இரட்சிப்பதற்கான உபாயத்தைச் சிந்தனை செய்துகொண்டே உறங்குவான் போல் யோக நித்திரை செய்கிறானும். "அந்த ஆலந்தளிர்க் குழந்தை தான் இந்த இளந்தளிர்க் குழந்தை!' என்று வியந்து மகிழ்ந்து போகிறது யசோதை - வேஷப் பெரியாழ்வா

ரின் உள்ளம். 'அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய வயிற்றைப் பார், கழுத்தைப் பார்!' என்று குழந்தைக் கண்ணனுடைய வயிற்றையும் கழுத்தையும் பார்த்துப் பூரித்துப்போகிறார்.

'அந்தக் காதுக்கு இந்தக் குண்டலமா?' என்ற வியப்பு மேலிட, பெரியாழ்வார் - யசோதை மற்ற ஆய்ச்சி மாரையும் கூவியழைத்து,

மண்ணும் மலையும் கடலும் உலகேழும்
உண்ணும் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு,
வண்ணம் எழில்கொள் மகரக் குழைஇவை
திண்ணம் இருந்தவா காணீரே!
சேயிழையீர்! வந்து காணீரே!

[உண்ணும் திறத்து - வயிற்றிலே வைக்கின்ற அளவில். எழில்—அழகு. வண்ணம் - நிறம். மகரக் குழை - மகரகுண்டலங்கள். திண்ணம் - இறுக்கம். சேயிழையீர் - பெண்களே.]

பெரியாழ்வாருக்குக் கிருஷ்ண பக்தியைத்தான் இதிகாச புராண கதைகள் எல்லாம் அரண் செய்கின்றன. ஆலிலைமேல் பாலனும் கோகுல பாலன்தான்; உலகம் உண்ட திருவயிறு ஆய்ப்பாடியில் வெண்ணெயுண்ட வயிறுதான். முதலையைத் துணித்து ஆனையைக் காத்த ஆதிமூலம், அசுர சக்திகளை யொழித்துப் பசுக்களையும் கோபாலர்களையும் காப்பாற்றிய இடைப்பிள்ளைதான்! மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், குள்ளன், பரசுராமன் ஆகிய அவதாரங்களில் பழகிய ஸர்வசக்தி வீர ராமனாகி, முடிவில் கண்ணன் என்ற பரிபூர்ண அவதாரம் செய்து பேறுபெற்றது!—என்பது பெரியாழ்வார் மதம்,

ஆதி காவியம் என்றும், உலக சிரேஷ்டமான இதிகாசம் என்றும் பிரசித்திபெற்ற இராமாயண கதையும் பெரியாழ்வாரது ஆத்ம சஞ்சாரத்தில் ஒரு மைல் - கல்

தான்: இவர்போய்ச் சேரவேண்டிய ஸ்தலத்திற்குச் சமீபத்திலுள்ள மைல் - கல் என்று, வேண்டுமானுல் சொல்லிக் கொள்ளலாம். இதிகாச புராண சஞ்சாரம் செய்துவந்த யாத்திரிகர் 'கண்ணன் - கதைத் தோப்பி லே'யே தங்கி விடுகிருர்; தங்கித் தமது லட்சியத்தைக் கண்டு களிக்கிருர்.

## 16. பெரியாழ்வாரும் தமிழ்நாட்டுக் கதைகளும்

பெரியாழ்வாருக்கு விஷ்ணுபக்தி என்ருலே கிருஷ்ண பக்திதான். கிருஷ்ணபக்தியே விஷ்ணுபக்தியாகி வைஷ்ணவம் ஆயிற்று என்று கூறுவதுண்டு. கிருஷ்ண பக்தி நம் தமிழ் நாட்டிலே இன்று நேற்று ஏற்பட்ட தன்று. தமிழர்கள் நாகரிக மக்களாக இருந்த பண்டைக் காலத்திலேயே கிருஷ்ணபக்தியும் காணப்பட்டது. பெரியாழ்வாரின் கிருஷ்ணபக்தியும் அந்தப் பரம்பரையி லிருந்து தோன்றிச் செழித்த குலதனமாக மதிக்கத் தக்கது.

தமிழர்கள் நிலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித் திருந்தார்கள். இதனுல் நானிலம் என்ற ஒரு பெயர் பூமிக்குண்டு. மலை, காடு, கடற்கரை என்ற மூன்று இயற்கைப் பிரிவுகளை வைத்துக்கொண்டு, காட்டை இடையிடையே அழித்து நாடாக்கி அந்த நாட்டையும் சேர்த்து நானிலம் என்ருர்கள். இந்நான்கு நிலங்களில் மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சிநிலம் என்றும், காடும் காட்டைச்சார்ந்த இடமும் முல்லை நிலம் என்றும், நாடு மருத நிலம் என்றும், கடற்கரை நெய்தல் நிலம் என்றும் பெயர்பெற்றன. குறிஞ்சி நிலத்தில், அதாவது மலைப் பிரதேசத்தில், வாழ்ந்தவர்கள் முருகக் கடவுளை வழி பட்டார்கள் என்றும், காட்டிலும் காட்டைச் சார்ந்த பிரதேசத்திலும் வாழ்ந்தவர்கள் கண்ணபிரானை வழிபட்

டார்கள் என்றும் பழைய தமிழாசிரியர்கள் சொல்லு கிறார்கள். காட்டுப் பிரதேசமான முல்லையையும், அதன் அதிதெய்வமான கண்ணனையும் முதலில் வைத்துத் தொல்காப்பியர் கூறுவதிலிருந்து கிருஷ்ணபக்திக்கு இந் நாட்டார் அளித்திருந்த முதன்மையான ஸ்தானத்தை ஊகித்துக்கொள்ளலாம்.

முல்லைக்கு உரிய மக்களை ஆயர் ஆய்ச்சியர் என்பர் தமிழ் முன்னோர். இவர்கள் தம் குலத்திலே வளர்ந்த கண்ணனைத் தெய்வமாக வழிபட்டனர் என்று கருதலாம். ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே கிருஷ்ண பக்தி இவ்வாறு தமிழகத்திலும் வேரூன்றிவிட்டது. இக் கண்ணன் கதைகளில், நம் தமிழ்நாட்டிற்கே உரிய சில வரலாறுகளும், சரித்திர வேற்றுமைகளும் இங்கு வழங்கி வந்தன. அதாவது, பாரதம் விஷ்ணுபுராணம் முதலான இதிகாச புராணங்களில் ஆதாரம் பெறாத சில கதை களும் அதிக கதைகளும் கண்ணனைக் குறித்துத் தமிழ் மக்களிடையே வழங்கிவந்தன. இவற்றுள் 'குருந்து ஒசித்தது' என்ற கதையைப் பார்க்கலாம் முதன்முதல். இது கண்ணனது பால சரிதங்களில் ஒன்று.

## புராணக் கதையின் தமிழ் வித்து

கண்ணன் யமுனையாற்றில் நீராடி நின்ற கோபி யரின் துகில்களை ஒருங்கே வாரி யெடுத்துக்கொண்டு, ஆற்றின் கரையிலுள்ள குருந்த மரத்தின்மேல் ஏறப் போனான். அப்போது அங்கே வந்திருந்தான், கம்ஸனால் ஏவப்பட்ட அசுரன் ஒருவன். அவன் கண்ணனைக் கொல்ல அதுதான் சமயம் என்று அக்குருந்த மரத்தை ஆவேசித்துக் கிடந்தானாம். அதை யறிந்த கண்ணன் அம்மரத்தை முறித்து அந்த அசுரனை யழித்துவிட்டான் என்பது புராண வரலாறு. இது தமிழ் நாட்டில் வேறு விதமாக வழங்கிவந்ததென்று தெரிகிறது.

'குருந்தம் ஒன்று ஓசித்தானொடும் சென்று கூடி' என்று பெரியாழ்வார் இக்கதையைப் பாடி யிருக்கிறார். இதற்கு ஸ்ரீ வைஷ்ணவர்கள், 'ஒரு குருந்த மரத்தை முறித்த கண்ணனோடு சென்று சேர்ந்து' என்று பொருள் கூறி 'அசுராவிஷ்டமான குருந்து' என்று புராணக் கதையை ஒட்டி வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ஆனால் சீவக சிந்தாமணி இக்கதையை வேறொரு வகையாகக் கூறுகின்றது.

ஒருநாள் யமுனையாற்றிலே நீரில் விளையாடிக் கொண்டிருந்த கோபியரின் துகில்களையெல்லாம் கண்ணன் விளையாட்டாகக் கவர்ந்துகொண்டு கரையிலுள்ள குருந்த மரத்தில் ஏறிக் கொண்டானாம். அப்போது தமையனாகிய பலராமன் அங்கே வந்துகொண்டிருந்தான். அதையறிந்த கண்ணன் தன் செய்கையை அவன் கண்டு கொண்டால் தனக்குப் பழியுண்டாகும் என்று நினைத்து அக்குருந்த மரத்தை முறித்து யமுனையாற்றில் தள்ளி, தான் கவர்ந்த துகில்களை நீரில் இருந்த கோபியர்கள் எளிதில் பெறச் செய்ததோடு, தானும் அப்படியே தண்ணீரில் விழுந்து நீந்தி வேறிடம் போய்விட்டானாம். குறித்த சிந்தாமணிச் செய்யுளுக்கு நச்சினார்க்கினியர் உரை இது.

இனி, இக்கதையை ஜைன காவியமாகிய சிந்தாமணி (நாமகள் இலம்பகம்) பிரஸ்தாபித்திருக்கும் அச்செய்யுளையே பார்ப்போம் :

நீல்நிற வண்ணன் அன்று
 நெடுந்துகில் கவர்ந்து நம்முன்
பால்நிற வண்ணன் நோக்கின்
 பழியுடைத்(து) என்று கண்டாய்,

வேல்நிறத் தானை வேந்தே!
விரிபுனல் தொழுநை ஆற்றுள்
கோல்நிற வளையி னார்க்குக்
குருந்(து) அவன் ஒசித்ததென்றான்.

[நீல்நிறம் - நீலநிறம். நெடுந்துகில் - இங்கே பல துகில்கள். தம்முன் - தமையன். பால்நிறவண்ணன் - பால்நிறமாக இருந்த பலராமன். நோக்கின் - பார்த்தால். தானை - சேனை. புனல் - தண்ணீர். தொழுநை - யமுனை. கோல்நிறவளையினார் - கோபியர்கள்.]

இப்பாட்டில், 'ஒசித்தது' என்ற சொல்லுக்கு 'ஒதுங்கி ஒளித்துக் கொண்டது' என்றும் பொருள் கொள்ளுகிறார்கள். பலராமனைக் கண்டதும் கண்ணன் வெட்கப்பட்டுத் தன் செயலைத் தமையன் அறியாமல் மறைக்கக் குருந்த மரத்தில் ஒளித்துக்கொண்டான் என்று சில ஜைனர்கள் கூறுவதாக டாக்டர் உ. வே. சாமிநாதையர் தெரிவிக்கிறார். ஆனால் நச்சினார்க்கினியர் அபிப்பிராயமாவது, ஜைனர்களின் அபிப்பிராயமாவது இக்கதையின் பழைய தமிழுருவம் என்று கருதவேண்டிய அவசியமில்லை. இவ்வுருவத்தைக் கண்டுகொள்வதற்குச் சிந்தாமணி காலத்திற்கும் முற்பட்ட சங்க காலத்திற்குப் போகவேண்டும்.

அகநானூறு என்ற சங்க நூலில் ஒரு பாட்டு இக் கதையைப் பிரஸ்தாபிக்கிறது. 'வடக்கேயுள்ள யமுனை யாற்றின் துறையிலே நீராடி நின்ற கோபியர்கள் தழையை உடுத்துத் தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ளும்பொருட்டு மரத்தை வளைத்துக் கொடுத்த திருமாலைப்போல' என்பது குறித்த செய்யுட்பகுதிக்கு நேரான பொருள்.

இவ்வரலாறு குறித்துப் பழைய உரைகாரர் ஒருவர் வேறு சில விவரங்களையும் தருகிறார். கோபியர்கள்

குளித்துக் கொண்டிருக்கும்போது அவர்கள் இட்டு வைத்த துகில்களையெல்லாம் எடுத்துக்கொண்டு கண்ணன் குருந்தமரத்தில் ஏறிக்கொண்டான் என்றும், அப்போது பலராமன் வருவது கண்டு உடனே கண்ணன் தான் ஏறி நின்ற குருந்த மரக்கிளையைத் தாழச் செய்தான் என்றும், அதற்குள்ளே கோபியர்கள் அடங்கி மறைந்துகொண்டார்கள் என்றும் இவ்வுரையாசிரியர் சொல்லுகிறார். பலராமன் போகுமளவும் கோபியர்கள் அத்தழையை உடுத்து மானங் காத்துக் கொள்ளும்படியாகக் கண்ணன் அக்கிளையைத் தாழ்த்திக் கொண்டிருந்தான் என்று சிலர் கூறுவதாகவும் இவ்வுரைகாரர் தெரிவிக்கிறார்.

இதிலிருந்து, கோபியர்களின் துகில்களைக் கவர்ந்த பின், அங்கே வந்த பலதேவன் காணுதபடி அப்பெண்கள் ஒருங்கே மறைந்து கொள்ளும்படியாகக் குருந்த மரக் கிளையைக் கண்ணன் வளைத்துக் கொடுத்தான் என்பதே சங்க காலத்தில் வழங்கிய கதையென்று பண்டிதர் மு. இராகவையங்கார் கூறியுள்ளார்.

பெரியாழ்வார் பாட்டிலே 'குருந்தம் ஒன்று ஒசித்தானொடும்' என்று வருவதற்கு 'குருந்த மரம் ஒன்றின் கிளைகளிலே மறைந்து மானங் காத்துக்கொள்ளும்படி அதைக் கோபியர்களுக்காக வளைத்துக்கொடுத்த கண்ணனேடும்' என்பதுதான் பெரியாழ்வார் கருதிய பொருளாகத் தோன்றுகிறது. இதே பொருளுக்குத்தான் அகநானூற்றிலும், சிந்தாமணியிலும் ஆதாரம் கிடைக்கிறதென்று கருதலாம். ஒசிதல் - வளைதல்; ஆகவே ஒசித்தல் - வளைத்தல். 'குருந்து ஒசித்தது' என்பதில் 'ஒசித்த'லுக்கு 'ஒளித்தல்,' 'முறித்தல்' என்றெல்லாம் பொருள் கூறுவது பொருத்தமன்று. இது பண்டிதர் மு. இராகவையங்கார் ஆராய்ச்சிமுறையில் கண்டு வெளியிடும் அபிப்பிராயம். ஜீவாத்மாக்களைப் பற்றச் செய்து அந்நிலையிலும், அவர்கள் விரும்பும்போது பற்றை

யும் பற்றச்செய்து அத்தகைய நிலைகளிலும், கைவிடாமல் காப்பாற்றுகிறுன் அன்புருவாகிய அழகன் என்பது இக்கதையில் பக்தர் காணும் தத்துவப் பொருள். இது எப்படி யிருந்தபோதிலும், பெரியாழ்வார் கூறும் 'குருந்தம் ஒன்று ஒசித்த கதை' வடநூல் வழக்கைத் தழுவியதன்று; தமிழ் நாட்டு வழக்கைத் தழுவிய தென்றே தோன்றுகிறது.

## வடநாட்டுக் கதையின் விளைவு

இப்படி வேறு சில கதைகளும் உண்டு. உதாரணமாக, 'குடக்கூத்தாடின' வரலாற்றையும் பார்க்கலாம்.

குடங்கள்எடுத்(து) ஏறவிட்டுக்
கூத்தாடவல்ல எம்கோவே!

ஏறவிட்டு - உயர எறிந்து. எம்கோவே - எம்முடைய தலைவனே.]

என்று யசோதை கூவியழைத்துப் பூச்சூட்ட வரும்படி வேண்டுவதாய்ப் பெரியாழ்வார் பாடியிருக்கிறுர்.

செருக்கிற்குப் போக்குவீடாக ஆயர்கள் ஆடும் ஒரு வகைக் கூத்து இது என்பர். குடங்கள் இரண்டு ஏந்தித் தெருவில் ஆடும் கூத்தைக் கண்ணன் ஆடிய குடக்கூத்து என்பர் திருமங்கையாழ்வார். ஆனுல், பல குடங்களை மேல் எழ வீசிப் பிடித்து அம்மானைபோல் ஆடும் குடக்கூத்தைத்தான் பெரியாழ்வார் குறிப்பிடுகிறுர். இப்பெரியாரின் கருத்துக்கு இணங்கக் குடக்கூத்தைக் காட்டும் சிலாசிற்பம் ஒன்றைத் திருவாங்கூர்ச் சாஸன இலாகாத் தலைவர் கண்டு பிடித்திருப்பதாகப் பண்டிதர் மு. இராகவையங்கார் தெரிவிக்கிறுர். பெரியாழ்வார் கூறும் குடக்கூத்து ஒருவகை; திருமங்கை மன்னன் கூறும் குடக்கூத்து வேறொருவகை. இந்த இருவகைக்

குடக்கூத்துகளும் தமிழ் நாட்டு வழக்கங்கள் என்றே ஊகிக்கலாம்.

கண்ணன் பேரனாகிய அநிருத்தன் பாணாசுரன் மகளான உஷாதேவியைக் காதலிக்கத் துணிந்தானென்று அவ்வசுரன் அக்காதலனைச் சிறைப்படுத்தினான் என்பதும், அது தெரிந்து கண்ணன் அவ்வசுரனுடன் போர் புரிந்து பேரனை விடுவித்துக் கொண்டான் என்பதும் புராணக் கதை. பாணாசுரன் தன் பேரனைச் சிறை வைத்தபோது, கண்ணன் அவ்வசுரனது சோணிதபுரம் என்ற நகரிலே போய்க் குடக்கூத்தாடினான் என்பது தமிழர்களின் அதிக கதை. இது சிலப்பதிகாரத்தில் பிரஸ்தாபிக்கப் படுகிறது.

இக்குடக்கூத்தை நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் பிரஸ்தாபிக்கிறார். 'குடமாடு கூத்தா!' என்று யசோதை கண்ணனை அழைத்து 'என்னருகில் விரைந்து ஓடிவா; அயல்வீட்டார் ஏதேனும் பேசிப் பழிக்க நான் கேட்டுப் பொறுக்கமாட்டேன்! அவர்கள் வாய்க்கு இரையாகாமல் இங்கே வந்துவிடு!' என்று கொஞ்சுவதாகவும் பெரியாழ்வார் பாடியிருக்கிறார். நமது வாழ்க்கையும் - விதியின் அம்மானை விளையாட்டு, இறைவன் குடக்கூத்து - என்பர் பக்த ரஸிகர்கள்.

## செருக்கின் தற்கொலை (தனித்தமிழ்க் கதை)

மாலிகன் என்பவன் செருக்கு மிகுதியால் தலையறுப்புண்ட ஒரு கதையையும் குறிப்பிடுகிறார், கடவுள் நம்பிக்கையால் பிறக்கும் செருக்காகிய தன்னம்பிக்கையைப் பாராட்டும் பெரியாழ்வார். மாலிகன் கண்ணனுக்குத் தோழனாக இருந்தான். 'இவன் ஸ்ரீ கிருஷ்ணன் அவன் ஸ்ரீ மாலிகன்!' என்று சொல்லும்படி அகங்காரியாகிவிட்டானாம். கண்ணனிடம் பலவகை ஆயுதங்களையும் பயின்று, 'இனி நமக்கொருவரும் நிகரில்லை!' என்று

பலரையும் ஹிம்ஸித்துக் கொண்டிருந்தானும். துஷ்ட நிக்கிரக மூர்த்தியான கண்ணன், 'இவனைக் கொன்றால் நண்பனைக் கொன்றான் என்று பழிகூறுவார்களே, என்ன செய்யலாம்?' என்று எண்ணமிட்டு, ஒரு நாள் அவனை நோக்கி, 'நீ இப்படிச் செய்வது நியாயமா? என் நண்பன் அல்லவா?' என்று கேட்டானும். அதற்கு மாலிகன், 'நண்பன் என்றால், நீ பல ஆயுதங்களை எனக்குக் கற்பித்ததுபோல், சக்கராயுதப் பயிற்சியும் செய்வித்திருக்க மாட்டாயா?' என்று குறைகூறினான், "இப் பயிற்சி அபாயகரமானது; இதில் பழகுவது உனக்கு ஆபத்து!' என்று கண்ணன் எச்சரிக்கை செய்தும், அவன் 'என்னால் முடியாததும் உண்டோ?' என்று நிர்ப்பந்தித்தான். கண்ணன் தன் சக்கராயுதத்தை யெடுத்து ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையில் ஏற்றுக்கொண்டான். 'இது எனக்கு அரிதோ?' என்று மாலிகன் கேட்க, 'இது உனக்கு ஆபத்தே!' என்று கண்ணன் மீண்டும் எச்சரிக்கை செய்தான். மாலிகனோ கண்ணன் சொன்னதைக் கேளாமல் அச்சக்கராயுதத்தைச் சுழற்றி எறிந்தான். எறிந்து கையை நீட்டிப் பிடிப்பதற்குள் அது சுழன்று விழுந்து மாலிகன் தலையை அரிந்துவிட்டதாம்.

அசுரச் செருக்குத் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறது; அழித்துக் கொள்ளும்படி விட்டுவிடுகிறார் கடவுள்—என்ற கருத்தமைந்த இக்கதையைப் பெரியாழ்வார்,

> சீமாலிகன் அவனோடு தோழமை
> கொள்ளவும் வல்லாய்,
> சாமா(று) அவனை நீஎண்ணிச்
> சக்கரத்தால் தலைகொண்டாய்!

[சீமாலிகன் அவனோடு - ஸ்ரீமாலிகன் என்று (கர்வ மாகத்) தன்னைத்தானே அழைத்துக்கொண்ட மாலிகன் என்பவனோடு. வல்லாய் - வல்லவனாய். சாமாறு - செத் துப்போகும் வழி.]

என்று குறிப்பிடுகிறார். 'அசுரச் செயல்களில் துணிந்து இறங்கிவிட்ட தோழனும் தன் விதியைத் தானே விதித் துக் கொள்ள வேண்டியதுதான்!' என்று ஸங்கல்பம் செய்துகொண்ட கண்ணன், 'தோழனைக் கொன்றான்!' என்னும் பழி வராமல் 'தன்னாலே தான் முடிந்தான்!' என்று சொல்லும்படியாக அவனை முடித்து விட்டான் என்பது பெரியாழ்வார் கருத்து. இக் கதைக்கு வடமொழிப் புராண ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டிலே கிளைத்து வளர்ந்த கண்ணன் கதை என்று இதைக் கொள்ளலாம்.

## தமிழ்நாட்டின் ராதை

இது போன்ற ஓர் அதிகக் கதைதான் 'நப்பின்னை திருமணம்' என்பதும். கண்ணன் மணந்த தேவியர்களில் நப்பின்னை தமிழ்நூல்களில் மிகவும் சிறப்பாகக் கூறப்படு கிறாள். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி ஆகிய ஜைன பௌத்த நூல்களிலும் நப்பின்னையின் பிரஸ்தா பம் வருகிறது. தேவாரமும், மாணிக்கவாசகரின் திருக் கோவையும் நப்பின்னையைப் பிரஸ்தாபிக்கின்றன. ஆழ் வார்களில் நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் சில இடங் களிலேதான், கண்ணன் மிகவும் உகந்த தேவியென்று பாகவதம் கூறும் உருக்குமிணியைக் குறிப்பிடு கிறார்கள்; மற்ற இடங்களில் எல்லாம் நப்பின்னையைப் பின்னை என்றும், பிஞ்ஞை என்றும், நீளா என்றும், உபகேசி என்றும் கூறுவதுண்டு. 'நப்பின்னை' என்பதில் ந என் பது பின்னை என்ற பெயருடையவளைச் சிறப்பிக்கிறது; கீரனை நக்கீரன் என்பது போல. வடநாடு ராதையைக்

கண்ணன் காதலியருள் சிறந்தவளாகக் கொண்டாடுகிறது; தமிழ்நாடோ பண்டைக்காலம் தொட்டு நப்பின்னையைக் கண்ணன் காதலியாகச் சிறப்பித்து வந்திருக்கிறது.

நப்பின்னையைக் கண்ணன் மணந்துகொள்வதற்காக ஏழு எருதுகளை வலியடக்கி வென்றதாய்ப் பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன. சீதாகல்யாணத்திற்குக் கன்யா சுல்கமாகவில்லை வைத்திருந்தார்களல்லவா? அப்படியே நப்பின்னை திருமணத்திற்குக் கன்யா சுல்கமாக ஏழு எருதுகளை வைத்திருந்தார்களாம் ஆயர்கள். கூர்மையான கொம்புகளையுடைய முரட்டுக் காளை மாடுகளைப் பறை யறைந்து வெளியில் விட்டு அவற்றைத் தழுவிப் பிடிப்பவனுக்கே மகளைக் கொடுப்பது என்பது தமிழ்நாட்டிலே ஆயர்கள் அனுஷ்டித்து வந்த ஒரு பழைய மணவிதி.

இம்மணவிதியை அனுசரித்துக் கண்ணன் நப்பின்னையை மணந்துகொண்டதாக நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் கூறியுள்ளார். இக்கதையைப் பெரியாழ்வார்,

துப்புடை ஆயர்கள்தம் சொல்வழு வா(து) ஒருகால்
தூய கருங்குழல்நல் தோகை மயில்அனைய
நப்பினை தன்திறமா நல்விடை ஏழ்அவிய
நல்ல திறலுடைய நாதனும் ஆனவனே!

[துப்புடை - (நெஞ்சில்) கடினத்தன்மை யுடையரான. ஆயர்கள்தம் - ஆயர்களுடைய. வழுவாது - தப்பாமல். ஒருகால் - ஒரு காலத்திலே. தூய கருங்குழல் - அழகான கருங்கூந்தல். மயில் அனைய - மயில்போன்ற சாயலுள்ள. நப்பினை தன்திறமா - நப்பின்னைக்காக. நல்விடை - (கொடுமையில்) நன்றான ரிஷபங்கள். திறல் - வலிமை.]

என்று குறிப்பிடுகிருர். கண்ணனுடைய மேனியின் மென்மை வாய்ந்த அழகையும், மாடுகளின் முரட்டுத் தனத்தையும் நோக்காமல், அவன் அவற்ருேடு போர் செய்யவேண்டும் என்று விதித்த ஆயர்களின் கடின நெஞ்சைத் தமது பக்தி நிறைந்த இளகிய நெஞ்சால் நினைத்துப் பார்த்துப் பெரியாழ்வார், அவர்களைத் 'துப்புடை ஆயர்கள்'(கடின நெஞ்சினரான ஆயர்கள்) - என்கிருர்.

குவலயாபீடம் என்ற யானையைக் கம்ஸன் அனுப்பினுன், கண்ணனை ஹிம்ஸிக்க; ஏழு ரிஷபங்களைத் திருமணத்தை முன்னிட்டு ஏவ அவை கண்ணனை ஹிம்ஸிக்க வந்தன, என்றும் பாடுகிருர் பெரியாழ்வார். 'பகவானைத் தேட முயன்றீர்களானுல், இங்கே வாருங்கள், உங்களுக்கு ஓர் அடையாளம் சொல்லுகிறேன், என்ற பீடிகையுடன் பேசுகிருர் பெரியார்;

ஆயர்மடமகள் பின்னைக்காகி
அடல்விடை ஏழினையும்
வீயப்பொருது வியந்து நின்ருனை
மெய்ம்மையே கண்டாருளர்!

[ஆயர் மடமகள் - ஆயர்களின் இளம்பெண். அடல் விடை - வலிய ரிஷபங்கள். வீய - முடியும்படியாக. பொருது - போர்செய்து.]

நப்பின்னை, திருமணத்தை முன்னிட்டு ஏழு முரட்டுக் காளைமாடுகளுடன் போர் செய்த ஆயாசத்தால் வியர்த்து நிற்கின்ருனும் மாப்பிள்ளை மணப்பந்தலிலே, மணமாலையும் கையுமாக நிற்கும் நப்பின்னைக்கு அருகே. 'உண்மையாகவே பகவானை அப்படி வியர்த்து நிற்கும் நிலையில் கண்டாருண்டு!' என்று உறுதி கூறுகிருர், தாமே

கண்டு காட்டுவதுபோலப் பேசுகிறார் பெரியாழ்வார். கண்ணன் பொருது வென்ற அந்த ஏழு விடைகளும் பல நிறம் உடையன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

## நப்பின்னையின் உத்தர யாத்திரை

நப்பின்னை திருமணத்திற்குப் பின் அவளுடன் கண்ணன் நிகழ்த்திய சரிதைகளைப் பழைய தமிழர்கள் நாடகமாக நடித்து வந்தார்கள். இது சிலப்பதிகாரத்தி லிருந்து தெரிய வருகிறது. இக்கதை பெரியாழ்வாருக் குப் பின்தோன்றிய ஸ்ரீ பாகவத புராணத்திலும் சில வேறுபாடுகளுடன் சேர்ந்துவிட்டது. நக்னஜித் என்று அயோத்தி அரசன் ஒருவன் இருந்தானாம். அவனுடைய மகளான சத்தியவதி பேரழகி; அவளைக் காதலித்த அர சர் பலரும் தன்னைத் துன்புறுத்தியதால் அந்த அரசன் யசோதையின் தம்பியான கும்பாண்டன் என்பவனிட முள்ள கொடிய காளைமாடுகள் ஏழையும் தழுவிப் பிடிப் பவனுக்கே தன்மகளை மணம் செய்விப்பதாகத் துணிந்து அறிவித்தானாம். அந்தத் துஷ்ட எருதுகளுக்குப் பயந்து அயோத்தி அரசனை நெருங்கவில்லை மற்ற அரசர்கள். அந்நிலையில் கண்ணன் அந்த எருதுகளைத் தழுவிப் பிடித்து வென்று அக்கன்னியை மணந்துகொண்டான் என்பது பாகவத கதை.

ஆயர்களை க்ஷத்திரிய குலத்தினர் ஆக்கிவிட்டது பாகவதம். கோகுலத்தில் கண்ணன் இருந்த காலத்திலே நப்பின்னையை மணந்ததாகக் கூறும் தமிழ்க்கதையின் விவரத்தையும் பாகவதம் மாற்றிக்கூறுகிறது. தமிழ் நூல் களைப்போல் பாகவதம் இவளைப் பெரிதும் பாராட்டவு மில்லை; ருக்மிணி சத்தியபாமை என்ற இருவரையுமே கண்ணன் மிகவும் உகந்த தேவியர் என்று கூறுகிறது. எனினும் பாகவத கதை தமிழ்க் கதையின் வடமொழி உருவம்தான் என்பது திண்ணம். தமிழ்நாட்டு ஆழ்வார்

களைக் குறிப்பிடும் பாகவதம் தமிழ்நாட்டிலே வழங்கிய கண்ணன் கதைகளையும் குறிப்பிடுகிறது என்று கருதுவது தவருகாது.

## கைகோத்து ஆடும் கூத்து

நப்பின்னை யசோதையின் சகோதரரான கும்பர்மகள் என்று பிள்ளை லோகஞ்சீயர் கூறியுள்ளார். கண்ணன் நப்பின்னையுடனும் பலராமனுடனும் கூடிக் குரவைக் கூத்து ஆடியதாகப் பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன. 'குரவை' என்பது கைகோத்து ஆடுவது. நப்பின்னையுடனும் பலராமனுடனும் கண்ணன் கைகோத்துக் குரவைக் கூத்து ஆடியதாக விஷ்ணு புராணம், பாகவதம் முதலிய வடநூல்கள் கூறவில்லை. கோவர்த்தனத்தைக் குடையாகத் தாங்கியபின் கண்ணன் கோபியர்கள் எல்லாருடனும் 'ராஸக்கிரீடை' என்ற 'குரவைக் கூத்து' நடத்தினன் என்று கூறுகின்றன வடமொழிப் புராணங்கள். அதாவது, ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனுகத் தோன்றி நின்று கைகோத்து ஆடிய குரவைக்கூத்தையே ராஸக்கிரீடை என்பர். இத்தகைய ஆய்ச்சியர் குரவையையும் நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் கூறுகின்றனர். இக்கூத்து வகைகளெல்லாம் பக்தர்களுக்குத் தங்களைக் கூத்தாட்டி வைக்கும் பகவானை வசீகர நிலையில் நினைப்பூட்டுகின்றன.

இத்தகைய குறிப்புக்களிலிருந்து,கண்ணனைக்குறித்து வழங்கும் தமிழ்நாட்டுக் கதைகளையும் பெரியாழ்வார், விஷ்ணு புராணகதைகள் முதலியவற்றுடன் உபயோகித்துக்கொள்கிருர் என்பது தெரியவரும். கண்ணன் கதைகளுக்குப் பிற்காலத்திலே தனிப்பெரும் பொக்கிஷம் ஆகிவிட்ட பாகவதபுராணமே பெரியாழ்வாருக்குத் தெரியாது: இப்புராணம் தோன்றியது ஆழ்வார்கள் காலத்திற்குப் பின்புதான். விஷ்ணு புராணகதைகள் முதலான

வடநாட்டுக் கண்ணன் கதைகளையும் பெரியாழ்வார் தமிழர்களுக்குச் சொந்தமாக்கிப் பாடியிருக்கிறார். சுருங்கச் சொன்னால், பெரியாழ்வாரின் கண்ணன் தமிழ்க் கண்ணன்; தமிழர்களுக்கும் உரிய அழகுத்தெய்வம்; தென்னாடும் வடநாடும் தொழநின்ற திசை விளக்கு.

[இப் பகுதியிலுள்ள பல கருத்துகளும் பண்டிதர் ஸ்ரீ மு. இராகவையங்காரின் "கண்ணபிரானைப் பற்றிய தமிழ்நாட்டு வழக்குக்கள்" என்ற சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரையைப் பெரும்பாலும் தழுவியன.]

## 17. கண்ணனைப்பற்றிய வேறு கதைகள்

கண்ணன் கதைகளிலே ஈடுபட்ட பெரியாழ்வாருள்ளம் இதிகாச புராணங்களிலுள்ள கண்ணனை நாடிக் கண்ட தோடு, தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவந்த கதைகளிலும் தன் இஷ்டதெய்வத்தைக் கண்டுகொண்டது. தன் மனோபாவ விமானத்திலே கற்பனையுலகிலும் பறந்து திரிந்து தானாகவும் அந்த அழகுத் தெய்வத்தைத் தனக்குள்ளே ஞானவெளியில் தேடிக் கண்டுகொண்டது. இவர் கேட்டிருந்த, கற்றிருந்த கண்ணனுக்கு இவரது மனோபாவமும், புதிய புதிய அழகு - மாலைகள் சூட்டி, 'இதோ கண்டு கொண்டேன் கண்படைத்த பயனை; கண்குளிரக் கண்டு வாய்குளிரப் பாடுகின்றேன்!' என்று இவர் எண்ணும்படியாகக் காட்டிக் கொடுத்துவிட்டது.

### கண்ணன் பிறந்தான் தமிழ் நாட்டிலே!

கண்ணன் பிறப்பு இவருக்கு ஏதோ ஒரு காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியன்று; திருமாலிருஞ்சோலையில் அந்த மலையழகுகளுக்கும் சோலையழகுகளுக்கும் இடையே, தன்னைச் சூழ்ந்து கிடந்த துக்கவலையைக், காலப்பின்னலை, அறுத்தெறிந்து இவர் கண்டுகொண்ட காட்சிதான்:

துக்கச்சுழலையைச் சூழ்ந்துகிடந்த
வலையை அறப்பறித்து,
புக்கினில்புக்(கு)உன்னைக் கண்டுகொண்டேன்
இனிப்போக விடுவதுண்டே?
மக்கள்அறுவரைக் கல்லிடைமோத
இழந்தவள் தன்வயிற்றில்
சிக்கெனவந்து பிறந்துநின்றாய்
திருமாலிருஞ் சோலைஎந்தாய்!

[துக்கச் சுழல் - துக்கங்கள் சுழல்வதற்கு இடம். அறப் பறித்து - அறும்படியாகப் பறித்தெறிந்து. புக்கினில் புக்கு - (நீ) புகுந்த இடமெல்லாம் (நானும்) புகுந்து. விடுவதுண்டே - விடுவதுண்டோ. சிக்கென - சடக்கென. எந்தாய் - எம்பெருமானே.]

கண்ணனுக்கு முன் பிறந்த ஆறு பிள்ளைகளையும் கம்ஸன் கல்லில்மோதி முடிக்க, சோகத்தின் வயிற்றிலே தூய உண்மை பிறப்பதுபோல, மக்களை யிழந்து சோகம் அடைந்த தேவகி வயிற்றில் சிக்கெனவந்து பிறந்துவிட்டானும் குழந்தைக் கண்ணன். திருமாலிருஞ்சோலையிலேயே அப்படி அவன் பிறக்கத் தாம் கண்டுகொண்டது போலப் பாடுகிறார் பெரியாழ்வார்.

எத்தனையோ துக்கங்கள் சுழன்று கொண்டிருந்தனவாம் இவருள்ளத்திலே,—தம் உடம்பையும் உள்ளத்தையும் ஆத்மாவையும் 'துக்கச் சுழல்' என்று இவர் கருதும்படி. இந்நிலையில் இவரைச் சூழ்ந்து தப்பிவிடாமல் கிடந்ததாம் கால வலை. இறையருளால், பக்தி - ஆயுதத்தால் அந்த வலையை அறப்பறித்து வீசி யெறிந்தும், இவருக்குச் சிறையிலிருந்து விடுதலை கிடைத்துவிட்டதாம். ஆனால் மாயக்கண்ணன் உடனே காட்சி யளித்துவிட்டானா? அவன் ஓட, இவர் ஓட, அவன் புகுந்த இடங்களில்

எல்லாம் இவரும் புகுந்து தேட, கடைசியாகக் கம்ஸனது சிறைக்கூடத்திலே கண்டு கொண்டார் தேடிவந்த திரவியத்தை!—என்று கூட இவர் சொல்லவில்லை. தாம் தேடிக் காணாத திரவியம் தம்மை நோக்கித் திருமாலிருஞ் சோலைக்கே ஓடிவந்துவிட்டது, தன்னைச் சூழ்ந்து கிடந்த சிறைச்சாலையுடன்,—ஒரே பேரின்பச் சுழலையாக! பெரியாழ்வாரின் பெரிய பக்தி அனுபவங்களில் இது ஒன்று. இப்படிக் கண்டுகொண்ட அரும்பெரும்பொருளை 'இனிப் போகவிடுவதுண்டோ?' என்று மகிழ்ந்து போகிறார், இறுமாந்து பேசுகிறார். பெரியாழ்வாரின் அதிசயமான மானஸ ஸாக்ஷாத்காரங்களில் இந்த அனுபவமும் ஒன்று எனலாம்.

கண்ணன் பிறப்பை இப்படித் திருமாலிருஞ்சோலையில் கண்ணாரக் கண்டவர்,

வண்ண மாடங்கள்
சூழ்திருக் கோட்டியூர்

[வண்ணமாடங்கள் - அழகு பொருந்திய மாட மாளிகைகள்.]

என்று தாம் பாராட்டும் திருக்கோஷ்டியூரிலே இந்த ஜயந்திக் காட்சிகளைத் தொடர்ந்து கண்டார். ஸ்ரீ கிருஷ்ணாவதார வைபவத்தின் ஆரம்பக் காட்சிகளைப் பூர்ணமாக அனுபவித்தார். கம்ஸ நகரில் (வட மதுரையில்) சிறைக் கோட்டத்திலே பிறந்த செல்வம், வடமதுரை யிழக்க இடைச் சேரிக்கு வந்துவிட்டது. தேவகி - வசுதேவர்களின் நஷ்டம், யசோதை - நந்தகோபர்களின் 'பெருப் பெருத்த' லாபம் ஆயிற்று. ஆம், பாற்கடலில் சேஷசயனம் இழந்த பேரின்பம் வடமதுரைக்கு வந்து ஆய்ப்பாடி சேர்ந்து, தமிழ் நாட்டுக்கே, திருக்கோஷ்டியூருக்கே வந்து விட்டது,—பெரியாழ்வாரின் பக்தியும் ஜாலவித்தையினால் பாட்டும் செய்யும் ஜாலவித்தையினால்!

கண்ணன் பிறப்பைத் திருமாலிருஞ்சோலையிலும், ஆய்ப்பாடிக் காட்சிகளைத் திருக்கோஷ்டியூரிலுங் கண்டவர் கண்ணனுடைய பாலிய லீலைகளையெல்லாம் தமது ஊராகிய ஸ்ரீ வில்லிபுத்தூரிலேயே கண்டு களித்தார் என்று ஊகிக்கலாம். ஸ்ரீ வில்லிபுத்தூரில் கோயில் கொண்டிருக்கும் வடபத்திரசாயி மட்டுமா, அவ்வூர்க் குழந்தைகளெல்லாம் ஆய்ப்பாடித் தெய்வக் குழந்தையை மனக்கண்முன் கொண்டுவர உதவின என்று கருதலாம். 'நமக்குக் குழந்தையில்லையே!' என்று ஏங்கிக் கிடந்த ஏக்கமும், வயதுகாலத்தில் தமக்குக் கிடைத்த அருமந்த செல்வியின் விளையாட்டைக் கண்ட பூரிப்பும், இவரது குழந்தைக் கண்ணனின் வண்ணப்படங்களுக்கு ஓர் அபூர்வ சோபையும் சுவையும் ஊட்டியிருக்கவேண்டும்.

## ஆஷாடபூதிகளுக்கு ஆபத்து

கண்ணனது பாலிய லீலைகளில் 'பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி' யாகிய பூதனையின் உயிரைக் குடித்து,

உறங்குவான் போலே
கிடந்தஇப் பிள்ளை

செய்த லீலையை வேஷக்காரர்களும் மோசக்காரர்களுமான ஆஷாடபூதிகளுக்கு ஓர் அபாய எச்சரிக்கையாகக் காட்டுகிறார் பெரியாழ்வார். இக்கதையை இப்பெரியார் பல இடங்களிலும் ஞாபகப் படுத்துகிறார்.

ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டில் கட்டித் தொங்கவிட்டு, அத் தூளித் தொட்டிலில் குழந்தையை விட்டுத் தாய் வெளியே போவதும், பசித்துப் பாலுக்கு அழும் குழந்தை சின்னஞ் சிறிய கால்களை மேலே தூக்கி உதைப்பதும் ஆகிய காட்சிகளைப் பெரியாழ்வார் ஸ்ரீ வில்லிபுத்தூர் - ஆய்ப்பாடியிலேயேபார்த்திருக்கக் கூடும். அத்தகைய நிலையில், "தாளை நிமிர்த்துச் சகடத்தைச்

சாடி" முறித்த சகடாசுர வதந்தை அடிக்கடி நினைத்துப் பாடுவதும் இவருக்கு எளிதாயிற்று. சகடாசுரனும் பூதனையைப்போல் 'மோசம் நாசம்' என்பதற்கு ஓர் அறிகுறிதான்.

## அன்புப் பழங்கயிறு

குழந்தை இளம்பிராயத்தில் துஷ்டத்தனஞ் செய்ய ஆரம்பித்து விடுகிறது. ஆயர்மனைகளில் எல்லாம் போய்ப் பால் தயிர் வெண்ணெய் திருடுகிறது. ஆய்ச்சிகள் வந்து முறையிட, யசோதை கண்ணனைக் கட்டிப் போடவேண்டும் என்று நினைக்கிருள். குழந்தையோ அவளை ஏமாற்றிவிட்டு அங்குமிங்கும் ஓடுகிறது. யசோதையும் பாலூட்டிச் சீராட்டிக்கொண்டே தந்திரமாக ஒரு பழங்கயிற்ருல் ஒரு பெரிய உரலோடு சேர்த்துக் கட்டிவிடுகிருள். அந்த ஏமாற்றுக்கும் மாயக்கண்ணன் கட்டுப்படுகிருனும்.

ஆஷாடபூதிகளின் தந்திரங்களுக்கு அகப்படாதவன் மெய்யன்பர்களின் தந்திரங்களுக்கும் வேண்டுமென்றே வசப்படுகிருன் என்ற உட்பொருளோடு கூடிய இக்கதை, பெரியாழ்வாருக்கு விக்கிரக வழிபாடு முதலான உபாஸனை முறைகளில் விசேஷ நம்பிக்கையை உண்டாக்கியிருக்கலாம். இவர் இக்கதையைப் பாடி, ஆய்ச்சியின் பழங்கயிற்ருல் கட்டுண்டவன் அன்புக் கயிற்ருல் எளிதில் கட்டுப்படுவான் என்பதை உய்த்துணர வைக்கிருர்.

தான் கட்டுப்பட்ட நிலையிலும் கண்ணன் இரட்டை மருத மரங்களை முறித்து இருவரைச் சாபத்திலிருந்து விடுவிக்கிருனும். இக்கதையையும் இப் பெரியார் பாடி இறைவனுடைய அருட்பெருக்கிற்குச் சான்ருகக் காட்டுகிருர். காளிய நாகத்தின் கொழுப்படக்கி, கொக்காகவும்

குதிரையாகவும் பயங்கர ரிஷபமாகவும் கன்ருகவும் விளாமரமாகவும் கழுதையாகவும் வந்த அசுர சக்திகளை யெல்லாம் ஒழித்துத் தெய்வசக்தியை நிலை நாட்டக் கண்ணன் செய்த அற்புதங்களெல்லாம் பெரியாழ்வா ருக்கு ஏதோ ஒரு காலத்தில் நடந்தவையல்ல; எக்காலத் திலும் இறையருளுக்குச் சான்ருக வேறு வேறு வகை யில் வேறு வேறு விதமாக நிகழக்கூடிய நிகழ்ச்சிகளே, லீலைகளே! அன்புக் கயிற்றிலே கட்டுண்டவன், என்றும் அன்பிற்குக் கட்டுப்பட்டு அசுர சத்திகளைத் தொலைத்துக் காப்பாற்றும் மகாசக்தி என்பது பெரியாழ்வார் கருத்து.

## யாருக்கு நன்றி?

கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துக் கல் மழையைத் தடுத்து ஆயர்களையும் பசுக்களையும் காப்பாற் றிய அற்புதம் இறைவனது பேரருளுக்கு ஒரு பெருஞ் சான்ருகிறது, பெரியாழ்வார் கண்களிலே. கோவர்த்தன மலைச்சாரலில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தவர் கள், அந்த மேய்ச்சல் நிலங்களைச் செழிக்கச் செய்து தங்களையும் தங்கள் கன்று காலிகளையும் காப்பாற்றிய மழைக் கடவுளுக்கு நன்றிசெலுத்திப் பொங்கலிட விரும்பினுர்கள். கண்ணனே அதைத் தடுத்து, "கட்புல ஞகாத இந்திரனைக் காட்டிலும் கண்ணுக்குமுன் நின்று உங்கள் மாடுகளைப் போஷிக்கும் கோவர்த்தன மலைக்கே, நன்றி செலுத்துங்கள்" என்று ஒரு பகுத்தறிவு வாதம் செய்தானும், "குட்டி மகாராஜா இட்டதே சட்டம்" என்று நம்பிய ஆயர்கள் அப்படியே பொங்க லிட்டு வைக்க, மழைக்கடவுளான இந்திரன் கோபத்தால் ஏழுநாள் விடாமழை பெய்வித்துத் துன்பப் படுத்தினு னும். 'நீங்கள் ஆராதித்த அந்த மலை உங்களை இப்போது எப்படிக் காப்பாற்றப்போகிறது, பார்க்கலாம்" என்று

கோப மழையினூடு வீரம்பேசிச் சிரிப்பதுபோல் மின்னி இடிக்க, அதே கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடித்துக் கண்ணன் குடைக்காம்புபோல மறைந்து நின்றுவிட்டானும். கல்லைக் கொண்டு கல்மழை தடுத்த இந்த அற்புதம் ஆழ்வார்களின் பக்திக் காதலுக்கு ஓர் அதிசயமான ஒரு தூண்டுகோல் என்று கருதலாம்.

## மழைக்கா? மலைக்கா?

இவ் வற்புதம் இறைவனது அற்புத ரட்சக சக்திக்கு ஓர் அற்புதச் சான்று என்பது பெரியாழ்வார் திருவுள்ளம். இவர் இக்கதையை ரஸித்துப் பாடியிருக்கிருர். இந்திர பூஜைக்குச் சமைத்த சோறு வண்டிவண்டியாக வந்து திரண்டு 'சோற்றுப் பர்வதம்' என்று சொல்லும் படியாகக் குவிந்து கிடந்ததாம், 'மலைக்கு முன்னே மலை கிடக்கிறது!' என்று சொல்லும்படி! ஆம், அந்தப் பெருமழைக்கு முன்புதான்! அந்தச் சோற்றுத்திரளில் தொட்டி கட்டித் தயிரோடையும் நெய்ச்சேறுமாக நிறைத்திருந்தார்களாம்,—தேவராஜாவுக்கும் நாவில் நீரூறும் படி! கண்ணன் இந்திர பூஜையைத் தடுத்ததும், 'அந்த மலை இந்தச் சோற்றை எப்படிச் சாப்பிடும் பார்க்கலாம்' என்று எண்ணியிருந்த இந்திரன் கண்முன்பே மலை சாப்பிட ஆரம்பித்துவிட்டது! இமைப் பொழுதில் அம் மலையை ஆவேசித்துக் கண்ணன் அந்த உணவையெல்லாம் அமுது செய்துவிட்டானும். அதுகண்ட இந்திரனுக்குப் பசியும் கோபமும் அதிகரிக்கக் கல்மழை பெய்வித்தான் என்ற கதையைப் பெரியாழ்வார் ஹாஸ்ய ரஸமும் பக்தி ரஸமும் ஒருங்கே தோன்றப் பாடுகிருர். இப்போது சொல்லுங்கள், 'நன்றி யாருக்குச் செலுத்தவேண்டும்?' என்று—மழைக்கா, மலைக்கா, ஸர்வாந்தர்யாமியும் ஸர்வ சக்தியுமான பரம்பொருளுக்கா?

பலராமன் செய்த பிலம்பாசுர வதத்தையும் இவர் கண்ணனுடைய லீலையாகக் குறிப்பிடுகிறார். தமிழ் நாட்டில் கண்ணன் வழிபாடேயன்றி 'நம்பி மூத்த பிரான்' என்று பலராமனைப் போற்றும் முறையும் வட நாட்டிற் போலவே வழங்கிவந்தது. கண்ணன், தானே தனித்தும் பலராமனுடனும் நிகழ்த்தியனவாக நமது நாட்டில் வழங்கி வந்த கதைகள் பல. இவற்றைப் பெரியாழ்வார் அறிந்து பலராமனையும் கண்ணனையும் அபேதமாகக் கருதியதும் உண்டென்று ஊகிக்கலாம்.

## 'கோபுரம் போல நில்'

கம்ஸ வதத்தோடு சேர்ந்த 'கூனியின் கூனலை நிமிரச் செய்தது' முதலான வரலாறுகளையும் பெரியாழ்வார் குறிப்பிடுகிறார். கம்ஸ வதத்திற்காகக் கண்ணன் பலராமனுடன் புறப்பட்டு வடமதுரை ராஜவீதியில் போகும்போது கூனி ஒருத்தி கம்ஸ மகாராஜாவுக்குக் கொண்டுபோன உத்தமமான சந்தனத்தைக் கண்ணனுக்கும், இவரண்ணனுக்கும் கொடுத்து உதவினளாம். அவளுடைய பக்தியையும் மனச் செம்மையையும் கண்ட கண்ணன், 'மனக்கோணல் இல்லாத இவளுக்கு உடற் கோணலையும் நிமிரச் செய்யவேண்டும்!'

என்று அருள்செய்தானாம். இக்கதையை,

'நாறிய சாந்தம்
நமக்(கு)இறை நல்கென்ன,
தேறி அவளும்
திருஉடம்பில் பூச,
ஊறிய கூனினை
உள்ளே ஒடுங்கஅன்(று)
ஏறஉருவினாய்!'

[நாறிய - நல்ல வாசனை வீசிய. சாந்தம் - சந்தனம். இறை - கொஞ்சம். நல்கு - கொடு. தேறி - மனம் தெளிந்து. ஊறிய - வெகு நாளாய் உறைத்துப்போன. ஏற - நிமிர்த்து. உருவினாய்—உருவிவிட்ட கண்ணனே,]

கொடுங்கோல் மன்னனான கம்ஸனுக்குச் சந்தனம் அரைத்து அரைத்துக் கூனிப்போன கொடுமையை அந்த அடிமைத்தனத்தை அழித்த கதையும், இவருடைய உள்ளத்தை வசீகரித்தது. இந்தக் கூனி இராமயணக் கூனியோடு முற்றும் மாறுபட்ட மனநேர்மை வாய்ந்தவள். கம்ஸ பயத்தை மனத்தெளிவால் உதறித் தள்ளி, இவ் வுத்தமமான பொருள் அக்கொடுங்கோலனுக்கு உரிய தன்று' எனத் துணிந்து கண்ணனுக்கே உரிமையாக்கி விட்டாளாம். இத்தகைய பெருமான் மனச்செம்மை வாய்ந்த பக்தர்களுடைய கூனலைப்போக்கி அவர்களைக் கோபுரம் போல நிமிர்ந்து நிற்கச் செய்வான் என்பது குறிப்பு.

## கல்யாண தடபுடல்

நப்பின்னை மணத்தைப் பிரஸ்தாபிப்பதுபோல் ருக்மிணி கல்யாணத்தையும் குறிப்பிடுகிறார் பெரியாழ்வார். "கண்ணனையன்றி மற்றொருவருக்கும் என்னைப் பேசவொட்டேன்!" என்று காதலித்துத் தூதனுப்பிய ருக்மிணியைக் கண்ணன் தேரேற்றிக்கொண்டு ஊர் நோக்கிப் புறப்பட, சிசுபாலன் முதலான பகைவர்கள் கண்ணனோடு போர் செய்து முறியடிக்கப் பட்டார்கள். அப்போது ருக்மிணியின் சகோதரனான ருக்மன் என் பவனும் கண்ணனைக் கொல்ல ஆத்திரத்துடன் வெகுண்டு வந்தானும். அவனைப் பரிபவப்படுத்தி வெகுண்டு ஓடச் செய்தான் கண்ணன் என்று பெரியாழ்வார் பாடுகிறார். தேவர்களெல்லாம் தோத்திரம் செய்யும் தேவதேவனை, அவர்களுக்கும் பிடிகொடாத பெருமானை, ருக்மிணிக்

காதலியை, வலிய பிடித்துக்கொண்டு தேரேற்றி, பகைத்து வந்த அசுரசக்திகளுக்கிடையே போராடும் நிலையில் சிக்கெனக் கண்டுகொண்டவர்களும் உண்டு!—என்று ஈடுபட்டு அந்தக் கல்யாண தடபுடல்களை ஞாபகப்படுத்தி வைக்கிறார்.

## நரகாசுர - பாணாசுர விஜயம்

நரகாசுரனையும் அவனது மந்திரியான முராசுரனை யும் வதஞ்செய்த "தீபாவளிக் கதை"யையும் ஞாபகப் படுத்துகிறார். தேவி சத்தியபாமையின் உதவியால் நரகாசுரவதம் செய்து, அவன் சிறைப்படுத்தியிருந்த ராஜ கன்னிகைகளையும் தேவ ஸித்த கந்தர்வ கன்னிகைகளையும் விடுவித்து அவர்களை மணஞ்செய்து கொண்டான் என்ற கதையும், ஜீவாத்மாக்களுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பினை இவருக்கு வற்புறுத்தியது என்று கருதலாம். நரகாசுர வதத்திற்குப் பின் பாரிஜாத மரத்தைச் துவார கைக்குக் கொண்டுபோய்ச் சத்தியபாமைக்குப் பரிசாக அளித்த கதையும் இவரால் பாடப்பெற்றிருக்கிறது. நரகாசுரவதம்போல் பாணாசுரவதமும் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன சக்திக்கு அறிகுறியாகப் பிரஸ்தா பிக்கப் படுகிறது.

## தூதுபோன எளிமை

இத்தகைய புராண சஞ்சாரங்களோடு பாரதப் பேரிதிகாசத்திலும் இவரது பக்தியுள்ளம், துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன சக்திக்குச் சான்று தேடித் திரிகிறது. துரியோதனனிடம் பாண்டவர்களுக்காகத் தூது சென்று காதம் பல திரிந்த மலரடிகளில் இவருள்ளம் மண்டிப்போய் ஈடுபட்டு நிற்கிறது. இத் தூதின் வைபவத்தை இறைவனுடைய சௌலப்பிய குணத்திற்கு (சுலபமாகும் தன்மைக்கு)த் தக்க சான்றாகக் காட்டுவ துண்டு. இராமாயணம், சிறையிருந்தவள் ஏற்றம்

சொல்லுகிறதென்றால், மகாபாரதம் "கழுத்திலே ஓலை கட்டித் தூதுபோன எளிமை"யை வெளியிடுகிறது என்று விஷ்ணுபக்தர்கள் கூறுவதுண்டு. இத்தகைய தூது வைபவத்தை அடிக்கடி நினைத்துப்பார்த்துப் பாடியிருக்கிறார் பெரியாழ்வார். சிலப்பதிகாரத்திலும் 'பஞ்சவர்க்குத் தூதாக நடந்த அடி' பாராட்டப் பெற்றிருக்கிறது,—உறி வெண்ணெய் உண்டு கடைக் கயிற்றால் கட்டுண்ட எளிமைபோல. தமிழருள்ளங்களில் ஊறிக் கிடந்த இத்தகைய கண்ணன் கதைகள் பெரியாழ்வாரின் வாழ்க்கை - யாத்திரைக்குப் பெருந்துணையாக அமைந்தன என்று கருதலாம்.

## குதிரை ஓட்டிய வைபவம்

பார்த்தஸாரதியாக நின்ற வைபவமும், தூது சென்ற வைபவமும்போல் இறைவன் கருணைக்கும் எளிமைக்கும் பெருஞ்சான்றல்லவா? கோல் பிடித்துக் குதிரையோட்டிய இந்த வைபவத்திலும் பெரியாழ்வார் ஈடுபடுகிறார். இந்தப் பணியில் ஒரு ருசிகரமான விவரத்தையும் இவர் தமது பாடல் - சாஸனத்தில் பதியவைத்திருக்கிறார். அர்ச்சுனனுடைய தேர்க் குதிரைகள் தண்ணீருக்கு விடாய்த்து இளைத்து நின்றுவிட்டனவாம். அப்போது கண்ணன் ஓர் அஸ்திரம் போட்டுப் பூமிக்குக் கீழுள்ள ஒரு 'நீர் நரம்பி'லிருந்து தண்ணீரை வெளிக் கிளப்பிக் குதிரைகளை நீரூட்டித் தரையிலே புரட்டி எழுப்பித் தேரிலே மறுபடியும் பூட்டிக்கொண்டு வந்துவிட்டானும். ஸாரதி குதிரைக்குச் செய்த இந்தப் பணியையும் பெரியாழ்வார் திருமாலிருஞ் சோலையில் நினைத்துப் பார்த்து இறைவனுடைய அற்புத எளிமையில் ஈடுபடுகிறார்.

பகவானுக்கும் பட்சபாதமா? (மாமாயன் மாமாயம்)

"அடியார்கள் விஷயத்தில் இவ்வளவு கருணையா? பட்சபாதம் என்றுகூடச் சொல்லலாமே!" என்று நினைத்து நினைத்து அன்பர்கள் உருகிப் போகுமாறு தேரோட்டிய பார்த்தஸாரதி, "இவன் அடியார்களுக்குப் பட்சபாதம் செய்பவன்தான்!" என்று துணிந்து கூறும் படியான செயல்களையும் செய்து அன்பர்களைக் காப்பாற்றுகிறுனும். தன் மகனுன அபிமன்யுவைக் கொன்ற ஜயத்திரதனை மறுநாள் சூரியாஸ்தமனத்திற்கு முன் கொன்றுவிடுவதாகச் சபதஞ் செய்திருந்த அர்ச்சுன னுடைய வாக்கைக் காப்பாற்ற வேண்டுமென்று கண்ணன் சக்கரத்தால் சூரியனை மறைத்துக் காட்டி, ஜயத்திரதனை எதிரிகள் வெளிப்படுத்த, உடனே சக்கரத்தை விலக்கிச் சூரியனைக் காட்டி, அர்ச்சுனனுல் ஜயத்திரதனைக் கொல்வித்த அந்த மாமாயன் மாயத்தி லும் ஆழ்வாருடைய பக்தி சங்கையின்றி ஈடுபடுகிறது.

## எளிமையும் பெருமையும்

துரியோதனுதியரைப் பாண்டவர்களால் ஒழித்த துஷ்ட நிக்கிரகத்தையும், அபிமன்யுவின் மகனை அசுவத் தாமன் கருவிலே நீறுக்க அச்சிசுவை மீண்டும் உயிர்ப்பித் துப் பரிட்சித்து மகாராஜாவாக விளங்கச்செய்த சிஷ்ட பரி பாலனத்தையும் பிரஸ்தாபிக்கிருர். சாந்தீபினி என்ற தமது குருவின் மகனை உயிர்மீட்டுக் கொணர்ந்த அற்புதத்தை யும் சிஷ்ட பரிபாலன சிகரங்களில் ஒன்ருகக் காட்டுகிருர். ஒரு தாய் நாலு பிள்ளைகளையும் இழக்க, 'ஒரு பிள்ளையை யாவது அழைத்துத் தரவேண்டும்' என்று பிரார்த்தித்த தந்தையின் வேண்டுகோளுக்கு இரங்கி நால்வரையும் ஒருங்கே அழைப்பித்துத் தாயோடு கூட்டுவித்த அற்புதத் தையும் எடுத்துப்பாடி இறைவனுடைய கரைகாணுத கருணை வெள்ளத்தில் ஆழ்ந்து போகிருர். ஹரிவம்சம் என்ற

நூலில், நாரதர் ரைவதக பர்வதத்திற்கு வந்து கண்ணனை வணங்கித் தோத்திரம் செய்ததாக வரும் கதையையும் ஞாபகப்படுத்தி இறைவனுடைய பரத்வத்தையும் சௌலப்யத்தையும் ஒருங்கே தூக்கிக் காட்டுகிறார், பக்த யாத்திரிகர்களுக்கு எல்லாம் ஒரு மணி விளக்காக.

## 18. பிள்ளைத்தமிழும் கவிதையும்

### இப்பிள்ளைத்தமிழின் சிறப்பு

கண்ணனை இந்தியாவின் கண் என்றும் ஆத்மா என்றும் சொல்லலாம். என்றும் இந்தியாவின் ஆத்மா இளமை வாய்ந்தது, அழகானது; சக்தி வாய்ந்தது. எத்தனை பக்தர்களின், தேச பக்தர்களின், பக்திக்கும் கனவுகளுக்கும் இலக்காகியிருக்கிறது! குழந்தைக் கண்ணன் என்ற ஆனந்த ரூபத்திலே இறைவன் பெரியாழ்வாருக்கு விசேஷமாய்க் காட்சி தந்தான். 'தாயிலான்' ஆகிய கடவுள்மீது களங்கமற்ற தாயன்பைச் செலுத்தினர் இப்பெரியார். கடவுளின் பேரழகு கண்டு, 'உலகத்தின் கண்ணெச்சில் பட்டுவிடுமோ?' என்று அஞ்சிக் காப்பிட்டுப் பல்லாண்டு பாடிய பெரியார், அந்தப் பேரழகைக் குழந்தைக் கண்ணனைக் கண்டு தாயாகக் கொஞ்சி அவனுடைய விளையாடல்களை ஆசைதீர அனுபவித்திருக்கிறார். தாயன்பிலே விளைந்த இப்பாடல்களில் உண்மையான பிள்ளைத் தமிழைப் பார்க்கிறோம்.

தமிழில் பலவேறு பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் காணப்படுகின்றன. எனினும் அவற்றில் இத்தகைய இயற்கைச் சித்திரங்களைக் காண்பது அரிது. மீனாக்ஷியம்மை, முருகன், அழகர், ஆண்டாள் முதலான தெய்வங்களையும் தெய்வப் பிறவிகளையும் குறித்துப் பல நூல்கள்,

காப்பு, செங்கீரை, சப்பாணி, முத்தம் முதலான பல பருவங்களுடன் அமைந்திருக்கின்றன. ஆனால், இத்தகைய பிள்ளைத் தமிழ் நூல்களுக்கும் பெரியாழ்வார் பாடிய கண்ணன் பிள்ளைத் தமிழுக்கும் வேறுபாடுகள் உண்டு. மற்றப் பிள்ளைத் தமிழ் நூல்களைக் காட்டிலும் பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ் காலத்தால் முற்பட்டது, 'பிள்ளைத் தமிழ்'களுக்கெல்லாம் ஞானத்தாயாக மதிக்கத் தக்கது.

பொதுவாகப் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களில் நூல்களில் பிள்ளைத் தமிழுக்கு இயற்கையாக அமைந்திருக்க வேண்டிய இனிமையும் எளிமையும் காணப்படுவதில்லை; குழந்தைச் சித்திரங்கள் குழந்தையின் மழலையை நினைப்பூட்டும் ரீதியாக அமைக்கப்படவில்லை. இப்பாடல்களுக்கு விஷயமாகத் தெய்வங்கள் அமையும்போது ஆசிரியர்கள் பிள்ளைத் தமிழையே மறந்து தோத்திரப் பாடல்களாக அமைத்துவிடுகிறார்கள். இப்பாடல்களில் சொல்நயம் இருக்கலாம், பொருள்நயம் இருக்கலாம், பக்தி பெருக்கெடுத்தோடலாம், கவிதா சாமர்த்தியமும் காணப்படலாம்; ஆனால் பிள்ளைத் தமிழ்தான் அபூர்வமாய்க் காண்கிறது. 'மழலை ததும்பு பசுங்குதலை' என்பது போன்ற சொற்றொடர்களில் மழலையின்பத்தை யனுபவிக்க முடியாது. கலாரஸத்திற்கு முரண்படும் தொடர்கள் இலக்கியச் சுவை வாய்ந்திருப்பினும், இயற்கைச் சித்திரங்களைப் புகையுண்ட சித்திரங்களாக்கிவிடும். குழந்தை பேசுவதாகவோ, தாய் கொஞ்சுவதாகவோ கவி பேசத் தொடங்கிவிட்டால், குழந்தையனுபவம் வெளிப்படுவதற்கு மாறாகத் தடைப்படக்கூடும்.

பிள்ளைத் தமிழ் பிள்ளைத் தமிழாகத்தான் இருக்க வேண்டும்: அதாவது, குழந்தை யுணர்ச்சிகளைச் சித்திரிக்க வேண்டிய மனோபாவம் தவிர, இதர உணர்ச்சி

களைப் பிள்ளைத் தமிழிலிருந்து கண்டிப்பாக விலக்கிவிட வேண்டும். இது பல கவிஞர்களுக்கும் சாதாரணமாய்க் கைகூடுவதில்லை. பெரியாழ்வாருக்கு முன்பு சிற்சில பாடல்களே பிள்ளை இயல்புகளைப் பேசுகின்றன. அவற்றிலும், பிந்திய பிள்ளைப் பாடல்களிலும், குழந்தையுணர்ச்சிகளைக் காட்டிலும் அதிக அளவில் பிற உணர்ச்சிகள் கலந்திருக்கின்றன கவியின் சாமர்த்தியம் பிள்ளை இயல்புகளை யெடுத்துக் காட்டுவதற்கு மாருக இலக்கிய இலக்கண உருக்குச் சட்டைபோட்டு மறைத்துக் காட்டுகிறது.

'ஆசியாவின் புலமைப் பேராசி'யரான மகாகவி ர்வீந்திரரைப் போன்றவர்களும் குழந்தைகளை வயது முதிர்ந்தவர்களைப் போலவே பேச வைக்கிருர்கள், கற்பனை செய்ய விடுகிருர்கள். மிகவும் அழகான, ஒழுங்கான இசைச் சித்திரங்களிலே 'பேசும் பொற்சித்திர'ங்களாகக் குழந்தைகளைக் காட்டும் ரவீந்திரநாத டாகுரும், 'சிறு மீன்கள் திமிங்கிலம்போல் பேசுகிற' தோரணையிலேதான் அக் குழந்தைகளைப் பெரும்பாலும் பேசவைக்கிருர். கற்பனைச் செல்வம் பிள்ளைக் கவிதையாகாது; குழந்தையை வியாஜமாக வைத்துக்கொண்டு செய்யும் கற்பனையும் குழந்தை - இலக்கியமாகாது. இத்தகைய இலக்கிய உலகில் பெரியாழ்வாரின் பிள்ளைத்தமிழ் ஒரு வெற்றியென்றே சொல்லவேண்டும்.

ஓர் இரவிலே ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளரும் நிலையில் பெரியாழ்வார் தம் குழந்தைக் கண்ணனைக் காட்டுகிருர். தேவகி வருந்த, யசோதையுடன்—ஏன், யசோதையாகி—பெரியாழ்வார் குதூகலப்படுகிருர். குழந்தைப் பருவத்தில் நிகழும் அசைவு, இளநகை, தளர்நடை, ஓட்டம், ஆட்டம் மழலைப்பேச்சு,

துஷ்டத்தனம், விளையாட்டு முதலான இனிய நிகழ்ச்சிகளை யெல்லாம் பாடிப் பாடி யனுபவிக்கிருர்.

மக்கள்மெய் தீண்டல் உடற்(கு)
இன்பம்; மற்(று) அவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

என்று தமிழின் புலமைத் தெய்வமான திருவள்ளுவர் பாராட்டும் குழந்தைப் பேரின்பத்தைப் பெரியாழ்வார் கண்ணன் வாயிலாக அனுபவித்து, 'யான்கண்ட இன்பம் பெறுக இவ் வையகம், என்று' கேட்கிறவர்களையும் அனுபவிக்கச் செய்கிருர்.

'குழல்இனிது, யாழ்இனிது, என்ப,தம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்'

[குழல் - புல்லாங்குழல். யாழ் - வீணையை ஒத்த ஓர் இசைக்கருவி.]

என்று திருவள்ளுவர் பாராட்டும் அந்த மழலையினிமை பெரியாழ்வாரின் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களில் அப்படியே புலனுகிறது.

பெரியாழ்வார் பிள்ளைத் தமிழிலும் குழந்தைப் பேரின்பத்தை இடையிடையே பக்தியுள்ளம் மறைக்கத் தான் செய்கிறது. பெரியாழ்வாரின் யசோதை வேஷம் சில சமயங்களில் கலைந்துபோய், 'ஓஹோ, தாயன்று; ஆழ்வார்தான்!' என்று கருதும் நிலையும் ஏற்பட்டுக் கலாரஸத்திற்கு இடையூறு விளைக்கின்றது. சில சமயங்களில் அசந்தர்ப்பமான தொடர்களும் இசைச் சித்திரங்களின் இசைவை, பொலிவைக் குறைக்கின்றன. கண்ணனுடைய அதிமானுஷ சேஷ்டிதங்களும் குழந்தைச் சேஷ்டைகளின் இயற்கை மணத்தை ஒருவாறு குறைக்கத்தான் செய்கின்றன. எனினும் பெரியாழ்வாரே பிள்ளைத்தமிழ்க் கவிகளிலும் பெரியர் என்பதில்

சந்தேகம் இல்லை. இவர் காட்டும் குழந்தைச் சித்திரங்கள் பெரும்பாலும் வீடுகளில் தினசரி வாழ்க்கையிலே பார்க்கக்கூடியவை. இவர் உண்மையான குழந்தைக் கலைஞர்,—உண்மையான பிள்ளைத்தமிழ்க்கவி. இவர் கவிச் சித்திரங்கள் பேசும் சித்திரங்கள்; நம்மன வீதியில் ஓடி ஆடி விளையாடும் இயல்பு வாய்ந்தன.

பக்தியிலும் பெரியாழ்வார் தெய்வக் குழந்தைகளைப் பாடியிருக்கும் மற்றப் பிள்ளைத் தமிழாசிரியர்களை வென்றுவிடுகிறார். அவர்களது பக்தி இவரது பக்தியைப் போல் 'தன்னை மறந்த லயம்' தரவில்லை; ஆகவே அவர்கள் தாங்கள் பாடும் தெய்வக் குழந்தைகளுடன் ஒன்றிவிடவில்லை. தெய்வக் குழந்தையைக் கண்ட அகமகிழ்ச்சி பிள்ளைக் கவிதையாக உருவெடுக்கவில்லை. பெரியாழ்வாரின் பக்தியோ வரம்புகடந்து பாயும் அன்பு-வெள்ளம்; உள்ளமே உருகிஓடிப் பெருகும் இன்பக் கவிதை. இவர் தமது சிறப்பியல்பான பக்திநிலையில் தெய்வத்தைக் குழந்தையாகவும், குழந்தையைத் தெய்வமாகவும் கண்டு பூரித்துப்போகிறார்.

கண்ணனையும் இராமனையும் பிள்ளைநிலையில் வைத்து வேறு சில ஆழ்வார்களும் பாடியிருக்கிறார்கள். எனினும் அவற்றைப் பிள்ளைத்தமிழ் என்று சொல்லமுடியாது. இவர் கண்ணனை நெஞ்சிலும் நாவிலும் வளர்த்து விடுகிறார் என்றே சொல்லவேண்டும். இராமனையும் கண்ணனையும் பிள்ளைநிலையில் வைத்துப்பாடும் மற்ற ஆழ்வார்கள் இவ்விதமாகத் தங்கள் தெய்வக்குழந்தைகளை வளர்த்துவிட்டார்கள் என்று சொல்லமுடியாது. பெரியாழ்வாரின் தாயன்பை மற்ற ஆழ்வார்களிடம் பார்க்கமுடியாது. மேலும், கோதையைப் போன்ற ஒரு குழந்தையை வளர்க்கும் பேறுபெற்ற நிலையும் பெரியாழ்வார் பிள்ளைத் தமிழில் புலனாகின்றது. மற்ற ஆழ்வார்

கள் ஞானப்பெருமையும் பக்திப்பெருமையும் வாய்ந்த வர்கள்; ஆனால் யாவரே கோதையைப் பெற்றார்? கோதை, தன்னைப் பல வேறு வளர்ச்சிகளில் காட்டிக் குழந்தைக் கண்ணனையும் அப்படிப் பலவேறு நிலைகளில், காட்ட, இவர் அந்த இயல்புகளை நன்கு கண்டு உள்ளது உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவதுபோல் அமைந் திருக்கிறது இவர் பாடிய பிள்ளைத்தமிழ்.

பெரியாழ்வார் திருமொழி 461 பாசுரங்களை உடையது. இவற்றில் கிருஷ்ண லீலைகளைக் கூறும் பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் 273. அதாவது, திருமொழியில் பாதிக்குமேல் பிள்ளைத்தமிழ்தான். இனி இப் பிள்ளைத் தமிழைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

## 19. குழந்தையை வந்து பாருங்கள்

திருமாலிருஞ் சோலையிலும் திருக்கோஷ்டியூரிலும் தாம் கண்ட குழந்தைக் கண்ணனைப் பெரியாழ்வார் ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நெஞ்சிலே அணைத்துக் கொணர்ந்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வரும்போது தாயுணர்ச்சி,—தாமே யசோதைத் தாய் ஆகிவிட்ட உணர்ச்சி—மேலிட, இவர் அயல் அகத்து ஆய்ச்சிகளை யழைத்து, ‘இக்குழந்தையின் அவயவ அழகுகளைப் பாருங்கள்’ என்று காட்டுகிறார். கண்ண னுடைய பாதம் தொட்டுக் கேசம் மட்டும் ஒவ்வொரு அவயவத்தின் அழகையும் சிறப்பையும் ‘காணீர்! காணீர்!’ என்று தனித்தனியே பாராட்டிக் காட்டி மகிழ் கின்றார்.

சீதக் கடலுள் அமுதன்ன தேவகி,
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்
[தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே!
பவள வாயீர்வந்து காணீரே!

[சீதக்கடல் - குளிர்ந்த பாற்கடல். அமுதன்ன - அமிர்தம் போன்ற. கோதைக் குழலாள் பூமாலையால் அலங்கரித்த கூந்தலையுடையவள் - போத்தந்த - போக - விட்ட. பேதைக்குழவி - அறியாக் குழந்தை.]

என்று அடிமலர் தொடங்கி அனுபவித்துப் பேசுகிறார்.

குழந்தை தன் காற்பெருவிரலை வாயில் வைத்துச் சுவைத்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையைக் காட்டும் போதுதான் பெரியாழ்வார் யசோதையாக மாறத் தொடங்குகிறார். 'பவள வாயீர், வந்து காணீரே!' என்று கூவியழைத்து, அந்த அடிமலர்களில் உள்ள விரல்களை, 'இதோ பாருங்கள், பத்து விரல்களும் ஒன்றுக்கொன்று எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கின்றன.' என்று காட்டுவதற்குள் ஸாட்சாத் யசோதை ஆகி விடுகிறார்!

அந்தப் பத்து விரல்களின் அழகைத்தான் எவ்வளவு அழகாய்ப் பாசுரமிடுகிறார்:

முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல், எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட் டிருந்தவா காணீரே!
ஒண்ணுதலீர்! வந்து காணீரே!

[நன்பொன் - மாற்றுயர்ந்த பொன் தத்திப் பதித்து- மாறி மாறிப் பதித்து. தலைப் பெய்தாற்போல் - சேர்த்தாற்போல். ஒத்திட்டுருந்தவா - ஒன்றோடொன்று ஒத்து அமைந்திருக்கும் விதத்தை. ஒண்ணுதலீர் - ஒளி பொருந்திய நெற்றியை யுடையவர்களே.]

காலுக்கு இடுகிற செம்பஞ்சை, 'மருதாணி' போல கண்ணனுடைய கால்களிலே ஒன்பது விரல்களுக்கு நவரத்தின வர்ணங்களும் மற்றொரு விரலுக்குப் பொன்னிறமுமாக இட்டு அழகு பார்த்த யசோதை, "வாருங்கள் பெண்டுகளே! என் மணிவண்ணனுடைய பாதங்களில் பத்து விரல்களையும் பாருங்கள்; நவரத்தினங்களையும் மாற்றுயர்ந்த பொன்னையும் தத்திப் பதித்து வைத்தாற் போலச் சேர்ந்து எவ்வளவு லட்சணமாயிருக்கின்றன!" என்று காட்டுகிறாள்.

இப்படியே கணைக்கால், முழங்கால், தொடை, வயிறு முதலான அவயவங்களையும் காட்டுகிறாள்.

தந்தக் களிறுபோல்
தானே விளையாடும்

[தந்தக் களிறு - கொம்பு முளைத்த யானைக் குட்டி.]

குழந்தையின் மார்பு, தோள்கள், கைகள், கழுத்து, வாய், மூக்கு, கண்கள், நெற்றி, தலை முதலான அவயவங்களையும் அதிசயமாய்க் காட்டி, "ஊர்ப் பெண்டுகளே! ஊர்ச் சிறுவர்களைக் காட்டிலும் இக்குழந்தை எவ்வளவு அழகு வாய்ந்தது!" என்று பெருமைப் படுகிறாள்.

இடையிடையே பெரியாழ்வாருக்குத் தாம் வேறு, யசோதை வேறு என்ற உணர்ச்சியும் வந்துவிடுகிறது. எனினும் இவர் காலவெள்ளத்தைக் கடந்து கோகுலத்திற்கே போய் நந்தகோபர் மாளிகைக்குள்ளும் சென்று

யசோதை வளர்க்கின்ற பிள்ளையை அருகே யிருந்து பார்த்துவிடுகிறார்! அப்படிப் பார்த்து ஒதுங்கி நிற்கவு மில்லை; குழந்தையைத் தாமே எடுத்து மடியில் வைத்துக் கொண்டு,

குருமா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார்(வு) இருந்தவா காணீரே!
சேயிழையீர்! வந்து காணீரே!

[குருமா - மிகவும் சிறந்த. பணிப்பூண் - இரத்தின ஆபரணம். குலாவி - உலாவி மகிழ்ந்து; கொஞ்சி. மகிழ்ந்து. திருமார்வு - சேயிழையீர் - செம்மையான ஆபரணங்கள் அணிந்த பெண்களே.]

என்று யசோதை போலவே பேசவும் செய்கிறார்.

மைத்தடங் கண்ணி யசோதை வளர்க்கின்ற
செய்த்தலை நீல நிறத்துச் சிறுபிள்ளை,

[மைத்தடங்கண்ணி யசோதை - மையணிந்த பெரிய கண்களையுடைய யசோதை. செய்த்தலை - உயர்ந்த ஸ்தலத்திலே (மலர்ந்த). நீலம் - கருநெய்தல்மலர்.]

பெரியாழ்வாராகிய யசோதையின் பிள்ளைதானே! அந்தப் பிள்ளையின் 'வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்' கண்டு களித்த யசோதை போல் இவரும் கண்டு களித்தவரல்லவா?

## 20. அழகு வளரும் தொட்டில்

குழந்தைக் கிருஷ்ணன் வளர்ந்த தொட்டிலை 'அழகு வளரும் தொட்டில்' என்று சொல்லலாம். அழியா அழகு என்னும் தத்துவம்தானே கிருஷ்ணனாக வந்தது, வளர்ந்தது? ஆம், கர்ம வசப்படாமல், சுதந்தரமாக, சுந்தரமாக!

அந்தத் தொட்டிலைப் பெரியாழ்வார் ஒரு சமயம் ஓர் அழகான துணித் தொட்டில் அல்லது தூளியாகக் காட்டுகிறார். ஒரு சமயம் அந்த அழகு வளரும் தொட்டிலை,

மாணிக்கம் கட்டி
　　வயிரம் இடை கட்டி,
ஆணிப்பொன் னால்செய்த
　　வண்ணச் சிறுத்தொட்டில்

[இடை - இடையே; நடுவில். ஆணிப்பொன் - மாற்று உயர்ந்த பொன்.]

என்று காட்டுகிறார். காட்டித் தாமே அந்தத் தொட்டிலுக்குப் பக்கத்தில் தாயாக நின்று தாலாட்டுகிறார்.

குழந்தை அழத் தொடங்குகிறது. உடனே யசோதை;

உடையாய்! அழேல், தாலேலோ;
　　உலகம் அளந்தானே! தாலேலோ!

[உடையாய் - ஸ்வாமியே. அழேல் - அழாதே,]

என்று தாலாட்டுகிறாள்.

பிள்ளையைத் தொட்டிலில் கண் வளர்த்தித் தாலாட்டும் போதே ஆழ்வாராகிய யசோதைக்குத் தெரிந்து விடுகிறது, 'இந்தப்பிள்ளை சாதாரணக் குழந்தையல்ல, தெய்வப்பிறவிதான்' என்பதும். அதனால்தான் 'அப்பா! அழாதே; அம்மா! அழாதே' என்று தாலாட்டாமல்,' 'உடையாய்! அழாதே' என்றும், 'உலகம் அளந்தானே! அழாதே' என்றும் தாலாட்டுகிறாள்.

குழந்தையை ஆய்ச்சிமாரும் ஆயர்களும் வந்து பார்த்து இயன்ற அளவு பணிசெய்தும் பரிசளித்தும் மகிழ்ந்து போவார்களல்லவா? ஆனால் குழந்தைக் கண்ணனைப் பெருமாளாகப் பார்க்கும் இந்த ஆழ்வார் - யசோ

தையின் கண்களுக்கோ, அவர்களெல்லாம் பிரமன் முத லான தேவர்களாகி விடுகிருர்கள்!

மாணிக்கமும் வைரமும் இழைத்த இந்தத் தங்கத் தொட்டிலே இந்த லோகத்துத் தட்டான் செய்ததன்று; நான்முகத் தட்டான் (பிரமன்) அந்த லோகத்திலிருந்தே செய்துவிட்டது! அரைவடம் முதலியவற்றையோ, ஸாக்ஷாத் சிவபெருமானே அன்பு கூர்ந்து அனுப்பி யிருக்கிருராம்.

'அதோ தேவேந்திரனும் ஓர் ஆபரணம் தந்து நிற் கிருன்!' என்று சொல்லித் தாலாட்டுகிருள் தாய்:

எந்தம் பிரானுர், எழில்திரு மார்வர்க்கு,
சந்தம் அழகிய தாமரைத் தாளர்க்கு,
இந்திரன் தானும் எழி லுடைக் கிண்கிணி தந்(து)
உவனாய் நின்ருன், தாலேலோ;
தாமரைக் கண்ணனே! தாலேலோ!

[எந்தம்பிரானுர் - எமது ஸ்வாமி. எழில் - அழகு. மார்வர் - மார்பையுடையவர். சந்தம் - (இங்கே) நிறம். தாளர் -திருவடிகளை யுடையவர். எழிலுடை - அழகை யுடைய. உவன் - அதிக தூரத்திலும் அதிக சமீபத்திலும் இல்லாமல் நடுத்தரமான தூரத்தில் இருப்பவன்.]

தாயுள்ளம் பூரிக்க, பக்தியுள்ளமும் 'இக்குழந்தை யல்லவா எமது ஸ்வாமி?' என்று பூரித்துப் போகிறது; 'எமது குழந்தைப் பெருமானுக்குத் தேவராஜாவே "கிண்கிண்" என்று ஒலிக்கும் அரைச்சதங்கை கொண்டு தருகிருன்!' என்றும் ஆனந்தம் அடைகிறது.

இந்தத் தாயுள்ளமும் பக்தியுள்ளமும் இந்நிலையில் இருக்க, அந்த இந்திரனுடைய நிலையைத்தான் என்னென் பது? குழந்தையைக் கண்குளிரப் பார்க்க வேண்டு மென்ற ஆசை ஒருபுறம்; 'குழந்தையானுலும் பெருமா

ளல்லவா?' என்ற மரியாதை ஒருபுறம்: எனவே அதிக தூரத்திலும் போகாமல், அதிக சமீபத்திலும் வந்து விடாமல், நடுவிலே நின்று உற்று உற்றுப் பார்க்கிறானும் இந்திரன்.

பலவேறு தேவர்களும் பலவேறு ஆபரணங்கள் அனுப்பி யிருக்கிறார்களாம். தேவ சம்பத்திலும் குபேர சம்பத்து விசேஷமல்லவா? அந்த முதளாளியே, 'இந்த அழகான மார்புக்கு இந்த முத்து வடம் முதலானவையே பொருத்தமானவை என்று அவற்றைக் கொணர்ந்து சமர்ப்பித்துத் தொழுது நிற்கிறானும்.

இன்னும் கடலில் கிடைக்கும் விசேஷ நன்முத்துகளால் ஓர் ஆரமும், ஜாதிப் பவளத்தால் ஒரு வடமும். சங்கு வளைகளும் கடலின் ராஜாவான வருணனே அனுப்பியிருக்கிறானும்.

ஓதக் கடலில் ஒளிமுத்தின் ஆரமும்,
சாதிப் பவளமும், சந்தச் சரிவளையும்,
'மாதக்க' என்றும் வருணன் விடுதந்தான்:
சோதிச் சுடர்முடியாய்! தாலேலோ;
சுந்தரத் தோளனே! தாலேலோ

[ஓதக்கடல் - அலைவீசும் கடல், சாதிப்பவளம் - சிறந்த பவளம். சந்தம் - அழகு. சரிவளை - முன்கை வளைகளும் தோள்வளைகளும். மா - சிறந்த. தக்க - தகுதியானவை. விடுதந்தான் - அனுப்பினான். முடியாய் - கிரீடத்தை அணிந்தவனே.]

என்று தாலாட்டுகிறாள். குழந்தையின் முக ஜோதியும் சுடர்களுமே ஒரு ஜோதி மயமான கிரீடம்போலத் தோன்றுகின்றன! இராஜாதி ராஜனும் தேவாதி தேவனுமாகிய குழந்தையல்லவா? கண்ணைப் பறிக்கும் அழகு

வாய்ந்த ஜோதிச் சுடர்முடி அகிலலோக ஆட்சிக்கும் மாட்சிக்கும் அறிகுறி. அந்த முடியழகிலிருந்து கண்களைப் பறித்துக்கொள்ள முடியுமா? முடியுமானால், பிறகு 'ஸக்வசக்தியின் அறிகுறியான இந்தச் சுந்தரத் தோள்களையே பார்த்துக்கொண்டிருக்கலாம்: இந்தச் சாந்தமான தோளழகிலிருந்து கண்களைப் பறித்துக்கொள்ளவே முடியாது!' என்று தோன்றுகிறது.

மகாலட்சுமியும் பரிசுகள் அனுப்பியிருக்கிறாளாம் இந்தக் குழந்தைக் காதலனுக்கு. அவள் செந்தாமரைப் பூவையே தன் இயற்கைப் பொற்கோவிலாகக் கொண்டு கொலுவிருக்கும் அழகு - ராணியல்லவா? எனவே, பொன்னாலும் இரத்தினங்களாலும் செய்த ஆபரணங்களுக்குமாறாகத் துளசிமாலையும் பூமாலையும் அனுப்பியிருக்கிறாள்!

அந்த மாலைகளைப் பொன்னாபரணங்களுக்கும் இரத்தினாபரணங்களுக்கும் மேலானவை என்று மதிக்கிறது தாயுள்ளம். அந்தத் துளசி மாலையைப் பார்த்துப் பார்த்து அந்த மனோஹரமான வாசனையில் ஈடுபட்டு, 'காட்டிலுள்ள பரிமளம் மிக்க துளசியைத் தேர்ந்தெடுத்து இந்த மாலை எவ்வளவு அழகாய்த் தொடுக்கப்பட்டிருக்கிறது!' என்று மகிழ்ச்சியடைகிறாள். 'இந்தப் பூமாலையோ இன்னும் அதிசய அழகுவாய்ந்தது, இந்தப் பூக்கள் இந்த உலகத்திலுள்ள எந்தக் காட்டில் தேடினாலும் கிடைக்காத அபூர்வமான பூக்கள்! வானுலகமாகிய சொர்க்கலோகத்திலே காடு காடாய்ச் செழித்துத் தழைத்திருக்கிறது என்கிறார்களே, அந்தக் கற்பகச் சோலையிலிருந்து பறித்த பூக்களால் தொடுத்த மாலை இது!' என்றெல்லாம் மகிழ்ந்து போகிறாள். பெரியாழ்யார் - யசோதையல்லவா? பூமாலையிலும் துளஸிமாலையிலும் இவ்வளவு மோகம்!

குழந்தைக் கண்ணனே அழுது கொண்டேயிருக்கிருன். 'இப்படிப்பட்ட மாலைகள் அழகனுகிய உனக்குத் தானம்மா அழகுத் தெய்வமே ஆசைப்பட்டு அனுப்பியிருக்கிறது. அழாதே, அழாதே ; தூங்கு தூங்கு' என்று தாலாட்டுகிருள் தாய்,

செல்வத்தின் அதிதேவதையான மகாலட்சுமியைப் போல் பூமி தேவியும் பரிசுகள் அனுப்பி யிருக்கிருளாம். சக்திக்கும் கொடுமைக்கும் அறிகுறியான துர்க்காதேவியும் கண்ணுக்கு மை கொண்டுவந்து காத்திருக்கிருளாம்; நெற்றிக்குச் சிந்தூரம் கொண்டுவந்திருக்கிருளாம் ; மேனியில் பூசிக்கொள்ள வாசனைப்பொடி கொண்டு வந்திருக்கிருளாம். ஆகவே,-

ஐயா ! அழேல் அழேல் ; தாலேலோ

என்று அருமையாகக் கொஞ்சிக் கொஞ்சித் தாலாட்டுகிருள்.

கண்ணனைத் தொட்டிலில் கண் வளர்த்தி அந்தத் தொட்டிலுக்குப் பக்கத்தில் தாமே யசோதையாக நின்று தாலாட்டிக்கொண்டே பெரியாழ்வார் பாடிய இந்தத் தாலாட்டுப் பாடல்கள், பக்தர்களுக்கு ஓர் அருமையான பக்தி - விருந்தாயிருப்பதோடு, ரஸிகர்களுக்கும் ஒரு தமிழ் விருந்து.

## 21. அம்புலி மாமா ! வாவா !

மாலைப்பொழுது, நெற்றியிலே சுட்டி அசையத் தவழ்ந்து போகிறது குழந்தை. அரையிலே சதங்கை 'கிண்கிண்' என்று ஒலிக்கப் போய்ப் புழுதி அளைகிறது, 'என்னடா கூத்து, கையெல்லாம் புழுதி யாக்கிக் கொண்டு ? ' என்று சொல்லிக்கொண்டே, குழந்தையின் சேஷ்டைகளில் குதூகலம் அடைந்தவளாய் வருகிருள் யசோதை.

சந்திரோதயம் கண்டதும், 'அடே சந்திரா! இந்தக் கூத்தை நீயும் பார்க்க வந்துவிட்டாயா? நல்லது, பார்த்துப்போ!' என்கிறாள் :

தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்,
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப் புழுதி அளைகின்றான் :
என்மகன் கோவிந்தன் கூத்தினை இளமாமதீ!
நின்முகம் கண்ணுள ஆகில், நீ இங்கே நோக்கிப்போ!

[தூங்க - தொங்கி அசைய. கிண்கிணி - அரைச் சதங்கை. ஆர்ப்ப - ஒலிக்க. இளமாமதி - அழகிய இளஞ் சந்திரனே. நின் - உன்.]

'குழந்தைச் சந்திரா! என்னுடைய குழந்தைக் கோபாலன் விளையாடும் விளையாட்டைப் பார்; முகத்திலே கண்படைத்தவர்களெல்லாம் பார்க்கவேண்டிய விளையாட்டு! என்கிறாள். 'இவனுடைய விளையாட்டைப் பார்ப்பதுபோல் நீ இவன் கண்ணிலே தென்படவேணும்' என்கிறாள். இப்படிச் சந்திரனை அழைப்பதுபோல், குழந்தைக்கு அம்புலி காட்டி விளையாட ஆசைப்படுகிறது தாயுள்ளம்.

புழுதியைத் துடைத்துப் பிள்ளையை ஒக்கலில் வைத்துக் கொள்கிறாள். வைத்துக் கொண்டதும் அமிர்த பானம் செய்ததுபோலே ஆனந்தவெறி தாயாருக்கு! 'எனக்கு ஓர் இன்னமுது எம்பிரான்!' என்று பூரித்துப் போகிறாள். சந்திரனைக் கண்டதும் கண்ணன் கைகளை நீட்டுகிறான். 'என் செல்லம், என் சிறுகுழந்தை, தன் அருமைச் சிறு கைகளைக் காட்டி அழைக்கிறான்; இரண்டு கைகளாலும் அழைக்கிறானே! எத்தனை தரம் அழைக்கிறான், பார்! - "விளையாட வா" என்று அழைக்கிறான்; அட, சந்திரா! உனக்கு ஆசையில்லையா இவனோடு விளையாடுவதற்கு?' என்று கொஞ்சுகிறாள் தாய். குழந்தையும் கொஞ்சி அழைக்கிறது, தன்மழலை

முற்றாத இளஞ்சொல்லால், 'அம்புலி அம்மா! வா, வா' என்று.

அதே சமயத்தில் சந்திரன் மேகத்திலே மறைந்து போகிறது. உடனே யசோதை,

மஞ்சில் மறையாதே, மாமதீ! மகிழ்ந்(து) ஓடிவா

[மஞ்சில் - மேகத்திலே. மாமதீ - அழகிய சந்திரனே.]

என்று வேண்டிக்கொள்கிறாள்.

'அந்தத் திரைக்குள்ளே மறைந்து போகாதே. அப்படி யெல்லாம் பிகு பண்ணவேண்டாம், ஓடிவா' என்றெல்லாம் மறைந்து கொண்டிருக்கும் 'அம்புலி மாமா' வோடு பேசுவதுபோல் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கும் போதே, மேகத்திலிருந்து வெளிப்பட்டு மறுபடியும் வந்துவிடுகிறது பூர்ண சந்திரன்; முன்னிலும் அழகாய்த் தோன்றுகிறது.

அந்தச் சந்திர வட்டத்தையும் புத்திர ரத்தினத்தின் முக சந்திரனையும் ஒப்பிட்டுப் பார்க்கிறாள் யசோதை. பார்த்து, 'சந்திரா! உனக்கு அவ்வளவு கர்வமா? க்ஷயமும் களங்கமும் நீங்கிவந்தாலும், உன் அழகு எங்கே, என் மகன் அழகு எங்கே?' என்கிறாள்.

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்
எத்தனை செய்யிலும் என்மகன்முகம் நேர் ஒவ்வாய்!

[நேர் ஒவ்வாய் - பூர்ணமாய் ஒப்பாக மாட்டாய்]

என்று முடிவு கட்டுகிறாள். அந்த 'ஒளிவட்டம்' சுற்றிச் சூழ்ந்து பார்த்துப் பார்த்து எப்படி யெல்லாம் தன்னைத் திருத்தித் திருத்தித் திரைமறைவிலே போய்ப் போய் எத்தனை விதமாக அழகு செய்துகொண்டு எவ்வளவு ஜோதியைப் பரப்பிவந்த போதிலும், தன் மகனுடைய முகத்திற்கு ஒப்பாகாதென்று சொல்லுகிறது

தாயின் இதயம். கண்ணன் கைநீட்டிக் கூப்பிட்டுக் கொண்டேயிருக்கிறான்.

கைத்தலம் நோவாமே,
அம்புலீ! கடி (து) ஓடிவா!

[நோவாமே - வலி எடுக்காதபடி. கடிது-விரைவாக.] என்று பரிந்து தாயும் சிபார்சு செய்கிறாள். 'கைவலிக்குமே குழந்தைக்கு, தாமதம் செய்யாமல் வந்துவிடு. மெள்ள வந்தால் போதாது, ஓடிவா' என்று தாய் சொல்லக் குழந்தை ஒக்கலில் இருந்து அம்புலியையே விரலால் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறது.

யசோதை நயமும் பயமுமாய் எச்சரிக்கை செய்கிறாள் சந்திரனுக்கு;

சக்கரக் கையன் தடங் கண்ணால்
மலரவிழித்து
ஒக்கலை மேலிருந்(து), உன்னையே
சுட்டிக் காட்டுங்காண்;
தக்க(து) அறிதியேல், சந்திரா!
சலம் செய்யாதே,
மக்கள் பெறாத மலடன்
அல்லையேல், வா, கண்டாய்!

[சக்கரக் கையன் - சக்கர ரேகையோடு கூடிய கையை யுடையவன்; சக்கராயுதத்தைக் தரித்துச் சுழற்றக்கூடிய கையையுடையவன். தடங்கண் - விசாலமான கண்கள். தக்கது - தகுதியானது. அறிதியேல் - அறிவாயாகில். சலம் - கபடம்.]

'இவனைக் குழந்தையென்று அலட்சியம் செய்து விடாதே, சந்திரா! ஜாக்கிரதை, ஜாக்கிரதை; சக்கரத்தைச் சுழற்றி உன்னைப் பயமுறுத்தக்கூடிய கையல்லவா இப்போது தயவாக அழைக்கிறது?' என்று கொஞ்சம்

பயமுறுத்தப் பார்க்கிருள். உடனே நயமாகப் பேசுவது தான் நலமென்று கருதியவளைப்போல் மகிழ்ச்சியால் மலர்ந்த குழந்தைக் கண்களைக் குறிப்பிட்டு, 'இந்தக் கண்களால் உன்னை எவ்வளவு உத்ஸாகமாய்ப் பார்க்கிருன், பார்; கபடம் பண்ணுமல் வா! நீ மக்கள் பெருத மலடனில்லை யாளுல், குழந்தையை வருத்தப்படுத்தாமல் வந்து விடு' என்கிருள். எனினும் 'வாகண்டாய்' என்று கொஞ்சம் கண்டிப்பாகவே—கொஞ்சம் 'கெடுபிடி' யாகவே'பேசுகிருள்.

'நீ மலடனு? குழந்தைக்குக் கை வலிக்குமென்று தெரியவில்லையா? என்றவள், 'நீ செவிடனு? குழந்தை கூப்பிடுவது காதில் விழவில்லையா?' என்றும் கேட்கிருள்.

அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுரு
மழலைமுற்ருத இளஞ்சொல்லால் உன்னைக்
[கூவுகின்ருன்;
குழகன் சிரீதரன் கூவக்கூவநீ போதியேல்,
புழையில ஆகாதே நின்செவி, புகர்மாமதீ!

[அமுத ஊறல் - அமிர்தம்போல் ஊறும் ஜலம் கூடிய தெளிவுரு - தெளிவில்லாததாய்; உருத் தெரியாததாய். அழகன். பிறர்க்கு இணங்குகிறவன்.கு சிரீதரன் - ஸ்ரீதரன். ஆகாதே - இங்கே ஆகாதோ.]

ஸ்ரீகிருஷ்ணனுடைய அழகிய வாயில் ஊறும் அமிர்தத்திலே தோய்ந்து வருகிறதாம் மழலைச் சொல். அது மழலையும் முற்ருத இளஞ் சொல் என்கிருள். மழலை முற்ருத இந்த அமிர்தமான இளஞ் சொல்லும் காதில் விழவில்லையென்ருல், காதில் துளையில்லையோ?—என்றே சந்தேகப்படுகிருள். 'கண்படைத்த பயன் கண்ணன் விளையாட்டைப் பார்ப்பது! என்று தீர்மானித்தவள், காது படைத்த பயன், கண்ணன் மழலைச் சொல்லைக் கேட்பது' என்று சித்தாந்தம் செய்கிருள்.

இப்படியெல்லாம் அம்புலி காட்டி விளையாட்டுக் காட்டி வரும்போதே, கொட்டாவி வந்துவிடுகிறது குழந்தைக்கு. அப்போது தாய், 'பிள்ளைக்கு உறக்கம் வருகிறது; வந்துகொண்டிருக்கிறது; வந்துவிட்டது! ஆகாசத்திலிருந்து நீயும் வந்துவிடு; சந்திரா! விரைந் தோடி வந்துவிடு' என்கிறாள்—குழந்தையின் தூக்கத் தைத் துரிதப் படுத்துவதற்காக!

கண் துயில் கொள்ளக் கருதிக் கொட்டாவி கொள் கிறான் என்று, சந்திரனைத் துரிதப்படுத்துவதுபோல்,

விண்தனில் மன்னிய மாமதீ! விரைந்தோடிவா

[விண் - ஆகாசம். மன்னிய - பொருந்திய.]

என்கிறாள்.

பாலகன் என்று பரிபவம் செய்யேல்!

[பரிபவம் செய்யேல் - குறைவாக நினைத்துவிடாதே]

சிறியன் என்(று) என் இளஞ் சிங்கத்தை

[இகழேல் கண்டாய்!

[இகழேல்—இகழாதே.]

என்று மறுபடியும் எச்சரிக்கை செய்கிறாள்.

இப்படியெல்லாம் அம்புலி காட்டி விளையாடிக் குழந்தையை உறங்கப் பண்ணும் தாயுணர்வுகளுக் கிடையே பக்தியுணர்ச்சியும் ததும்பி வருகிறது. அதனால் தான் கண்ணனைச் 'சக்கரக் கையன்' என்கிறார்; 'சிரீதரன்' என்கிறார்; 'வித்தகன், வேங்கடவாணன்' என்கிறார். 'தண்டொடு சக்கரம் சாரங்கம் ஏந்தும் தடக்கையன்' என்கிறார்.

இந்தப் பதிகத்தின் இறுதியில் பக்தியுணர்வு அதிகரித்துவிடுகிறது. எனவே,

ஆலின் இலை வளர்ந்த சிறுக்கன் அவன்! இவன்
சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்று
[கேள்!

என்று சொல்லுகிறவரும் ஆழ்வார்தாம், யசோதையல்ல; எனினும் இப் பதிகத்திலும் நமது பக்த மணியின் பரிசுத்த மான தாயன்பும் கள்ளங் கவடற்ற குழந்தையுள்ளமும் வெளிப்படத்தான் செய்கின்றன.

## 22. ஆடும் அழகு

கண்ணன் பிறந்த அஞ்சாமாசம். தலையை நிமிர்த்திக்கொண்டு இங்கும் அங்கும் அசைந்து அசைந்து ஆடுகிறது குழந்தை. தாயாருக்கு, 'எல்லாக் குழந்தைகளும் இப்படித்தானே விளையாடும்' என்று இது அவ்வளவு சாதாரணமாய்த் தோன்றவில்லை. மேலும் மேலும் இந்த விளையாட்டைப் பார்த்து ஆனந்திக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

செல்வு பொலி மகரக் காது திகழ்ந்திலக,
ஐய! எனக்கொருகால் ஆடுக செங்கீரை;
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே.

[செல்வு - செல்வம். பொலி - பொலிகின்ற. செல்வு பொலி - செல்வத்திற்கு அறிகுறியான. மகரக் காது - மகர குண்டலங்களோடு கூடின காதுகள். திகழ்ந்து இலக - மிகவும் விளங்க. ஐய - ஐயனே; அழகனே. ஒரு கால் - ஒருவிசை. செங்கீரை - குழந்தைப் பருவத்து விளையாடல்களில் ஒன்று, ஆயர்கள் - இடையர்கள். போர் ஏறே - போர் செய்ய நின்ற ராஜசிம்மம்போன்றவனே.] என்று பாடுகிருள்.

கிருஷ்ணன் இரண்டு கைகளையும் முழங்கால்களையும் ஊன்றித் தலை நிமிர்ந்ததுமே, யசோதையின் உத்ஸாகத்திற்கு அளவில்லை. அப்படித் தலைநிமிர்ந்து ஆடும்போது, குழந்தையின் காதுகளிலுள்ள மகர குண்டலங்கள் பளிச்சுப் பளிச்சென்று மின்னுகின்றன. ஆயர்கோனும் தன்னுடைய கணவனுமாகிய நந்தகோபனுடைய செல்

வத்தின் அறிகுறியான குண்டலங்கள் ; ஆனால் இந்தக் 'குண்டலங்கள் கண்ணனுடைய காதுகளை அலங்கரிக்கின்றனவா ? அல்லது இந்த அழகிய செவிகள் தாம் குண்டலங்களுக்கு அழகு தந்து அவற்றைச் 'செல்வம் பொலி' யும் குண்டலங்களாகச் செய்து விடுகின்றனவா ? இந்தச் சந்தேகங்கள் யசோதைக்கு ஏற்படவில்லை, ஆபரணங்களுக்கும், ஆபரணமான குழந்தைக் கண்ணனின் குதூகலத்தையும் விளையாட்டையும் கண்குளிரக் கண்டு வாய்குளிரப் பாடிக் கொண்டிருக்கும்போது.

'எனக்காக ஒருதரம் ஆடவேணும், ஆடவேணும்!' என்று உள்ளம் குளிரச் சொல்லிச் சொல்லி அந்த விளையாட்டிலேயே அதிசயமாக ஈடுபட்டு,

ஐய! எனக்கொருகால் ஆடுக,

என்றும்,

அம்ம ! எனக்கொருகால் ஆடுக,

என்றும் கொஞ்சிக்கொண்டே யிருக்கிறாள்.

சில சமயங்களில், 'ஆனை ! ஆனை ! அழகர் ஆனை !' என்று குழந்தையை மடியில் வைத்துத் தாமே ஆட்டி மகிழும் தற்காலத் தாய்மார்போல் யசோதையும்,

ஆனை ! எனக்கொருகால் ஆடுக செங்கீரை ;
ஆயர்கள் போரேறே ! ஆடுக ஆடுகவே !

என்று கொஞ்சிக் கொஞ்சி ஆட்டிக்கொண்டிருக்கிறாள்.

கண்ணன் ஆடும்போது, தலையின் முன்புறத்திலே நெருங்கிச் சுருண்டு தொங்கும் ரோமம் தாழ்ந்து அசைந்தாடுகிறது. தாயார் ஆட்டும்போது குழந்தைக்கும் உத்ஸாகம் தான். அப் புன்னகையைக் கண்டதும் 'அம்மா' அப்படியே பூரித்துப் போகிறாள். அந்தப் புன்னகைக்கு, எந்தக் குண்டலம், வேறு எந்தப் பொன்னகை, எந்த

இரத்தின ஆபரணம்தான் ஈடாக முடியும்? எந்த முத்துக்குத்தான் இந்த அழகு, இந்த இனிமை உண்டு? இத்தகைய அழகை அப்படியே அனுபவித்துப் பாடி,

முத்தின் இளமுறுவல் முற்ற வருவதன் முன்
முன்னம் முகத்(து) அணியார் மொய்குழல்கள்
[அலைய,
அத்த! எனக்கொருகால் ஆடுக செங்கீரை!
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே.

[இளமுறுவல் - புன்சிரிப்பு. ஆர் - நிறைந்த. மொய் குழல்கள் - நெருங்கிய சுருண்ட ரோமங்கள். அத்த - அப்பனே.]

என்று குழந்தையை ஆட்டிக் கொண்டிருக்கும்போது, யசோதையின் இன்பம் கொஞ்சமோ?

'இன்னும் இளநகை முற்றவில்லை; முத்துப் போன்ற பற்கள் தோன்றும்படியாகச் சிரிக்கத் தெரியவில்லை; அதற்கு உரிய பருவமாகவில்லை!' என்றெல்லாம் தனக்குத் தானே சொல்லிக்கொண்டு அந்தப் புன்னகையிலே சொக்கிப் போகிறாள். அந்த மோகத்திலே,

அப்ப! எனக்கொருகால் ஆடுக செங்கீரை;
ஆயர்கள் போரேறே! ஆடுக, ஆடுகவே!

என்று கொஞ்சிக் கொஞ்சி ஆட்டிக்கொண்டிருக்கும் போதே, கிருஷ்ணனுக்கும் உத்ஸாகம் அதிகப்படுகிறது. இள நகை அப்போதே அதிசயமாக முற்றி வளர்ந்து கொஞ்சம் பெருநகையாவது போலத் தோன்றுகிறது. அப்போதுதான் முளைத்த சில பற்கள் தோன்றச் சிறிது வாய் திறந்து சிரிக்கிறான் கண்ணன். யசோதை அந்தச் சில பற்களைத்தான் கண்டாளா? சொர்க்கத்தையே கண்டுவிட்டாளா?

கோல நறும்பவளச் செந்துவர் வாயினிடைக்
  கோமள வெள்ளிமுளை போல்சில பல்இலக,
நீல நிறத்(து) அழகார் ஐம்படை யின்நடுவே
  நின்கனி வாய் அமுதம் இற்று முறிந்துவிழ,
ஏலும் மறைப்பொருளே! ஆடுக செங்கீரை;
  ஏழுலகும் உடையாய்! ஆடுக, ஆடுகவே!

[கோலம் - அழகு. நறும் பவளம் - நற் பவளம். செந்துவர்—அழகாய்ச் சிவந்திருக்கிற. கோமளம்—இளமை. இலக - இலங்க. அழகு ஆர் - அழகு நிறைந்த. ஐம்படை; குழந்தைகள் கழுத்தில் அணியும் (விஷ்ணுவின் பஞ்சாயுத உருவம் அமைந்த) ஒருவகை அணி. கனிவாய் - கனிபோன்ற வாய். ஏலும் - தகுதியான. மறைப்பொருள் - வேதப் பொருள்.]

என்ன அழகான குழந்தைச் சித்திரம், பாருங்கள்! பவளம்போன்ற உதடுகளுக்கிடையே கோமளமான வெள்ளி முளைபோல் சில பற்கள் இலங்குகின்றனவாம். கண்ணன், சிறிது வாய் திறந்து சிரிக்கும்போது 'பவளத்திற்கிடையே வெள்ளி யரும்புகள்!' என்று வியக்கும்படி விளங்குகின்றன அந்தச் சிறு பற்கள். அந்தப் பற்கள் தோன்ற அப்படிப் புன்சிரிப்பு வரும்போது, வாயில் ஊறும் நீர் இற்று இற்று விழுகிறதாம் அமிர்த தாரை விழுவது போலே. 'சாளை வாய்' என்று சொல்லுகிறோமே, அது மற்றக் குழந்தைகளுக்குத்தானே! நம்முடைய குழந்தையின் வாய் நீர் அமிர்தமல்லவா? இது தாயின் மன நிலை. யசோதையோ, பவளத்திற்கிடையே அற்புதமான வெள்ளி யரும்புகளையும் அமிர்தத்தையும் அதிசயமாய்க் கண்டு, அந்த அமிர்த தாரை நீல மார்பில் ஆபரணங்களின்மீது இற்று இற்று விழுவதையும் கண்டு, இந்த உலகத்தையே மறந்துவிடுகிறாள்!

'தாய் காணும் சொர்க்கம்!' என்று சொன்னால், இந்த யசோதைத் தாய்க்குப் போதாது. 'இது தாய் உடம்போடு காணும் பேரின்பம்—பரமபதம்!' என்றே சொல்லிவிடலாம். அதனால்தானே,

ஏலும் மறைப்பொருளே! ஆடுக செங்கீரை;
ஏழுகுலம் உடையாய்! ஆடுக ஆடுகவே

என்று பாடுகிறாள்.

'ஆபரணங்களுக்கெல்லாம் ஆபரணமான திருமேனி! இதற்குப் பொன்னகை வேண்டாம், புன்னகையே போதும்?' என்பதெல்லாம் யசோதைக்குத் தெரியும், நன்றாய்த் தெரியும். எனினும் தாயின் சபலம் இந்தத் தாய்க்கும் வந்துவிடுகிறது. எனவே, காதில் அசைந்தாடும் குண்டலங்களோடு மார்பில் அசைந்தாடும். 'ஐம்படைத் தாலி' என்ற அந்த ஆபரணத்துடனும் திருப்திவரவில்லை. நகைப் பெட்டியைத் திறந்து ஆபரணங்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக் குழந்தைக்குப் பூட்டிப் பார்க்கிறாள்—அழகை விலங்கிட்டுப் பூட்டிவைப்பதுபோல்.

ஏழுலகங்களுக்கும் பொது உடைமையான பேரழகை, வேதப் பொருளான 'அழியா அழகு' என்ற தத்துவத்தை,—தங்கள் குடிக்கே சொந்தமாகக் கருதி 'எங்கள் செல்வம் இது!' என்று பூட்டிவைத்து விளம்பரப் படுத்தும் சபலத்தை இதோ பாருங்கள்:

செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல்விரலில்
சேர்திகழ் ஆழிகளும் கிண்கிணியும், அரையில்
தங்கிய பொன்வடமும், தாளநன் மாதுளையின்
பூவொடு பொன்மணியும், மோதிரமும் கிறியும்

மங்கல ஐம்படையும், தோள்வளை யும்குழையும்,
மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக,
எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை;
ஏழுல கும்உடையாய்! ஆடுக, ஆடுகவே.

[செங்கமலக் கழல் - செந்தாமரைப் பூப் போன்ற அடிகளில். சிற்றிதழ் - சிறு—இதழ் - (அந்தச் செந்தாமரைப்பூவின்) சிறிய உள் இதழ். சேர்திகழ்—சேர்ந்து திகழும். ஆழி - ஒருவித மோதிரம். கிண்கிணி - சதங்கை. தாள - தாள் அல்லது காம்பு உள்ள. மாதுளையின் பூ - (இங்கே) மாதுளம்பூக்கோவை ஆபரணம். கிறி - மணிக் கட்டில் அணியும் சிறிய பவளவடம். குழை - காதணி. மகரம் - மகர குண்டலம். வாளி - காது மடல் மேல் அணியும் ஒருவகை அணி. சுட்டி - நெற்றிச் சுட்டி.]

செந்தாமரைப் பூவில் சிறிய இதழ்கள் போலத் தோன்றுகின்றவாம் கண்ணன் அடிகளில் சிறு விரல்கள். அந்த விரல்களுக்கும் நகை வேண்டுமா? செந்தாமரைப் பூவுக்கும், அதன் சிற்றிதழ்களுக்கும் அணிசெய்து அந்தச் செம்மையையும் பொலிவையும் அதிகப்படுத்த முடியுமா? யசோதை தெரியாதவளா? எனினும் அந்தப் பாதங்களுக்கும் விரல்களுக்கும் அணிகள் பூட்டினுள். பாதச் சதங்கைகளோடு அரைச் சதங்கை,—அரைஞாண். கைவிரல்களுக்கு மோதிரங்கள். மணிக்கட்டுக்குச் சிறு பவளவடம். தோளுக்கு வளைகள். ஐம்படைத்தாலி யென்ற மங்கள ரட்சையான நகையோடு, மாதுளம் பூக் கோவை, பொன்மணிக் கோவைகள். காதில் குண்டலங்களோடு வேறு காதணிகள்; காது மடலுக்குக்கூட அணிகள். நெற்றிக்குச் சுட்டி. போதுமா? நகைப் பைத்தியம் இன்று நேற்று ஏற்பட்டதா? யசோதை குழந்தைக் கண்ணனை அப்படியே நகையால் மூடி விட்டாள்!

ஆனால், அந்தத் திவ்ய அழகை அப்படியெல்லாம் மறைத்து விடமுடியுமா? அந்தத் திவ்ய மேனியைச் சார்ந்து ஆபரணங்களெல்லாம் திவ்யாபரணங்களாகி விட்டனவாம். அதனால்தான்,

மங்கல ஐம்படையும், தோள்வளை யும்குழையும்,
மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக,
எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை
ஏழுல கும்உடையாய்! ஆடுக ஆடுகவே

என்று பாடி உருகிக் குழந்தையை ஆட்டுகிறாள்.

ஆபரணங்களெல்லாம் ஒத்து இலங்குகின்றன என்று திருப்தியடைகிறாள் யசோதை. அழகை அதிகரிக்கச் செய்து பார்ப்பதில் மற்றத் தாய்மார்களுக்கும் ஆசை; இந்தத் தாய்க்கோ அழகை மறைத்துப் பார்ப்பதில் திருப்தியா? ஆனால் மற்றப்படி, கண்கொண்டு முற்றும் காண முடியுமா கண்ணன் கட்டழகை? 'ஏழுலகும் உடைய'—மறைகளும் எழுதிக் காட்ட முடியாத—அழகல்லவா? அந்த அழகை ஆபரணம் பூட்டி அன்பால் கட்டுப் படுத்தும் யசோதை,

எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை
ஏழுல கும்உடையாய்! ஆடுக, ஆடுகவே

என்றெல்லாம் ஆட்டிவைக்கிறாள்.

தூய நடம்பயிலும் சுந்தர! என்சிறுவா!

என்றும், 'என் கன்றே' என்றும் எவ்வளவு சொந்தம் பாராட்டி ஆட்டிவைக்கிறாள்!

## ஆட்டிவைக்கும் அழகு

ஆனால் இவளையும் பிறரையும், எல்லாவுலகங்களையும் ஆட்டி வைக்கும் பிள்ளையல்லவா அது? எனவே, யசோ

தையாக நடிக்கும் பெரியாழ்வார் அந்தப் பிள்ளையை 'ஏழுலகும் உடையாய்!' என்றும், 'மறைப் பொருளே!' என்றும், வெண்ணெய் உண்பதுபோல் மண்ணையும் வயிற்றில் வைத்துக் காக்கும் அப்பனே, அம்மையே!' என்றும், 'ஆத்மாக்களாகிய மாடுகளையெல்லாம் மேய்க்கும் ஆயனே' மாயனே!' என்றும் பொருள்படப் போற்றுகிருர், இந்தப் பதிகத்திலே.

'எனக்கு ஒரு கால் ஆடுக' என்று பிரார்த்தித்த யசோதைக்கும், தாயன்பு பூண்ட ஆழ்வாருக்கும் அருள் செய்த கண்ணனே நம்மையும் ஆட்டிவைக்கிருன்; நமக்கும் விளையாட்டுக் காட்டுகிருன். ஆம்; இந்த நாளிலும் தான், அன்பு - நெறியில் நிற்பவர்களுக்கு அழகன் அருள் செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிருன்! தாய் அன்று 'ஆனே! ஆனே!' என்று ஆட்டும்போது, கைக்கும் கங்கணம் கட்டினுள். 'இந்தக் கங்கணம் அழகிற்கா? அன்பர்களை ரட்சிக்கத்தானே!' என்று கள்ளக் கிருஷ்ணன் அப்போதே நினைத்திருப்பானல்லவா?

## கைகொட்டி விளையாடுதில்

கண்ணன் கைகொட்டி விளையாடுகிருன். அந்த விளையாட்டைப் பார்த்ததும், யசோதைக்கு அதையே பார்த்துக் கொண்டிருக்கலாமென்று தோன்றுகிறது. தானும் அவனைப்போல் ஒரு கையோடு மற்ருெரு கையைச் சேர்த்துக் கொட்டி 'இன்னும் விளையாடு; இன்னும், இன்னும் விளையாடு, விளையாடு' என்று சொல்லிக் கொண்டே யிருக்கிருள். கண்ணன் விளையாட்டுக்கு முடிவேயில்லையென்று தோன்றுகிறது.

கண்ணன் கைகொட்டி விளையாடும்போது, மாணிக்கத்தை உள்ளே இட்டுச் செய்த அரைச்சதங்கைகள் கிண்கிண் என்று ஒலி செய்கின்றன. அந்த அரையில் (மாற்றுயர்ந்த) ஆணிப் பொன்னுல் செய்த மணிக்கோவை

யின் அருமையான நிலைப்பாட்டைத்தான் என்னென்பது?

ஆனால் இந்தப் பிள்ளைக்கும் இந்த ஆபரணங்கள் அவசியமா? இவன் சிரித்துக் கைகொட்டும்போதே, அந்தப் பவளம்போன்ற வாயையும் முத்துக்கள் போன்ற பற்களையும் பார்த்துக்கொண்டிருப்பதே போதாதா?

மாணிக்கக் கிண்கிணி ஆர்ப்ப மருங்கின்மேல்
ஆணிப்பொன் னால்செய்த ஆய்பொன் னுடைமணி;
பேணிப் பவளவாய் முத்திலங்க, பண்டு
காணிகொண்ட கைகளால் சப்பாணி, கருங்குழல்
[குட்டனே! சப்பாணி!

[ஆர்ப்ப - ஒலிசெய்ய. மருங்கு - இடுப்பு. ஆணிப் பொன் - மாற்றுயர்ந்த பொன். ஆய் - ஆராய்ந்து செய்த. பேணி - விரும்பி. பண்டு - முற்காலத்திலே. காணி - நிலம், நிலவுரிமை. சப்பாணி - கைசேர்த்துக் கொட்டுதல். குழல் - (இங்கே) சுருண்ட ரோமம். குட்டன் - சிறு பிள்ளை.]

என்று கண்ணனைப் பார்த்துக் கைகொட்டி விளையாடும் படி கொஞ்சுகிறாள். இந்த விளையாட்டுக்குச் 'சப்பாணி கொட்டுதல்' என்று பெயர்,

பண்டு காணிகொண்ட கைகளால் 'சப்பாணி கொட்ட' வேணு மென்கிறாளாம். முற்காலத்திலே மகா பலிச் சக்கரவர்த்தி யிடமிருந்து இந்தக் கைகளே தமக்கு உரிய நிலத்தை வாங்கிக் கொண்டனவாம். சக்கரவர்த்தி அறியாமையினாலும், இராஜ குலச் செருக்கினாலும், ஸர்வாதிகாரத் திமிரினாலும் புஜபலமும் ஆயுத பலமுமுள்ள தனக்கே பூமி உரியதென்று எண்ணி யிருந்தான். அந்த அரசுரிமைச் செருக்கையும், 'நாம் நம்முடைய கை மேலும் பிறர் கை கீழுமாகச் செய்து தானங் கொடுத்து இரட்சிக்கிறோம்!' என்று அவன் எண்ணி

யிருந்த வண்மைச் செருக்கையும் போக்கி, 'உலகம் ஸர்வ ரட்சகனுன ஈச்வரனுக்கே உரியது!' என்று சித்தாந்தம் செய்த கைகளல்லவா கண்ணன் கைகள்?

இத்தகைய கைகளால் சப்பாணி கொட்டிக் கொண்டே கண்ணன் விளையாடிக் கொண்டிருக்கும் போது, தந்தையான நந்தகோபர் வந்து உட்கார்ந்து அந்த விளையாட்டைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். அப்போது தாய் குழந்தையைப் பார்த்து 'கண்ணு! கண்மணியே! என் மடியிலிருந்து இறங்கிப்போய் அவர் மடியிலிருந்து கைகொட்டு, பார்க்கலாம்' என்று கொஞ்சுகிருள். கண்ணனுடைய ஸர்வாங்க செளந்தரியங்களையும் தன் கணவன் மடியிலே கண்ணுரக் கண்டு அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை இப்போது தாயாருக்கு.

தங்க அரை நாணோடு மாணிக்கக் கிண்கிணியும் அரையிலே ஆடி ஒலிக்க, நெற்றிச் சுட்டி தாழ்ந்து ஆடக் குழந்தை தன் மடியிலிருந்து இறங்கிப் போகும்போது யசோதை,

> பொன் அரை நாணொடு மாணிக்கக் கிண்கிணி
> தன் அரை ஆடத் தனிச்சுட்டி தாழ்ந்தாட,
> என் அரை மேல்நின்(று) இழிந்(து) உங்கள் [ஆயர்தம்
> மன் அரை மேல்கொட்டாய் சப்பாணி! மாயவனே [கொட்டாய்ன் சப்பாணி!

[தனி - ஒப்பற்ற. இழிந்து - இறங்கி. ஆயர்தம் மன் - இடையர்களுக் கெல்லாம் தலைவரான நந்தகோபர், மாயவன் - அற்புதச் செயல்களையுடைய கண்ணன்.]

என்று பாடுகிருள்.

நந்தகோபர் மடியிலிருந்து சப்பாணி கொட்டி விளையாடும் பிள்ளையை மறுபடியும் தன் மடியிலே வந்து சிரித்து விளையாட வேண்டுமென்று அழைக்கிருள் தாய்.

'என் மணிவண்ணா! உன் மணிவாய் முத்திலங்கச் சிரித்து விளையாட வா இங்கே?' என்று அவள் அழைக்க, இவனும் அப்படியே மறுபடியும் அவள் மடியிலேறிக் கைகொட்டிச் சிரிக்கிறான். அந்த இரவிலே - அந்தப் பால் நிலாவிலே - முத்துச் சுடர்போன்ற அந்தக் குழந்தைச் சிரிப்பு நிலாவின் மேல் நிலாவைப்போல் படர்கிறது.

அப்போது தாய் சிரித்துக்கொண்டே குழந்தையைப் பார்த்து, 'நீ நிலா முற்றத்திலே போய் நின்று கொண்டு விளையாடு' என்கிறாள்.

> தூநிலா முற்றத்தே போந்து விளையாட
> வானிலா அம்புலீ ! சந்திரா! வாஎன்று—

[தூநிலா - வெண்மையான நிலா. போந்து - வந்து. வானிலா அம்புலி - வானத்திலே விளங்குகிற அம்புலியே.]

அழைத்துக்கொண்டே விளையாடு என்கிறாள்.

அப்படி 'அம்புலி மாமா'வை விளையாட அழைத்துக் கொண்டே நீ முற்றத்தில் நின்று அப்பா பூரித்துப் போகும்படியாகக் கைகொட்டி விளையாடு என்கிறாள்.

ஒரு சமயம் கண்ணன் புழுதியிலும் சேற்றிலும் விளையாடிவிட்டு அப்படியே வந்து அந்தச் சேற்றையும் புழுதி மண்ணையும் யசோதைமேல் பூசிவிட்டான். 'என்னடா சேஷ்டை! என்று சொல்லிக்கொண்டே அவள் தண்ணீரால் கழுவிக்கொள்ளப் போனாள். போனதும் கிருஷ்ணன் அவளுக்குத் தெரியாமல் உள்ளே போய்ச் சட்டித் தயிரையும் மிடாவில் வைத்திருந்த வெண்ணெயையும் காலி செய்துவிட்டான்! இந்தச் சேஷ்டைகளைக் கேள்விப்பட்டு நந்தகோபரும் இடையர்களும் பூரித்துப் போனார்களாம். தாயோ கோபம் வந்ததுபோல் பாசாங்கு செய்தாள்.

அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்துக்கொண்டு. 'அப்பேர்ப்பட்ட துஷ்டப்பிள்ளையே! இப்போது ஒன்றும் தெரியாத விளையாட்டுப் பிள்ளைபோல் கைகொட்டி விளையாடுகிறாயே! நல்லது, நல்லது; திருட்டு வெண்ணெய் செரிக்கவேணுமே! விளையாடு, விளையாடு' என்கிறாள்.

இப்படியெல்லாம் கண்ணனை விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கும் யசோதை திடீரென்று கண்ணனது எதிர்காலத்தையும் நிஜ ஸ்வரூபத்தையும் உணர்ந்து விட்டவள்போல்,

*தாரித்து நூற்றுவர் தந்தைசொல் கொள்ளாது*
*போர்உய்த்து வந்து புகுந்தவர், மண்ணாளப்*
*பாரித்த மன்னர்படப் பஞ்சவர்க்(கு) அன்று*
*தேர்உய்த்த கைகளால் சப்பாணி; தேவகி*
*[சிங்கமே! சப்பாணி.*

*[தாரித்து - தரித்து. உய்த்து வந்து - நடத்த வந்து. மண் - (இங்கே) இராஜ்யம். பாரித்த - ஆயத்தப் பட்ட. பட - அழிய. உய்த்த - செலுத்திய.]*

என்று பாடுகிறாள்.

எல்லாருக்கும் பரமபிதாவாகிய கண்ணனே தூது போய், 'பகைமை வேண்டாம், சமாதானமாக வாழுங்கள்' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாலும். அதற்கு இசையாமல் துரியோதனாதியர் 'வலிமையே உரிமை' என்ற கொள்கையுடன் கண்ணனை நம்பாமல் ஆயுத பலத்தை நம்பித் தங்கள் ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்தப் போருக்குப் புறப்பட்டார்கள். அப்போது அருச்சுன சாரதியாய்க் கண்ணன் தேர் நடத்தினான். அந்தத் தேர்ச் சக்கரமாகிய கால சக்கரத்திலே அகப்பட்டு நெரிந்து போனார்களாம் எதிரிகளெல்லாம். அப்படித்தேரை நடத்தின கைகளால் சப்பாணி கொட்ட

வேண்டும் என்று யசோதை பாடுகிருள், குழந்தைக் கண்ணனைப் பார்த்து!

யசோதையின் வேஷ ரகசியம் வெளிப்பட்டது. ஆம், பெரியாழ்வாரின் தாயுள்ளம் தரித்துக்கொண்ட வேஷம் தானே! எனவே, இந்த யசோதை முன்னும் பார்க்கிருள், பின்னும் பார்க்கிருள்: பின்னே அதர்மத்தைத் துரியோதனுதியர் வடிவில் அதம் செய்யப்போகும் கள்ளக் கிருஷ்ணனே, முன்னுளில் அதர்மத்தை ராவணுதி ராட்சஸர்களின் வடிவிலே வதஞ் செய்தானும்,

அப்படிப்பட்ட கைகளால் சப்பாணி கொட்டியருளவேண்டும் என்று பாடும் பெரியாழ்வாருள்ளம், இராமாவதாரத்திற்கு முன்னும் விரைந்து செல்கிறது. யசோதை வளர்க்கும் இந்தத் 'தேவகி சிங்கம்' உண்மையாகவே சிங்க உருவத்திலும் தர்மத்தைக் காப்பாற்றி இரணிய உருவத்திலே வந்த அதர்மத்தைப் பிளந்து தள்ளிவிட்டதாம்.

பலத்திற்கு மேலான பலத்தையும், கொடுமைக்கு மேலான கொடுமையையும் காட்டி இரணியனது பயங்கர ஆட்சியை அதி பயங்கர சொரூபத்தால் முடித்துவிட்ட அந்த லீலையை, அந்தச் சேஷ்டையைச் செய்தருளிய அதே ஸர்வ சக்திதான் இப்போது கண்ணனுகிக் கைதட்டி விளையாடுகிறதென்று பாடுகிருர் பெரியாழ்வார்.

அந்த நிகழ்ச்சியை நினைத்துப் பாடும்போதே, அந்தக் கோபாக்கினியும் பயாக்கினியும் சாந்த மயமான பெரியாழ்வார் வாக்கிலும் ஜொலிப்பதுபோலத் தோன்றுகிறது:

அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய்
உளம்தொட்(டு) இரணியன் ஒண்மார் பகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி! பேய்முலை
[உண்டானே! சப்பாணி!

[அளந்திட்ட - தானே அளந்து பொருந்தப் பார்த்துக் கட்டிய. வாள் உகிர் - கூர்மையான நகங்கள். தொட்டு - சேர்த்துப் பார்த்து. ஒண் மார்பு - ஒளி பொருந்திய மார்பு.]

துஷ்டர்களை (அசுரராளுலும்) நிக்கிரகம் செய்யும் துஷ்டப்பிள்ளை, தாய்போல் வந்த பேயையும் வதஞ் செய்துவிட்டான்! எனவே, கிருஷ்ண சக்தி அக்கிரமத்தையும் அழித்துவிடும்; பொய் வேஷத்தையும் கிழித்து விடும்! அப்படி அசுர சக்திகளையும், வேஷம் போடும் மோசங்களையும் ஒருங்கே அழிக்கும் கைகளால் சப்பாணி கொட்டியருளவேண்டும் என்கிறார் பெரியாழ்வார்.

## நடை பயிலும் அழகு

காலை நிலத்தில் பதியவைத்து நடக்கத் தெரியாமல் தட்டித் தடுமாறி நடக்கிறான் கண்ணன். ஓர் அடி வைத்துக் கொஞ்சம் தளர்ந்து, சில விநாடிகள் கழிய இன்னும் ஓர் அடிவைத்துக் கொஞ்சம் சோர்ந்து, இன்னும் சில விநாடி கழிய மறுபடியும் காலை மெள்ளத் தூக்கிவைத்து நடை பழகும் அந்த அழகை மீண்டும் மீண்டும் பார்த்தனுபவிக்க ஆசைப்படுகிறாள் யசோதை. பெரியாழ்வார் தம்மை அவளாகப் பாவித்து அந்த ஆசையைப் பாசுரமிட்டுப் பேசுகிறார்:

தொடர்சங்கிலிகை சலார்பிலார்என்னத்
தூங்குபொன் மணிஒலிப்ப,
படுமும்மதப்புனல் சோர,வாரணம்
பையநின்(று) ஊர்வதுபோல்,
உடன்கூடிக் கிண்கிணிஆரவாரிப்ப,
உடைமணி பறைகறங்க,
தடந்தாளிணைகொண்டு சார்ங்கபாணி
தளர்நடை நடவானோ?

[சங்கிலிகை - சங்கிலி. தூங்கு - தொங்குகின்ற. பொன்மணி - பொன்கயிற்றில் கட்டிய மணிகள். ஒலிப்ப- ஒலி செய்ய. படு - உண்டான. மும்மதப்புனல் - மூன்று வகையான மதநீர். சோர - பெருக. வாரணம் - யானை. பைய - மெள்ள. கிண்கிணி - காற் சதங்கை. உடைமணி - அரையில் கட்டிய சிறுமணிகள். பறை கறங்க - பறை போல் சப்திக்க. தடந் தாளிணை - பெரிய பாதங்கள் இரண்டு. தளர்நடை - இள நடை.]

கண்ணன் தளர் நடை நடக்கும்போது அரைச் சதங்கை நழுவி விழுந்து அடிகளில் இழுப்புண்டு சப்திக்கிறதாம். நடக்கும் ஆயாசத்தால் உடம்பில் வேர்வை பெருகுகிறதாம். மதங்கொண்டு கட்டுத்தறியை முறித்துக் காலில் இட்ட இருப்புச் சங்கிலியைச் சலார்பிலார் என்று இழுத்துவரும் யானை யொன்று, இருபுறத்திலும் தொங்கும் மணிகள் ஒலிக்க மதநீர் பெருக மெல்ல நடந்து வந்தால் எப்படியிருக்குமோ, அப்படியிருக்கிறதாம் வெண்ணெய் உண்டு 'மதமத' வென்று வளரும் பிள்ளை தளர் நடை நடந்துவருவதும். அந்த நடையை மேலும் மேலும் பார்க்க ஆசைப்படுகிறது பெரியாழ்வார்-யசோதையின் உள்ளம்.

அப்படி நடக்கும்போது, புன்முறுவல் செய்து கொண்டே குழந்தை வரும் அழகு உள்ளத்தை உருக்குகிறது. சில சமயங்களில் கணகணவென்று வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே வாய்நீர் வழிய வந்து தாயாருக்கு முத்தம் கொடுப்பானும். அந்த ஒவ்வொரு முத்தத்திலும் தாயுள்ளம் தளிர்க்கிறது, தழைக்கிறது. ஒரு சமயம் அண்ணனான பலராமன் என்ற 'குட்டி வெள்ளிமலை' கால் கொண்டு முடுமுடுவென்று விரைந்தோட, குட்டிக் கருமலை பெயர்ந்து அடியிடுவது போலக் கண்ணன் ஒவ்வோர் அடியாக எடுத்தெ தடுத்து வைத்து, அவனைப் பிடிக்கப்

பின்தொடர்கிறுனும். அந்த அழகையும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தாயுள்ளம் ஆசைப்படுகிறது.

அச்சோ! அச்சோ!

குழந்தை தாயின் இடுப்பில் ஏறுவதற்காக ஓடிவந்து தாயைத் தழுவி அணைத்துச் கொள்கிறதல்லவா? அப்படிச் செய்வது குழந்தைக்கும் இன்பம், தாய்க்கும் இன்பம் என்று சொல்லவேண்டியதில்லை. தாயே போய்க் குழந்தையைத் தழுவி யெடுத்துத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொள்வதைப் பார்க்கிலும், குழந்தை தானே வந்து தன்னைத் தழுவி அணைத்துக்கொண்டு இடுப்பில் எடுத்துக் கொள்ளும்படியாகச் சைகை செய்வதும், வற்புறுத்துவதும், அதிக இன்பமல்லவா? கண்ணனும் தாயாகிய யசோதைப் பிராட்டியிடம் ஓடிவந்து அவளை அணைத்துக் கொண்டு தன்னை இடுப்பில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கொஞ்சியிருப்பான்; சொல்லாமல் சொல்லியிருப்பான்; தொந்தரவு கொடுத்திருப்பான், ஹிம்ஸித்திருப்பான்! அந்த நிலையில் யசோதை பரமானந்தம் அனுபவித்திருப்பாளல்லவா?

அவள் அவனுக்கு அரைச்சதங்கை, காற் சதங்கை, நெற்றிச்சுட்டி முதலியவற்றைப் பொன்னுல் செய்து அணிந்து அழகு பார்த்துக்கொண்டிருப்பாள். அவன் சமீபத்தில் வரும்போதும் அந்த அழகைப் பார்த்து அனுபவிப்பாள்; அவன் தூரத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போதும் பார்த்துக் கொண்டிருப்பாள்; அப்படி ஒரு சமயம் விளையாடிக் கொண்டிருக்கும்போதே குழந்தை தாயாரை நினைத்துக்கொண்டு ஓடிவந்து விடுகிறது; எதிரே வந்து அணைத்துக் கொள்கிறது. வரும்போதே 'சலன் சலன்' என்று சதங்கைகள் சப்திக்கின்றனவாம். நீலமேகம் மின்னலோடு வருவதுபோல் ஓடி வருகிருன் கண்ணன். அப்படிவந்து அணைத்துக்கொண்டு இடுப்பில்

ஏறிக்கொள்வதை அவனுக்கு இஷ்டமான சமயத்தில் மட்டும் அல்ல; தனக்கு இஷ்டமான வேறு சமயங்களி லும் அனுபவிக்க ஆசைப்படுகிறது தாயின் உள்ளம். அப்படி விரும்பும்போது ஒருசமயம்,

பொன் இயல் கிண்கிணி சுட்டி புறம்கட்டி
தன் இயல் ஓசை சலன் சலன் என்றிட,
மின் இயல் மேகம் விரைந்(து)எதிர்
[வந்தாற்போல்—

[பொன் இயல் - பொன்னால் செய்த. தன் இயல் - தனக்குப் பொருந்திய. மின் இயல் - மின்னலோடு பொருந்திய.]

வந்து தன்னை அணைத்துக் கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறாள். 'சலன் சலன்' என்று சதங்கை கள் சப்திப்பது, மின்னலோடு தோன்றும் மேகத்திலே சின்னஞ் சிறு இடிகள் இடிப்பதை ஞாபகப்படுத்து கிறதாம்.

கண்ணன் தன்னை அணைத்துக்கொள்வதை இப்படி யெல்லாம் நினைக்கும்போதே தாயின் உள்ளம் ஆனந்தத்தில் முழுகிவிடுகிறது. அந்த ஆனந்தத்திலே அந்த நெஞ்சு உருகி உருகிச் சொல் இடிந்து வாய்விட்டு நன்றாக வெளிப்படவில்லையாம். அந்த ஆச்சரியத்தை 'அச்சோ' என்று குறிப்பிடத் தொடங்கியவள், 'அணைத் துக்கொள்' என்று சொல்வதையும் மறந்து ஒரு தரத் திற்கு இரண்டுதரம் 'அச்சோ! அச்சோ!' என்று சொல்லிவிட்டு அப்படியே நின்றுவிடுகிறாள்.

கண்ணன் ஓடி விளையாடுவதற்குமுன் தலையை வாரி விட்டிருந்தாள் யசோதை. ஆனால் அந்த விளையாட் டிலே ரோமங்கள் கலைந்து பிரிந்து அந்தச் செந்நிறமான வாய்வரை தொங்கிக்கொண்டிருந்தனவாம்,—செந் தாமரைப் பூவிலே வண்டுகள் மொய்த்துக் கிடப்பது

போலே. அந்த நிலையிலேயே கண்ணன் ஓடிவந்து தன்னைத் தழுவிக் கொள்ளவேணும் என்று ஆசைப்படுகிறாள் ;

செங்கமலப் பூவில் தேன்உண்ணும் வண்டேபோல்
பங்கிகள் வந்(து)உன் பவளவாய் மொய்ப்ப,
சங்குவில் வாள்தண்டு சக்கரம் ஏந்திய
அங்கைகளாலே வந்(து) அச்சோ! அச்சோ!
ஆரத்தழுவா வந்(து) அச்சோ! அச்சோ!

[செங்கமலம் - செந்தாமரை, பங்கி - (இங்கே) ஆண் மயிர், பவளவாய் - பவளம்போல். சிவந்தவாய். தண்டு - கதாயுதம். அங்கை - அழகிய கை, ஆரத்தழுவா - திருப்தி உண்டாகும்படி நன்றாய்த் தழுவி.]

யசோதையின் உணர்ச்சிகளோடு பெரியாழ்வாரின் தாயன்பும் அபேதமாய்க் கலந்துவிடுகிறது. அதனால் தான் சங்கு முதலான பஞ்சாயுதங்கள் ஏந்திய அந்த அழகிய கைகளால் தழுவிக்கொள்ளவேணும் என்று வேண்டுகோள். குழந்தைக் கண்ணன் பெரியாழ்வாருக்குத் தெய்வக் குழந்தை, குழந்தைப் பெருமாள். இதே உணர்ச்சியும் அன்பும் கொண்டு வெளிப்படுகிறது பின்வரும் வேண்டுகோளும்:

பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து,
நஞ்(சு)உமிழ் நாகம் கிடந்தநற் பொய்கைபுக்(கு)
அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட்(டு) அருள்செய்த
அஞ்சன வண்ணனே! அச்சோ, அச்சோ!
ஆயர் பெருமானே! அச்சோ, அச்சோ!

[பஞ்சவர் - பஞ்ச பாண்டவர். கை - உப சர்க்கம் நஞ்சு உமிழ் - நஞ்சை உமிழ்கின்ற, நாகம் - காளியன்

என்ற சர்ப்பம். நற்பொய்கை - (இங்கே) கொடிய மடு, புக்கு - புகுந்து, பணம் - படம்.]

காளியனை அடக்கியது முன்னும் பாரதப் போரை நடத்தியது பின்னும் நிகழ்ந்ததாயினும், பெரியாழ்வாரின் தாயன்பு அந்தச் சரித்திர முறையையும் மறந்துவிடுகிறது. ஆம்; அந்தத் தெய்வக் குழந்தையின் சக்தி மயமான வடிவழகில் அப்படி மயங்கிப் போகிருள் பெரியாழ்வா ராகிய யசோதை!

பாரதப்போரை நினைத்ததும், அந்தக் கொடிய போரைத் தடுக்கலாமா என்று கண்ணன் தூதுபோன ஞாபகமும் வருகிறது. அந்தத் துரியோதன சபையிலே ராஜாக்கள் சூழ அந்த ராஜாதி ராஜன், சூரியனே அங்கு உதயமாகி விட்டதுபோல் அவ்வளவு மாட்சியோடு கொலு விருக்கிருன். 'கண்ணன் வந்ததும் ஒருவரும் எழுந்திருக்கலாகாது, மரியாதை செய்யக்கூடாது, யோக க்ஷேமம் விசாரிக்கக் கூடாது' என்றெல்லாம் கட்டளை யிட்டிருந்தான். அந்தக் கட்டளையை மற்றவர்கள் மறந்து கண்ணனுக்கு மரியாதை செய்ததுகூட ஆச்சரியம் இல்லை; கட்டளை யிட்டவனே கண்ணனைக் கண்டதும் தன்னை மறந்து முதலில் எழுந்திருந்து நிற்கிருனும்; உடனே வெட்கப்பட்டு மறுபடியும் உட்கார்ந்து கொள்கிருனும், தான் எழுந்தது ஒருவருக்கும் தெரியாது என்று தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு. அப்போது கண்ணன் தனக்காக இட்டிருந்த பொய்யாசனத்திலே போய் அலட்சியமாக உட்காருகிருன். உட்காரும்போதே அது நெறுநெறு என்று முறியக் கண்ணன் பேருரு எடுப்பதற்கு முன், தன்னையும் வஞ்சிக்கப் பார்த்த அந்தத் துரியோதன மன்னனை ஒரு பார்வை பார்க்கிருன். அந்த பார்வையே அவனை வம்ச நாசம்செய்யும் தீயைப்போல ஜொலிக்கிறது. அந்த நிலையில் அச்சபையைப் பெரியாழ்வார் அந்தக் கண்ணனோடு படம் பிடித்துக் காட்டுகிருர்:

கழல்மன்னர் சூழக் கதிர்போல் விளங்கி
எழலுற்று மீண்டே இருந்(து)உன்னை நோக்கும்
சுழலைப் பெரிதுடைத் துச்சோ தனனை
அழலவிழித்தானே, அச்சோ, அச்சோ!
ஆழியங்கையனே, அச்சோ, அச்சோ!

[கழல் - வீரக்கழல், கதிர் - சூரியன். எழல் உற்று - முதலில் எழுந்திருந்து. மீண்டே - மறுபடியும். சுழலை - ஆலோசனை. துச்சோதனன் - துரியோதனன். அழல - உஷ்ணமாக. ஆழி - சக்கராயுதம்.]

இப்படிப்பட்ட தெய்வக் குழந்தை, குழந்தைத் தெய்வம், என்னைவந்து தழுவிக் கொள்ளவேணும்—என்று பிரார்த்திக்கிறார் யசோதையாகிய பெரியாழ்வார்.

இப்படியெல்லாம் தாயன்பும் பக்தியும் கலந்து ஒன்றையொன்று தழுவி அணைத்துக் கொள்கின்றன, பெரியாழ்வாரின் இந்தப் பதிகத்திலே. இவர் கண்ணனை 'நச்சுவார் முன் நிற்கும் நாரயணன்' என்கிறார், பதிகத்தின் இறுதிப் பாட்டிலே. அதாவது, தன்னை விரும்பிப் பக்தி செய்கிறவர்களுக்கு முன்னே நாராயணனாகிய கண்ணன் அவர்கள் விரும்புகிற உருவத்துடன் அருள் செய்யச் சித்தமாக வந்து நிற்கிறானாம். பாரதப்போரில் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்த பகவான் தமக்கு அருள் செய்யும்போது அப்படிப்பட்ட சக்தியாவது மகிமையாவது வெளிப்படையாக விளங்கும்படி வரவேண்டாம்; அந்தச் சக்திகளெல்லாம் விதையில் அடங்கிய மகாவிருட்சம் போல் அடங்கிக் கிடக்கத் தான் யசோதைக்கு முன் வந்த குழந்தைக் கண்ணனாகவே வரவேணும்; வந்து தம்மைத் தழுவி அணைத்துக்கொண்டு அருள் செய்யவேணும்—என்று பிரார்த்திக்கிறார் பெரியாழ்வார். இவருடைய பிரார்த்தனை எவ்வளவு நன்றாக நிறைவேறியது என்பதற்கு இந்தப் பாடல்களே சாட்சி.

## வேறு சில பால லீலைகள்

சில சமயங்களில் கண்ணன் யசோதையின் முதுகுப் புறமாக ஓடிவந்து அணைத்துக்கொள்வான். அப்போது அந்தத் தாயின் இன்பத்தை என்னென்பது? அவளுடைய பெருமையைத்தான் என்னென்பது? 'என் பிள்ளை என்னை முதுகில் கட்டிக்கொண்டான்; என்னுடைய ஸ்வாமி என்னை அணைத்துக்கொண்டான்!' என்றெல்லாம் பூரித்துப்போவாள்.

ஒரு சமயம் அவள் பராக்கா யிருக்கும்போது அவளுக்குத் தெரியாமலே பளிச்சென்று வந்து முதுகின் பின்னே கட்டிக்கொள்வான். ஒரு சமயம் அவன் வருவதைப் பாராததுபோலவே கடைக்கண்ணால் பார்த்து விடுவாள், அரைச்சதங்கையோடும் கழுத்துச் சங்கிலியோடும், கையில் கங்கணத்தோடும் மற்ற ஆபரணங்களோடும் அவன் நடந்துவரும் அந்த அழகை. அந்த அழகே அவளை இன்பத்தில் மூழ்கச் செய்துவிடும்.

வேறொரு சமயம், பால், வெண்ணெய் திருடியுண்ட அந்த லீலை ஞாபகத்திற்கு வரும். அவனுக்கு எட்டாதபடி உறியிலே சேமித்து வைத்திருந்தார்களாம் மிடாமிடாவாகப் பாலும் வெண்ணெயும். கண்ணன் மரவுரல் ஒன்றை உருட்டிக்கொண்டு வந்து கவிழ்த்துப் போட்டு ஏறி வயிறார விழுங்கிவிட்டான் வெண்ணெயும் பாலும். அப்படிப்பட்ட கள்ளக் கிருஷ்ணன் அந்த வயிற்றோடு யசோதையை முதுகில் கட்டிக்கொள்கிறானும்.

> பொத்த உரலைக் கவிழ்த்(து)அதன் மேல்ஏறி,
> தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
> மெத்தத் திருவயி(று) ஆர விழுங்கிய
> அத்தன்வந்(து) என்னைப் புறம்புல்குவான்;
> [ ஆழியான் என்னைப் புறம் புல்குவான்!

[பொத்த உரல் - பொத்தலோடு கூடிய உரல்: அடியிலே ஓட்டையாகிவிட்ட உரல். தடா - மிடா. ஆர - நிரம்ப. அத்தன் - தலைவன். புறம் - முதுகு. புல்குவான் - கட்டிக்கொள்வான். ஆழியான் - விஷ்ணு; (இங்கே) தெய்வம்போன்ற குழந்தைக் கண்ணன்.]
என்று நினைக்க நினைக்க யசோதை யுள்ளம் வெண்ணெய் உருகுவதுபோல் உருகுகிறது.

கண்ணன் உரலை உருட்டிக்கொண்டு வந்ததுகூடத் தாயாருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. 'பொத்தலான உரலாகத் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வந்தானல்லவா? என்ன முன்யோசனை!' என்று மகிழ்ந்து போகிருள். நல்ல உரலானால் யாரேனும் உபயோகப் படுத்தவேணுமென்று தேடிப் பார்த்துப் பிள்ளையாண் டானைக் கையும் களவுமாய்ப் பிடித்துக்கொள்வாரல்லவா? 'தித்தித்த பாலும்' என்று சொல்லும்போதே, ருசி பாராமல் விழுங்கிவிடவில்லை, ஆத்திரமாக விழுங்கி விடவில்லை; ருசி பார்த்து, நன்ருக ருசி பார்த்துச் சப்புக் கொட்டிச் சாப்பிட்டான் என்பது குறிப்பு.

தம்மை யசோதைத் தாயாகப் பாவித்துக்கொண்ட பெரியாழ்வார் யசோதையின் வேறு அனுபவங்களையும் அடைந்து ஆனந்திக்க விரும்புகிருர். கண்ணன் பகல் முழுவதும் ஓடிஆடி விளையாடிக் களைத்துப் போய்ப் பொழுதுபோனது தெரியாமல், பால் பருகுவதையும் மறந்து உறங்கிப்போகிருனும். யசோதை,

அம்மம் உண்ணத் துயில் எழாயே

[துயில் எழாய் - தூக்கம் தெளிந்து எழுந்திருக்க வேணும்.]
என்கிருள்.

ஆயர்பாடிக்(கு) அணிவிளக்கே!

என்று கொஞ்சி அழைத்துப்போய்ப் பால் ஊட்டுகிருள். 'செந்தாமரைப்பூவில் முத்துக்கள் சிந்தினுற்போல் முகம்

வியர்க்க உடம்பெல்லாம் புழுதியாக அந்தப் புழுதியை அப்படி அளையவேண்டாம்; பால் சாப்பிடவா' என்று கொஞ்சுகிறாள், கூப்பிடுகிறாள்.

ஆடி ஆடி அசைந்(து) அசைந்திட்(டு)
அதனுக்(கு) ஏற்ற கூத்தை ஆடி,
ஓடி ஓடிப் போய் விடாதே!

என்று கெஞ்சியும் கொஞ்சியும் வேண்டுகிறாள்.

இப்படியெல்லாம் பெரியாழ்வார் அனுபவிக்கிறார். 'ஆயாபாடிக்கு அணிவிளக்கே' அகில லோகங்களுக்கும் அணிவிளக்கு என்பது இவருக்குத் தெரியும்.

## பால லீலைகளின் அருமை பெருமைகள்

'ஸர்வேசுவரனாகிய பகவான் பரமபத நாதனாக இருந்து உலகங்களையெல்லாம் பரிபாலித்து வருகிறான்; உடையவன் உடைமைகளைக் கைவிடமாட்டான்; நாமெல்லாம் கோனில்லாத மந்தைகள் அல்ல!' என்ற விசுவாசம் மகா விசுவாசமாயிருக்கும். பக்தர்களுக்கு. அந்த மகா விசுவாசமும் போதாதென்று அவர்கள் 'எல்லாம் அவனே!' என்று உணர்கிறார்கள். அந்த உணர்வும், போதாதென்று 'எண்ணற்கு அரிய பிரானை நண்ணித் தொழும் அவர் சிந்தை பிரியாத நாராயணா!' என்று உள்ளம் குளிர உணர்ந்தும், வாய்குளிர அழைத்தும் வந்தார்கள். அதிலும் திருப்தியடையாமல் அவதார மூர்த்தியாக வழிபட்டார்கள்; 'ஆயர் கொழுந்தே!' என்று அழைத்தார்கள். அவனுடைய பால லீலைகளில் உள்ளம் பறிகொடுத்தார்கள்.

இத்தகைய பக்தமணிகளில் பெரியாழ்வாருக்கு யசோதைபோலத் தாயன்பு செலுத்துவதில் ஒரு தனி உவப்பு - ஒரு விசேஷமான குதூகலம். 'என் கண்ணே!' என்று கண்ணனோடு யசோதைபோலக் கொஞ்சி விளையாடு

வதில் ஒரு தனி உத்ஸாகம். அவனைவிட்டுப் போகமாட்டாமல் நிற்கிற அந்தப் பெண்களைப்போலவே, இவருள்ளமும் அந்தப் பால லீலைகளை நோக்கி நோக்கி, அந்தச் சேஷ்டைகளை யெல்லாம் அனுபவித்து அனுபவித்து, இறுமாந்து நிற்கிறது. எனினும்,

> விண்எல்லாம் கேட்க அழுதிட்டாய்; உன்வாயில்
> விரும்பி அதனைநான் நோக்கி,
> மண்எல்லாம் கண்(டு)என் மனத்துள்ளே அஞ்சி
> 'மதுசூதனே' என்(று) அறிந்தேன்.

[விண் - வானம். மண் - பூலோகம். மது சூதனே - (இங்கே) கடவுளே]

என்று தாயைப்போல், பயபக்தியும் வந்துவிடுகிறது.

'கண்ணன் மண்ணைத் தின்றான்!' என்ற கோபத்துடன் யசோதை அடிக்கப் போனாளாம். கண்ணன் விண்ணை நோக்கி வாயைத் திறந்து அழுத அந்த அழுகை விண்ணெல்லாம் கேட்டதாம். தாயாரோ வாயை நோக்கினாளாம், 'மண் இருக்கிறதோ?' என்று பார்க்க. ஏன் இல்லை? 'அந்த வாய்க்குள்ளே மண்ணெல்லாம் கண்டேன்!' என்கிறாள். ஆம்; மண்ணுலகமெல்லாம் கண்டாள்; வேறு உலகங்களையும் காணத் தொடங்கினாள்; கண்ணைக் கசக்கி அழுதுகொண்டிருக்கும் பிள்ளையையும், கண்டாள். ஆம். ஆம்; அந்தக் கபட நாடகத்தையும் அந்த நாடக பாத்திரங்களாகத் தன்னையும் உலகங்களையும் கண்டுகொண்டாள். மனசுக்குள்ளே, கொஞ்சம் பயந்தான் - 'என் குழந்தையில்லையா? ஆயர்கொழுந்து இல்லையா?' என்றெல்லாம். மறுபடியும் குழந்தைக் கண்ணன்தான் அவன். அவனுக்கு நகைபோட்டுப் பார்க்கவேணும், பால் ஊட்டவேணும், நீராட்டவேணும் - என்றெல்லாம் ஆசைதான். இத்தகைய

அனுபவங்களெல்லாம் பெரியாழ்வாரின் தாயன்புக்கும் உண்டு.

இந்தத் தாயன்புமற்றக் கோபிகைகளின் அன்போடு சங்கமமாகிப் பெரியாழ்வாருள்ளத்தைக் குளிர்விப்பது முண்டு. கண்குளிரக் கண்ணனுடம்பு முழுதும் பார்த்துக்கொண்டே யிருக்கிறார்களாம் கோபிகைகள். அந்தக் கண்கள் வழியாகக் கண்ணனும் பிரவேசித்து அவர்களுடைய கருத்தும் குளிர்ந்து தித்திக்கும்படி அந்த இதய - ஸிம்மாஸனங்களில் ஏறி விளையாடுகிறானும்.

கண்ணைக்குளிரக் கலந்தெங்கும் நோக்கிக்
கடிகமழ் பூங்குழலார்கள்
எண்ணத்துள்என்றும் இருந்துதித்திக்கும்
பெருமானே! எங்கள்அமுதே!

[கடிகமழ் - வாசனை வீசுகிற. பூங்குழலார்கள் - பூக்களை அணிந்த கூந்தலையுடைய பெண்கள்.]

என்றும் யசோதை அழைக்கிறாள் ஆனந்தம் அடைகிறாள். இந்த ஆனந்தத்திலும் பெரியாழ்வாருக்குப் பங்குதான்.

ஓடிப்போகும் கண்ணனை யசோதை நல்ல வார்த்தை சொல்லிச் சொல்லி அழைத்து நீராட்டுகிறாளாம்.

உண்ணக் கனிகள் தருவன்; ஒலிகடல் ஓதநீர்போலே
வண்ணம் அழகியநம்பீ! மஞ்சனம் ஆட நீவாராய்

[ஓதம் - (இங்கே) அலைகள்.]

என்று கொஞ்சி அழைக்கிறாளாம். அப்போது அந்தப் 'புழுதி அளைந்த பொன்மேனி' அந்தத் தாயை மயக்குவது போலவே பெரியாழ்வாருக்கும் பிரத்தியட்சமாகி இவரையும் அப்படியே மயக்கிவிடுகிறது. 'இவள் பிள்ளை வளர்ப்பது அழகாயிருக்கிறது - என்று சிரிப்பார்களே!' என்று

கவலை பெரியாழ்வாருக்கும்தான். எனவே யசோதை குரலோடு இவர் குரலும் அபேதமாய்க் கலந்து மயங்கி,

‘மாணிக்கமே! என்மணியே!
மஞ்சனம்ஆட நீவாராய்’

என்று கொஞ்சுகிறது.

‘காக்காய்! கண்ணுக்கு மைகொண்டுவா, பின்னிக்கப் பூக்கொண்டுவா’ என்றெல்லாம் பராக்குக் காட்டிக் குழந்தைக்குத் தலைவாரும் தாய்மார்போல் அந்நாளிலும் யசோதை ‘காக்காய்! குழல்வார வா’ என்று சீராட்டிக் கொண்டே ஓடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்த கண்ணனை வசப்படுத்தித் தலையிலே சிக்குப்படாமல் வண்டுபோலக் கறுத்திருந்த ரோமங்களை மழமழ வென்றிருக்கும்படி தந்தச் சீப்பால் வாரிமுடித்துப் பூச்சூட்டினுளாம். இந்த அனுபவமும் பெரியாழ்வாருக்கு உண்டு.

பூச்சூட்டக் கூப்பிடும்போது,

தேனில்இனிய பிரானே!
செண்பகப்பூச் சூட்டவாராய்
மருவிமணம் கமழ்கின்ற
மல்லிகைப்பூச் சூட்டவாராய்
பச்சைத் தமனகத்தோடு
பாதிரிப்பூச் சூட்டவாராய்
தெள்ளிய நீரில்எழுந்த
செங்கழுநீர் சூட்டவாராய்
பொன்னே!—புன்னைப்பூச் சூட்டவாராய்
உருவம் அழகிய நம்பி!
உகந்திவை சூட்டநீ வாராய்

என்றெல்லாம் கொஞ்சுகிருளாம் யசோதை. இந்த ஆனந்தமும் பெரியாழ்வாருக்கு உண்டு.

கண்ணன் என்ன பாடு படுத்தினாலும், எத்தனை சேஷ்டைகள் செய்தாலும், யசோதைக்கு அருமைதான். அந்த அருமை அவளைப் பரவசப்படுத்தியதுபோல், சில சேஷ்டைகளின் பெருமையும் அவளைப் பயமுறுத்திவிட்டது. வண்டியை உதைத்துச் சகடாசுரனைக் கொன்றது, தாய்போல் பால் கொடுத்த பேய் மகளைக் கொன்றது முதலான பால லீலைகள் பெற்ற தாயைப் பயப்படுத்தியதில் என்ன அதிசயம்! எனவே, அவள்,

அம்மா! உன்னை அறிந்துகொண்டேன்;
உனக்(கு) அஞ்சுவன், அம்மம்தரவே!
அப்பா! உன்னை அறிந்துகொண்டேன்;
உனக்(கு) அஞ்சுவன், அம்மம்தரவே!
ஐயா! உன்னை அறிந்துகொண்டேன்;
உனக்(கு) அஞ்சுவன், அம்மம்தரவே!

என்று அஞ்சுகிறாளாம், 'இவன் நம்முடைய பிள்ளை' என்ற எண்ணமும் நழுவிப் போய், 'ஸாட்சாத் ஸர்வேசுவரன்' என்று கூட நினைப்பு வந்துவிடுகிறதாம். இந்த நிலையும் ஆழ்வாருடைய நிலைதானே!

பெரியாழ்வாரின் பேரன்புதான் யசோதையின் தாயன்போடு எப்படியெல்லாம் மயங்கிக் கலந்துவிடுகிறது! எப்படியெல்லாம் இப்பெரியார் தம்மை அந்தத் தாயாகவே பாவித்து அப்படியே பேசிப் பூரித்துப் போகிறார்! அந்தப் பால லீலைகளை மனோபாவத்தால் அப்படியே அநுபவித்துப் பரவசமாகும் உள்ளம் அந்தக் கிருஷ்ண லீலைகளின் அருமைகளையும் மறப்பதில்லை; பெருமைகளையும் மறப்பதில்லை.

இந்தப் 'பால லீலைகளின் அருமை பெருமைகள்' என்ற பாற்கடலிலே முங்கிமுங்கிக் கரையேற மனமில்லாமலிருக்கும் பெரியாழ்வாரின் தாயுள்ளம், ஜகன்மோகன

கோபாலன் என்ற ஆரா அமுதை யசோதையோடு பங்கிட்டு அனுபவித்ததுபோல், நம்மோடும் பங்கிட்டு அனுபவிக்க விரும்புகிறது. அழைப்புக் குரல் காதில் விழவில்லையா?

எங்கள் குழாம்புகுந்து
கூடும் மனமுடையீர்கள்!
வரம் பொழிவந்(து) ஒல்லைக் கூடுமினோ?

[குழாம் - கோஷ்டி; கூட்டம். வரம்பொழி - வரம்பை ஒழித்துக்கொண்டு. ஒல்லை - சீக்கிரமாக. கூடுமின் - கூடுங்கள்.]

ஊரிலுள்ள பிள்ளைகள்—ஒருவர், இருவரல்ல—யசோதையிடம் வந்து, "கண்ணன் என்னை அப்படிச்செய்தான்; அவனை இப்படிச் செய்தான்!" என்று குறைகூறி முறையிட்டுக் கொள்கிருர்களாம். யசோதைக்குக் கோபங் கோபமாய் வருகிறது. ஆனல் கண்ணனைக் கண்டதும், அந்த அழகுக்கடலில் கரைந்துபோகிறது பொங்கிவந்த கோபமெல்லாம்;

பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் தீமைகள்
[செய்வார்;
எல்லாம் உன்மேல் அன்றிப்போகா(து)!
[எம்பிரான் நீ இங்கே வாராய்;
நல்லார்கள் வெள்ளறைநின்ருய்!
[ஞானச்சுடரே! உன்மேனி
சொல்லார வாழ்த்திநின்(று)
[ஏத்திச் சொப்படக் காப்பிட வாராய்!

[பல் - பல, ஆயிரக்கணக்கானவர். வெள்ளறை - திருவெள்ளறை என்ற திருப்பதி. சொல் ஆர - சொல் நிறையும்படி. ஏத்தி - ஸ்தோத்திரம் செய்து. சொப்பட - நன்ருக.]

"பஞ்ச லட்சம் குடி" யென்று சொல்லும்படி அவ்வளவு ஜனத்தொகை யுள்ள ஆய்ப்பாடியில் துஷ்டப்

பிள்ளைகள் பல ஆயிரக்கணக்காக இருக்கக்கூடுமல்லவா? அவர்கள், தாங்கள் செய்யும் துஷ்டத்தனங்களையெல்லாம் ஒரே மூட்டையாகக் கட்டிக் கண்ணன் தலைமேலே சுமத்தி விடுகிறார்களாம்—சுமக்கத்தான் அப்படி ஒரு ஆசாமி இருக்கிறானேயென்று. எனினும் கண்ணன் அவர்கள் இருக்கும் இடங்களுக்கே போய்க்கொண்டிருக்கிறானும். "என் அப்பனே! என் அரசே! இனி நீ அங்கே போகாமல் இங்கே வா! குற்றம் சுமத்தும் அவர்களை விட்டுவிடு; பரிவுடன் உன்னை வாழ்த்திக்கொண் டிருக்கும் எங்களிடம் வா" என்று தாய் கொஞ்சிக் கூப்பிடுகிறாள்.

கண்ணனை நீராட்டித் தலைவாரிப் பின்னிப் பூச்சூட்டியதும், கண்ணன் மறுபடியும் அங்கே ஓடப் பார்த்தான்—மறுபடியும் துஷ்டத்தனம் செய்யத்தான். யசோதைக்கா தெரியாது? எனினும், "அவர்கள்தாம் துஷ்டப் பிள்ளைகள்!" என்று குற்றம் சுமத்துகிறாள். இது தாயன்பு—தாயின் 'கள்ளங்கவடற்ற' பட்சபாதம். "குழந்தாய்! நீ நல்லவன்: என் பிள்ளை 'ஞானச்சுட' ரல்லவா?" என்கிறாள். இதுவும் ஒரு 'சிசுபாலன முறை'தான்! அந்த மேனியைப் பார்த்தாலே தெரிந்துவிடுகிறதாம், பிள்ளை 'நல்ல' வனென்றும், 'ஞானச் சுட'ரென்றும். தாயார் கண்ணுக்குத் தானே இப்படியெல்லாம் தெரியும்?

"கண்ணே! குளிப்பாட்டினேன்; குழல்வாரிப் பூச்சூட்டினேன். அழகுச் சுடராய், ஞானச் சுடராயிருக்கிறது, கண்ணைப் பறிக்கும் அழகு! கண்ணெச்சில்—திருஷ்டிதோஷம் — வந்துவிடுமோ? குற்றப் பத்திரிகை வேறே படிக்கிறார்கள் என் செல்லப்பிள்ளை மேலே!" என்றெல்லாம் எண்ணும் யசோதை, ரட்சையாகக் காப்பிடுகிறாளாம். "உலகத்தையெல்லாம் ரட்சிப்பேன்; சிஷ்டர்களைச் சிட்சிப்பேன்!" என்று காப்புக் கட்டி வந்திருக்கும் காவற் கடவுளுக்கு, ரட்சக மூர்த்திக்கு, இப்படி

அந்திவேளையில் காப்பிட்டு, இரவிலே தன் பக்கத்தில் படுக்க வைத்துக்கொண்டு உறங்கிப் போகிறாள்.

விடிய எழுந்து யசோதை வீட்டுவேலைகளைப் பார்க்கப் போகிறாள். கண்ணன் தானும் எழுந்திருந்து தன் வேலைகளைப் பார்க்கப் போகிறான். தன் வீட்டிலும், ஊரார் வீடுகளிலுந்தான். அங்கெல்லாம் அவன் பார்த்த வேலைகள் தாம் எவை?

ஒரு இடைச்சி யசோதையிடம் வந்து, "அம்மா! உன் மகன் எங்கள் வீட்டிலே வந்து, வெண்ணெயை விழுங்கி வெறுங் கலசத்தைக் கீழே போட்டான். மண்ணிலே அல்ல; கல்லிலே, அம்மா! அந்த ஓசையில் ஒரு சந்தோஷம். இப்படி ஒரு கல்வி கற்றிருக்கிறான் கண்ணன்!" என்று அந்தக் கைவரிசையை விரித்துரைக்கிறாள்.

வேறொரு ஆய்ச்சி— வயதானவள்—வந்து, "உருக்க வைத்திருந்த வெண்ணெயை அது உருகி நெய்யாவதற்கு முன்னமே உறிஞ்சிவிட்டான் தாழியோடே! யார்? சொல்லவா வேணும்? உன் செல்லம்தான், யசோதாய்! தாழியையும் உடைத்து விட்டான், அம்மா! உடைத்து விட்டு ஒன்றும் அறியாதவன்போல் என் அருகே வந்து நிற்கிறான். என்ன தைரியம்! என்ன செல்லம்!" என்கிறாள்.

"யசோதைப் பிராட்டி! பிராட்டி!" என்று கூவிக் கொண்டே ஓடிவருகிறாள் இன்னொரு ஆய்ச்சி. "பாலைக் கறந்து அடுப்பில் ஏற்றிவைத்தேன் காய்ச்சுவதற்காக. பிறகு மேலண்டை வீட்டுக்கு நெருப்பு எடுத்து வரப் போனேன். அங்கே கொஞ்ச நேரம் நின்று பேசிக்கொண்டிருந்து விட்டேன், அம்மா! அதற்குள்ளே உன் மகன் அந்தக் காய்ச்சாத பாலைச் சாய்த்துப் பருகிவிட்டான். நான் இங்கே வரும்போதுகூட அவன் அங்கேதான் நின்றான். கூப்பிட்டுத் தண்டிக்கவேணும்—இனிமேலாவது அப்படியெல்லாம் துஷ்டத்தனம் செய்யாதபடி" என்று முறையிட்டுக்கொள்கிறாள்.

இன்னும் ஒருத்தி வருகிருள். "நோன்புக்குப் பாயஸ பட்சணுதிகள் தயார் செய்து வைத்திருந்தேன். திரட்டுப்பாலை வைத்திருந்தேன் .தேவபூஜைக்கு முன்னமே விழுங்கிவிட்டான். அம்மா! என்ன பிள்ளை - வளர்ப்பு!" என்று ஆர்ப்பாடம் செய்கிருள்.

"சீடை, எள்ளுண்டை, லட்டு எல்லாம் பாத்திரங் களிலே வைத்திருந்தேன். அத்தனை கலங்களும் காலி! இவனே ஒன்றும் அறியாதவன்போல் இங்கே வந்து விட்டான்!" என்று முறையிட்டுப் போயிருந்தாள் ஒருத்தி. கண்ணனே மறுபடியும் அதே வீட்டுக்குப் போய், "உறி யில் வெண்ணெய் இருக்கிறதோ?" என்று சோதனை போட்டுப் பார்த்தானும். எனவே அந்த ஆய்ச்சியும் மறுபடி வருகிருள் யசோதையிடம், குற்றப் பத்திரிகை சகிதம். "உன் மகனைக் கூப்பிடு, கூப்பிடு!" என்று சொல்லிக்கொண்டே வருகிருள்.

இதோ ஒருத்தி கண்ணனுடைய கபட நாடகங்களில் ஒன்றை எவ்வளவு நாடகத்திறமையோடு வெளியிடுகிருள் யசோதைக்கு! "அம்மா! சொன்னுல் உனக்குக் கோபம் வருகிறது. உன் பிள்ளையோ என்ருல்..." என்ற பீடிகை யோடு இந்த நாடகம் ஆரம்பமாகிறது. உள்ளபடியே கோபம்தான் யசோதைக்கு—"அவள் சொல்லி வாய் மூடு வதற்குள் இவளும் வந்துவிட்டாளே!" என்று. "அப்படி என்ன செய்துவிட்டான்,—நீ இவ்வளவு பிரமாதப் படுத்த?" என்பது யசோதையின் முகபாவம்.—வினுக்குறி, வியப்புக்குறி, கோபக்குறிகளெல்லாம் இப்போது அந்த! முகத்திலே!

"எங்கள் வீட்டுக்கு வந்தான். என் மகளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டான். கையில் வளையைப் பார்ப்பது போலக் கழற்றிக்கொண்டான்!" என்று சொல்லும் போதே யசோதைக்குக் கோபம் அதிகரிக்கிறது. அவன் பேரிலா? அவள் பேரில்தான்!

நாடகம் தொடர்ந்து நடக்கிறது. "காடுகளிலிருந்து நாவற் பழங்களைச் சேரித் தெருக்களில் கொண்டு வந்து விற்ருள் ஒரு பெண். அந்தப் பெண்ணிடம் இந்தப் பெண்ணின் கைவளைகளைக் கொடுத்து நல்ல நாவற்பழங்களாகப் பொறுக்கத் தொடங்கினுன் கண்ணன்" என்று சொல்லிக் கொண்டே போனுள், யசோதையிடம் வந்தவள். யசோதைக்கு ஆத்திரம்: "கதை முடிந்ததல்லவா?" என்பது முகபாவம். "அதுதான் இல்லை!" யென்று மேலே போகிருள் வந்த ஆய்ச்சி.

"போதும், போதும் பழங்கள் அந்த வளைக்கு!" என்ருள் நாவற்பழம் விற்றவள். "போதாது, போதாது!" என்பது கண்ணன் கட்சி. "இப்படி விவாதப்படும்போது நான் சத்தம் கேட்டு அங்கே போனேன். நாவற்பழக்காரியிடம் என் பெண்ணின் வளையைக் கண்டேன். நான் ஒன்றும் கேளாதிருந்தும் கண்ணன், 'இந்த வளையை நான் திருடவில்லை!' என்று தானுகவே சொன்னுன்" என்ருள் கோபிகை.

"இல்லை யென்று அவனே சொல்லிவிட்டால் நம்ப வேண்டியதுதானே! கண்ணன் பொய் சொல்வானு?" என்பது யசோதை - முகபாவம். ஆனுல் அந்த ஆய்ச்சியோ, "கண்ணன் அப்படிச் சொல்லித் தன் திருட்டுத்தனம் வெளியானதைத் தானே அறிந்துகொண்டு, 'ஓ, மோசம் போனுேமே!' என்று சிரித்தான்" என்று அந்த நாடகத்தைப் பூர்த்தி செய்தாள்.

யசோதைக்கும் சிரிப்பு வந்துவிட்டது. குற்றம் சுமத்திக்கொண்டிருந்த ஆய்ச்சியும் சிரித்துவிட்டாள். அப்போது பக்கத்திலே அவர்களுக்குத் தெரியாமல் வந்து நின்றுகொண்டிருந்த கண்ணனும் சிரித்துவிட்டான்.

"இப்படித்தான் சிரித்தான் அப்போதும்!" என்ருள் ஆய்ச்சி. "நான் திருடனு? அம்மா!" என்று தாயாரிடம் கேட்டான் கண்ணன். "இப்போது ஏன் சிரித்தாய்?

கண்ணே !" என்று அவள் கேட்க, "என் கதையை இவள் எவ்வளவு அழகாக—எவ்வளவு ரஸமாகச் சொல்லு கிருள் ! அந்தக் கதையிலே இவளுக்குத்தான் என்ன பிரேமை !" என்று மறுபடியும் சிரித்தான் கண்ணன்.

இப்படிப்பட்ட கிருஷ்ண லீலேகளைக் கோபிகைகள் எவ்வளவு பிரேமையோடு அனுபவித்துப் பேறு பெற்றூர் கள், கிருஷ்ண பக்தரானூர்கள் ! பெரியாழ்வார்போன்ற பக்தமணிகளும் மனோபாவ உலகிலே கோபிகைகளாகிப் பக்தி பண்ணினூர்கள் ; பாக்கியசாலிகளானூர்கள். இந்த லீலா சுகத்தைக் கவியுள்ளம் படைத்த ரஸிகர்கள் இந்தக் காலத்திலும் அனுபவிக்கலாம் ; எந்தக் காலத்தி லும் அனுபவிக்கலாம். ரஸிகர்களும் பாக்கியசாலிகள் தாம்.

## 23. பசி ஏது? தாகம் ஏது?

கண்ணன் கன்றுகளே மேய்த்து வருவோம் என்று போகிருன். ஆத்மாக்கள் எல்லாம் அவன் மேய்க்கிற பசுக்களும் கன்றுகளும் அல்லவா? இது தெரிகிறதா யசோதைத் தாய்க்கு? அன்பானது கண்ணேப்பொத்த, பெரியாழ்வார் - யசோதைக்கும் கண்ணன் பிரிவைப் பொறுக்க முடியவில்லே. "கல்லும் முள்ளுமான காட்டில் போக விட்டேனே, பாவியேன் !" என்று நொந்து போ கிறது தாயுள்ளம். "கண்ணுக்கினியானேப் போக்கி னேன் ! என் மணிவண்ணனேப் போக்கினேன் ; பொன் னடி நோவப் போக்கினேன் ! என் இளஞ் சிங்கத்தைப் போக்கினேன் !" என்று தாய் பலவிதமாய்ப் புலம்புகிருள்.

> கடியவெங் கானிடைக்
> காலடிநோவக் கன்றின்பின்
> கொடியேன்என் பிள்ளேயைப்
> போக்கினேன், எல்லேபாவமே !

[கடிய வெங்கான் - கொடிய வெப்பமுள்ள காடு. கனிடை - காட்டிலே. எல்லே - என்னே.]

என்று வருத்திக்கொண்டிருக்கிருள்.

ஆனல் இந்தக் கிலேசம் மறைந்துவிடுகிறது,—மாலைப் பொழுதிலே கன்றுகள் முன்னாகவந்து கண்ணன் முகங் காட்டும்போது. அப்படி அவன் வந்த அழகை எதிர் கொண்டு சென்று நோக்கி, 'இந்தக் கோலத்தை வந்து பாருங்கள்! பிள்ளையென்ருல் இவன்தான்; புத்திரவதி என்ருல் நான்தான்! மற்றப் பிள்ளைகள் அணிற்பிள்ளை, கீரிப்பிள்ளை, தென்னம்பிள்ளைகள்!'' என்று பெருமைப் படுகிருள்—'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு!' என்பதை மறந்தவளாய்:

ஞாலத்துப் புத்திரனைப்பெற்ருர்
நங்கைமீர்! நானே மற் (று) ஆருமில்லை—

[ஞாலத்து - இந்தப் பூமண்டலத்திலே, நங்கைமீர் - பெண்களே. மற்று ஆரும் - வேருருத்தியும்]

"எனக்கு ஒரு முத்தம் கொடு" என்று கொஞ்சிவிட்டு, "ஐயோ! கன்றின்பின் போனகாலும் வெதும்பிக் கண் ணும் சிவந்துபோச்சே! உடம்பும் இளைத்துப் போச்சு! இனியாவது குடையும் செருப்பும் வேய்ங்குழலும் கொண்டுபோக வேணும்" என்கிருள். பிறகு "கண்ணு! நீ நாளைத்தொட்டுக் கன்றின் பின் போகவேண்டாம்; கோலஞ் செய்துகொண்டு உத்ஸவ விக்கிரகம் மாதிரி இங்கேயே இருந்துவிடு!" என்று கெஞ்சுகிருள். ஏழு நாள் தாய்சொன்னபடியே இருந்துவிட்டு முன்போலக் காட்டுக்குப் போய்விட்டான், புல்லாங்குழலும் கையு மாக.

தோழன்மாருடன் ஒரே கூட்டமாக, வகை வகை யாக அலங்கரித்துக்கொண்டு கோவிந்தன் வருகிறுன்,

மயில் தோகையாலான குடைகள், பெரிய விசிறிகள், மிருதங்கம் முதலான வாத்தியங்கள். இலைக்குழல், புல்லாங்குழல் முதலான குழல்கள், கீதங்கள்—இப்படி யெல்லாம் 'என்ன வேஷம்! என்ன கோஷம்' என்று வியக்கும்படியாகக் கண்ணன் தோழன்மாருடன் கன்று மேய்த்து வரும் வைபவத்தைப் பார்க்கப் பதினுயிரங் கண்கள் வேணுமே! ஆம், அந்தக் கண்களெல்லாம் மொய்த்துக் கொண்டிருக்கின்றன ஜன்னல்களில் எல்லாம்:

தழைகளும் தொங்கலும் ததும்பிஎங்கும்,
　　தண்ணுமை,எக்கம், மத்தளி,தாழ்பீலி,
குழல்களும் கீதமும் ஆகி எங்கும்
　　கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு,
'மழைகொலோ வருகின்ற(து)?' என்று சொல்லி,
　　மங்கைமார் சாலக வாசல் பற்றி
நுழைவனர், நிற்பனர் ஆகி எங்கும்
　　உள்ளம் விட்(டு),ஊண்மறந் தொழிந்தனரே!'

[தழைகளும் தொங்கலும் - பலவகையான மயிற் பீலியில் கட்டிய குடைகள். தண்ணுமை - மிருதங்கம். எக்கம் மத்தளி - வாத்தியங்கள். தாழ்பீலி - நீண்ட பெரிய விசிறி. சாலக வாசல் - ஜன்னல் வழி. நுழைவனர் - நுழையப் புகுவாரும். நிற்பனர் - திகைத்து நிற்பாரும். ஊண் - உணவு. மறந்தொழிந்தனர்—மறந்துவிட்டார்கள்.]

மேளமும் தாளமுமாய், குழல்களும் கீதமுமாய், தோழர்களும் தானுமாய் வருகிறுன் கண்ணன் கோலாகலமாக. 'மழைதான் வருகிறதோ? திரண்டுருண்டு வருகின்றனவோ மேகங்கள் தெரு வழியாக?' என்று யுவதிகள் ஆச்சரியமாய்ப் பார்க்கிருர்களாம் ஜன்னல் வழியாக. அப்படியே, அந்தப் பலகணி வாசல்வழியே

ஆத்திரமாக நுழையப் புகுவாரும், திகைத்து நிற்பார்களுமாய், காணக் காணப் பரவசமாகிருர்கள்! உள்ளத்தை வெளியே விட்டு விடுகிருர்கள்,—அவன் போன வழியெங்கும் தொடர்ந்து போகும்படி! பசியோடிருந்த போதிலும் உண்டு நிறைந்தவர்களைப் போலிருக்கிருர்கள்! கிருஷ்ணுமிர்தத்தை உண்டவர்களுக்குப் பசி ஏது, தாகம்ஏது? இவர்களுக்கு இப்படியிருக்கும் காட்சி யசோதைக்கு எப்படியிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

வேருெரு மாலைப்பொழுது. "வந்து விடுவான்; நீங்கள் எதிரே நிற்கவேண்டாம்!" என்று விலக்குகிருர்கள், ஏற்கெனவே அந்த வரவு கண்டு நெஞ்சிழந்தவர்கள். ஒரு தாய் சொல்லுகிருள் :—"ஒரு கையைத் தோழன் தோள் மேல் ஊன்றிக்கொண்டு பசுக் கூட்டத்திறகுப் பின்னே வந்தான். வாடிய முகத்தோடு. என் மகள்—வழிக்கருகே நின்றவள் - கண்டாள் அந்த வாட்டத்தை: அவ்வளவு தான். அது கண்ட இந்த ஊர் என்னென்னவோ கற்பனை பண்ணுகிறதாம்.

இப்படிப் பேச்சு நடந்துகொண்டிருக்கையிலேயே, தெருவின் ஒரு கோடியில் குழலிசை கேட்கிறது. அப்போது வீணுகானம் போன்ற குரலில், தலைவி யொருத்தி வீட்டுக்குள்ளே யிருக்கும் தோழியைக் கூவி யழைப்பதும் காதில் விழுகிறது. கூவியழைத்து,

என்றும்இவனை ஒப்பாரைநங்காய்!
கண்டறியேன்ஏடி! வந்துகாணுய்

என்று ஆச்சரியமாய்ப் பேசுகிருள்.

ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டே யிருக்கிறவள்தான், எனினும் இப்போது காணும் இந்த அழகனைப் போல் ஒருநாளும் கண்டறிந்தேனில்லை என்கிருள். நேற்று இவள் பார்த்த கண்ணனே இன்று பார்க்கும் கண்ண

னுக்கு ஒப்பாகமாட்டான்! - என்பது குறிப்பு. நாளுக்கு நாள் அப்படிப் புதுமை புதுமையாக வளர்வதுபோலத் தோன்றுகிறது அழகு! "அடி தோழீ! நீயே வந்து பார்த்துக் கொள், நான் சொல்வது சரிதான் என்பதை!" என்று உருகிக்கொண்டிருக்கும் கட்டழகியைப் பாருங்கள்.

வேறொரு பக்கத்திலே ஒரு சதியாலோசனை. "அந்த வாயில் இளஞ் சிரிப்பை மறுபடியும் எப்படிக் காணலாம்? என்பதுதான் ஆலோசனைக்குரிய விஷயம். இந்தப் பெண்கள் வயதில் முதிர்ந்திராவிட்டாலும் தைரியத்திலே முதிர்ந்தவர் என்று தங்களைத் தாங்களே மதித்துக் கொண்டவர்கள். "கர்நாடகங்க"ளைப்போல் காதலால் அறிவை இழப்பதிலும் ஆரோக்கியத்தை இழப்பதிலும் நம்பிக்கையில்லாதவர்கள். இவர்களில் ஒருத்தி, "ஆனந்தமான சௌந்தரிய பூர்த்தி கண்டு ஆரோக்கிய பூர்த்தியும் காண்போம்!" என்று துணிந்தவளைப்போல்,

அந்தம்ஒன் றில்லாத ஆயப்பிள்ளை
அறிந்தறிந்(து)இவ்வீதி போதுமாகில்,
'பந்துகொண்டான்!' என்று வளைத்துவைத்துப்
பவளவாய்முறுவலும் காண்போம்,தோழீ!

[அந்தம் - முடிவு. ஆயப்பிள்ளை - இடைப்பிள்ளையான கண்ணன். போதுமாகில் போவானாகில். முறுவல் - புன்சிரிப்பு.]

என்று சொல்லுகிறாள்.

அந்த ஆயப்பிள்ளையின் அழகுக்கும் முடிவே கிடையாதாம், குறும்புத்தனத்திற்கும் முடிவே கிடையாதாம். "நமது ஹிருதயத்தை அந்த முகம் எப்படி இழுக்கிறது என்பதை அவன் அப்படியா பரீட்சித்துப் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ளவேணும்? நல்லது, இன்னம் ஒருசமயம்

இந்த வீதியில் வருவானுகில், நாம் அவனை எப்படியாவது வளைத்துக் கொள்ளவேணும்" என்கிருள். "ராஜவீதியில் அது எப்படி முடியும்?" என்று தோழி ஒரு கேள்வி கேட்கலாமல்லவா? அதையும் மானஸீகமாக எதிர்பார்த்துப் பேசுகிருள் தலைவி; "நாங்கள் பந்து விளையாடுகிற போது எங்கள் பந்தைப் பறித்துக்கொண்டு போனுயே!" என்ற வியாஜம் போதுமல்லவா? "நாமே கையிலுள்ள பந்தை அவன் மடியில் எறிந்துவிட்டுக் குற்றம் சாட்டுவோம்!" என்பது குறிப்பு. அப்படி வழிமடக்கி வளைத்து வைத்துக்கொண்டு,—"எங்களை யாராக நினைத்தீர்! எங்கள் வீதிகாணும் இது!"—என்று சொல்ல, அந்தக் குறும்பனுக்குச் சிறுநகை வந்துவிடுமாம்,—"இந்தப் பெண்களுக்குத்தான் என்ன சாகஸம்!"—என்று அப்போது பவளம் போன்ற அதரத்திலே முத்துச் சுடர்போலத் தவழும் அந்த மோகனப் புன்னகையைப் கண்ணுரக் கண்டு அனுபவிக்கலாமல்லவா? ஆலோசனை எப்படி?

இங்கே இப்படி ஒரு சதியாலோசனை நடக்க, அங்கே ஒருதாய், "ஐயோ என்மகள் ஏனிப்படி அறிவிழந்து திகைத்து நிற்கிருள். சரி, சரி; பசுக்கூட்டத்தின் பின்னே, ஆயர் கூட்டத்தின் நடுவே குழலூதி இசை பாடிக் கூத்தாடி வந்தானல்லவா? அப்போது பார்க்க வேணும் அந்தக் கண்களிலே மலர்ந்த அழகுகளையும் மிளிர்ந்த ஆனந்தங்களையும்! அந்தக் கண்களைப் பார்த்துத்தான் என் மகளும்..." என்று பெருமூச்சு விடுகிருள்,

"உண்மைதான்!" என்று தொடங்கி வேறொரு தாய் சொல்லுகிருள் :—"என் மகள்—பார்த்திருப்பீர்களே? எப்படியிருத்தாள்? நோயா வந்தது? அவன்தானே வந்தான், காட்டு மல்லிகை முதலான பூக்களைச் சூட்டிக்கொண்டு, அன்று மாலை வேளையில்! வாயில் புல்லாங்குழலை வைத்து ஊதி ஊதி வந்தானே! பாவம், இவளுக்கு முகத்தை மாறவைத்துக் கொண்டு போகத் தெரியவில்லை.

அப்படியே நின்று விட்டாள் எதிரே. என்ன விநோத மான எண்ணம்! "அந்தப் புல்லாங்குழலாக இருந்தோ மில்லையே!" என்ற ஒரே நினைப்பில் இருந்துவிட்டா ளாம். அதற்கு இப்படியா மெலிந்து போகவேணும்?

இப்படிக் காணாத காட்சிகளையெல்லாம் எங்கேயோ இருந்து கண்டு, "நீங்களும் காணுங்கள்!" என்று நமக்கும் எப்படியோ காட்டுகிறார் பெரியாழ்வார்,—தலைவி தோழி களை அழைத்துக் காட்டுவதுபோலே. தம்மையும் அந்தப் பெண்களில் ஒருத்தியாக்கிக்கொண்டு ஜகன்மோகன பால கோபாலனைக் காதலிக்கின்றார். தாமான தன்மையை இழப்பதும் பெறுவதும் இவருக்கு எளிதாகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்துகொண்டே திரிகால சஞ்சாரி யாகிச் சென்ற காலத்தோடு தற்கால உலகத்தையும் பார்த்துப் பேசுகிறார்: நமது ஜகன்மோகன கிருஷ்ணனை நவமோகன கிருஷ்ணனாகக் காட்டி நமது மனவீதியிலும் குழலும் கீதமுமாக நடமாடச் செய்கிறார்.

## 24. ஜகன்மோகன வேணுகோபாலன்

'எங்கு இசையிருக்கிறதோ அங்கு மகிழ்ச்சி இருக் கிறது' என்று சீனமுனிவர் ஒருவர் கூறினார். இசை யென்பது சொல்லால் சொல்ல முடியாத ஹிருதய ரகஸ் யங்களையும் ஆத்ம ரகஸ்யங்களையும் வெளியிடும் ஒரு தேவ பாஷை. எத்தனை யெத்தனை சப்த ஜாலங்களை, எத்தனையெத்தனை நிறங்களோடு கூடிய சப்த சித்திரங் களைத் தோற்றுவிக்கிறது சங்கீதம், அகக்கண் முன்பு! பண்ணின்பம் பேரின்பத்தைக் காட்டிப் பரம்பொருளை யும் "தழுவும் என் ஆவியே!" என்று தழுவி மகிழச் செய்கிறது.

பழைய இந்திய சங்கீதத்தின் அருமை பெருமைகள் புல்லாங்குழலைத் தழுவி வளர்ந்தன. புல்லாங்குழல் ஓர்

எளிய இசைக்கவி. எனினும் அது எவ்வளவு உயர்ந்த இசையும் உணர்ச்சிகளும் அளிக்கவல்லது! எளிய வாழ்க்கையும் உயர்ந்த லட்சியங்களும் கொண்ட நம் முன்னோர் இசையுலகத்தில் அற்புதங்களைச் செய்தார்கள்—வேய்ங்குழலின் வாயிலாக.

கண்ணன் குழலுக்கு உள்ளத்தைத் திறை கொடுத்தவர்கள் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமா? ஜகன்மோகன வேணுகோபாலன் இன்றும் அன்பர் கூட்டமாகிய பிருந்தாவனத்திலே "உள்ளங்கவர் கள்வனாக விளங்குகிறான்,—பெரியாழ்வார் பாசுரங்களின் வாயிலாக. தாமும் ஒரு கோபிகையாகி இப்பெரியார் தம்மைப்போன்றவர்கள் கண்டதையும் கேட்டதையும் அனுபவித்ததையும்:

நாவலம் பெரிய தீவினில்வாழும்
நங்கைமீர்கள்! இதோர் அற்புதம்கேளீர்!

[நாவலம்பெரியதவு - ஜம்புதீவீபம் என்று பிரசித்தமானதும், நமது பரதகண்டத்தைத் தன்னகத்தே கொண்டதுமான நிலப்பகுதி. நங்கைமீர்கள் - பெண்களில் சிறந்தவர்களே.]

என்று பேசத் தொடங்குவதுபோலப் பிரத்தியட்சமாக்கி விடுகிறார்.

அதோ வருகிறார்கள் உறங்கிக்கொண்டிருந்த பெண்கள், 'வாருங்கள்!' என்று குழலோசை வழிகாட்டியழைக்க! கட்டுப்பாடுகளையெல்லாம் மீறி வரும் இவர்கள் அந்த இசையின் வடிவம்போலிருக்கும் கோபாலனை நெருங்கியதும், ஒழுங்குபடத் தொடுத்த பூமாலைகள்போல வரிசை வரிசையாகச் சூழ்ந்துகொண்டு, அந்த முகத்தை முகங்கொண்டு எதிர்நோக்க முடியாமல் நாணித் தலைகவிழ்ந்து நிற்கிறார்கள்:

தூவலம்புரிஉடைய திருமால்
தூயவாயில் குழலோசைவழியே,
கோவலர்சிறுமியர் இளங்கொங்கை
குதுகலிப்ப உடல்உள் அவிழ்ந்( து )எங்கும்
காவலும்கடந்து கயிறுமாலையாகி
வந்துகவிழ்ந்து நின்றனரே !

[ தூவலம்புரி - சுத்தமானவலம் புரிச் சங்கமாகிய பாஞ்ச ஜன்யம். தூய வாயில் - கள்ளங்கவடமற்ற அழகு வாய்ந்த அதரத்தில். கோவலர் சிறுமியர் - கோபிகா ரமணிகள். குதுகலிப்ப - குதூகலம் அடைய; ஆசைப் பட்டு விடும். ]

"இதைக்காட்டிலும் மிக்க அற்புதம் உண்டோ?" என்று கேட்கிறார் பெரியாழ்வார். கோபிகைகள் கண்ணனைத் தேடினர் என்றால், அவனும் அவர்களைத் தேடினான் என்பது உண்மை. அன்புக் கடவுள் ஆத்மாக்களைத் தேடித் தவிக்கிறானல்லவா? அகிலாண்ட கோடிகளையெல்லாம் வசீகரித்து அருள்வெளியிலே கூத்தாடச் செய்யும் அருட்கீதம்—அதாவது கண்ணன் குழல்—அருளாளர் உள்ளங்களையும் அறிவாளர் உள்ளங்களையும், கவிவாணர் உள்ளங்களையும், பரம ரஸிகர்களின் உள்ளங்களையும் அள்ளி ஆனந்தக் கூத்தாடச் செய்கிறது. கீத பிருந்தாவனத்திலே இசைத்தெய்வத்தின் ஆகர்ஷண சக்தியை எதிர்த்து நிற்கமுடியாமல் ஆத்ம கோபிகைகள் தங்களை முழுக்க இழந்து அத்தெய்வத்தை மாலையாக அணிசெய்துகொள்வது இன்றும் நடைபெறக்கூடிய ஓர் அற்புத அனுபவம்தான்.

கண்ணன் எவ்விதமாக நின்று குழலூதுகிறான்? அந்த இசையில் ஈடுபடுகிறவர்கள் என்ன பாடுபடுகிறார்கள்! இக்காட்சியையும் பெரியாழ்வார் காட்டுகிறார் :

இடஅணரை இடத்தோளொடுசாய்த்(து)
இருகைகூடப் புருவம்நெரிந்தேற,
குடவயிறுபட வாய்கடைகூடக்
கோவிந்தன் குழல்கொ(டு) ஊதினபோது,
மடமயில்களொடு மான்பிணைபோலே
மங்கைமார்கள் மலர்க்கூந்தல் அவிழ,
உடைநெகிழ, ஓர் கையால்துகில்பற்றி
ஒல்கி, ஓடரிக்கண் ஓடநின்றனரே !

[அணர் - மேல்வாய்ப்புறம்; முகவாய்க்கட்டை. இருகைகூட இரண்டு கையும் புல்லாங்குழலோடு சேர. குடவயிறுபட - வயிறு குடம்போலத் தோன்ற. கடை கூட - வாய் குவியவும். கொடு - கொண்டு. மடமயில்கள் - அழகிய மயில்கள். மான்பிணை - பெண் மான்கள். ஒல்கி - ஒடுங்கிக் குழைந்து துவண்டு. ஓடரிக்கண் - செவ்வரி என்ற ரேகைகள் ஓடிப் படர்ந்திருக்கும் கண்கள். ஓட நின்றனர் - கண்ணன் பக்கமாக ஓடப்பெற்றனர்.]

இடது மேல்வாய்ப்புறத்தை இடது தோளோடு சாய்த்து இருகையும் குழலோடு சேரப் புருவம் நெரிந்து மேலேறக் கண்ணன் வேணுகானம் செய்கிறான். வயிறு குடம்போலத் தோன்றுகிறது, காற்றைப் பூரித்து நிறுத்தி, வாயால் விட்டுவிட்டு ஊதும்போது, குழலின் துளைக்கு அளவாக உதடுகள் இரண்டு அருகும் குவிந்து காண்கின்றன.

காட்டிலே பல இடங்களிலும் மேய்ந்துகொண்டிருந்த பசுக்கள் வெகுதூரம் விலகிப்போய் விடாமல் திரும்பி வந்து சேருவதற்காகக் குழலூத, அந்தப் பசுக்களுக்கு முன்வந்து சேருகிறார்கள் கோபிகா ரமணிகள். அன்புக் கடல் - அழகின் பரிபூரண சக்தி - கீதமாகப் போய் அந்த உள்ளங்களைக் கொள்ளைகொண்டது. "என்னை நோக்கி ஊதினான்! உன்னை நோக்கியா ஊதினான்? என்று

போட்டி போட்டு இசையமுதைச் செவிநிறையத் தேக்கிக் கொண்டு வந்து நிற்கும் யுவதிகளைப் பாருங்கள். இவர்களில் சிலர் தோகை விரித்தாடும் மயில்களைப்போலக் கண்ணைப் பறிக்கும் ரூப சித்திரங்கள்! வேறு சிலர் மான்களைப்போல் மருண்டு மருண்டு பார்க்கும் பார்வையிலே ஆழங் காண முடியாத அழகை மறைத்துக் காட்டும் விசித்திர அழகிகள்! இப்போது இவர்கள் எல்லோரும் தங்களையும் தங்கள் அழகுகளையும், செருக்கையும் நாணத்தையும் ஒருங்கே மறந்து கீதத்தோடு ஒடுங்கி லயித்துப் போயிருக்கிறார்கள்.

கொஞ்ச நேரத்திற்கு முன்தான் வீடுகளில் பூக்களால் தங்களைச் சிங்காரித்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பன்னிற மலர்களுடன் கூந்தல்கள் அவிழ்ந்து தொங்குகின்றன. ஓடிவந்த அவசரத்திலே குலைந்த கூந்தலைக் கட்டிக் கொள்ளவும் நேரமில்லை; குலைந்த ஆடையை ஒரு கையால் பற்றிக்கொண்டு ஒதுங்கி ஒடுங்கிக் குழைந்து துவண்டு நிற்கிறார்கள். கண்களோ கர்வத்தை விட்டு நாணத்தையும் கடந்து அந்த மோகன சொரூபத்தின்மேல் ஓடுகின்றன! அவர்கள் அக்குழல் - இசையையும் இசையமுதளிக்கும் அந்த இன்ப வடிவத்தையும் உள்ளத்தில் ஏற்றுக்கொள்கின்றனர். என்ன கீதம்! என்ன உண்மை! இப்படித் தேடுகிறான் கோபாலன் பசுக்களை: பரமாத்மா ஜீவாத்மாவைத் தேடுகிறது.

கோகுலத்திற்கும் பரமபதத்திற்கும் யுவராஜா, வேய்குழல் ஊதியழைக்க, விண்ணும் மண்ணும் குவிந்து மனம் உருகி, எங்கும் காதுகளாய்க் கண்களாய் இசையின்பம் பருகுகின்றன! கோபிகைகளுடன் தெய்வப் பெண்களும் குழலோசை வழியே வந்து சூழ்ந்து நெருங்கிக் கூந்தல் அவிழநின்று ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்களாம். மேனகை, திலோத்தமை, ரம்பை, ஊர்வசி முதலான அப்ஸர ஸ்திரீகள் - ஆகாச வீதியிலே ஆடிக்

கொண்டும் பாடிக்கொண்டும் வந்தவர்கள் - ஆடுவதிலும் பாடுவதிலும் தங்களுக்கு நிகரில்லையென்று கர்வம் கொண்டவர்கள் - வேணுகோபாலனைக் கண்டதும் வெட்கம் அடைந்து மயங்கித் தங்கள் ஆடல் பாடல்களை யெல்லாம் தாமாகவே விட்டொழிந்து நிற்கிறார்களாம்.

இதோ குழலிசை செவியைப் பிடித்து இழுப்பது போல் ஆகர்ஷித்து வருகிறது. "கீதவித்தைக்குத் தும்புரு நாரதர்" என்று ஸர்வலோகப் பிரசித்தராக இருப்பவர் களையும். செவி படைத்தவர்களையெல்லாம் வசீகரிக்கும் அந்த வீணைகளையே அவர்கள் மறந்துவிடுகிறார்களாம். எங்கள் வீணைவித்தை வீண் வித்தைதான்! இனி நாங் கள் அதைத் தொடுவதில்லை! இது எங்கள் அப்பன் ஆணை என்று சொல்லிவிடுகிறார்களாம், இப்படித் "தும்புருவோடு நாரதனும் தம்தம் வீணை மறந்து" நிற்க, அதோ பாருங் கள் ஆகாச ஸஞ்சாரிகளும் கீதவாத்திய விநோதர்களுமான கந்தர்வர்கள் என்ன பாடு படுகிறார்கள் என்று:

அம்பரம்திரியும் காந்தப்பரெல்லாம்
அமுதகீதவலையால் சுருக்குண்டு,
'நம்பரம்அன்(று)' என்று நாணிமயங்கி
நைந்துசோர்ந்து கைம்மறித்துநின்றனரே!

[அம்பரம் - ஆகாசம். காந்தப்பர் - கந்தர்வர். நம்பரம் அன்று - (பாட்டுத் தொழிலாகிற) பாரம் இனி நம்முடையதன்று. கைமறித்து - கையை மடக்கிக் கொண்டு.]

வேணுகானம் என்ற அமுத வலையில் சுருக்குண்டு பழைய வித்யா கர்வங்களையெல்லாம் மறந்து, "நாமும் பாடித் திரிந்தோமே, லஜ்ஜையில்லாமல்!" என்று மனம் நைந்து சோர்ந்து, கையை மடக்கிக் கொள்கிறார்கள். "இனி அந்தச் சரக்கு எங்களிடமில்லை!' என்று ஊமையர்

சமிக்ஞை காட்டுவதுபோல் அப்படிக் கையைத் திருப்பிக் காட்டி நிற்கிறார்களாம்.

"இப்படிப் புதிய புதிய அற்புதங்களை நான் கண்டேன் அந்த இசையுலகத்திலே, சொல்லக் கேளீர்!" என்று காட்டிக் கண்டுகொள்ளச் செய்கிறார் பெரியாழ்வார்.

புவியுள்நான்கண்டதோர் அற்புதம்கேளீர்!

என்று, மண்ணும் விண்ணும் கடந்து பொங்கி அமரலோகமாகிய சொர்க்கத்திலும் அலைவீசும் அமிர்த கீதக் கடலைக் காட்டுகிறார். தேவர்களும் தேவாமிர்தத்தை மறந்து இசையமுதம் பருகிய வண்ணம் ஆய்ப்பாடி நிறையப் புகுந்து திரண்டு,

செவியுள்நாவின் சுவைகொண்டுமகிழ்ந்து
கோவிந்தனைத்தொடர்ந்து என்றும்விடாரே!

[செவியுள் நாவின் சுவைகொண்டு - "செவியிலேயே நாவின் சுவைவந்துவிட்டது!" என்று சொல்லும்படியாகச் சுவைத்து ரஸித்து.]

என்றவாறு சுவைத்து ரஸித்துக் கண்ணனை மொய்த்துக் கொள்கிறார்களாம். இப்படியெல்லாம் காட்டி, ஒரே வலையில் விண்ணும் மண்ணும் கட்டுண்டிருக்கும் அற்புதத்தை ஒருவாறு விளங்கவைக்க முயல்கிறார், பக்த ரஸிகர்களின் குழந்தை யுள்ளத்திலே.

அழகிய சிறுவிரல்கள் குழலின்துளைகளைப் புதைத்துப் புதைத்துத் திறக்கின்றன. கண்கள் துளைகள் தோறும் ஓடுகின்றன. காட்டிலே உலாவி யுலாவி ஊதிய பின் ஒரு மரத்தடியில் முகத்திலே முத்து அரும்பினாற் போல வேர்வைத் துளிகள் அரும்பநின்று குழலூதும் கோபாலன் இப்போது ஆகர்ஷிக்கும் விநோத ரஸிகர்களைத்தான் பாருங்கள் :

சிறுவிரல்கள் தடவிப்பரிமாறச்
செங்கண்கோடச் செய்யவாய்கொப்பளிப்ப
குறுவெயர்ப்புருவம் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொாறடு, ஊதினபோது,
பறவையின்கணங்கள் கூடுதுயந்து
வந்துசூழ்ந்து படுகாடுகிடப்ப,
கறவையின்கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்(து)இறங்கிச் செவிஆட்டகில்லாவே!

[கோட - (ஒருவகையாக மேல்நோக்கி) வளைய. செய்ய வாய் - சிவந்த வாய். கொப்பளிப்ப - குமிழ்த்துத் தோன்ற. குறுவெயர்ப்புருவம் - சிறு வியர்வைத்துளிகள் அரும்பின புருவம். கூடலிப்ப - (மேலே கிளர்ந்து) வளைய, கணம் - கூட்டம். படுகாடு - வெட்டி விழுந்த காடு. ஆட்டகில்லாவே - அசைக்கவும் மாட்டாதே நின்றன.]

பசுக்களை அழைக்கும் குழலோசை கூடுகளுக்குப் போன பட்சி ஜாலங்களின் காதிலும் விழுகிறது. எத்தனை தினுசுகளான பறவைகள் அப்படியே பறந்து வந்து, வேறு வேறு நிறமுள்ள சிறகுகளை விரித்துக் கொண்டு, வெட்டி விழுந்த காடுபோலே கண்ணனைச் சூழ்ந்து கிடக்கின்றன! வயிறு நிறைய மேய்ந்து வந்த பசுத்திரள்களோ கால்களைப் பரப்பிக்கொண்டு தலைகளைத் தொங்கவிட்டு நிற்கின்றன: செவியையும் அசைக்கவில்லை; அசைத்தால் கூட அந்த இசையை அனுபவிக்கத் தடையாகும் என்ற எண்ணமா?

என்ன விநோதரஸிகர்கள்! என்ன அமிர்த கீதம்! நாக்கின் சுவையைச் செவியிலேயே பிறப்பித்துப் பகுத்தறிவில்லாத பிராணிகளையும் வசீகரித்து உயிர்க் குலமெல்லாம் சகோதரதர்மம் என்னும் ஒரு தெய்விக பாசத்தால்

கட்டுண்டது! என்று சொல்லும்படியாகக் கட்டிவிடுகிறது இசை மயமான அன்புச் சங்கிலி.

காளமேகம் கானமழை பொழிகின்றது! இந்த மழை இன்னும் என்ன விசேஷமான விருந்தாளிகளை அழைக்கிறது, எப்படித் தாகமும் தாபமும் தீர்த்து வைக்கிறது, பாருங்கள் :

> திரண்டெழுதழை மழைமுகில்வண்ணன்,
> செங்கமலமலர்சூழ் வண்டினம்போலே
> சுருண்டிருண்ட குழல்தாழ்ந்தமுகத்தான்
> ஊதுகின்ற குழலோசைவழியே,
> மருண்டுமான் கணங்கள் மேய்கைமறந்து,
> மேய்ந்தபுல்லும் கடைவாய்வழிசோர;
> இரண்டுபாடும்துலுங்கா, புடைபெயரா,
> எழுதுசித்திரங்கள் போலநின்றனவே!

[திரண்டெழு தழை - திரண்டு மேலெழுந்து தழைக்கும். மழை முகில் - நீருண்ட காளமேகம். சோர - நழுவி விழ. இரண்டு பாடும் - 'இங்கே' முன்னும் பின்னும். துலங்கா - அசையாமல், புடை பெயரா - பக்கத்திலும் இடம் பெயராமல்.]

சிவந்து மலர்ந்த தாமரைப் பூவை வண்டுகள் சூழ்ந்து கொள்வதுபோல், தலைமயிர் இருண்டு சுருண்டு விளங்குகிறது. அந்த முகமலர்களிலிருந்து குழலின் வழியாகப் பொழியும் கீதமழை மடமயிலும் மான்பிணையும் போன்ற ரஸிகைகளை வசீகரித்தது போல், கூட்டங் கூட்டமாகக் காட்டில் மேய்ந்து கொண்டிருந்த மான்களையும் வசீகரித்து விடுகிறது. கீதவெள்ளம் பருகியதும், அவை மருண்டுபோய் மேய்வதை மறந்து பசியையும் மறந்து விட்டன. மேய்ந்த புல்லும் கடைவாய் வழியாக நழுவ, கீதப்பிரவாகத்தின் வழியாக வந்து விடுகின்றனவாம் கண்ணன் இருக்கும் இடத்தில். என்ன பரவசம்! அவை

முன்னும் போகவில்லை, பின்னும் போகவில்லை; பக்கங்களிலும் அசையவே யில்லை. “சித்திரத்தில் எழுதிவைத்த மான்கள் தாமோ, யதார்த்த மான்கள் இல்லையோ?” என்றுகூடச் சந்தேகம் ஏற்படுகிறது.

ஏன் அப்படி? வேணுகானம் அமிர்தம் பொழிகிறதா? அந்த மேய்ச்சல் - தரைகளைக் காட்டிலும் அற்புதமான மேய்ச்சல் - தரைகளை மனக்கண்முன் காட்டுகிறதா? அந்தப் புல்லைக்காட்டிலும் சிறந்த, சூட்சும உணவுச் சத்துவாய்ந்த புல்லைக் கொண்டு எப்படியோ பசி தீர்த்துவிட்டதா? இந்த மான்களும் கோபிகைகள் போல மருண்டு இப்படிச் சொக்கிப்போகும்படி, காதல் பேசிக் கொஞ்சுகிறதா? மான்போலத் துள்ளித் துள்ளி யோடும் மனித உள்ளத்தைச் சாந்தமயமாக்கிய கண்ணன் குழல், மனம்போலத் துள்ளிக் கொண்டிருந்த மான்களையும் வசமாக்கிவிட்டது!

இந்த நாடகத்தில் இன்னும் ஒரு காட்சி. மயிலின் தோகையால் முடியை அலங்கரித்துக் கொண்டிருக்கிற அந்த இசை வடிவை, கீதநாத சொரூபத்தை மறுபடியும் ஒருமுறை பார்ப்போம். “அந்தத் தோகைமுடிதான் இவன் முடிக்கு அலங்காரமோ? இவன்தான் அணிந்திருக்கும் மயில்தோகைக்கு அழகு தருகிருனோ?” என்ற சந்தேகம் உண்டாகிறது. அரையிலே பொன்னிற ஆடை; யசோதையின் செல்லப்பிள்ளை யல்லவா?—நகைகளும் அணிந்திருக்கிருன். ஆனல் புல்லாங்குழலும் வாயுமாகத் தோன்றும் நீல ரத்தின மேனிதான் அந்த ஆபரணங்களுக்கும் ஆபரணமாயிருக்கிறது, அலங்காரங்களுக்கும் அலங்காரமா யிருக்கிறது.

மறுபடியும் மோகன கீதம்-அந்த மோகன சொரூபமே உலரு வருவதுபோல! இந்த மோகன வித்தையில் இயற்கை மோகினியே மோகித்துப் போகிருள்:

கருங்கண்தோகை மயிற்பீலியணிந்து,
கட்டிநன்'கு' உடுத்த பீதகஆடை
அருங்கலஉருவின் ஆயர்பெருமான்
அவன் ஒருவன் குழல்ஊதினபோது,
மரங்கள்நின்று மதுதாரைகள்பாயும்!
மலர்கள்வீழும்; வளர்கொம்புகள் தாழும்;
இரங்கும், கூம்பும்; திருமால்நின்றநின்ற
பக்கம்நோக்கி அவைசெய்யும்குணமே!

[பீலி - இறகு. பீதகம் - பொன்னிறம். அருங்கலம் - ஆபரணம். மது - தேன். கொம்பு - கிளை. கூம்பும் - குவியும்.]

மரங்களும் உள்ளுருகி ஆனந்தக் கண்ணீர் வடிப்பது போல் தாரை தாரையாகத் தேன் சொரிகின்றனவாம். பூங்கொடிகளும் செடிகளும் காதலால் பூக்களைச் சொரிகின்றன. மேலே வளர்ந்திருக்கும் கிளைகளும் கீதத்திற்குச் செவி சாய்ப்பதுபோலத் தாழ்கின்றன! இப்போது குழலிசை விருட்ச ஜாலங்களுக்கு என்ன சோகக் கதை தான் சொல்லுகிறதோ? அவ்வளவு இரக்கம் காட்டுவது போலத் தோன்றுகின்றனவே! ஒருவேளை அவன்மீது அன்பினால்தான் இரங்குகின்றனவா? அதோ, என்ன பக்தி, என்ன ஈடுபாடு! அவன் நின்ற பக்கம் நோக்கி அஞ்சலி செய்வார்போலக் காண்கின்றனவே, மரங்களும் செடி கொடிகளும்! கோபிகைகளின் காதலன், இயற்கையின் காதலனாகிவிட்டான்!

"என்ன என்ன இச்சைகளையெல்லாம், உணர்ச்சிகளையெல்லாம், தாவரங்களுக்கும் உண்டாக்கிவிடுகிறது இந்த வேணுகானம்!" என்று ஆச்சரியப்படுகிறது, அந்த அமுத கீத வலையில் சுருக்குண்ட பெரியாழ்வாருள்ளம். இயற்கையும் தானும் கீதமுமாக இருக்கும் கோபாலனைக்

கண்டு காட்டும் பெரியாழ்வாரின் பண்ணழகிலே அந்த மோகன கீதமும் கலந்துவிட்டதுபோலத் தோன்றுகிறது.

கண்ணன் குழலோசை எங்கும் கேட்கிறது. இயற்கையில் கண்ணன் இசை மயமாய் இருக்கிறான். நதியும் கடலும் செய்யும் முழக்கங்களும், வண்டும் குயிலும் பாடும் கீதங்களும் எல்லாம் ஜகன்மோகன வேணுகானத்தின் எதிரொலிகளே! அன்புக் கண்ணனது அருட்கீதம் உலகத்திற்கெல்லாம் பொதுவானது; சராசரங்களை யெல்லாம் தழுவி யருள்செய்கிறது. இந்த அற்புதத்திலே வேற்றுமைகளெல்லாம் மறைந்தொழிகின்றன. சங்கீதத்தின் அதிசயமான தத்துவங்களோடு, வேதாந்தத்தின் பனிமூடிய ஞான சிகரங்களும், சித்தாந்தத்தின் அன்புக் கடலோடு பலவேறு கலைக் கடல்களும்,கவிஞர்கள் ரஸிகர்களின் நவநவமான கனவுகளும் காட்சிகளும், ஜகன் மோகன வேணுகோபாலனுடைய கீதத்திலே விதையில் அடங்கிய ஆலமரம்போல் அடங்கியிருக்கின்றன என்பது கிருஷ்ண பக்தர்களின் கொள்கை.

ரூப சௌந்தரியமும் குண சௌந்தரியமும் கீதமாக ஓடி எல்லாவற்றையும் தன் மயமாக்கி அருள்செய்த அந்தப் பிருந்தாவன வேணுகானத்தைத் தமது பக்திமயமான பாவனு சக்தியால் கேட்டுச் "செவியுள் நாவின் சுவை கொண்டு" அனுபவித்துப் பாடுகிறார் பெரியாழ்வார். இப்பாடல்களைப் பாடிப்பாடி அனுபவிக்கிறவர்கள்,

குழலைவென்ற குளிர்வாயினராகிச்
சாதுகோட்டியுள் கொள்ளப்படுவாரே!

[சாது கோட்டி - சாதுக்களின் கோஷ்டி அல்லது திருக்கூட்டம்.]

என்று முடிகிறது இந்த வேணுகானப் பதிகம். இதனோடு பெரியாழ்வாரின் பிள்ளைத்தமிழும் இனிது முற்றுப் பெறுகின்றது.

வேணுகானக் காட்சிகளை நினைக்க நினைக்க, ஆழ்வாருக்கு இந்திரியங்களெல்லாம் சிந்தையாகின்றன, கண்களாகின்றன; குணங்கள் பரம ஸாத்விகமாகின்றன. கண்ணன் குழல் தற்காலத்திலுள்ள சில குழல்களைப் போல் தந்தம் முதலியவற்றால் செய்ததன்று, சாதாரண (மூங்கிலால் ஆன) வேய்ங்குழல்தான். அந்த எளிய இசைக்கருவியும், அதிலிருந்து பொங்கும் தெய்வ கீதமும் பெரியாழ்வாருக்கு எளிய வாழ்க்கையையும் உயர்ந்த லட்சியங்களையும் ஞாபகப்படுத்திக்கொண்டே வந்தன என்றும், கவலை அச்சம் சோர்வுகளைத் தள்ளி வாழ்க்கையை இசை மயமாகவும் அன்பு மயமாகவும் பக்தி மயமாகவும் செய்துகொள்ளும்படி வற்புறுத்தின என்றும் ஊகிக்கலாம்.

"உலகக் கவலைகளை உதறித் தள்ளி, வாழ்க்கையை இசை மயமாக்கிக்கொள், அன்பு மயமாக்கிக்கொள்; அச்சமும் சோர்வும் ஓடி ஒளிக்க, வேற்றுமையுணர்வு மறைந்துபோக, வாடாத இளமையும் மாறாத பெருவாழ்வும் பெற்று வாழலாம்" என்று நமக்கும் வேய்ங்குழல் பெரியாழ்வாரின் பாசுர வாயிலாக உபதேசிக்கிறது.

## 23. கவிதையும் உபதேசமும்

பெரியாழ்வாரின் பிள்ளைத்தமிழில் மட்டுமல்ல, "திருமொழி"யின் மற்றப் பகுதியிலும் இவரது சொற் சித்திரங்களைக் காணலாம். இந்தச் சொற் சித்திரங்களினூடே உத்தமக் கவிதை வேய்ங்குழல்போல் இசைப்பதையும் கேட்கலாம். இக்கவிதைக்கும் சொற்சித்திரங்களுக்கும் உயிராக அமைந்திருக்கிறது இவரது அன்பு மயமான—இசை மயமான—வாழ்க்கைத் தத்துவம்.

இவ்வாழ்க்கைத் தத்துவத்தை இவர் பிரபந்தத்தின் முன்வாசற் சோலையான திருப்பல்லாண்டிலேயே கண்டு களிக்கிறோம்; பிரபந்தப் பூந்தோட்டத்தின் பல பகுதி

களிலும் பரிமளிக்கக் காண்கிறோம். ஸர்வ சக்தியை அன்புருவாகிய அழகனைக் காண்கிறவர்,

குன்றாடு கொழுமுகில்போல்,
குவளைகள்போல், குரைகடல்போல்
நின்றாடு கணமயில்போல்
நிறமுடைய நெடுமால்

[கொழுமுகில் - நீர்நிறைந்த மேகம். குவளை - நீலோற்பலம். குரை - ஒலிக்கின்ற. கணமயில் - மயில் கூட்டம்.]

என்றவாறு அப்பெருமானை இயற்கை யெங்கும் காண்கிறார்; விண்ணிலும் மண்ணிலும் காண்கிறார்; காட்டிலும் நாட்டிலும் காண்கிறார்; குன்றிலும் கடலிலும் காண்கிறார்; பூவிலும் காண்கிறார், மயிலிலும் காண்கிறார்; சௌந்தரியத்திலே மறைந்த சக்திப் பெருங்கனலாய்க் காண்கிறார், காட்டுகிறார். அன்பு நெறியும் கைங்கரிய நெறியும் சரணாகதியும் அழகனை அடையும் இன்ப நெறியென்கிறார். சாதிச் செருக்கு, கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு ஆகிய இம் முக்குறும்பும் வாழ்க்கைப் பெருநெறியிலே மதியை வஞ்சிக்கும் அபாயக் குழிகள் என்று குறிப்பிடுகிறார். தனது உயர்ந்த லட்சியங்களையெல்லாம் மனமுவந்து பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறது இவரது பக்தியுள்ளம்.

அழகுக் கடவுளின் பரிபூர்ண அவதாரம் என்று கண்ணனைப் போற்றுகிறவர், இராமாயணம் என்ற பக்திவெள்ளத்திலும் மூழ்கிக் களித்தவர் என்பதற்கு, ஹனுமான் கணையாழி காட்டுவதற்குமுன் அடையாளங்கள் சொல்லித் தன்னை இராமதூதன் என்று தெரிவித்துக்கொண்ட பகுதியாகிய சுந்தர காண்ட ஹிருதயத்தை இவர் பாடியிருப்பதும் ஒரு நல்ல சாட்சியாகும்.

இப்பகுதியிலும் இவரது கவித்திறமையும் வாழ்க்கைத் தத்துவமும் ஒருவாறு புலனாகின்றன.

கீத சொரூபமாகவும் அன்பு, காதல் முதலான கல்யாண குணங்களின் சொரூபமாகவும் கண்ணனைக் கண்டவர், "தீக்குணங்களின் சொரூபங்களோ?" என்று நடுங்கும்படி யிருந்த ராட்சஸிகளுக்கு நடுவே சோக சொரூபமாயிருந்த சீதையைப் பார்க்கிறார், தியாக சிகரமாக. இரங்காத அரக்கிமார்களுக்கு நடுவே ஒடுங்கி நோய் பிடித்தவளைப்போலிருக்கிறாள் சீதாபிராட்டி, மலங்க மலங்க விழித்துக்கொண்டு. அந்த நிலையில் அவளைக் கண்ட தூதனுள்ளம் என்ன பாடுபட்டிருக்கவேண்டும்! எனினும் தம் கிலேசத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, அவள் கிலேசங்களுக்கு மருந்தாகச் சில அடையாளங்கள் சொல்லுகிறான் அனுமான்.

முதல் முதல் அவள் எண்ணங்களை, ஜனகராஜசபையில் வில் முறிந்து மணம் முடிந்த அந்தப் பழைய ஆனந்தமான காலத்தை நோக்கித் திருப்புகிறான். பிறகு பரசுராம கர்வபங்கத்தை நினைப்பூட்டி, இராமனுடைய பேராண்மையை வற்புறுத்துகிறான். இராமனுக்கு அவள்மீதிருந்த காதலையும் அவள் எதிர்பாராத முறையில் ஞாபகப் படுத்தி ஓர் அடையாளம் சொல்லும்போது, "சொல்லலாமா?" என்ற சந்தேகங்கூட உண்டாகிறது. எனினும், "அதைச் சொல்லத்தான் வேண்டும்; அப்போது தான் இவள் சந்தேகம் தீரும்!" என்று துணிந்தவனைப்போல், "அடிபணிந்தேன் விண்ணப்பம், சொல்லுகேன், கேட்டருளாய்" என்ற பீடிகையோடு, லட்சுமணனுக்கும் தெரியாத அத்யந்த இரகசியம் ஒன்றை வெளியிடுகிறான். கண்ணனைத் தாய் கயிறுகொண்டு கட்டி வைத்தாளல்லவா வெண்ணெய் திருடினான் என்று? தன் உள்ளம் திருடின கள்வனைச் சீதையும் கட்டிவைத்தாளாம் ஒரு சமயம் மல்லிகைப்பூ மாலை கொண்டு,—அயோத்தியில் காதலர்கள்

ஆனந்தமாக வாழ்ந்துகொண்டிருந்த காலத்திலே. அந்தத் தமாஷை மெள்ள ஜாக்கிரதையாக வெளிப்படுத்துகிற வன், அந்த "அன்புச் சங்கிலி அவனை விரைவில் இலங்கைக்கு இழுத்துக்கொண்டு வந்துவிடும்!" என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறான். "தீக் குணங்களுக்கிடையே சிறைப் பட்டிருக்கும் ஜீவாத்மாவுக்கும், அன்பிற்குக் கட்டுப்படும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பும் இப்படித்தானே!" என்பது பெரியாழ்வார் குறிப்பு.

"தீண்டத்தகாதவன்" என்று கருதப்பட்ட குகனோடு கங்கையாற்றங்கரையில் இராமன் தோழமை பூண்ட நிகழ்ச்சி இராமாயணத்திலே சகோதர தர்மத்தை வெளியிடும் ஒரு பெரு நிகழ்ச்சி; தூரத்தைச் சமீபமாக்கித் தாழ்ந்தவனைச் சகோதரனுக்கிய ஓர் அற்புதம். இதைக் கம்பன் ஒரு குட்டி இதிகாசமாக்கிவிட்டான்: அதற்கு ஒரு வித்தாகப் பெரியாழ்வார்,

கூரணிந்த வேல்வலவன்
குகனோடும் கங்கைதன்னில்
சீரணிந்த தோழமை
கொண்டதும்ஓர் அடையாளம்

[கூரணிந்த - கூர்மை பொருந்திய. வேல் வலவன் - வேலாயுதத்தில் வல்லவன். சீரணிந்த - சிறப்புப் பொருந்திய.]

என்று ஹனுமான் சீதையிடம் கூறுவதாய்த் தெரிவிக்கிறார். "பண்டைக் குலத்தைத் தவிர்ந்து" 'தொண்டக் குலம்' சேர்ந்து பேறு பெறுவதற்கு இராமன் குகனோடு "சீரணிந்த தோழமை கொண்டது" நமக்கும் ஓர் அடையாளம்தான், வழிகாட்டிதான். இராமனோடு காட்டுக்குத் தொடர்ந்த தம்பி, பாதுகை பெற்று நாட்டுக்குத் திரும்பிய தம்பி ஆகிய இரண்டு தம்பிகளோடு குகனும் தோழமை

யால் ஒரு தம்பியானுன் என்ற கம்பன் கவிக்கு வித்தா கும் பெரியாழ்வார் கொள்கை ஒரு பெருங்கொள்கை யல்லவா?

இப்படியெல்லாம் பிரிவு என்ற நோய்க்கு மருந் தாகச் சீதைக்கு உதவும் ஹனுமானது வாக்கைப் பாடும் பெரியாழ்வாருக்கு, "பகவானுடைய பிரிவு என்னும் நோய்க்கு மருந்தறிவார் இல்லையே!" என்ற கவலை ஏற் பட்டது.

அடியோமோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு

என்று பாடுகிறவர் அந்த இறைவனே, "மருந்தும் மருத்துவனும்" என்று கண்டு,

மருத்துவனய்நின்ற மாமணிவண்ணு !

என்று வாய்குளிர மனங்குளிர அழைக்கிறுர்.

அழகனுன ராமனே குலசேகராழ்வாருக்கு வைத்திய னுக வந்தான் என்றுல், பெரியாழ்வாருக்கு வைத்தியன் அழகனுன கண்ணன்தான். குலசேகரருக்குக் கண்ணனும் இராமன்தான்: பெரியாழ்வாருக்கோ இராமனும் கண்ண னுகவே காட்சிதருகிறுன். குகன் தோழமையைச் "சீர ணிந்த தோழமை" என்று போற்றிய போதிலும், கண்ணன் பசுக்களோடும் கோபிகைகளோடும் கொண்ட தோழமைதான் பெரியாழ்வாரின் பெரும் பக்திக் காதலுக் கும் பாரமார்த்திக வாழ்க்கைக்கும் ஒரு விசேஷமான தூண்டு கோலாயிருக்கிறது. இந்தத் தோழமையின் அரும்புதான் அந்தத் தோழமை என்பது இவர் குறிப்பு. ராமனுடைய வீர சரித்திரத்தைக் காட்டிலும் கண்ண னுடைய அன்புமயமான இன்பக் கதைகளே பெரியாழ்வா ரைக் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க"ச் செய்து இதயத்தை நன்றுக மலரச் செய்தன என்று சொல்ல வேண்டும்.

ஆயர்களோடுபோய் ஆனிரைகாத்(து)அணி
வேய்ங்குழல்ஊதி வித்தகனாய்நின்ற

[ஆனிரை - பசுக்கூட்டம். அணி - அழகுவாய்ந்த. வித்தகன் - அதிசயத் திறமை வாய்ந்தவன்.]

—கண்ணனது அதிசய எளிமையும் வசீகர அழகும் இப்பெரியாரது ஆரோக்கியமான பக்திமதத்தின் உயிர்நிலையென்பது உறுதி.

குலசேகர ஆழ்வார் திருப்பதிகளில் எல்லாம் ஸ்ரீராம தரிசனம் செய்ததுபோல், பெரியாழ்வார் எல்லாத் திருப்பதிகளிலும் கண்ணனையே கண்படைத்த பயனாக, கண் செய்த தவமாகக் கண்டார். சொந்த ஊரான ஸ்ரீவில்லிபுத்தூர் கோகுலமாகவும் பிருந்தாவனமாகவும் தோன்றியதுபோல் நண்பரான செல்வ நம்பியின் திருக்கோஷ்டியூரும் ஆய்ப்பாடியாகத் தோன்றியது. தமது சீஷனும் பேரரசனுமான பாண்டியனுடைய அபிமான ஸ்தலமான திருமாலிருஞ்சோலையிலும் பெரியாழ்வாருக்குக் கிருஷ்ண தரிசனம்தான்.

புன்னை செருந்தியொடு
புனவேங்கையும் கோங்கும்நின்று
பொன்அரிமாலைகள் சூழ்பொழில்
மாலிருஞ் சோலையதே.

[செருந்தி - சுரபுன்னையென்ற ஒரு மரவகை. வேங்கை, கோங்கு - மரவகை. புனம் - மலைச் சார்பான கொல்லை. பொன் அரிமாலை - பொன்னால் செய்த ஒரு வகையான கழுத்தணி. பொழில் - சோலை.]

என்று வருணிக்கப்படும் திருமாலிருஞ்சோலையில், புன்னையும் செருந்தியும் வேங்கையும் கோங்கும் பந்தி பந்தியாகப் பொன்னிறமுள்ள பூக்களாய்ப் பூத்துச் சொரியும் காட்சி, அழகனாகிய கண்ணனுடைய அம்மலைக்கு இயற்கையன்னை

பொன்னரிமாலை அணிந்திருப்பது போலத் தோன்று கிறதாம். குறத்திகளும் அம்மலையழகனுகிய கண்ணனைப் பாடிக் கொண்டே ஆடுகிருர்களாம். அங்கேயுள்ள வண்டுகளும் "ஆயிர நாமஞ்சொல்லி"க் கண்ணனைப் பாடிக்கொண்டிருக்கின்றனவாம். "எல்லாம் கிருஷ்ண மயம்" என்றிருக்கிறவருக்கு இப்படியெல்லாம் தோன்று கிறது ஆச்சரியமா?

"தென்னுடும் வடநாடும் தொழநின்ற திருவரங்க"த் திலும் "என்னுடைய திருவரங்கன்" என்று பெரியாழ் வார் அபிமானிக்கும் கடவுள் கண்ணன்தான்;

குரவரும்பக் கோங்கலரக்
குயில்கூவும் குளிர்பொழில்சூழ்
திருவரங்கம் என்பதுவே
என்திருமால் சேர்விடமே

[குரவு, கோங்கு - விருட்ச வகை. அலர - மலர பொழில் - சோலை. சேர்விடம் - சேரும் இடம்.]

என்றபடி நித்திய வசந்தமான சோலைசூழ்ந்த திருவரங்கம், நித்திய யெளவன செளந்தரிய மூர்த்தி கோயில்கொள்வதற்கு வசதியான ஸ்தலமல்லவா?

"காவிரி வந்து அடிதொழும் சீர் அரங்கத்"தில் பக்தி பரிமளிக்கக்கண்டு பெரியாழ்வார்,

உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த
சேவடிபோல் உயர்ந்து காட்ட,
வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்
தலைவணங்கும் தண்ண ரங்கமே!

[உரம் - நிலத்தின் உரம். மலர்க் கமலம் - தாமரை மலர், வரம்பு - வரப்பு. தண் - குளிர்ந்த.]

என்று பாடுகிருர். நில உரத்தாலே வயல்களுக் கருகே வளர்ந்து பிராகாசிக்கும் தாமரைப் பூக்களைப் பார்க்கிருர்:

திருமால் உலகம் அளந்த காலத்தில் மேலே எடுத்த திருவடிகளை ஞாபகப்படுத்துகின்றன. வரப்பிலே கனத்தால் சாய்ந்து விளைந்து கிடக்கும் செந்நெற்கதிரையும் பார்க்கிறார்: திருவடிகளை நோக்கித் தலைவணங்கும் பணிவும் அடக்கமும் உள்ள பக்திப் பெருஞ் செல்வர்களின் ஞாபகம் வருகிறது.

இப்படிப்பட்ட தலத்திலுள்ள வண்டுகளோ பாகவத சமூகத்திற்கு உபலட்சணமாய்ச் சோலைமலைவண்டுகளையும் வென்றுவிடுகின்றன பக்திரஸத்தை அனுபவிப்பதிலே! பாடுகிறார் குதூகலமாக;

எல்லியம்போ(து) இருஞ்சிறைவண்(டு)
எம்பெருமான் குணம்பாடி
மல்லிகைவெண் சங்கூதும்
மதிளரங்கம் என்பதுவே.

[எல்லி - (இங்கே) அந்திமயங்கும் இரவு. இருஞ்சிறை - பெரியசிறகு. அந்திமயங்கும் வேளையில் வண்டுகள் ரீங்காரஞ் செய்துகொண்டே மல்லிகைப் பூக்களின் மேலேயிருந்து தேனைப் பருகத் தொடங்குகின்றன. அவை கர்வத்தோடு மேலே பறப்பதையும், பூக்களின் மேலே வருவதையும் கவனிக்கிறார். சாயங்கால புஷ்பமான மல்லிகை மலர்வதற்கு முன்பு தலைகுவிந்து மேல் பருத்து வெளுத்த நிறமுள்ள சங்குபோலத் தோன்றுவதையும் கவனிக்கிறார். "சரி, எம்பெருமானுடைய திவ்ய குணங்களைத்தான் பாடுகின்றன" வண்டுகள்: அந்தப் பிரீதியையும் மகிழ்ச்சியையும் சங்குகளில் வைத்து ஊதவேண்டும் என்று இந்த மல்லிகைப் பூக்களையே வெண்சங்குகளாக உபயோகிக்கின்றன என்று எண்ணமிடுகிறார்.

கொடி படர்ந்த அந்தச் சோலைகளில் சஞ்சரிக்கும் குயில் முதலான பட்சி சமூகங்களும் அர்த்தமில்லாமல் கூவவில்லையாம். "அவை பகவானுடைய வாகனமும்,

தங்கள் ராஜாவுமான கருடன் புகழைத்தான் தங்கள் பாஷைகளில் பாடிக்கொண்டிருக்கின்றன,—கோவர்த்தன கிரியில் குரங்குகள் தங்கள் தலைவனை ஹனுமான் புகழ் பாடிக் குட்டிகளை உறங்கப் பண்ணுவது போலோ!'' என்றெல்லாம் கனவுகாணத் தொடங்குகிறது பெரியாழ் வாரின் பக்தியுள்ளம்.

கோவர்த்தனம் முதலான வடநாட்டுத் திருப்பதி களையும் பாடியிருக்கிறார். கோவர்த்தன கிரியைக் குடை யாகத் தூக்கிப் பசுக்களையும் கோவலரையும் காத்தருளிய அற்புதத்தைக் கிருஷ்ண லீலைகளில் ஒன்றாகக் குறிப்பிட் டிருக்கிறார். இப் பாடல்கள் கண்ணன் ''பிள்ளைத் தமிழை''ச் சேர்ந்தவை. கோவர்த்தன மலையைக் குடை யாகப் பிடித்த அற்புதத்தைக் கண்டங்கடிநகர் என்ற வட நாட்டுத் திருப்பதியைப் பாடும்போதும் குறிப்பிடுகிறார். தென்னாட்டுத் திருப்பதியானாலும், வடநாட்டுத் திருப்பதி யானாலும் பெரியாழ்வார் விசேஷமாய் உகந்த பெருமாள் கோகுலபால கோபாலன்தான்.

கங்கைக் கரையிலுள்ள கண்டங்கடிநகரைப் பாடும் போது, கங்கையைக்குறித்தும் கம்பீரமாய்ப் பாடுகிறார்.

இமவந்தம்தொடங்கி இருங்கடலளவும்
இருகரை உல(கு)இரைத்தாட,
கமையுடைப்பெருமைக் கங்கையின்கரைமேல்
கண்டமென்னும் கடிநகரே

[இமவந்தம் - இமயமலை. இருங்கடல் - பெரியகடல். இருகரை உலகு - இரண்டு கரைகளிலும் உள்ள மக்கள். இரைத்து - ஆரவாரித்து. ஆட - நீராட. கமை - க்ஷமை; பொறுமை.]

என்றவாறு, கங்கையின் பொறுமை என்ற பெருமையில் ஈடுபடுகிறவர் கங்கையின் வருகையையும் போக்கையும் சங்கமத்தையும் ஒரு சப்த சித்திரமாக்கிக் காட்டுகிறார்:

தடவரை அதிரத் தரணிவிண்டிடியத்
தலைப்பற்றிக் கரைமரஞ்சாடி,
கடலினைக்கலங்கக் கடுத்திழிகங்கை.

[தடவரை - பெரியமலை. தரணி - பூமி. விண்டு - பிளவுபட்டு. தலைப்பற்றி - தலையளவு கிளம்பி. சாடி - மோதி முறித்து. கடுத்திழி - வேகமாய் வந்து குதிக்கிற.] பெரிய மலையும் அதிரும்படி, பூமி பிளந்து இடிந்துபோகும் படி குதித்துவரும் கங்கை தன் வெள்ளப் பெருக்கால் கரையில் நிற்கும் மரங்களையும் சாடி அடித்து முறித்துக் கொண்டுபோய், கலங்காத கடலும் கலங்கும்படி படுவேக மாகப் பாய்ந்து சங்கமமாகிறதாம். இந்த வருணனையின் தோரணையும் பாஷையின் போக்கும் திருமங்கையாழ் வாரை ஞாபகப்படுத்துகின்றன.

அந்த ஆழ்வாரைப்போல் இந்த ஆழ்வாரும் கங்கா தீரத்திலும் தணியாத ஆத்ம தாகத்தையும் தாபத்தை யும் காவேரிதீரத்தில் தணித்துக்கொள்ள விரும்பி, "காவிரி வந்(து) அடிதொழும் சீர் அரங்கமே" என்று "தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்க"த்தை நோக்குகிறார். இப்படியே, கோவர்த்தன மலையைக்காட் டிலும் இவருள்ளத்தையும் உயிரையும் குளிர்வித்தது, பாண்டி நாட்டிலுள்ளதும், "அழகன் அலங்காரன் மலை ...... குளிர்மாமலை" என்றெல்லாம் இவர் போற்றுவது மான திருமாலிருஞ்சோலை மலைதான்! திருக்கோஷ்டி யூரும் ஸ்ரீவில்லிபுத்தூரும் இவரது விசேஷ அபிமானத் திற்கு இலக்காகி, வடநாட்டில் எக்காலத்திலோ நிகழ்ந்த ஸ்ரீகிருஷ்ண லீலைகளைக் கண்முன் காட்டி ஆத்ம தாபத்தை முற்றும் போக்கின என்று கருதலாம்.

இந்த ஸ்தலங்களில் எல்லாம் பலவகையான இயற்கை யழகுகளுக்கிடையே, இயற்கை யழகனான கண்ணன் பெரியாழ்வாருக்கு என்றும் இனியனாய்,

ஆயிரம் தோள்பரப்பி
முடி ஆயிரம் மின் இலக,—

[மின் இலக - மின்னலைப்போல் ஒளிவீச.]

ஸர்வ சக்தியோடு கூடிய ஸர்வ ரட்சகனுகக் காட்சி தருகிறுன். இத்தகைய கண்ணனையே கவலைகளும் நோய் களும் தீராத வினைகளும் தீர்த்துவைக்கும் கடவுள் — வைத்தியனுகவும் கடவுள் — வேந்தனுகவும் காட்டுகிறுர் பெரியாழ்வார்.

இந்த வைத்தியனின் பிரதிநிதிகள் பக்தமணிகள். "திசை விளக்காய்" நின்ற பல திவ்ய ஸ்தலங்களிலும், அந்நாளில் தமது தூய உள்ளத்தாலும் தூய வாழ்க்கை யாலும் "எண் திசைக்கும் விளக்காகி" ஒளிகாட்டி வழி காட்டி வந்த தொண்டக் குலத்தினர் வாழ்ந்துவந்தார் கள். அன்புருவாகிய அழகன்—கருணைக் கடலான கண்ணன் — இத்தொண்டர்களின் உள்ளத்தையே திருப் பதிகளில் எல்லாம் மேலான திருப்பதியாகக்கொண்டு இவர்கள் வாயிலாக மக்களுக்கு விசேஷ ஆறுதல் அளித்து வந்தான். இவர்களும் பரம சாதுக்களாய்க் "குழலை வென்ற குளிர்வாயினராகி" உபதேசங்கள் செய்து. அவன் கருணையையும் அன்பையும் வெளியிடுவதே விரத மாகக்கொண்டு சாதுக்களின் கோஷ்டிகளைப் பலவேறு இடங்களிலும் ஸ்தாபித்து வந்தார்கள். இந்த மெய் யன்பர்களுக்கு யாரிடத்திலும் பகையில்லை, வெறுப் பில்லை; கோபம் கிடையாது, கர்வமும் கிடையாது, தெய்வ வைத்தியனைக் குறித்தும், அன்பு நெறியென்ற தெய்விக அருமருந்தைக் குறித்தும் "பண்ணின்பம் வர"ப் பாடுவார்கள், ஆடுவார்கள், இந்த உலகத்திலேயே — இந்த உடம்போடுதானே — வைகுந்தம் அடைந்துவிட்டதைப் போலப் பரமானந்தம் அடைவார்கள்.

மலர்களில் மதுப்பருகப் பண்பாடும் வண்டினம் போல், இறைவனது அடிமலர்களில் ஆனந்தத் தேன்

பருகப் பண்பாடி வரும் பக்தர்கள் வாயிலாகப் பொது மக்களும், சாதி முதலான வேற்றுமைகளில்லாமல் ஒருவாறு ஞானம் பெற்றுத் திருந்திக் "குற்றம் இன்றிக் குணம் பெருக்கி"ச் சன்மார்க்க வாழ்வின் இரகசியத்தை உணர்ந்து இன்புற்றுர்கள். இப்படித் "தெய்வம் என்பதோர் சித்தம்" பெற்று இன்புறுதவர்களைப் பெரியாழ்வார் ஆரோக்கிய முள்ளவர்களாகக் கருதவில்லை; "நோய் பிடித்தவர்கள்" என்றே கருதுகிறுர். இவர்களுடைய நோய் சாதாரண நோயன்று; சாதாரணமான தொத்து நோயுமன்று:

> பெற்றதாயர் வயிற்றினைப்பெரு
> நோய்செய்வான் பிறந்தார்களே !

என்று அவர்களுக்காக இவர் பச்சாதாபப்படுகிறுர். அவர்களுடைய பாவ நோய் அவர்கள் உடுக்கும் உடையிலும் பருகும் நீரிலும் கூடத் தொத்திக்கொள்ளுமே!—என்று வருந்துகிறுர்.

> பருகும்நீரும் உடுக்கும்கூறையும்
> பாவம்செய்தன தான்கொலோ?

[கூறை - வஸ்திரம்.]

இவர்களை இப்பெரியார் "பூமி பாரங்கள்" என்கிறுர். "சோற்றுக்குக் கேடாய், பூமிக்குப் பாரமாய்" இருக்கிறுர்களே, "இந்த இருப்பும் வாழ்வா, மனித வாழ்வா?" என்று வருந்துகிறுர். இந்த வருத்தம் நெஞ்சைச் சுடக் கனன்று சினந்து,

> பூமிபாரங்கள் உண்ணும்சோற்றினை
> வாங்கிப்புல்லைத் திணிமினே !

[திணிமின் - திணியுங்கள்.]

என்கிறுர். "பூமிபாரங்கள் சோற்றை வதஞ் செய்வதா? அந்தச் சோற்றை ஏழைகளுக்கும் சாதுக்களுக்கும்

கொடுத்துவிட்டு, கடின நெஞ்சினரான இவர்கள் வாயில் புல்லைத் திணித்துவிடுங்கள்!" என்ற கோப - ஹாஸ்யத்திலே "பகுத்தறிவு உள்ளவர்கள் மிருகவாழ்வு வாழ்கிறார்களே!" என்ற அனுதாபம் ஆழ்ந்து கிடக்கிறது.

இத்தகைய மக்கள் வாழும் உலகத்திலே, இவர்களுடைய நோய்களைப் போக்க, வைத்தியர்கள் வேண்டாமா? சமுதாயத்தின் உள்ளத்திலுள்ள தீராப் பிணிகள் தீர்க்கும் கடவுளைக் கைதொழும் பக்தர்களே அவனுடைய பிரதிநிதிகளான உயர்தர வைத்தியர்கள். இந்த ஆத்ம வைத்தியர்கள், "இருந்த ஊரில் இருக்கும் மானிடர், எத்தவங்கள் செய்தார்களோ?" என்று ஆச்சரியமாய்க் கேட்கிறார் பெரியாழ்வார். இத்தகைய பெரியவர்கள் "திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே!" என்பர் குலசேகராழ்வார். அவர் கூறியிருப்பதை ஒட்டிப் பெரியாழ்வாரும், பரம பாகவதர்களின்

பாததூளி படுதலால்இவ்
உலகம் பாக்கியம்செய்ததே!

என்று பாடுகிறார். இந்த மகா வைத்தியர்களின் கோஷ்டியில் பெரியாழ்வார் ஒரு ராஜ வைத்தியராக விளங்கினார்.

மார்வம்என் பதோர் கோயில்அமைத்து
மாதவன்என் னும் தெய்வத்தைநாட்டி,
ஆர்வம்என் பதோர் பூவிட வல்லார்க்(கு)
அரவதண்டத்தில் உய்ய லும்ஆமே.

[மார்வம் - மார்பு; ஹிருதயம். ஆர்வம் - நிறைந்த அன்பு. அரவதண்டத்தில் - யமபடர்களால் வரும் துன்பத்திலிருந்து.]

என்று இவர் கூறும் இராஜ வைத்தியத்தில் மரணத்திற்கப்பால் யமகிங்கரர்களால் ஏற்படும் துன்பங்களுக்கு மட்டுமல்ல, வாழ்க்கைத் துன்பங்களுக்கும் மருந்து கிடைக்கிறது என்பது பக்தி மதம். "மாயனை, மதுசூதனை, மார்பில் தங்கவிட்டு வைத்து ஆவதோர் கருமம் சாதிப்பார்க்கு

என்றும் சாதிக்கலாமே!" என்று இவர் மறுபடியும் தெளிவுபடுத்துகிறார் தமது கொள்கையை.

இதயப் பூங்கோயிலில் அழகனை அன்புமலரிட்டு வழிபடுகிறவர்கள் குற்றமின்றிக் குணம்பெருக்கும் திருவாளர்கள். இவர்கள் விஷயத்தில் எவர் குற்றஞ் சாட்டினாலும், "என்னடியார் அது செய்யார்!" என்று இருக்கிறானும் எம்பெருமான். மகாலட்சுமியே குற்றஞ் சொன்னாலும், இறைவன் ஒப்புக்கொள்ள மாட்டானாம்:

தன் அடியார் திறத்தகத்துத்
தாமரையாள் ஆகிலும் சிதகு உரைக்குமேல்,
"என் அடியார் அதுசெய்யார்; செய்தாரேல்
நன்றுசெய்தார்!" என்பர்போலும்.

[தாமரையாள் - லட்சுமி. சிதகு - குற்றம்]

இறைவனுடைய கருணையுள்ளத்தில் சீற்றம் பிறந்தாலும் தாயாகிய பிராட்டி எதிர்த்துக் "குற்றவாளிகளையும் மன்னிப்பதே கருணைக்கு அழகு" என்று சிபார்சு செய்வதுண்டாம்; அப்பேர்ப்பட்ட அன்னை குற்றங்களை அடுக்கத் தொடங்கினாலும் "என் அடியார் அது செய்யார்; செய்தாரேல் நன்று செய்தார்!" என்று சொல்லக் கூடியவனும், இறைவன் இத்தகைய கருணைப் போட்டியில் நோய்களுக்கெல்லாம் மாமருது காண்கிறார் பெரியாழ்வார்.

இந்த மருந்து பொய்த்துப் போகாது: இந்த ராஜ வைத்தியரை 'மெய்ந்நாவன்' என்றும் 'மெய்யடியான்' என்றும் 'கோதில் பட்டர்பிரான்' என்றும் போற்றுகிறார்கள். "காதம் பலவும் திரிந்துழன்றேன்; நிழலுமில்லை, நீருமில்லை!" என்று தமது அஞ்ஞான தசையை நினைத்து வருந்தியவர் அந்தப் 'பாத நிழலைக்' கண்டுகொண்டதும், "வளைத்து வைத்தேன், இனிப் போகலொட்டேன்!" என்று உறுதிகொண்டு அவனுக்குப் பணி செய்வதையே தவமாகக் கண்டார். "விழிக்கும் கண்ணி

லேன், நின்கண் மற்ற அல்லால்!'' என்று கிருஷ்ணனு பவஞ் செய்து, அந்த கண்ணனைக் கொண்டே உலக நோய்களைச் சோதித்து அனுபவ வைத்தியம் செய்கிறார். வேதக் கடலமுதைக் கொண்டு கலசத்தை நிறைத்தாற் போல் தம்மை நிறைத்துக்கொண்டவர், அந்த அமுதத்தைத் தமக்கென்று வைத்துக் கொள்ளாமல் வாரி வாரி வழங்குகிறார், இதயப் பசிப்பிணி தீர!

இவருக்குப் பட்டினி என்பதே இதயப் பட்டினி தான்; வறுமை யென்பதே இதய வறுமைதான்;

உண்ணாநாள் பசியாவதொன்றில்லை;
ஓவாதே நமோநாரணா என்(று)
எண்ணாநாளும், இருக்(கு)எசுச்சாமவேத
நாள்மலர் கொண்(டு)உன் பாதம்
நண்ணாநாள் அவைதத்துறுமாகில்
அன்றெனக்கவை பட்டினிநாளே!

[ஓவாதே - ஓயாமல். இருக்கு - ரிக்வேதம். யசு - யஜுஸ் என்ற வேதம். நாள் மலர் - அப்போது மலர்ந்த பூக்கள். உன பாதம் - உன் திருவடிகள். நண்ணா நாள் - கிட்டப்பெறாத நாள். தத்துறுமாகில் - தட்டுப் படுமானால்.]

"எனக்கு உண்ணாத நாள் பட்டினி நாளல்ல; இறைவனை எண்ணாத நாளே பட்டினி நாள்!'' என்று தமது அந்தரங்கத்தை வெளியிடுகிறவர்,

எண்ணுவார் இடரைக் களைவானே!
ஏத்தரும்பெருங் கீர்த்தியினானே!

என்று தமது இதயத் தலைவனைப் போற்றுகிறார்.

அவன் பாற்கடலை விட்டு இவர் மனக்கடலுக்கு ஓடிவந்துவிட்டான், லட்சுமியும் தானுமாக. வேதாந்த

விளக்கு ஒரு தனிச்சுடராய்ச் சுடரொளியாய் நெஞ்சுக்குள்ளே வந்துவிட்டது! பாவக்காட்டிலே தீ விழுந்ததென்றும், ஞானனந்த வெள்ளம் தலைக்குமேலே போய்விட்டதென்றும் பெரியாழ்வார் பாடுகிறார். இந்த நிலையில், அஞ்ஞானத்தையும் தீவினைகளையும் நோய்களையும் யமகிங்கரர்களையும் பார்த்து, "என் உள்ளமும் உடம்பும் பழைய உள்ளமும் உடம்பும் என்று நினைக்கவேண்டாம், நோய்களே! தீவினைப் பேய்களே! போய்விடுங்கள்: இனி அவனுடைய இராஜதானி இவை! இங்கே வரவேண்டாம்" என்று கண்டிப்பாக எச்சரிக்கை செய்துவிடுகிறார்.

எப்பேர்ப்பட்ட அனுபவசாலி, பார்த்தீர்களா? "உம்முடைய நோய்க்கு மருந்து செய்துகொண்டீரா, வைத்தியரே! எங்கள் நோய்க்கு மருந்து சொல்ல வந்தீரே!" என்று இவரைக் கேட்கவேண்டியதில்லை.

பொன்னைக்கொண்(டு) உரைகல்மீதே
நிறம்எழ உரைத்தாற்போல்
உன்னைக்கொண்(டு) என்நாஅகம்பால்
மாற்றின்றி உரைத்துக்கொண்டேன்;
உன்னைக்கொண்(டு) என்னுள்வைத்தேன்,
என்னையும் உன்னில்இட்டேன்!
என்அப்பா! என் இருடீகேசா!
என்உயிர் காவலனே!

[நா அகம்பால் - நாவினுள். மாற்று இன்றி - மாற்று அழியும்படி. இருடீகேசா - என் இந்திரியங்களை (வசப்பட்டு ஒழுகும்படி) நியமிக்க வல்லவனே. உயிர் காவலனே - உயிரைக் காக்க வல்லவனே.]
என்றும்,

உன்னுடைய விக்கிரமம்
ஒன்றொழியாமல் எல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால்
சுவர்வழி எழுதிக்கொண்டேன் !

[விக்கிரமம் - வீரச் செயல்கள். நெஞ்சகம்பால் - நெஞ்சினுள்ளே. சுவர்வழி எழுதிக் கொண்டேன் - சுவரில் சித்திரம் எழுதுவதுபோல எழுதிக்கொண்டேன்.]

என்றெல்லாம் இறைவனை நோக்கிக் கூறுகிறவர், **ஸ்ரீ** கிருஷ்ணனது அதிவீர சரித்திரத்தையும் லீலைகளையும் கொண்டு நமக்கெல்லாம் அனுபவ ராஜவைத்தியம் செய்யக்கூடிய பெரியார் என்பது பக்தர்களின் அபிப்பிராயம்.

இவரது ராஜ வைத்தியம் இவரது வாழ்க்கைத் தத்துவமே. இவர் அருமையான மருந்தைத் தமது பக்திக் கவிதையென்ற தங்கக் கிண்ணத்திலே கொடுத்திருக்கிறார். இந்த மருந்து இன்றும் தேவைதான்.

முற்றும்

